Sangathamil
# சங்கத்தமிழ்

குரல் – 59 | சர்வதேச மின் செய்தித்தாள் | 15 அக்டோபர் 2023

## 1987ஆம் ஆண்டு 10ம் மாதம் 21 மற்றும் 22ம் திகதிகளில் இந்திய இராணுவத்தினரால் யாழ்ப்பாணப் பொது மருத்துவமனைக்குள் வைத்து படுகொலை செய்யப்பட்ட மருத்துவர்களினதும், தாதியர்களினதும் 36ஆவது ஆண்டு நினைவு நாள்







**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**

NISHANTHAN LAW OFFICE
SERVICES
- Purchasing a Residential Property
- Selling a Residential Property
- Residential Mortgage Refinancing
- Wills and Powers of Attorney
NOTARY SERVICES
NEW LOCATION
Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
39 Devonshire Ave., Markham ON L3S 3P2
McCowan Rd & Devonshire Ave. (Between Steeles & Denison St)

MT CPA CA
MAYURAN THARMABALAN PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
* AUDIT * REVIEW ENGAGEMENT * NOTICE TO READER * BUSINESS ADVISORY * CONTROLLERSHIP SERVICES
* CORPORATE TAXES * PERSONAL TAXES * FINANCIAL PLANNING * CRA AUDITS * PAYROLL * BOOKKEEPING
Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298
647-748-6444 www.tharmabalan.ca
Suite 402 - 1585 Markham Rd, Scarborough ON M1B 2W1
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

Ideal Auto Tech Ontario
For all your vehicle repair and Service needs
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D.
Personal Injury Lawyer
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச ஆலோசனைகளும் வழங்கப்படும்
Nesan Chathanantham
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY Realty Inc. Brokerage
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

RAMACHANDRAN LAW
Professional Corporation
Family Law
Real Estate
Civil Litigation
Wills & Estates
Corporate Law
BARRISTER & SOLICITOR
VITHU RAMACHANDRAN
J.D., B.Com (Honours) | LSO 70103E
416.902.8225
Vithu@Ramachandran.Law
WWW.RAMACHANDRAN.LAW
908-305 Milner Ave. Toronto ON M1B 3V4

Muhunthan Sivathasan (Danny)
Printers Inc
Design, Print & Die Cutting
5040 Maingate Drive, Unit# 06
(Eglinton & Tomken)
Mississauga ON L4W 1X5
905 629 8089
437 423 5460
silverprinthouse@gmail.com

RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
1286 Kenndy Rd, Unit 03
Scarborough ON M1P 2L5
Office: 416.270.1111
Fax: 416.270.7000
Kajenpillai@gmail.com
www.remaxace.com
Kajan Kasippillai
Sales Representative
Dir: 416.930.4608

JRS AUTO TECH
Call Subas
Cell: 416-206-9489
Office: 416-628-4399
AC $99.99 +
OIL CHANGE $49.99 +
USED TIRE $59.99 +
BRAKES JOB $249.99 +
7 DAY - OPEN: 9 AM - 9PM
2655 Lawrence Ave., E, Unit 05
Scarborough ON M1P 2S2
ALL MECHANICAL & ELECTRICAL REPAIRS
JRSAUTOTECH@HOTMAIL.CA

BUY | SELL | LEASE | INVEST
வீடு வாங்கனுமா விற்கனுமா
VARAN SUBRAMANIAM
SALES REPRESENTATIVE
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
RAISING YOUR VALUE
LOVE WHERE YOU LIVE
647-295-5672
varanrealtor@gmail.com

விளம்பரத்துக்கு அழையுங்கள்: 437.345.4203

2024 உலக வணிகம்
Ulaga VANIKAM
ULAGA VANIKAM உலக வணிகம்
Tel: 437 345 4203
www.ulagavanikam.ca
ulagavanikam@gmail.com

## தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**அனைத்துலகத் தமிழீழ மக்களாகிய நீங்கள் எமது போராட்டத்திற்கு தோள் கொடுத்து உதவினால் நாம் இந்தப் போரில் வெற்றி கொள்வது உறுதி. எமது தாயகம் மீட்கப்படுவதும் உறுதி. நாம் தன்னாட்சி பெறுவதும் உறுதி.**






# சங்கத்தமிழ்

**தொடர்புகளுக்கு**

**தொலைபேசி**

437 345 4203

**மின்னஞ்சல்** (Email)

sangathamilcanada@gmail.com

**இணையத்தளம்** (Website)

www.sangathamil.ca



அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீடடிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# ஓர் இரகசிய ஆளுமையின் அதிர்ச்சியான இறப்பு!

## கேணல் கிட்டுப் பீரங்கிப் படையணி சிறப்புத் தளபதி

# கேணல் ராயு (குயிலன்)






அந்தச்செய்தி புற்றுநோய்போல மெல்லமெல்லத் தமிழீழுத்தை ஆக்கிரமிக்கத் தொடங்கியது. அதைக் கடல்கடந்து காவிவந்து காற்று எம்தேசத்தின் தேகத்தை வாட்டியது. “யாராம்?” இந்த வினாவிற்கு விடைகாண எம்மக்கள் வித்துக் கொண்டிருன்தனர். எல்லாம் இரகசியமாகவே வைக்கப் பட்டிருந்தன.

எங்கள் போரியற் சாதனைகளையெல்லாம் நாங்கள் பேசும் போதும் எழுதும்போதும் வெளித்தெரிந்து விடாதபடி பக்குவமாய் மறைத்து வைத்திருந்த ஈடிணையற்ற போரியலாளனின் பிரிவைச் செரிக்க முடியாது நாங்கள் தவித்துக் கொண்டிருந்தோம்.

எங்கள் கேணல் ராயு அவர்கள் பதற்றமற்ற, அமைதியான, திடகாத்திரமான இரும்பு மனிதன். புலிகள் இயக்கத்தின் புதிரான பக்கங்களின் பின்னால் வைக்கப்பட்டிருந்த இரகசிய மனிதன். நாளும் பொழுதும் உயிர்தின்னும் களங்களுக்குள்ளேயே அவர் வாழ்ந்தபோதும் தமிழீழ தேசம் விடியும் நாள்வரை வாழ்வாரென்றே நம்பியிருந்தோம். இயக்கத்தின் இரகசியத் தன்மைகருதி வெளித்தெரியாது வைக்கப்பட்டிருந்த எங்கள் தளபதியைப் போர்க்களங்களிலும் பொத்திப் பொத்திப் பாதுகாத்தோம். இப்போது அவரை அவர் நேசித்த மக்களுக்கு ஒரே இரவில் அறிமுகம்செய்ய எப்படி முடியும்? ஒய்வு ஒழிச்சலற்ற உழைப்பிற் கழித்த பத்தொன்பது வருடங்களின் நினைவுகளும் காட்டாற்று வெள்ளம்போல் எம்முள் பாய்கின்றன.



பொறியியலாளனாவதற்குத் துடித்த இளைஞனின் கல்வி தரப்படுத்தலால் வீழ்த்தப்பட்டது. இலண்டன் பல்கலைக் கழகம் ஒன்றினூடாக அந்த இலக்கை அடைந்துவிடும் அலாவுடன் 1983ம் ஆண்டு தனது இருபத்து இரண்டாவது வயதிற் சிங்களத்தின் தலைநகரில் வாழ்ந்து கொண்டிருந்தான் அவன். அப்போது சிங்களம் பெரும் கொலைவெறி கொண்டு ஆடியது. குழந்தைகள், பெரியோர், பெண், ஆண் என்ற வேறுபாடின்றித் தமிழர் வெட்டிச் சாய்க்கப்பட்டனர். தமிழரின் உடைமைகள் சூறையாடப்பட்டன. தீக்கிரையாக்கப்பட்டு அழிக்கப்பட்டன. தனக்கும் எதுவித பாதுகாப்புமில்லையென உணர்ந்த ராயு எவ்வாறோ தாயகம் வந்து சேர்ந்தார். சிங்களத்தின் கொடுமைகளிலிருந்து தமிழர் மீட்சி பெறவேண்டுமென்றெண்ணிய அவர் விடுதலைப் போராட்டத்தில் இணைந்தார்.

இந்தியாவில் மூன்றாவது பயிற்சி முகாமிற் பயிற்சி பெறும்போது பொன்னமானால் இனங்காணப்பட்டார். ஐந்தாவது பயிற்சிமுகாமின் பொறுப்பாளர் லெப்.கேணல் ராதா அவர்களின் துணைவனாகச் செயற்பட்டார். அவருடனேயே தமிழிழத்தில் கால்பதித்தார். அன்றிலிருந்து இயக்கம் பெற்ற வெற்றிகள் பலவற்றிலும் அவர் ஆற்றிய பங்கு அளப்பரியது.

தொலைத் தொடர்பு, இலத்திரனியல், வெடிமருந்து ஆகியவற்றில் ராயு கொண்டிருந்த ஆற்றல், தளபதி விக்ரரின் வழிகாட்டலில் மன்னாரில் நாம் பெற்ற பல பெறுமதியான வெற்றிகளுக்கு வழிகோலியது. களங்களில் நேரடியாகவும் போரிட்டார். திருகோணமலைக்குத் தாக்குதலுக்காகச் சென்ற அணியில் இடம்பெற்ற அவர் தன்மார்பில் விழுப்புண் அடைந்தார். பின்னர் மன்னாரில் நடந்த சண்டை ஒன்றிலும் தன் கால்களிலொன்றில் எதிரியின் குண்டுபட்டுப் பெரிய விழுப்புண்ணைத் தாங்கினார். தளபதி விக்ரர் அடம்பனில் வீரச்சாவடைந்த பின்னர் தளபதி ராதாவின் தலைமையிற் பணியாற்றினார்.

துரோகி ஒருவன் வீசியகுண்டினால் கேணல் கிட்டு அவர்கள் தன் காலை இழந்த பின்னர், ராதாவின் தலைமையில் யாழ்ப்பாணத்தில் ராயுவின் பணி தொடர்ந்தது. ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட தொலைத் தொடர்புப் பிரிவு ராயுவின் பொறுப்பில் மேலும் வளர்ந்தது. அவரின் வெடிகுண்டு நுட்பங்களுக்குப் போர்க்களங்களில் எதிரி அதிக விலைகொடுத்தான். பலாலி, காங்கேசன்துறை வீதியில் எதிரியின் விநியோக அணிகள் மீது ராயுவால் நடத்தப்பட்ட தாக்குதல்கள் பலராலும் அறியப்பட்டவை. அப்போதெல்லாம் ஒரு தோட்பை நிறைந்த வெடிப் பொருட்களுடன் எதிரியைத் தேடிப்போகும் தாடிக்கார ராயு மக்களால் நன்கு அறியப்பட்டிருந்தார்.



பல்வேறு துறைகளிலும் ராயு வெளிப்படுத்திய ஆற்றலைத் தலைவர் அவர்களும் அறிந்திருந்தார். எமது விடுதலை




இயக்கத்தை வலுவான மரபுப்படையுடன் கூடிய வலிமை மிக்க அமைப்பாகக் கட்டி எழுப்ப வேண்டுமென்ற தன் கனவை நனவாக்கக் கூடியவர்களுள் ஒருவராக ராயுவையும் அடையாளங்கண்டார். அவரை மேன்மேலும் வளர்த்தெடுப்பதில் அதிக கவனம் செலுத்தினார். தளபதி லெப். கேணல் ராதா வீரச்சாவடைந்தபின் ராயுவைத் தன் நேரடிப் பணிகளில் ஈடுபடுத்தினார். அன்றிலிருந்து தன் இறுதி நாள்வரை தலைவரின் தலைவரின் அருகிலிருந்தே ராயு செயற்பட்டார். தலைவரின் அருகிலிருந்து ராயு செயற்பட்ட காலத்தில் போரியலிற் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டன. எமது இனத்திற்குப் பெரும் கேடுகளை விளைவிக்கக் கூடிய தடைகளை உடைக்கும் போதெல்லாம் அவரின் அறிவும் ஆளுமையும் கடின உழைப்பும் பெரும்பங்கு வகித்தன. எமது படைத்துறையின் ஒவ்வொரு வளர்ச்சிப்படிநிலைக்கும் ராயு வலுச்சேர்த்தார். தலைவரின் மீககவனத்துக்குள்ளாகும் படைத்துறைப் பணிகள் ராயுவிடமே ஒப்படைக்கப்பட்டன. படைத்துறை வளர்ச்சிக்கு இன்றியமையாதனவான தொலைத் தொடர்பு, வெடிமருந்து, இலத்திரனியல் ஆகிய பகுதிகளைப் பொறுப்பெடுத்து பெரும் வளர்ச்சி நிலைக்கு இட்டுச்சென்று எமது விடுதலை அமைப்புப் பேரியக்கமாக வளர வழிவகுத்தார்.

இந்தியப்படைகளுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்ட “ஜொனி” மிதிவெடியிலிருந்து சிங்களப்படைகளின் “அக்கினிக்கேலா” நடவடிக்கையை முறியடிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட மிதிவெடி, பொறிவெடி வரை, இரண்டாம் ஈழப்போரில் எதிரிகளைக் கலங்கச் செய்த பசீலன் 2000 முதல் மூன்றாம் ஈழப் போரில் எமது மோட்டார், ஆட்லறிப்படைகளைச் செயற்றிறன் மிக்கனவாய் வளர்தெடுத்ததுவரை, எம்மால் நடத்தப்பட்ட முதலாவது கரும்புலித்தாக்குதலுக்கான வெடிகுண்டுத் தயாரிப்பிலிருந்து கடற்புலிகளின் இன்றைய வளர்ச்சி நிலை வரை குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவற்றிலும் இங்கு குறிப்பிட்டுச் சொல்லமுடியாத படைத்துறைப் பணிகள் பலவற்றிலும் தலைவருக்குப் பக்கபலமாய் நின்று செயற்பட்டார்.

இந்திய அமைதிப்படைகளின் வந்கொடுமைக்காலத்தில் விசேட பணிக்காக வெளிநாடொன்றுக்கு ராயு தலைவரினால் அனுப்பப்பட்டார். அவர் திரும்பி வந்தபோது மணலாற்றுக் காட்டுக்குள் தலைவர் இருந்த பகுதியை இந்திய இராணுவத்தினர் சுற்றிவளைத்திருந்தனர். இறுதிப்போர் என மார்தட்டியபடி பெரும்போருக்கான ஆயத்தங்களில் ஈடுபட்டனர் தலைவரை அடைந்த ராயு ஆற்றிய பணிகள் அப்போரின் முடிவைத் தீர்மானிக்கும் காரணிகளுள் முக்கியமானவையாக அமைந்தன.

இந்தியப்படைகளைப் புறமுதுகிட்டோடவைத்த “ஜொனி” மிதிவெடியைத் தலைவரின் வடிவமைப்புக்கேற்ப ராயு உருவாக்கியமை வரலாற்றில் என்றும் அவரை நிலைநிறுத்தும். ஜொனி மிதிவெடியை உருவாக்கியபோது ராயுவின் அருகிலிருந்த போராளி அந்த நாட்களை நினைவு கூறுகிறான்.

“அப்போது அவரிடம் ஒரு சுவிஸ்நைவ் மட்டும்தான் இருந்தது. அதைவிட வேறு எந்த அடிப்படை வசதியும் இருக்கவில்லை. தலைவர் அவர்கள் திட்டத்தைக் கூறி அதன்மூலம் போரில் எவ்வாறு வெற்றிகளை ஈட்டலாம் என விளக்கிய போது அதன்முக்கியத்துவத்தை ராயு அண்ணை புரிந்து கொண்டார். ஜொனியை உருவாக்குவதற்காகத் தன் நித்திரையை மறந்தார். வாளில்லை, உளியில்லை, கத்தியில்லை எனக் காரணங்களைத் தேடாமல் வெற்றியைத் தேடினார். பலமுறை தோற்ற போதும் விடாமல் முயன்று வெற்றி பெற்றார்.”

இந்தியப்படை வெளியேற்றப்பட்ட பின் இரண்டாம் ஈழப் போர்க்காலத்தில் ஆயுதத் தொழிற்சாலைகளுக்குப் பொறுப்பாகவிருந்து பல வெற்றிகளுக்குக் காரணமான உற்பத்திகள் பலவற்றை மேற்கொண்டார். பல இராணுவ முகாம்களின் வீழ்ச்சிக்குக் காத்திரமான பங்களித்த “பசீலன் 2000” அவ்வுற்பத்திகளில் ஒன்றாகும். கோட்டை, மாங்குளம், ஆனையிரவு ஆகிய படைத்தளங்களிலிருந்து தப்பிப்பிழைத்த சிப்பாய்களின் மனதில் “பசிலன் 2000” இன் வெடிப்பதிர்வு எப்போதும் அச்சத்தை ஏற்படுத்தும். கரும்புலித் தாக்குதல் நடவடிக்கைகளிலும் ராயுவால் உருவாக்கப்பட்ட தொழினுட்பங்கள் கடலிலும் தரையிலும் இப்போதும் எதிரியை அச்சுறுத்தியபடியே இருக்கின்றன. இவற்றைவிட இயக்கத்தில் அவ்வப்போது அறிமுகமாகும் புதிய வகை ஆயுதங்கள் ராயுவின் கைபட்டுத்தான் வெளியே வரும்.

இயக்கத்தின் படைத்துறை வளர்ச்சியில் செலுத்திய அதே அக்கறையைத் தன் பொறுப்பின் கிழ் செயற்பட்ட போராளிகளின் நலனிலும் செலுத்தினார். நாள்தோறும் வெடிமருந்துகளுடன் பணியாற்றும் போராளிகளைப் பாதுகாப்பதற்கான வழிவகைகளைக் கண்டறிவதற்காகப் புத்தகங்களைத் தேசிப்படித்து விடயங்களை நுணுகி ஆராய்ந்து சரியான நடைமுறைகளைச் செயற்படுத்துவதிற் கண்ணாயிருந்தார். எம்மால் உற்பத்தி செய்யப்படும் வெடிமருத்துக் கருவிகள் எமது போராளிகளின் சாதனைக் கானவையாக இருத்தல் வேண்டும். மாறாக எமது அழிவிற்குக் காரணமாக அமையக்கூடாது என்பதில் எப்போதும் அக்கறையாக இருந்தார். குறிப்பாகக் கரும்புலிகளுக்கான வெடிப் பொருட்களைத் தயாரிக்கும் போது, “நாங்கள் ஒவ்வொருவருமே கரும்புலிகள் என்ற உணர்வோடு இருந்துதான் அந்த உற்பத்திகளைச் செய்யவேண்டும். ஒரு கரும்புலியினர் உயிர் அநியாயமாகப் போகக்கூடாது. அவர்களுக்கான உற்பத்திகள் துல்லியமானவையாக இருக்க வேண்டும்” என்று தன் போராளிகளுக்கு அடிக்கடி கூறுவார். போரில் எமது இழப்புக்களைக் குறைத்து எதிரிக்குப் பெரும் தேசத்தை ஏற்படுத்துவதில் ராயுவின் உழைப்புப் பெரிதும் உதவியது. போருக்கான திட்டங்களை வகுக்கும் போது ஏற்படும் சிக்கல்களைத் தீர்ப்பதற்குத் தலைவர் தெரிவிக்கும் தீர்வுகளை நிறைவேற்றும் வரை அவர் ஓய்வதில்லை, சில வேளைகளில் ராயு தெரிவிக்கும் தீர்வு எளிதானதாகவும் சிக்கனமானதாகவும் இருக்கும்.



1992ம் ஆண்டு ஆயுத வெடிபொருட் பற்றாமையுடன் மற்றும் சில நெருக்கடிகளையும் சந்தித்த காலம். நாம் நடத்தும் ஒவ்வொரு தாக்குதலிலும் எமது ஆள், ஆயுத இழப்புகளைக் குறைத்து எதிரிக்கு அதிக இழப்புக்களை ஏற்படுத்தி ஆயுதங்களையும் வெடிபொருட்களையும் பெருமளவில் கைப்பற்ற வேண்டும் என்பதில் தலைவர் கண்ணும் கருத்துமாக இருந்து நடவடிக்களை மேற்கொண்டார். அப்பொழுது பலாலி முன்னரங்க நிலைகள் மீது ஒரு தாக்குதலை நடத்தத் திட்டம்



தீட்டப்பட்டது. எதிரியின் முன்னரண்களை எளிதாகத் தாக்கியழிப்பதற்காகக் கடல்வழியால் முகாமிற்குள் இரகசியமாக நுழைவதற்கான திட்டம் ஒன்று முன்வைக்கப்பட்டது. ஆனால் கடல்வழியால் ஆயுதங்களை நகர்த்துவதில் எதிர்பார்க்கப்பட்ட சிக்கல்கள் அதை நடைமுறைப்படுத்துவதற்குத் தடையாக இருந்தன. அத்தடையை நீக்குவதற்கு ராயுவால் முன்மொழியப்பட்ட தீர்வு, திட்டத்தைச் செயற்படுத்த உதவியது. தாக்குதல் இழப்புக்கள் குறைந்த வெற்றியான நடவடிக்கையாக நிறைவடைந்தது. அதற்குப்பின் நடந்த பல தாக்குதல் நடவடிக்கைகளிலும் ராயுவின் கண்டுபிடிப்புப் பயன்பட்டது.

அந்நாட்களில் ராயுவை அவர் நேசித்த மக்களோ பெரும்பாலான போராளிகளோ கூட அறிந்திருக்கவில்லை. குறிப்பிட்டுக் கூறக்கூடிய போராளிகள் சிலருக்கு மட்டுமே அவர் அறிமுகமானவராக இருந்தார். ஆனாலும் செயல்களினூடாக எல்லோருக்குள்ளும் அவர் வாழ்ந்தார். இரண்டாம் ஈழப்போர் வெடித்த சில ஆண்டுகளிற் பலநூற்றுக்கணக்கான போராளிகளை உள்ளடக்கிய புதிய படைப்பிரிவொன்றின் உருவாக்கத்திற்குப் பொறுப்பாக ராயு நியமிக்கப்பட்டார். உயர் செயற்றிறன் மிக்க மரபுவழிப் படையாக அதை உருவாக்க வேண்டுமென்று தலைவர் எண்ணினார். அதற்கான தொடக்கப்பணிகளே பாரிய அளவிலானவையாக இருந்தன. பகல் இரவு என்று பாராமல் ஒய்வு ஒழிவின்றிக் கடுமையாக உழைக்கவேண்டியிருந்தது.

சிறுத்தைப் படைப்பிரிவில் முதலிற் பெண் போராளிகளே இணைக்கப்பட்டனர். பெண் போராளிகளுக்கு அவர்களின் திறமைகளையும் ஆற்றலையும் உணர்த்தி தம்மால் எதையும் செய்யமுடியும் என்ற நம்பிக்கையை வளர்த்துத் தனிச் சிறப்புமிக்க அதிரடிப்படையை உருவாக்கவேண்டுமெனத் தலைவர் திட்டமிட்டார். அதற்கான பயிற்சித் திட்டங்களையும் நடைமுறைகளையும் வகுப்பதில் அதிக அக்கறை செலுத்தினார். தலைவரின் என்னத்தை முழுமையாக உணர்ந்த ராயு தன் முழு ஆற்றலையும் அர்ப்பணித்து உழைத்தார். பின்னர் சிறுத்தைப் படையில் ஆண்களுக்கான பிரிவு உருவாக்கப்பட்டபோது ராயுவின் மீதான சுமை இரட்டிப்பானது.

பயிற்சிப் பாசறையில் போராளிகளுடன் ராயு எப்படி வாழ்ந்தார் என்பதை போராளி ஒருவர் நினைவு கூர்ந்தார். “சிறுத்தைப் படையணியிற் கடுமையான பயிற்சிகளில் ஈடுபட்டோம். வெளித்தொடர்பு எதுவுமின்றி ஆண்டுக்கணக்காக எமது பயிற்சி தொடர்ந்தது. தொடக்கத்தில் எல்லாமே எங்களின் ஆற்றலுக்கு அப்பாற்பட்டனவாகவேயிருந்தன. நாங்கள் எல்லாவற்றிலுமே கடுமையாக எங்களை வருத்தினோம். அப்போதெல்லாம் எங்களுக்கு மென்மேலும் உறுதியூட்டியவை ராயு அண்ணையின் செயல்கள்தாம். அவர் எமது அடிப்படைத் தேவைகளை தந்தை ஒருவருக்குரிய அக்கறையோடு கவனித்தார். போராளிகள் அனைவரிலும் அன்பும் அக்கறையும் செலுத்தினார். ராயு அண்ணை பயிற்சி செய்வதைப் பார்த்தாலே எங்களுக்கும் அதில் ஆர்வம் வந்துவிடும்”

ராயுவால் வளர்தெடுக்கப்பட்ட ஆற்றல் நிறைந்த சிறுத்தைப் படையணி மூன்றாம் ஈழப்போரில் முக்கியமான பணிகளில் ஈடுபட்டுத்தப்பட்டது. போர்க்களங்களில் நேரடிச் சண்டை அணிகளாக ஈடுபடுத்தப்பட்டதுடன் சிறுத்தைப்படையணிப் போராளிகளாற் படைத்துறை உள்கட்டமைப்புகள் பலவும் ஏற்படுத்தப்பட்டன. இக்காலகட்டத்தில் ராயுவின் பொறுப்பிலிருந்த பொறியியற்றுறை மேலும் பெரிய அளவில் விரிவுபடுத்தப்பட்டது. இயக்கத்தின் சுமைகளை மேலும் மேலும் தாங்கியபடியே ஒரு சுமைதாங்கிபோல அவர் வாழ்ந்தார். இன்னுமின்னும் சுமைகளைத் தாங்குவதர்காகத் தன் அறிவையும் ஆளுமையையும் வளர்த்த படியேயிருந்தார். இப்பொழுது நினைத்துப்பார்க்கையில் பிரமிக்கவைக்கும் பணிகளையெல்லாம் அந்த மனிதர் எப்படிச் செய்து முடித்தாரென்பதை அவரோடு நீண்டகாலம் வாழ்ந்த போராளியொருவர் நினைவு கூறுகிறார்.

“ராயு அண்ணையிடம் தனித்துவமான பல திறமைகளும் குணாதிசயங்களும் இருந்தன. அவர் ஞாபகப்படுத்துவதற்காகப் பெரும்பாலும் எதையும் குறித்துவைப்பதில்லை. எப்படியோ எல்லாவற்றையும் அந்த மூளையிற் பதிந்துவைத்துவிடுவார். தேவைப்படும்போது எல்லாவற்றையும் உடனுக்குடன் அவரால் ஞாபகப்படுத்திக்கொள்ள முடியும். எங்காவது தூரத்துக்குப் புறப்படுவதென்றால் சாரதிக்குப் பக்கத்திற் புத்தகத்துடன் அமர்ந்துவிடுவார். தான் வாகனத்தை ஓட்டும்போது பக்கத்தில் இருப்பவரை வாசிக்கவைத்துக் கேட்டுக்கொண்டிருப்பார். அப்படியுமில்லாவிட்டால் போராளிகளுக்கான விரிவுரைக் கூடமாக அது மாறும். கடினமான காலங்களில் ராயு அண்ணை சிறிது நேரமாவது நித்திரை கொள்வது வாகனத்திற் செல்லும் வேளையிலாகத்தானிருக்கும். வாகனம் சென்றடைந்ததும் தன் மீதிப்பணிகளை ஆரம்பித்துவிடுவார். எப்போதும் அதிகாலைவேளையில் எழுந்துவிடுவதைக் கண்டிப்பான பழக்கமாக வைத்திருந்தார். காலைக்கடன்களின் போதே தன் பொறுப்பாளர்களுக்கு வேலைகளைப் பகிர்ந்தளித்துவிடுவார். இப்படியான இயல்புகளாற்றான் அவரால் இவ்வளவு சுமைகளையும் சுமக்க முடிந்தது”



உண்மையில் அவர் அப்படி வாழ்ந்ததாற்றான் போராட்டத் தளம் யாழ்குடாநாட்டிலிருந்து வன்னிக்கு மாறிய பின்னரும் எமது இயக்கத்தின் வேகமான வளர்ச்சிக் காலத்தில் கூடுதலான பணிகளை அவராற் சுமக்கமுடிந்தது.

வன்னிப்போர்க்களத்தில் எமது படைத்துறை பீரங்கி, மோட்டார் உள்ளிட்ட பல நவீன படைக்கலங்கள் புகுத்தப்பட்டு வலுவூட்டப்பட்டது. எமது படைக்கட்டமைப்புகளுக்கும் தந்திரோபாயங்களுக்குமேற்ப பீரங்கிகளையும் மோட்டார்களையும் பயன்படுத்துவதற்கு ராயு வழிவகுத்தார். எதிரிக்கும் உலகுக்கும் புலிகளின் உண்மைப்பலத்தை உணர்த்திய ஓயாத அலைகள் ஒன்றின்போது எதிரிக்குத் திகைப்பை ஏற்படுத்தும் வகையில் எமது மோட்டார்களின் தாக்குதல் அமைவதற்கு ராயுவின் உழைப்பே காரணமாகும்.

முல்லைப் படைத் தளத்திலிருந்து கைப்பற்றப்பட்ட ஆட்லறிகள் எமது பீரங்கிப்படையை உருவாக்க வழிவகுத்தன. ஆனாலும் அவற்றைப் போர்க்களங்களில் நுட்பமாகப் பயன்படுத்தும் தொழில்னுட்பத்தையும் பட்டறிவையும் பெறுவது எளிதானதாக இருக்கவில்லை. எதிரியும் எமக்கு நீண்டகால இடைவெளியைத் தருவானெனத் தென்படவில்லை. எல்லாப் பொறுப்புகளும் ராயுவிடமே விடப்பட்டன. “ராயு எப்படியோ செய்து முடிப்பார்” என்று தலைவர் நம்பினார். அதனாலேயே விரைவில் நடக்கவிருந்த ஆனையிறவு – பரந்தன் ஊடறுப்புச் சமரைத் தலைவர் ஒத்திவைத்துக் காத்திருந்தார். ராயுவும் அவரது போராளிகளும் சூறாவளியாகச் சுழன்றுழைத்த அந்த நாட்களைப் பீரங்கிப்படையணியின் தளபதியொருவர் நினைவு கூறுகிறார்.

“எங்களைப் பொருத்தவரை அப்போது எமது கைகளில் இரண்டு இரும்புக்குத்திகள் இருந்தன. ஏனெனில், அப்போது ஆட்லறிபற்றிய அறிவு எமக்கு இருக்கவில்லை. தெரியாத்தனமாக ஏதும் செய்துவிட்டால் அவற்றை நாங்கள் இழந்துவிடக்கூடும். அல்லது அவற்றின் செயற்றிறன் குறைந்துவிடக்கூடும். நாம் இக்கட்டான நிலையில் இருந்தோம். ராயு அண்ணை அந்த இரும்புக் குத்திகள் மீதிருந்த ஒவ்வொரு புதிரையும் விடுவித்துக் கொண்டிருந்தார். சில கட்டங்களில் அப்பால் நகரமுடியாமல் முடங்கிவிடுவோம்.

சிலவேளைகளில் நம்பிக்கையின்மைகூட ஏற்படும். “ராயு அண்ணை எப்படியும் கண்டுபிடித்துவிடுவார்” அந்த நம்பிக்கைதான் எல்லோரையும் தூக்கி நிறுத்தும். நம்பிக்கை வீண்போகவில்லை. இரும்புக் குத்திகள் விரைவிலேயே எமது கைகளில் ஆட்லறிகளாக மாறின. எல்லாவற்றையும் கடந்து துல்லியமான சூடுகளை வழங்கக்கூடிய நிலைக்கு ராயு அண்ணை எங்களை முன்னேற்றினார். தலைவரின் எதிர்பார்ப்பின்படியே ஆனையிறவு – பரந்தன் ஊடறுப்புச் சமரின்போது எமது ஆட்லறிகள் துல்லியமான சூடுகளை வழங்கின.”

ஆட்லறிப் பிரிவின் செயற்றிறன் மேலும்மேலும் வளர்க்கப்பட்டுக் கொண்டேயிருந்தது. ஒரு வழமையான மரபுவழி இராணுவக் கட்டமைப்பைப் போலல்லாது எமது படைக் கட்டமைப்புத் தனித்துவமான அம்சங்களைக் கொண்டது. எமது வியூகங்களும் தனித்துவமானவை. இவற்றுக்கு அமைவாக எமது ஆட்லறிப் பிரிவைப் பயன்படுத்துவதில் ராயு வெற்றிகண்டார். பாதகமான காலநிலைகளின்போது ஆட்லறி, மோட்டார் போன்ற மரபுவழி ஆயுதங்களைப் பயன்படுத்த முடியாமையால் மரபுவழிப் படைகள் அக்கால நிலைகளிற் பாரிய அளவிலான சமர்களைத் தவிர்த்தன. ஆனால் எமது ஆட்லறிப் பிரிவை அத்தகைய கால நிலைகளிலும் பயன்படுத்தக்கூடியதாக ராயு அமைத்திருந்தார். ஜயசிக்குறுவிற்கு எதிரான சமர்க்களத்தில் சில இடங்களில் துல்லியமான ஆட்லறிச் சூடுகள் மூலம் இலகுவான வெற்றிகள் பெறப்பட்டன. எல்லாவற்றுக்கும் மேலாக ஓயாத அலைகள் மூன்று நடவடிக்கையின்போது எமது ஆட்லறிப் பிரிவான கேணல் கிட்டு பீரங்கிப் படையணி தனது முழு ஆற்றலையும் வெளிப்படுத்தி உழைத்தது. அதனை ராயுவே தலைமைதாங்கி வழிநடத்தினார்.

எல்லா முனைகளிலும் தொடர்ச்சியாக நீண்டு சென்ற அந்த மீட்புச் சமரிற் பல் சோர்வான கட்டங்களிற் போராளிகளுக்கு உற்சாகமூட்டி வேகமான வெற்றிகளுக்கு வழிவகுத்தார்.





களத்தில் ஏற்படும் நெருக்கடியான கட்டங்களிலெல்லாம் எதிரியின் ஆட்லறிப் பிரிவால் நினைத்துப்பார்க்க முடியாத அளவிற்கு விரைவான சூட்டு ஆதரவை வழங்கக்கூடிய நிலைக்கு எமது ஆட்லறிப் பிரிவை வளர்த்தெடுத்தார். அதனாற் பல பாதகமான களச்சூழல்களிலும் நாம் வெற்றிபெற முடிந்தது. போராளிகள் பலரும் காப்பாற்றப்பட்டனர். தலைவரின் புதிய திட்டமிடலின் கீழ் பரந்தன் சமரில் கனரக ஆயுதங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு ஒரு பகல் சண்டையில் நாம் குதித்தபோது தலைவரின் எதிர்பார்ப்புக்கேற்ப ஆட்லறிகளை ஒருங்கிணைத்துச் சூடுகளை வழங்கி வெற்றிக்கு வழிசமைத்தார். இந்த நம்பிக்கையுடனேயே மேலும் தொடர்ந்த நடவடிக்கைகளில் எம்மால் வெற்றியீட்ட முடிந்தது.

வரலாற்றுப் புகழ்மிக்க இத்தாவிற் சமரின் போது ஈற்றிற் சிங்களம் தொடுத்த பாரிய “அக்கினிக்கேலா” நடவடிக்கையை முறியடித்த சமரின் போதும் களத்தில் நின்ற போராளிகளுக்குப் பீரங்கிகளால் உற்சாகமூட்டி அவர்களின் உயிரைக் காத்து ஓயாது பணியாற்றி வெற்றிகளுக்கு வழிசமைத்தமை ராயுவின் தலைமையில் எமது ஆட்லறிப் பிரிவு ஈட்டிய சாதனைகளில் முக்கியமானதாகும். ராயுவின் பொறுப்பிலிருந்த பொறியியற்றுறையால் “அக்கினிக்கேலா” நடவடிக்கைக்கெதிரான சமரில் அறிமுகம் செய்யப்பட்ட வேடிக் கருவிகள் எதிரி அணிகளைச் சிதறடித்து வெற்றிக்கு வழிகோலின.

போர்க்களங்களில் ஆயுதவலுவைப் பயன்படுத்தி எமது இலகுவான வெற்றிக்கு வழிகோலி, போராளிகளின் உயிர் காகாத்த எமது தளபதியைப் போர்க்களங்களிற் காப்பதில் எல்லோருமே அக்கறை கொண்டிருந்தோம். ராயுவுக்கு ஏதும் நடந்துவிட்டால் அது ஈடுசெய்யப்பட முடியாததென்பதை எல்லோரும் உணர்ந்திருந்தோம். ஆனால் போர் முழக்கங்கள் தணிந்துவிட்ட ஒருநாளிற்றான் எங்களுக்கு இடி காத்திருந்தது. நோயென்று பாயிற் படுத்தரியாத எங்கள் தளபதி ராயு கொடும் நேயினால் வதையுறுவதாகச் செய்தி வந்தது. அவரால் பிள்ளைகள்போல் வளர்க்கப்பட்ட போராளிகளும் அவரை அறிந்தவர்களும் துயரத்தில் வாடினர்.

ராயுவின் நோயின் கடுமை அதிகரித்துக் கொண்டேபோனது. சத்திரசிகிச்சை முடிவுகள் புற்றுநோய் என்பதை உறுதிப் படுத்தின. ஏற்கனவே அவை அவரது உடலில் வலுவாக நிலைபெற்றுவிட்டன. எங்கள் அன்புக்குரிய ராயு மீட்கப்பட முடியாதநிலைக்குச் சென்று கொண்டிருந்தார். படுக்கையில் நாட்கள் கழிவதை செரிக்க முடியாதவராக இருந்தார்.

“வருத்தமென்று சும்மா படுத்துக்கொண்டு வேலையும் செய்யாமல் நல்ல சாப்பாடு சாப்பிட்டுக்கொண்டு இருக்க ஒரு மாதிரிக் கிடக்கு” என்று தன் போராளிகளுக்கு அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தார். படுக்கையில் இருந்தபடியே தனது போராளிகளுக்கு முக்கியமான விடயமொன்றைக் கற்பிப்பதில் ஈடுபட்டார். அதனால் அவர் தேறிவருவதாக எல்லோரும் நினைக்கத் தொடங்கினர். ஆனால் ராயுவின் வயிறு கல்லாகிக்கொண்டே போனது. தாங்கமுடியாத வயிற்றுவலிக்கு உள்ளாகும் அவரை மயக்கநிலைக்குட் படுத்த வேண்டியிருந்தது. ஈற்றில் மருத்துவத்திற்காக வேறிடத்துக்கு அனுப்ப முடிவுசெய்யப்பட்டது.

ஆட்கொல்லி நோயென்றாலும் இரும்பு மனிதரென்று நாங்கள் எல்லோரும் அடிக்கடி கூறிக்கொள்ளும் கேணல் ராயு அவர்கள் சில காலத்துக்காவது வாழக்கூடிய நிலையில் திரும்பிவருவாறேன்று எதிர்பார்த்தோம். அடுத்த மாவீரர் நாளில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக ராயு நட்டுவைத்த பூங்கன்றுகளும் அவ்வாறுதான் எண்ணியிருக்கும். ஆனால் 25.08.2002 ஆம் நாளன்று எல்லாமே பொய்த்துப்போயின.

வெளியீடு: விடுதலைப்புலிகள் இதழ் புரட்டாதி – ஐப்பசி, 2002








# தமிழீழ செய்திகள்




## 'நீதிபதிக்கே உயிரச்சுறுத்தல் என்றால் எமக்கான நீதி எப்போது?'

அக்டோபர் 01, 2023

'முல்லைத்தீவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் இன்று (01) காலை 10 மணியளவில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில் சங்கத்தினரது போராட்ட இடத்துக்கு முன்பாக இப்போராட்டம் இடம்பெற்றது.







இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் 'நீதிபதிக்கே உயிரச்சுறுத்தல் உள்ள நாட்டில் எமக்கு நீதி எப்போது?', 'சர்வதேசமே எமக்காக குரல் கொடுக்க எழுந்திரு', 'கையளிக்கப்பட்ட மாணவர்கள் எங்கே?', 'குடும்பமாக ஒப்படைக்கப்பட்ட சிறுவர்கள் எங்கே?', 'தமிழ் குழந்தைகள் என்ன பயங்கரவாதிகளா?', 'சின்னஞ்சிறு சிறார்களும் ஆயுதம் ஏந்தியவர்களா?', 'பாடசாலை சென்ற மாணவன் எங்கே?' போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்ததுடன், கோஷங்களையும் எழுப்பினர்.

இலங்கையில் காணாமல்போன தமிழ் சிறுவர்கள் மற்றும் குழந்தைகளின் ஒளிப்படங்களையும் இதன்போது கைகளில் ஏந்தியிருந்தனர்.

இந்த போராட்டத்தில் முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக செயற்பாட்டாளர் பீற்றர் இளஞ்செழியன், காணாமலாக்கப்பட்ட உறவுகளின் உறவினர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள், சிறுவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

அத்துடன் குறித்த விடயம் தொடர்பாக நீதிமன்றம் சென்று அடுத்த கட்ட நடவடிக்கையை மேற்கொள்ளமாறு பிரதேச செயலாளர் இருதரப்புக்கும் தெரிவித்ததுடன், அதுவரை தற்காலிகமாக அயலில் உள்ள மயானத்தில் இறந்தவர்களின் சடலங்களை புதைக்குமாறும் சிங்கள மக்களுக்கு தெரிவித்திருந்தார்.







## தேசியத் தலைவரின் இளைய மகன் பாலச்சந்திரன் பிறந்தநாளில் குருதிக்கொடை வழங்கிய பள்ளித் தோழர்கள்!

அக்டோபர் 01, 2023

கிளிநொச்சியில் தேசியத் தலைவரின் இளைய மகன் பாலச் சந்திரன் பிறந்த நாளாகிய இன்று பாலச்சந்திரனின் பள்ளித் தோழர்கள் குருதிக்கொடை முகாமை நடத்தியுள்ளனர்.

பாலச்சந்திரன் நினைவாகவும், சிறுவர் தினத்தை முன்னிட்டும், போரின் போது உயிரிழந்த மாணர்வளை நினைவு கூர்ந்தும் கிளிநொச்சி மகா வித்தியாலய 2015 உயர் தர பழைய மாணவர்களின் எழுகை அமையத்தால் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

குருதிக்கொடை நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை(01-10-2023) கிளிநொச்சி பழைய மருத் துவமனை மண்டபத்தில் (பழைய நீர்த்தாங்கி முன்பாக) காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை குருதிக்கொடை நடைபெற்றது.





# வடக்கு – கிழக்கில் நீதிமன்றச் செயற்பாடுகளை சட்டத்தரணிகள் புறக்கணிக்க வேண்டும்!

## தமிழ்த்தேசியப் பண்பாட்டுப் பேரவையின் தலைமை ஒருங்கிணைப்பாளர் எஸ். நிஷாந்தன்

அக்டோபர் 01, 2023

உயிர் அச்சுறுத்தல், அழுத்தம் காரணமாக முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜா இராஜினாமா செய்துவிட்டு நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார். இதற்குச் சிங்கள இனவாதியான சரத் வீரசேகரவே முழுக் காரணம். எனவே, வடக்கு -கிழக்கிலுள்ள நீதிமன்றச் செயற்பாடுகளை சட்டத்தரணிகள் புறக்கணித்து எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டுமெனத் தமிழ்த்தேசியப் பண்பாட்டுப் பேரவையின் தலைமை ஒருங்கிணைப்பாளர் எஸ்.நிஷாந்தன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் இன்று ஞாயிற்றுக்கிழமை(01.10.2023) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ் நீதிபதிக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்த சிங்கள இனவாதி சரத் வீரசேகரவிற்கு எதிராக வடக்கு – கிழக்கில் மக்கள் போராட்டங்கள் வெடிக்க வேண்டும். சரத் வீரசேகர நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து கொண்டு பௌத்த துறவிகளைத் தூண்டி இனவாதச் செயற்பாடுகளை முன்னெடுக்கிறார். எனவே, இந்த அரசாங்கத்தில் அவர் வகிக்கும் பதவிகள் பறிக்கப்பட வேண்டும்.

தமிழ் நீதிபதிக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை தொடரபில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூடிய கவனம் எடுத்துச் செயற்படுவதோடு நாடாளுமன்றத்திற்குள்ளும், வெளியிலும் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். மக்கள் மட்டும் தான் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும் அல்லது மக்கள் மயப்படுத்தப்பட்ட போராட்டங்களைத் தான் நடத்த வேண்டும் என்றில்லை. நாடாளுமன்றத்திற்கு வெளியே போராட்டங்களைத் தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும்.



தமிழ் நீதிபதியின் உயிருக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டு அவர் மீண்டும் முல்லைத்தீவு நீதிமன்றில் பணியாற்றக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும் எனவும் குறித்த ஊடக

# மட்டு சித்தாண்டியில் இன்று 15ஆவது நாளாக பண்ணையாளர்களின் அறவழிப் போராட்டம்!

அக்டோபர் 01, 2023

மட்டக்களப்பின் மயிலத்தமடு, மாதவனை என்பது 25,000 ஹெக்டேர் மேய்ச்சல் தரையாகும். இங்கு 250,000-300,000 கால்நடைகளுக்கு உரித்துடைய 978 தமிழ் பண்ணையாளர்கள் உள்ளார்கள். இந்த மேய்ச்சல் நிலம் தமிழ் பண்ணையாளர்களின் வாழ்வாதாரமாக மட்டுமின்றி மட்டக்களப்பின்- கிழக்கின் பலமான பொருளாதார ஆதாரமாகவும் இருக்கின்றது .

ஆனால் தற்போது இந்த பொருளியல் ஆதாரமான மேய்ச்சல் நிலத்தில் சிங்கள குடியேற்றங்களை தீவிரமாக செய்ய தொடங்கி இருக்கின்றார்கள். இவர்களுக்கு இராணுவத்தினர் ஒத்துழைப்பு வழங்குகின்றார்கள். இதனால் நீதிமன்ற தீர்ப்புகளை கூட உதாசீனம் செய்து மேய்ச்சல் நிலத்தை சிதைக்கின்றார்கள். குறிப்பாக மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் கட்டுப்பாட்டிலுள்ள இந்த மேய்ச்சல் நிலத்தில் சிங்கள குடியேற்றவாசிகளுக்கு சோளம் பயிர் செய்வதற்கு மட்டும் மூவாயிரம் ஏக்கர் வழங்க முயற்சின்றார்கள். இந்த பகுதிகளில் ஏற்கனவே 2,000 ஏக்கர் மேய்ச்சல் நிலப்பரப்பை எரித்து சாம்பலாக்கி இருக்கின்றார்கள்.

5,000 இற்கு மேற்பட்ட கால்நடைகளை சாவடித்து இருக்கின்றார்கள, காணாமலாக்கி இருக்கின்றார்கள். பல்வேறு வகையில் பண்ணையாளர்களை அச்சுறுத்துகின்றார்கள். துன்புறுத்துகின்றார்கள். அதே போல பௌத்த பிக்குகள் சிலர் பௌத்த மடாலயமொன்றை நிறுவி பௌத்தசிலைகளை நிறுவி சிங்கள நிலமாக மாற்ற முயற்சிக்கின்றார்கள். இந்த தொடர் ஆக்கிரமிப்புகளால் மேய்ச்சல் நிலத்தை நம்பி வாழும் தமிழ் பண்ணையாளர்கள் நிச்சயமற்ற எதிர்காலத்தை எதிர்கொண்டு இருக்கின்றார்கள்.

இது மட்டக்களப்பின் மொத்த பொருளாதார வருமானத்தில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்த போகின்றது. மேற்படி ஆக்கிரமிப்புக்ளுக்கு மத்தியில் தமிழ் பண்ணயாளர்கள் தங்கள் கால்நடைகளுக்காக வெறும் 10,000 ஹெக்டேர் மேய்ச்சல் தரவையை கேட்கும் போது மகாவலி அபிவிருத்தி அதிகார சபை வெறும் 3,025 ஹெக்டர் நிலம் மட்டுமே வழங்கப்படும் என சொல்லுகின்றது. பால் உற்பத்தி பொருட்களை இறக்குமதி செய்ய ஆண்டு தோறும் 60-70 பில்லியன் செலவிடுகின்றது. இது இலங்கை இறக்குமதி செலவீனத்தில் 2.1% ஆகும்.

சிங்கள ஆக்கிரமிப்பை தடுத்து பண்ணையார்களின் போக்குவரத்துக்கான சரியான பாதைகளை ஏற்பாடு செய்து, கால்நடைகளுக்கான சரியான குடிநீர் வசதிகளை ஏற்பாடு செய்து, பாலை சேகரித்து வைப்பதற்கான பால் சேகரிப்பு நிலையங்களை உருவாக்கினால் இவர்களால் மட்டக்களப்பின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் பங்களிக்க முடியும்.

அதாவது மேற்படி பண்ணியாளர்களை ஊக்குவித்து அவர்களுக்கான நிலத்தில் சுதந்திரமாக தொழில் செய்ய அனுமதித்தால் அவர்கள் மேற்படி இலங்கையின் மொத்த தேசிய உற்பத்திக்கு பங்களிக்க முடியும். இதன் மூலம் பால் பொருள் இறக்குமதியை கட்டுப்படுத்த முடியும்.

ஆனால் இதுபற்றி பொருளாதார ரீதியாக கூட சிந்திக்க சிங்கள ஆட்சியாளர்கள் தயாரில்லை. இயற்கைப் பண்ணைகளை திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களுக்குப் பயன்படுத்துகின்றார்கள்.இதனால் தமிழர்களின் பொருளாதாரத்தை சிதைப்பதை தவிர வேறு எதனையும் சாதிக்க முடியாது



# சர்வதேசம் இலங்கை அரசாங்கத்தினுடைய போக்குகளிற்கு பொறுப்பு கூற வைக்க வேண்டும்!

## முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன்

அக்டோபர் 01, 2023

சர்வதேசம் இலங்கை அரசாங்கத்தினுடைய போக்குகளிற்கு பொறுப்பு கூற வைக்க வேண்டும் என முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி பதவி விலகல் தொடர்பாக இன்றையதினம் (30.09.2023) முல்லைத்தீவு ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு கருத்து தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி அனைத்து பொறுப்புகளில் இருந்தும் விலகியுள்ளதாக தற்போது கருத்துக்கள் பரிமாறப்பட்டு கொண்டு இருக்கிறது. இதனால் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மக்கள் மட்டுமல்ல வடக்கு கிழக்கு மற்றும் உலக அரங்கில் உள்ள தமிழ் மக்கள் அனைவரும் பதவி விலகலால் பெரும் அதிர்ச்சிக்குள்ளாகியிருக்கிறார்கள்.

AR-673 (2018) என்ற வழக்கில் பௌத்த விகாரை கட்டப்படுகின்ற போது முழுமையாக கட்டி முடிக்கப்பட்டு விட்டது என்ற கருத்தை உடனடியாக 2023.02.23 ம் திகதி முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திற்கு சென்று முறைப்பாடு ரவிகரன் அவர்களால் செய்யப்பட்டு அதன் பிரகாரம் சட்டத்தரணிகள் ஊடாக முல்லைத்தீவு நீதிமன்றத்தில் நகர்த்தல் பத்திரம் மூலம் தாக்கல் செய்யப்பட்டு தொடர்ச்சியாக வழக்கு இடம்பெற்று வந்ததன் இறுதி தீர்ப்பே 31.08.2023ல் நடைபெற்றிருந்தது.

இறுதி தீர்ப்பில் தொல்லியல் திணைக்களம் மூன்று முறைகள் நீதிமன்ற கட்டளைகளை மீறியுள்ளார்கள் என்ற கருத்து உட்பட அங்கே சைவ சமயத்திற்கு மறுப்பு தெரிவிக்காத வகையில் சைவ வழிபாடுகளை மேற்கொள்ளலாம் என்று வழங்கப்பட்ட தீர்ப்பு வரலாற்று சிறப்புமிக்கதாக அமைந்திருந்தது.

நீதிபதி அவர்கள் இலங்கை நாட்டிலே தொல்லியல் திணைக்களத்தினுடைய அத்துமீறல்களை சுட்டிக்காட்டிய சம்பவமாகவே பார்க்கப்படுகின்றது. இவ்வாறான நிலையில் அச்சுறுத்தல் பல் வகையில் வழங்கப்பட்டு சட்டமா திணைக்களத்திற்கு வருகை தருமாறு கூறி அங்கே தீர்ப்பை மாற்றி அமைக்கும்படி கூறப்பட்டிருக்கிறது. இதனை விட புலனாய்வாளர்களின் கண்காணிப்பு தீவிரம், பாதுகாப்பு குறைக்கப்பட்டமை, சரத்வீரசேகர போன்ற இனவாதிகளால் அச்சுறுத்தல்கள் இவ்வாறான சூழ்நிலையில் பதவி விலகல் மூலம் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக அறியக்கூடியதாக இருக்கின்றது.

நீதிபதிக்கே இந் நிலமை என்றால் தமிழ் மக்களுக்கு எந்த நிலைமை என்பதையே இது சுட்டிக் காட்டுகிறது. தமிழ் மக்களை பொறுத்தவரை இருள் சூழ்ந்த நாடாகவே பார்க்கப்படுகின்றது.

பெயருக்கு தான் ஜனநாயக சோசலிச குடியரசு நாடாக கூறுகிறார்களே தவிர ஜனநாயகத்தை தேடினாலும் கிடைக்காது. தமிழர்களாகிய நாங்கள் நசுக்கப்படுகிறோம், எமது நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன, எமது மதத்தை அழிக்கிறார்கள், பௌத்த மதத்தை திணிக்கிறார்கள், சட்ட விரோத தொழில்களால் கடற்தொழில் செய்ய முடியவில்லை. காடுகள் அழிக்கப்பட்டு மரங்கள் கடத்தப்படுகின்றன, கனியமணல் அகழப்படுகின்றன, கருங்கல் அகழ்வு, கசிப்பு, கஞ்சா போதைப்பொருட்கள் கட்டவிழ்த்து விடப்பட்டு பாடசாலைக்கும் புகுந்து விட்டது.




இவ்வாறு நிலைமையில் நியாயமான நீதிபதியை வெளியேற்றிவிட்டு நாடு போகும் போக்கு நன்றாகவே தெரிகிறது. சிறுபான்மை மக்களின் இனத்திற்கான, பாதுகாப்பிற்கான நாடாக நாங்கள் பார்க்கவில்லை. நிச்சயமாக சர்வதேசம் கவனத்தில் எடுத்து சுமூகமான, நியாயமான தீர்வு கிடைக்க ஆவன செய்ய வேண்டும். இவ் நடவடிக்கைகளுக்கு சர்வதேசம் இலங்கை அரசாங்கத்தினுடைய போக்குகளிற்கு கண்டிப்பாக பொறுப்பு கூற வைக்க வேண்டும். அத்துமீறி நடக்கும் நடவடிக்கைகளுக்கு சர்வதேசம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார்.

# தமிழர்களின் சொத்தாக குருந்தூர் மலையை பார்க்கின்றோம். குருந்தூர் மலையில் வெளிப்பட்ட லிங்கமும் அதனையே உறுதிப்படுத்துகின்றது!

## முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன்

அக்டோபர் 01, 2023

வடக்கு கிழக்கு என்பது தமிழர்களின் பூர்வீக தாயகம். தமிழர்களின் சொத்தாக குருந்தூர் மலையை நாங்கள் பார்க்கின்றோம். குருந்தூர் மலையில் வெளிப்பட்ட லிங்கமும் அதனை உறுதிப்படுத்துகின்றது என முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

இன்றையதினம் (30.09.2023) முல்லைத்தீவு ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

குருந்தூர்மலை விடயம் தொடர்பில் 18.01.2021 ஆம் ஆண்டு தொல்லியல் அகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அவ் அகழ்வாய்வில் லிங்கம் காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. குறித்த லிங்கம் தொடர்பாக வரலாற்று பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் குருந்தூர் மலையில் மீட்கப்பட்ட சின்னங்கள் 2300 ஆண்டுக்கு முற்பட்டவை என்பதை சின்னத்தில் உள்ள தமிழ் வரி வடிவ எழுத்துக்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன என வெளிவந்திருந்தன.

குருந்தூர்மலை பேசப்படுகின்ற சின்னங்கள் பல்லவர் காலத்திற்குரியன என சிலர் கூறுகின்றனர். ஆனால் பல்லவர் காலத்திற்கும் இதற்கும் எந்த தொடர்பும் இல்லை இவை அக்காலத்திற்கு முற்பட்டனவாகும்.

அங்கே செங்கற்களால் கட்டப்பட்ட கட்டிடங்கள் தெளிவாக தெரிகின்றது. அவை நாகர் காலத்தோடு தொடர்புடையவையாகும். நாகர்கள் வழிபட்ட சிவலிங்கங்கள் பனங்காமம், ஒமந்தை போன்ற இடங்களில் பெருமளவில் காணப்படுகின்றது. இங்கே காணப்படுவது சிவலிங்கம் என கூறுவது சால பொருந்தும்.

உறுதியாக கூறக்கூடியது என்னவென்றால் இது பழங்காலத்து லிங்க உருவம். லிங்க காலத்து ஆரம்ப வடிவமைப்பினை பிரதிபலிக்கின்ற வடிவம். நாகர்களின் கடவுளின் பெயர் எழுதப்பட்டுள்ள வடிவம் சைவ சமய சின்னமாக அமைகின்றது என்ற கருத்தை பேராசிரியர் தெளிவாக வழங்கியுள்ளார்.

இவற்றையெல்லாம் கூற காரணம். சிங்களவர்களே ஆதி காலம் தொட்டு இருந்ததென்று பறைசாற்றிகொண்டு இருக்கும் நேரத்தில் இங்கே தமிழர்கள் தான் இருந்தார்கள் தமிழர் பூர்வீக தாயகத்திலே சைவ வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. தொல்லியல் ஆய்வாளர்கள் இதனை உறுதிபடுத்தி இருக்கும் போது தங்களுடைய கருத்துக்களை திணித்து எங்களுடைய மதத்தை அழிக்கும் வேலை களில் ஈடுபட வேண்டாம் என்றும் இவ்வாறான நிலை தான் இங்கே இருக்கிறது.

உறுதியாக சைவ வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்ட குருந்தூர் மலையில் ஆதி சிவன் ஐயன் ஆலயம் ஆதி காலம் தொட்டு இருந்து வருகிறது என்பதனை இதனூடாக உறுதிப்படுத்துகின்றோம்.







காணி விடயங்களில் 12.05.1933 ஆம் ஆண்டு 78 ஏக்கர் 2 றூட் 13 பேர்ச் காணி தொல்லியல் ஆய்வுக்காக அறிவிக்கப்பட்டுள்ளது. இது உண்மை. இதன் பின்னர் 306 ஏக்கர் காணி இவர்கள் தொடர்ச்சியாக கேட்டு வந்த நிலையில் அவ்வளவு ஏக்கர் ஏன் எனவும் 5 ஏக்கர் காணியை எடுக்குமாறு கூறியதாக ஜனாதிபதி கூறியதாக ஊடகங்களில் அறியக் கூடியதாக இருந்தது.

இந்நிலையில் 2013 ஆம் ஆண்டு வர்த்தமானியில் 229 ஏக்கர் காணி இன்னும் மேலதிகமாக ஒதுக்கப்பட்டதாகவும் அது தொல்பொருள் காப்பு பகுதி எனவும் விவசாயம் அங்கே மேற்கொண்டு வரும் விவசாயிகளுக்கு வேறு இடங்களில் காணிகள் வழங்கப்படும் என்றும் கடந்த 2023.09.21 ஆம் திகதி வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துரையாடப்பட்டதாக ஊடகங்கள் ஊடாக அறியக்கூடியதாக இருந்தது.

தெய்வ நம்பிக்கை உள்ள இடத்தினை கொச்சைப்படுத்த முடியாது. பூர்வீக சைவ இடம் தான் என்பதனை உறுதியாக குறிப்பிடுவதோடு வடக்கு கிழக்கு என்பது தமிழர்களின் பூர்வீக தாயகம். தமிழர்களின் சொத்தாக குருந்தூர் மலையை நாங்கள் பார்க்கின்றோம். குருந்தூர் மலையில் வெளிப்பட்ட லிங்கமும் அதனை உறுதிப்படுத்துகின்றது.

தற்போது ஒரு ஏக்கர் பௌத்தத்திற்காகவும், ஒரு ஏக்கர் சைவத்திற்காகவும், ஒரு ஏக்கர் பொது தேவைக்காகவும் என கடந்த 21 ஆம் திகதி கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றிருக்கிறது. அதுவும் மலை அடிவாரத்தில் வேறே இடத்தில் தருவதாக கூறுவதற்கு இவர்கள் யார்? என்ற வினாவினை நான் கேட்க விரும்புகின்றேன். உதாரணத்திற்கு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம் இருக்கும் இடத்தில் இருந்து வேறு ஒரு இடத்திற்கு கொண்டு சென்று வழிபடுங்கள் என்று இவர்கள் கூற முடியுமா?

ஏனென்றால் இது எங்களுடைய பூர்வீக தாயக சைவ வழிபாட்டுக்குரிய இடம். குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் இருந்த இடம்தான் எங்களுடைய வழிபாட்டுக்குரிய இடமே தவிர, இவர்கள் தாங்கள் திட்டமிடுவதற்கும் வேறு இடத்தில் ஆலயம் அமைக்க கூறுவதற்குமான இடங்கள் அல்ல. பூர்வீக இடத்தில் நாங்கள் வழிபட வேண்டும்.

கடந்த 27.01.2021 ஆம் ஆண்டு சூலம் உடைக்கப்பட்டுள் எதனை முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திற்கு சென்று முறைப்பாடு மேற்கொண்டிருந்தேன். அத்தோடு 29 ஆம் திகதி சூலம் இல்லை என்பதையும் முறைப்பாடு மேற்கொண்டிருந்தேன். முல்லைத்தீவு பொலிஸார் நேரடியாக பார்த்து உறுதிப்படுத்தியும் சம்பந்தப்பட்ட யாரையும் கைது செய்யாமல் பொலிஸாரும் உடந்தையாக இருந்து எங்களுடைய வழிபாட்டு சின்னங்களை மறைப்பதற்கும், வழிபாடுகளை நிறுத்துவதற்குமான வேலைகளை தான் தொடர்ச்சியாக செய்து கொண்டு வருகிறார்கள் என மேலும் தெரிவித்தார்.

# குருந்தூர்மலை விவகாரம்போன்று, கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி விவகாரத்திலும் நீதிபதியை அச்சுறுத்தி, உண்மைகளை மூடிமறைக்க முயல்வார்களா?

## முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன்

அக்டோபர் 01, 2023

நீதிபதி சரவணராஜாவிற்கு குருந்தூர்மலை விவகாரத்தில் அரசதரப்பால் அரசியல் ரீதியாகப் பிரயோகிக்கப்பட்ட மன அழுத்தம் மற்றும், உயிர் அச்சுறுத்தல் காரணமாக அவர் தனது பதவியைத் துறந்து இந்த நாட்டை விட்டு வெளியேறியுள்ள இத்தகைய சூழலில், கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரத்திலும் அழுத்தங்கள், அச்சுறுத்தல்கள் பிரயோகிக்கப்பட்டு உண்மைத்தன்மை மூடி மறைக்கப்படுமோ என்று சந்தேகம் எழுவதாக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.



முல்லைத்தீவு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சர்வதேச சிறுவர் மற்றும், முதியோர் தினமான ஒக்ரோபர் (01) இன்று ஆர்ப்பாட்டமொன்றினை முன்னெடுத்திருந்த நிலையில் அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே ரவிகரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

சர்வதேசரீதியில் சிறுவர்களும், முதியவர்களும் ஒக்ரோபர் (01) இல் தமக்கான தினத்தில் மகிழ்வோடிருக்கின்றனர்.

இந் நிலையில் இறுதிக்கட்ட போர்க் காலத்தில் இராணுவத்திடம் கையளித்த சிறார்களையும், உறவுகளையும் மீளக் கையளிக்குமாறு வலியுறுத்தி எமது உறவுகள் இரண்டாயிரம் நாட்களுக்கு மேலாக பல்வேறு துன்ப துயரங்களுக்கு மத்தியில் தொடர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.




அதுமாத்திரமின்றி இந்த நாட்டில் நீதித் துறையின் சுயாதீனத் தன்மைக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது. குறிப்பாக அரசியல் ரீதியாக பெரும்பான்மையின அரச தரப்புக்கள் முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜாவிற்கு அழுத்தங்களைப் பிரயோகித்து, உயிர் அச்சுறுத்தல்



விடுத்து இவ்வாறாக பல வழிகளிலும் நீதிபதியைத் துன்புறுத்திய நிலையில் நீதிபதி தனது பதவியைத் துறந்து இந்த நாட்டிலிருந்து வெளியேறியிருக்கின்றார்.

தற்போது கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரம் இடம்பெற்று வருகின்றது. முல்லைத்தீவு நீதிபதி, சட்டவைத்திய அதிகாரி, தொல்லியல் துறையினர் உட்பட சில திணைக்களங்கள் ஆகிய தரப்புக்களின் பங்கேற்புடன் இந்த மனிதப்புதைகுழி அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வாறான சூழலில் அரசியல் ரீதியாக அரசதரப்புக்கள் பிரயோகித்த அழுத்தங்கள் மற்றும், அச்சுறுத்தல் நிலைமைகள் காரணமாக நீதிபதி இந்த நாட்டைவிட்டு வெளியேறியுள்ள சூழலில், கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரத்திலும், அழுத்தங்கள் அச்சுறுத்தல்கள் பிரயோகிக்கப்பட்டு உண்மைத்தன்மை மூடி மறைக்கப்படுமோ என்ற சந்தேகம் எமக்குத் தோன்றியிருக்கின்றது – என்றார்.

# மட்டக்களப்பு சட்டத்தரணிகள் கண்டன ஆர்ப்பாட்டம்!

அக்டோபர் 03, 2023

முல்லத்தீவு நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக நீதிகோரி மட்டக்களப்பு சட்டத்தரணிகள் இன்று பணிபுறக்கணிப்புடன் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.






முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜாக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக நீதிகோரி மட்டக்களப்பு சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் சிரேஸ்ட சட்டத்தரணி பி.பிறேமநாத் பணிப்புறக்கணிப்பு மற்றும் கண்டன ஆர்ப்பாட்டத்துக்கு அழைப்பு விடுத்ததையடுத்து இன்றைய தினம் காலை 10 மணிக்கு மட்டு






நீதிமன்ற கட்டிடத்தொகுதிக்கு முன்னால் சட்டத்தரணிகள் ஒன்றிணைந்தனர்.

இதில் நீதித்துறை சுதந்திரத்திற்காய் குரல் கொடுப்போம், சட்டத்தின் முன் யாவரும் சமம், நீதிதுறையை அச்சுறுத்தாதே, பாரபட்சமற்ற விசாரணை வேண்டும். சுதந்திரத்தில் தலையிடாதே போன்ற சுலோகங்கள் ஏந்தியவாறு சுமார் ஒரு மணித்தியாலம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை, மாவட்டத்திலுள்ள வாழைச்சேனை மாவட்ட நீதிமன்றம், ஏறாவூர் சுற்றுவலா நீதிமன்றம், களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிமன்றம், மட்டக்களப்பு நீதிமன்ற கட்டிடத் தொகுதியில் உள்ள உயர்நீதிமன்றம், மேல்முறையீட்டு நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம் நீதவான் நீதிமன்றம், தொழிலாளர் நியாயசபை நீதிமன்றம் உட்பட 8 நீதிமன்றங்கள் சட்டத்தரணிகள் பணிப்புறக்கணிப்பால் செயலிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நீதித்துறை சுயாதீனத்தைப் பாதுகாக்கக் கோரி கிளிநொச்சியில் போராட்டம்!

அக்டோபர் 03, 2023

இலங்கையில் நீதித்துறை மீது அரச நிருவாகத்துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு நெருக்கடிகள் காரணமாக, நாட்டை விட்டு வெளியேறிச் சென்றுள்ள முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் சரவணராஜாவிற்கு நீதியும் பாதுகாப்பும் கிடைக்கக் கோரியும், நீதித்துறையினது சுயாதீனத்தைப் பாதுகாக்கக் கோரியும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் இன்றைய தினம் கிளிநொச்சி நகரில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப் பட்டுள்ளது.



குறித்த போராட்டம் பழைய மாவட்ட செயலகம் முன்பாக இடம்பெற்றது.

இதுதொடர்பில், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் மாண்புமிகு அன்ரனியோ குட்ரெஸ் அனுப்பி வைப்பதற்கு ஏதுவாக, நாளை கொழும்பில் வைத்து, ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் ஆன்ட்ரே பிரான்ச் அவர்களிடம், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனால் கையளிக்கப்படவுள்ள 'இலங்கை நீதித்துறை மீதான அரச நெருக்கீடுகளுக்கு பரிகாரம் காண்பதற்கான பரிந்துரைப்பு மனு' இதன் போது வாசிக்கப்பட்டது.

அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கைத்தீவில் கடந்த எழுபது (70) ஆண்டுகளுக்கு மேலாக நீடித்துவருகின்ற இன முரண்பாடுகள் தொடர்பிலும், சிங்களத்தின் கட்டமைக்கப்பட்ட இனரீதியான வஞ்சிப்புகள் தொடர்பிலும், அது இனப்படுகொலையாக வியாபகம் பெற்ற வரலாறு தொடர்பிலும் தங்கள் அறிக்கையாளர்கள் ஊடாக தாங்கள் அறிந்துள்ளீர்கள் என்பதை நாம் அறிவோம்.

ஒரு தேசிய இனத்தின் பாரம்பரிய வாழ்விடங்கள் மீதும், அதன் கூட்டுப் பண்பாடுகள் மீதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நீதி, நிருவாகத் துறை ரீதியான பாகுபாடுகள் மற்றும் காலத்துக்குக் காலம் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களின் மூலமாக மேற்கொள்ளப்படுகின்ற வன்பறிப்புகள் என்பவை, உலகத்தில் வாழ்கின்ற எண்ணிக்கையில் குறைந்த ஒரு தேசிய இனக்குழுமத்தை எவ்வாறு நிர்மூலமாக்கும் என்பதை உணர்ந்துகொள்வது அத்தனை சிரமமானதல்ல.

இலங்கைத்தீவில் தமிழ்த்தேசிய இனம்மீது மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலையும் ஓரவஞ்சகப் போக்கும் இன்று இலங்கைத்தீவில் உள்ள தேசிய இனங்கள் அனைத்தினதும் ஜனநாயக நீதித்துறை சார் உரிமைகளைப் பறித்துள்ளது என்பது நிதர்சனமாகும். அரசிற்குப் பலம் கிடைக்கின்ற போதெல்லாம் அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொண்டு நிருவாகத் துறையின் கைப்பொம்மையாக செயற்படும் விதமாகவே நீதித்துறை உருவாக்கப்பட்டு வருகிறது. நீதிச்சேவை ஆணைக் குழுவை நியமிக்கும் அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்கி அதனூடாக நீதிபதிகளின் நியமனங்கள், பதவி உயர்வுகள், நலனோம்பு நயக்கொடைகள், பயிற்சிகள் மற்றும் பாதுகாப்பு என்பவையெல்லாம் அரசியல் அதிகார விருப்பப்படியே மேற்கொள்ளப்படுகின்றன.

இதன்மூலம் அரசு விரும்பிய தீர்ப்புகளைப் பெறவும், ஆணைகளை வழங்கவும், அரசியல் அதிகாரத்தைக் காபந்து செய்யவும் ஏற்றவகையில் இலங்கையின் நீதித்துறை ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இதனால் சட்டத்தின் ஆட்சி பறிக்கப்பட்டு நிருவாகத்துறையின் நோக்கங்களை அடையும் வகையில், விசேடமாக அரசாங்கத்தினது போர்க்குற்றங்கள், இனப்படுகொலை விடயங்கள், நீதிக்குப் புறம்பான கொலைகள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயங்கள், மனிதப்புதைகுழி விவகாரங்கள், பௌத்தமயமாக்கல், நில மற்றும் பண்பாட்டு ஆக்கிரமிப்பு




என்பவற்றை சட்டமுறைமைகளுக்கு முரணாகக் கையாள்வதற்கு நீதித்துறை நிர்ப்பந்திக்கப்பட்டதன் விளைவே கௌரவ நீதிபதி சரவணராஜா அவர்கள் நாட்டைவிட்டு வெளியேறிய நிகழ்வாகும்.

மதிப்பார்ந்த பொதுச்செயலாளர் அவர்களே!

சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை தனது ஆட்சியின் நோக்காகக் கொண்டு சர்வாதிகாரச் சிந்தனைகளுக்கும் செயல்களுக்கும் ஜனநாயக முலாம் பூசிக்கொண்டு திடமான வெளியுறவு, பொருளாதாரக் கொள்கைகள் எவையுமின்றி, உறுதியான அரசியலமைப்பு ஏற்பாடுகளின்றி வெறும் இனத்துவேசச் சிந்தனைகளின் மேல் ஏறிநின்று இலங்கையின் நீதித்துறையினையும் இங்கு வாழ்கின்ற தமிழ்த்தேசிய இனத்தையும் கட்டமைக்கப்பட்ட வழிமுறைகளின் ஊடாக அரசு அழித்து ஒழித்து வரும் உச்ச தருணமாகிய இவ்வேளையில் தாங்களும் சர்வதேச சமூகமும் நேரடியாகத் தலையீடுசெய்து அமைதி, சமாதானம், நல்லிணக்கம், நீதித்துறையின் சுயாதீனம் என்பவற்றைப் பாதுகாக்கவும் சகோதரத்துவம் மிக்க இலங்கையைக் கட்டியெழுப்பவும் தங்கள் எல்லாவகை வல்லமைகளும் அணுகுமுறைகளும் சமரசங்களற்ற வகையில் இலங்கைத்தீவுக்குத் தேவையென தங்களை அழைத்து நிற்கிறோம். என குறிப்பிட்டுள்ளது.

# முல்லைத்தீவு மாவட்டம் தென்னிலங்கை இனவாதிகள், பௌத்த பிக்குகளால் குறிவைக்கப்படுகின்றது!

## நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்

அக்டோபர் 05, 2023

முல்லைத்தீவு மாவட்டம் தென்னிலங்கை இனவாதிகள், பௌத்த பிக்குகளால் குறி வைக்கப்படுகின்றது என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார். மேலும் கருத்து தெரிவிக்கையில்,




குருந்தூர் மலை தொடர்பான தீர்ப்பை மாற்ற வேண்டும் என்று அழுத்தங்கள், உயிர் அச்சுறுத்தல் பிரயோகிக்கப்பட்டுள்ளதால் நீதிபதி அவர்கள் நாட்டைவிட்டு சென்றிருக்கின்றார் என்பது அனைவரும் அறிந்த உண்மை.

பாராளுமன்ற உறுப்பினர்கள் பகிஷ்கரிப்பதென்பது ஒரு விடயம். ஆனால் அவர்களுடைய பதவிகளை ராஜினாமா செய்வதென்பது என்னைப்பொறுத்தமட்டிலே சாலச்சிறந்ததாக இருக்காது.

ஏனென்றால் ஒட்டுமொத்தமாக ராஜினாமா கடிதத்தை கொடுக்க வேண்டும். ஆனால் தற்போது இருக்கின்ற சூழல் குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டம் தென்னிலங்கை இனவாதிகள், பௌத்த பிக்குகளால் குறி வைக்கப்படுகின்றது. இவ்வாறு குறிவைக்கப்படுகின்ற சூழலிலே நாங்கள் இந்த விடயத்தினை செய்வோமாக இருந்தால் பாராளுமன்றத்திலே கொண்டு



செல்வதற்கான வாய்ப்புகள் அற்று போவதாக இருக்கும்.

சர்வதேசத்திடம் உரிமையோடு கேட்கும் விடயங்கள் அனைத்தும் கேட்க முடியாத சூழல் உருவாகும். பகிஷ்கரிக்கின்ற விடயத்திலே மீள் பரிசீலனை செய்யலாம். ஆனால் நிலங்கள் பறிபோய் கொண்டிருக்கின்ற சூழலிலே தட்டிக்கேட்கின்ற, நிறுத்துகின்ற வழிகளை கையாளுகின்ற ஒரு சூழல் சாத்தியமற்றது என்பது என்னுடைய கருத்து.

ஏனென்றால் தென்னிலங்கையிலே இருக்கின்ற இனவாதிகள் கூடுதலாக பௌத்த பிக்குகள் எங்களுடைய பூர்வீகத்தை ஒழிப்பதற்காக தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்ற வரலாற்றை சிதைப்பதற்காக முழு மூச்சோடு செயற்பட்டு கொண்டு வருகின்ற நிலையிலே பாராளுமன்றத்தை துறந்தோமாக இருந்தால் நிலத்தையோ, மக்களுடைய பிரச்சினைகளையோ தட்டிக்கேட்கின்ற நிலைமை அல்லது சர்வதேசத்திடம் எடுத்து சொல்கின்ற நிலமைகள் சற்று மாறாக அமைந்துவிடும் ஆகவே இந்த விடயத்திலே இந்த காலகட்டத்தில் சரியானதொன்று அல்ல என்பது என்னுடைய கருத்து என மேலும் தெரிவித்தார்.

# நீதிபதி சரவணராஜாவுக்கு சட்டமா அதிபர் அழுத்தம்!

## பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன்

அகட்டோபர் 03, 2023

விடுக்கப்பட்ட கட்டளையை மீளப்பெறுமாறு முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி சரவணராஜாவுக்கு சட்டமா அதிபர் அழுத்தம் பிரயோகித்துள்ளார்.

இந்த நாட்டில் நீதித்துறைக்கு சாவு மணி அடிக்கப்பட்டுள்ளது. நீதிபதிகள் சுயாதீனமாக செயற்பட முடியாத நிலையில் எவ்வாறு தமிழர் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் இதனால் தான் சர்வதேச விசாரணையை தொடர்ந்து வலியுறுத்துகிறோம்  என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிரதன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (03) இடம்பெற்ற குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் மற்றும் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்ட மூலம் ஆகியன மீதான  விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி டி.சரவணராஜா உயிரச்சுறுத்தல் காரணமாக பதவி துறந்து நாட்டை  விட்டு வெளியேறுவதற்கு காரணமாக இருந்த ஒருசில பாராளுமன்ற உறுப்பினர்களின் இனவாத கருத்துக்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் பேரினவாத அரசாங்கம் இன்றும் ஒரு நடவடிக்கை எடுக்கவில்லை.

நாட்டின் நீதித்துறை கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது என்பதை இந்த சம்பவம் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. நாட்டின் நீதித்துறை அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டுள்ளது என்பதை நாட்டு மக்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர். 2005, 2006 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் யாழ்ப்பாணத்தில் நீதியரசர் ஸ்ரீநிதியை இராணுவ வாகனத்தின் ஊடாக கொலை செய்யும் முயற்சி எடுக்கப்பட்டது.

2010 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் பிரதம நீதியரசர் சிரானி பண்டாரநாயக்க வலுக்கட்டாயமான முறையில் பதவி நீக்கப்பட்டார். இந்த நாட்டில் நீதி இல்லை என்பதற்கு பல விடயங்கள் சான்று பகர்கின்றன. படுகொலை செய்யப்பட்ட ஜோசப் பரராசசிங்கம் உட்பட பல தலைவர்களுக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை. திருகோணமலையில் கொல்லப்பட்ட 5 மாணவர்களுக்கும், கொலை செய்யப்பட்ட பிரான்ஸ் நாட்டு தொண்டர்களுக்கும் நீதி கிடைக்கவில்லை.

வழங்கிய கட்டளையை மீளப்பெறுமாறு சட்டமா அதிபர் விடுத்த அழுத்தத்தினால் முல்லைத்தீவு நீதிபதி பதவி துறந்து நாட்டை விட்டு வெளியேறியுள்ளார். இந்த நாட்டில் தொடர்ந்து சுயாதீனமாக செயற்பட முடியாது என்பதை நீதிபதி தெளிவாக குறிப்பிட்டுள்ளார்கள்.சிங்கள பேரினவாத கொள்கையில் இருந்து விடுப்பட்டு அரச தலைவர்கள் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவார்கள் என்பது கானல் நீராகவே காணப்படுகிறது.

முல்லைத்தீவு நீதிபதிக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலுக்கு நீதி கோரி கிளிநொச்சி பிரதேச மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்துக்கு மகஜர் ஒன்றை  கையளிக்க வலியுறுத்தியுள்ளார்கள்.

அந்த மகஜரில் ‘இலங்கைத்தீவில் கடந்த எழுபது (70) ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வருகின்ற இன முரண்பாடுகள் தொடர்பிலும், சிங்களத்தின் கட்டமைக்கப்பட்ட இன ரீதியான வஞ்சிப்புகள் தொடர்பிலும், அது இனப்படுகொலையாக வியாபகம் பெற்ற வரலாறு தொடர்பிலும் தங்கள் அறிக்கையாளர்கள் ஊடாக தாங்கள் அறிந்துள்ளீர்கள் என்பதை நாம் அறிவோம்.

ஒரு தேசிய இனத்தின் பாரம்பரிய வாழ்விடங்கள் மீதும், அதன் கூட்டுப் பண்பாடுகள் மீதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நீதி, நிருவாகத் துறை ரீதியான பாகுபாடுகள் மற்றும் காலத்துக்குக் காலம் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களின் மூலமாக மேற்கொள்ளப்படுகின்ற வன்பறிப்புகள் என்பவை, உலகத்தில் வாழ்கின்ற எண்ணிக்கையில் குறைந்த ஒரு தேசிய இனக்குழுமத்தை எவ்வாறு நிர்மூலமாக்கும் என்பதை உணர்ந்துகொள்வது அத்தனை சிரமமானதல்ல.

இலங்கைத்தீவில் தமிழ் தேசிய இனம் மீது மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலையும் ஓரவஞ்சகப் போக்கும் இன்று இலங்கைத்தீவில் உள்ள தேசிய இனங்கள் அனைத்தினதும் ஜனநாயக நீதித்துறை சார் உரிமைகளைப் பறித்துள்ளது என்பது நிதர்சனமாகும். அரசிற்குப் பலம் கிடைக்கின்ற போதெல்லாம் அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொண்டு நிருவாகத் துறையின் கைப்பொம்மையாக செயற்படும் விதமாகவே நீதித்துறை உருவாக்கப்பட்டு வருகிறது.

நீதிச்சேவை ஆணைக்குழுவை நியமிக்கும் அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்கி அதனூடாக நீதிபதிகளின் நியமனங்கள், பதவி உயர்வுகள், நலனோம்பு நயக்கொடைகள், பயிற்சிகள் மற்றும் பாதுகாப்பு என்பவையெல்லாம் அரசியல் அதிகார விருப்பப்படியே மேற்கொள்ளப்படுகின்றன.

இதன்மூலம் அரசு விரும்பிய தீர்ப்புகளைப் பெறவும், ஆணைகளை வழங்கவும், அரசியல் அதிகாரத்தைக் காபந்து செய்யவும் ஏற்றவகையில் இலங்கையின் நீதித்துறை ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இதனால் சட்டத்தின் ஆட்சி பறிக்கப்பட்டு நிருவாகத்துறையின் நோக்கங்களை அடையும் வகையில், விசேடமாக அரசாங்கத்தினது போர்க்குற்றங்கள், இனப்படுகொலை விடயங்கள், நீதிக்குப் புறம்பான கொலைகள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயங்கள், மனிதப்புதைகுழி விவகாரங்கள், பௌத்தமயமாக்கல், நில மற்றும் பண்பாட்டு ஆக்கிரமிப்பு என்பவற்றை சட்டமுறைமைகளுக்கு முரணாகக் கையாள்வதற்கு நீதித்துறை நிர்ப்பந்திக்கப்பட்டதன் விளைவே  நீதிபதி சரவணராஜா அவர்கள் நாட்டைவிட்டு வெளியேறிய நிகழ்வாகும்.

சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை தனது ஆட்சியின் நோக்காகக் கொண்டு சர்வாதிகார சிந்தனைகளுக்கும் செயல்களுக்கும் ஜனநாயக முலாம் பூசிக்கொண்டு திடமான வெளியுறவு, பொருளாதாரக் கொள்கைகள் எவையுமின்றி, உறுதியான அரசியலமைப்பு ஏற்பாடுகளின்றி வெறும் இனத்துவேச சிந்தனைகளின்மேல் ஏறிநின்று இலங்கையின் நீதித்துறையினையும் இங்கு வாழ்கின்ற தமிழ்த்தேசிய இனத்தையும் கட்டமைக்கப்பட்ட வழிமுறைகளின் ஊடாக அரசு அழித்து ஒழித்து வரும் உச்ச தருணமாகிய இவ்வேளையில் தாங்களும் சர்வதேச சமூகமும்



நேரடியாகத் தலையீடுசெய்து அமைதி, சமாதானம், நல்லிணக்கம், நீதித்துறையின் சுயாதீனம் என் பவற்றைப் பாதுகாக்கவும் சகோதரத்துவம் மிக்க இலங்கையைக் கட்டியெழுப்பவும் தங்கள் எல்லாவகை வல்லமைகளும் அணுகுமுறைகளும் சமரசங்களற்ற வகையில் இலங்கைத்தீவுக்குத் தேவையென தங்களை அழைத்து நிற்கிறோம் என்று வலியுறுத்தி ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தின் வதிவிட பிரதிநிதிக்கு அனுப்பி வைத்துள்ளோம்.

குருந்தூர் மலையில் உள்ள  சிவன் ஆலயத்தை இடித்தழித்து அங்கு பௌத்த விகாரை கட்டும் போது கட்டுமாண பணிகளை மேற்கொள்ள வேண்டாம் என்று முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி தடையுத்தரவு பிறப்பித்த போது பௌத்த பேரினவாத கொள்கையுடையவர்கள், பௌத்த பிக்குகளை ஒன்றுத்திரட்டி படை பட்டாளத்துடன் ஒன்றிணைந்து குருந்தூர் மலையில் பௌத்த விகாரையை கட்டி முடித்துள்ளார்கள். இது நீதிமன்றத்தை அலட்சியப்படுத்தும் செயற்பாடாகும்.

திருகோணமலையில் அரிசி மலை பகுதியில் கிழக்கு மாகாண ஆளுநரின் பணிப்புரையை புறக்கணித்து பலவந்தமான முறையில் பௌத்த விகாரை கட்டப்படுகிறது. இந்த நாட்டில் நீதி எங்குள்ளது. நாட்டின் நீதித்துறைக்கு சாவு மணி அடிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் செயற்பாடுகளை விமர்சிக்கும் மக்களை முடக்கவே அரசாங்கம் முயற்சிக்கிறது. எவ்வகையான அடக்குமுறையை கொண்டு வரலாம்  என்றே அரச தலைவர்கள் சிந்திக்கிறார்கள்.

இந்த நாடு முன்னேற்றமடைவதற்கு எந்த சாத்தியமும் கிடையாது. முல்லைத்தீவு மாவட்டத்தில் குருந்தூர் மலை விவகாரம், கொக்குத்தொடுவாய் மனித புதை குழி விவகாரத்தை விசாரணைக்கு எடுத்துக் கொண்டதால் நீதிபதி சரவணராஜா பாரிய நெருக்கடிக்குள்ளானார். தமிழ் நீதிபதி நீதி வழங்க முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர பேரினவாத கருத்தை வெளியிட்டார்.

இலங்கையில் நீதித்துறை இறந்துள்ளது. இந்த நாட்டிலா இன நல்லிணக்கம் உறுதிப்படுத்தப்பட்டு, காணாமலாக்கப்பட்டோருக்கு தீர்வு கிடைக்கப் போகிறது. இதனால் தான் நாங்கள் தொடர்ந்து சர்வதேச விசாரணைகளை கோருகிறோம். தீர்வு திட்டங்களுக்காக கொண்டு வரப்பட்ட அறிக்கைகள், திட்டங்கள் அனைத்தும் கிடப்பில் போடப்பட்டுள்ளது. சகல  இனங்களையும் ஒன்றிணைத்து இந்த நாடு முன்னேற்றமடைய வேண்டுமாயின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பிரச்சினைகளுக்கு சர்வதேச விசாரணை ஊடாக தீர்வு கோருகிறோம். இந்த நாட்டில் நீதி கிடைக்காது, நீதிக்கட்டமைப்பை அரசியல்  தலையீட்டால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது என்றார்.

# அநீதிக்கு குரல் கொடுக்கும் முகமாக யாழ்ப்பாணத்தில் கவனயீர்ப்பு போராட்டம்!

அக்டோபர் 06, 2023

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு குரல் கொடுக்கும் முகமாக யாழ்ப்பாணத்தில் இன்று கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தின் முன்பாக இன்றைய நாள காலை 10 மணியளவில் குறித்த கவனயீர்ப்பு இடம் பெற்றது.

இலங்கை அரசே சட்டவாட்சியை பாதுகாக்க நீதித்துறைச் சுதந்திரத்தை உறுதி செய்ய வலியுறுத்தி போராட்டக்காரர்கள் பதாகைகளை தாங்கி நின்றனர்.

சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் சட்டத்தரணிகள், மனித உரிமைகள் ஆர்வலர்கள், சிவில் சமூகத்தினர், பொதுமக்கள்







என பலரும் கலந்து கொண்டனர்.

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா உயிர் அச்சுறுத்தல் மற்றும் அழுத்தம் காரணமாக பதவியில் இருந்து விலகி நாட்டை விட்டு வெளியேறி சென்றுள்ள நிலையில் அதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்காமையை கண்டித்து போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜாவிற்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக வடமாகாணத்தைச் சேர்ந்த சட்டத்தரணிகள் சங்கங்களைச் சார்ந்த சட்டத்தரணிகளால் முல்லைத்தீவில் ஒக்ரோபர் 03.10.2023 அன்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.!










# நீதிபதிக்கு நீதிகோரி யாழில் மனித சங்கிலிப்போராட்டம்!

அக்டோபர் 04, 2023

முல்லைத்தீவு நீதிபதி விவகாரத்தில் கண்டணத்தை வெளிப் படுத்தும் வகையில் யாழ்ப்பாணத்தில் மனித சங்கிலி போராட் டம் இன்றைய நாள் புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மருதனார்மடத்தில் ஆரம்பித்து யாழ்ப்பாண நகர் வரையில் நீளுகின்ற ஓர் மனித சங்கிலி போராட்டமாக முன் னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்திற்கு ஆதரவாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி, இலங்கை தமிழரசுக் கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ்த் தேசிய கட்சி, தமிழ் மக்கள் விடுதலைக் கழகம், தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சி என்பன ஆதரவு வழங்கி போராட்டத்தில் கலந்து கொண்டனர்.














# நீதிக்காக நீதிதேவதையிடம் மண்டியிட்டு யாழில் போராட்டம்!

அக்டோபர் 04, 2023

யாழ்ப்பாணத்தில் சட்டத்தரணிகள் நீதி தேவதையிடம் மண்டியிட்டு , நீதிபதிக்கு நீதி கோரினர்.



முல்லைத்தீவு நீதிபதி விவகாரத்தில் கண்டணத்தை வெளிப் படுத்தும் வகையில் யாழ்ப்பாணத்தில் மனித சங்கிலி போராட் டம் இன்றைய நாள் புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மருதனார்மடத்தில் ஆரம்பித்து யாழ்ப்பாண நகர் வரையில் நீளுகின்ற ஓர் மனித சங்கிலி போராட்டமாக முன்னெடுக்கப்பட்டது.



அதன் போது கொக்குவில் சந்தியில் போராட்டத்தில் ஈடுபட்ட சட்டத்தரணிகள் உள்ளிட்டோர், நீதி தேவதையின் உருவ சிலைக்கு கறுத்த துணி கட்டி, நீதி தேவதையின் கையில் உள்ள தராசு ஒரு பக்கமாக தாழ்ந்து இருக்க கூடியவாறு, நீதி தேவதையின் உருவ சிலையை காட்சி படுத்தி போராட்டத்தில் ஈடுபட்டு இருந்தனர்.

# நீதிபதி சரவணராஜா தற்போது உயிருடன் இருக்கின்றாரா? இல்லையா?

## முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன்

அக்டோபர் 04, 2023

நீதிபதி சரவணராஜா தற்போது உயிருடன் இருக்கின்றாரா? இல்லையா? என்பது கூட ஒரு கேள்விக்குறி தான். அவர் நாட்டை விட்டுப் போய்விட்டார் என்று சொல்கிறார்கள். எனி னும், இலங்கை அரசாங்கத்தின் போக்கை நாங்கள் யாரும் நம்ப முடியாது என முன்னாள் வடமாகாண சபையின் உறுப் பினர் துரைராசா ரவிகரன் பெரும் சந்தேகம் எழுப்பியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு விடுக்கப் பட்ட உயிர் அச்சுறுத்தலைக் கண்டித்து புதன் கிழமை (04.10.2023) தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகளின் ஏற்பாட்டில் யாழில் மாபெரும் மனித சங்கிலிப் போராட்டம் மற்றும் ஆர்ப் பாட்டப் பேரணி முன்னெடுக்கப்பட்டது. இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2018 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம்-04 ஆம் திகதி இரண்டு புத்த பிக்குகளுடன் 12 இனவாதிகள் புத்தர் சிலை, கட்டடப் பொருட்களுடன் குருந்தூர் மலைக்கு வந்த போது குருந்தூர் மலை எங்கள் சொத்து எனத் தெரிவித்து இளைஞர்களுடன் இணைந்து நாங்கள் அவர்களை அங்கிருந்து துரத்தினோம். இந் நிலையில் ஒட்டுசுட்டான் பொலிஸார் அவர்களைப் பொறுப் பேற்று நீதிமன்றத்தில் ஒப்படைத்தார்கள்.

அதன் பின்னர் அதேமாதம்-06 ஆம் திகதி முல்லைத்தீவு நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது லெனின் குமார் நீதிபதியாகவிருந்தார். அவரது தீர்ப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தொல்லியல் துறைப் பீடத்தினர் அகழ் வாராய்ச்சியில் ஈடுபட வேண்டுமென்ற ஒரு ஆலோசனை தெரி விக்கப்பட்டதுடன் சைவசமய வழிபாடுகள் மேற்கொள்வதற்கு எந்தத் தடையுமிருக்கக் கூடாது எனவும் அந்தத் தீர்ப்பில் தெரி விக்கப்பட்டது.

இதன்பின்னர் அகழ்வாராய்ச்சி செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டு தைமாதம்-18 ஆம் திகதி விதுர விக்கிரமநாயக்கா தொல்லியல் திணைக்கள அதிகாரிகள், புத்த பிக்குகள், இராணுவம், பொலிஸ், சிங்கள பொதுமக்கள் உள்ளிட்ட பெரும் படையுடன் வந்து அகழ்வாராய்ச்சி நடத்தப்பட்டது. இந்த அகழ்வாராய்ச் சியின் போது வெளிப்பட்ட லிங்கங்களை எங்கள் வரலாற்றுத் துறைப் பேராசிரியர்களால் சி.பத்மநாதன், என்.கே.திருச் செல்வம், பரமு புஸ்பரட்ணம் உட்படப் பலரும் அந்த லிங்கங் களைச் சைவ அடையாளங்களென்று கூறியிருக்கின்றனர். பத்மநாதன் ஒரு படி மேலே சென்று 2300 ஆண்டுகளுக்கு முற்பட்ட நாகர்கள் வழிபட்ட லிங்கமாகக் கருதக் கூடியதென் றும், கடவுளின் பெயர் லிங்கத்தில் பொறிக்கப்பட்டிருக்கிற தென்றும், பௌத்த படிமங்கள் எதுவும் லிங்கத்தில் காணப்பட வில்லை என்றும் தனது குறிப்பிலே குறிப்பிட்டிருக்கின்றார். தற்போதும் இதுதொடர்பில் அவரிடம் யார் வேண்டுமானலும் நேரடியாகச் சென்று கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

இதன்பின்னர் 2021 ஆம் ஆண்டு தைமாதம்-27 ஆம் திகதி நாங்கள் குருந்தூர்மலைக்குச் சென்று பார்த்த போது அங்கு சூலம் உள்ளிட்ட சைவ அடையாளங்கள் எதுவுமில்லை. உட னடியாக நான் இதுதொடர்பில் முல்லைத்தீவுப் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று முறைப்பாடு செய்தேன். இதன்போது சைவ அடையாளங்களை அங்கிருந்து அகற்றியது தொடர்பில் இராணுவத்தின் மீது தான் எங்களுக்குச் சந்தேகமிருப்பதாகத் தெரிவித்தேன். இதுவரை குறித்த சைவ அடையாளங்களை அகற்றிய எவரும் கைது செய்யப்படவில்லை.

இதன்பின்னர் குருந்தூர்மலையில் அகழ்வாராய்ச்சி முடிந்து



விட்டதாகச் சொன்னார்கள். அதன் பின்னர் அங்கு செல்வதற்கு எங்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. விகாரை அங்கு கட்டப்பட்டு வந்த நிலையில் அரைவாசி கட்டப்படும் போதும், முக்காவாசி கட்டப்படும் போதும் முறைப்பாடு செய்தோம். 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முறைப்பாடு செய்யப்பட்ட வழக்கு இந்த வருடம் ஆகஸ்ட் மாதம்-31 ஆம் திகதி குறித்த வழக்கின் தீர்ப்பு நீதிபதி சரவணராஜாவால் வழங்கப்பட்டது. இதற்கிடை யில் எத்தனை தடவை நாம் நீதிமன்றப் படியேறினோம், பொலிஸ் நிலையப் படியேறினோம். எங்களுக்கும் இதுதொடர் பில் பல்வேறு அச்சுறுத்தல்கள் இருந்து வந்தன.

இந்தத் தீர்ப்பின் பின்னர் தான் நீதிபதி சரவணராஜாவுக்கு இன்னும் அதிகமான அழுத்தங்கள் நிலவி வந்தன. இந்த நிலையில் தான் அவர் தனது பதவியைத் துறந்து நாட்டை விட்டுச் சென்றுள்ளதாக கூறப்படுகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வடக்கு, கிழக்கில் 20ஆம் திகதி ஹர்த்தால்!

அக்டோபர் 09, 2023

முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜா உயிரச்சுறுத்தல் காரண மாக நாட்டை விட்டு வெளியமை தொடர்பில் முழுமையான நீதி விசாரணை நடத்த வலியுறுத்தியும், நீதித்துறையில் இருந் தாலும் தமிழர் என்பதால் இன ஒடுக்குமுறைக்குள்ளாகுவதை சுட்டிக்காட்டியும்- கண்டித்தும் தமிழ்த் தேசிய கட்சிகள் இணைந்து வடக்கு கிழக்கு மாகாணங்களில் எதிர்வரும் 20ஆம் திகதி ஹர்த்தால் போராட்டத்தை நடத்தவுள்ளன.

ஹர்த்தால் தொடர்பில் இறுதி முடிவை எடுக்கும் தமிழ்க் கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்களுடனான கலந்துரையாடல் யாழ்ப் பாணம் தந்தை செல்வா அரங்கில் இன்றைய தினம் திங்கட் கிழமை இடம்பெற்றது.

இதன்போதே எதிர்வரும் 20ஆம் திகதி பூரண ஹர்த்தாலுக்கு தமிழ் கட்சிகள் அழைப்புவிடுத்துள்ளன.

குறித்த கலந்துரையாடலில் இலங்கை தமிழரசு கட் சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழ் மக் கள் கூட்டணியுன் தலைவர் விக்னேஸ்வரன், புளொட் தலைவர் சித்தார்த் தன், ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் சுரேஷ் பிரேமச் சந்திரன் தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் சிறீகந்தா, செயலாளர் சிவாஜி லிங்கம், ஜன நாயகப் போராளிகள் கட்சி யின் தலைவர் வேந்தன் மற்றும், ரெலோ சார்பில் முன்னாள் தவிசாளர் நிரோஷ் மற்றும் பொது அமைப்புகளின்




பிரதிநிதிகளும் கலந்து கொண் டுள்ளனர்.

# கிழக்கில் ரணில் விக்கிரமசிங்க வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம்!









அக்டோபர் 08, 2023

மட்டக்களப்பில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று தற்போது முன்னெடுத்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மயிலத்தமடு, மாதவனை பகுதியில் உள்ள பண்ணையாளர்கள் உள்ளிட்ட பலர் செங்கலடி பகுதியில் இவ் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

செங்கலடி மத்திய கல்லூரிக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வருகைத் தருவதனை முன்னிட்டு மக்கள் அவ் வீதியில் ஒன்று திரண்டு இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவினர்கள், பண்ணையாளர்கள் மற்றும் பொது அமைப்புக்களைச் சார்ந்தவர்கள் இணைந்து இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தநிலையில் அப் பகுதியில் பெருமளவான பொலிஸார் மற்றும் கலகமடக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் வானில் ஹெலிகாப்டரும் வட்டமிடுவதை அவதானிக்க முடிவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதிக்குயில் வன்முறை வெடிக்கும் அபாயம் உள்ளதுடன் பதற்றம் நிலவுகிறது.

நீர்த்தாரைப் பிரயோக வண்டிகளும் போராட்டக்களத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே சமயம் நீதிமன்ற கட்டளை ஒன்றும் கிடைத்துள்ளதாகவும், அது வாசிக்கப்பட்டுக் கொண்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.









# முல்லைத்தீவில் நீதிகோரி கறுப்பு துணி கட்டி கண்டனப்போராட்டம்!

அக்டோபர் 09, 2023

முல்லைத்தீவு இளைஞர்களின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரீ.சரவணராஜாக்கு நீதி கோரி கண்டன போராட்டம் ஒன்று திங்கட்கிழமை (09) முன்னெடுக்கப்பட்டிருந்தது.

திங்கட்கிழமை (09) காலை 10.15 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கறுப்பு துணியால் வாயினை கட்டியவாறு அமைதியாக கவனயீர்ப்பு போராட்டத்தை மேற்கொண்ட பின்னர் மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரனிம் நீதி அமைச்சின் செயலாளருக்கு கையளிக்க மகஜர் கையளிக்கப்பட்டது.

முல்லைத்தீவில் திட்டமிட்டு நடத்தப்படும் அத்துமீறல் குடியேற்றம் மற்றும் நீதிபதிக்கு ஏற்பட்டுள்ள உயிர் அச்சுறுத்தல் அத்தோடு இளைஞர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளதாக கூறித்த போராட்டம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

குறித்த கண்டன போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் நீதிபதிக்காக நீதி கேட்கும் இந்த நாட்டில் சாதாரண மக்களுக்கு என்ன நீதியோ? நீதியின் கழுத்தில் தூக்கு கயிறு தீர்த்து போனதா நியாயத்தின் உணர்வு, நீயும் பெண்தானே நீதி கிடைக்காத பெண்களுள் நீயும் ஒருதியோ? நீதி தேவதையே, தொடர்ந்து நடந்தேறும் நீதி புரள்வுகளுக்கு என்ன தீர்ப்பு நீதி அமைச்சே? போன்ற பல்வேறு வாசகங்களையுடைய பதாதைகளை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

குறித்த போராட்டத்தில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், மதகுருமார், கரைதுறைப்பற்று




பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் இ.ஜெகதீஸ்வரன், சமூக செயற்பாட்டாளர் பீற்றர் இளஞ்செழியன் மற்றும் இளைஞர்கள் கலந்து கொண்டிருந்தனர்.








# சிறீலங்கா உயர்நீதிமன்றத்தின் முன் சட்டத்தரணிகள் போராட்டம்!

அக்டோபர் 09, 2023

நீதிபதிகளினதும் நீதித்துறையினதும் கௌரவத்தையும் சுயாதீனத் தன்மையையும் பாதுகாக்குமாறு வலியுறுத்தி நாடளாவிய ரீதியிலுள்ள சட்டத்தரணிகள் இன்று திங்கட்கிழமை (9) சிறீலங்கா தலைநகர் கொழும்பு உயர்நீதிமன்றத்துக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் ரி.சரவணராஜா உயிரச்சுறுத்தல் மற்றும் பல்வேறு அழுத்தங்கள் காரணமாக பதவி விலகுவதாக குறிப்பிட்டு கடந்த மாத இறுதியில் நீதிச்சேவைகள் ஆணைக்குழுவுக்கு அவரது இராஜினாமா கடிதத்தை அனுப்பி வைத்திருந்ததுடன், நாட்டிலிருந்தும் வெளியேறியமை பல்வேறு சர்ச்சைகளையும் நீதித்துறை சுதந்திரம் தொடர்பில் கேள்விகளையும் தோற்றுவித்திருந்தது.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே நாட்டின் பல்வேறு பாகங்களிலும் உள்ள சட்டத்தரணிகள் ஒன்றிணைந்து இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு கொழும்பு, ஹல்ஃப்ஸ் டொப்பில் அமைந்துள்ள உயர்நீதிமன்றத்துக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.
















# வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட மகனைத் தேடிய மற்றுமொரு தந்தை உயிரிழப்பு!

அக்டோபர் 12, 2023

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனைத் தேடி வந்த தந்தை ஒருவர் சுகவீனம் காரணமாக மரணமடைந்துள்ளார்.

வவுனியா மகாறம்பைக்குளம் சிறீராமபுரம் பகுதியைச் சேர்ந்த முத்தையா ஆறுமுகம் (வயது - 65)என்ற தந்தையே மரணமடைந்துள்ளார்.

இவரது மகனான ஆறுமுகம் சிவகுமார் கடந்த 2007 ஆம் ஆண்டு வவுனியாவில் வைத்து கடத்தப்பட்டிருந்தார்.



அவரைத்தேடி வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டங்களில் குறித்த தந்தை கலந்து கொண்டு தனது மகனை கண்டுபிடித்து தர போராடியிருந்தார்.

இந் நிலையில் மகனை காணாமலேயே அவர் மரணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# இலங்கையில் நீதி மரணித்துவிட்டதாகவே உணரமுடிகின்றது!

## முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன்

அக்டோபர் 09, 2023

இலங்கையில் தற்போது நீதி மரணித்துவிட்டதாகவே உணர முடிவதாக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டில் போதைப் பொருட்கள் பல்கிப்பெருகியுள்ளதுடன், சட்டவிரோத செயற்பாடுகளும் அதிகரித்துக் காணப்படுகின்ற நிலையில், நீதிபதி சரவணராஜா உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு, அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு இந்த நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டுள்ள நிலைமை இந்த நாட்டில் நீதி மரணித்ததற்கு ஒப்பானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் முன்பாக 09.10.2023 இன்று, நீதிபதி சரவணராஜாவிற்கு நீதி கோரி இடம்பெற்ற கவனயீர்ப்பு நடவடிக்கையில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

நீதிபதி சரவணராஜாமீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டமை மற்றும், உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமைக்கு நீதிகோரி தொடர்ந்தும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

அந்தவகையில் ஒக்ரோபர் (09)ஆம் திகதி சட்டத்தரணிகள் ஒன்றிணைந்து கொழும்பில் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்திருப்பதுடன், குறித்த தினத்தில் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர்களாலும் கவனயீர்ப்பு நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு கவனயீர்ப்பு நடவடிக்கைக்கென முல்லைத்தீவு மாவட்ட இளைஞர்கள் அழைப்பு விடுத்திருந்த நிலையில், புலனாய்வாளர்கள் பல வீடுகளுக்குச் சென்று அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

அவ்வாறு புலனாய்வாளர்களால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதால், பல இளைஞர்கள் குறித்த கவனயீர்ப்பு நடவடிக்கையிலே இணைந்துகொள்ளவில்லை.

இருப்பினும் கணிசமான இளைஞர்கள் முகத்தில் கறுப்புத்துணி கட்டி, கவனயீர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் அதனைத் தொடர்ந்து, மேலதிக மாவட்ட செயலரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளனர்.

இலங்கையைப் பொறுத்தவரையில் நீதி மரணித்து விட்டது என்றே சொல்லவேண்டியிருக்கின்றது.

ஏன் எனில் தற்போது நாட்டிலே போதைப்பொருட்கள் பல்கிப் பெரிகிப்போயுள்ள நிலையில், நாட்டு மக்கள் இவற்றால் பல்வேறு துன்பங்களுக்கும் உள்ளாகிவருகின்றனர்.

இவ்வாறான சூழலில் நீதிபதி சரவணராஜா, நீதியின் பங்கம்




நின்று கட்டளை வழங்கியதற்காக அவருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு, அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு இந்த நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்.

இத்தகைய நிலைமைகள் இந்த நாட்டில் நீதி மரணித்துவிட்டதான உணர்வையே முழு நாட்டு மக்களுக்கும் உணர்த்துகின்றது.

எனவே நீதிபதி சரவணராஜா விடயத்தில் சரியான விதத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, நியாயமான தீர்வினை வழங்கவேண்டுமென்பதே எமது நிலைப்பாடு – என்றார்.

# முதலாவது பெண் மாவீரர் 2ம் லெப். மாலதியின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல்!

அக்டோபர் 10, 2023

முதலாவது பெண் மாவீரர் மாலதியின் 36 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் இன்றையதினம் முல்லைத்தீவில் ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

விடுதலைப் போரில் உயிர்நீத்த முதல் பெண் மாவீரர் 2ஆம் லெப். மாலதியின் 36ஆம் ஆண்டு நினைவு நாள் இன்று செவ்வாய்க்கிழமை (10.10.2013) காலை 8.30 மணியளவில் முல்லைத்தீவு சிலாவத்தை பகுதியில் நினைவு கூரப்பட்டுள்ளது.

இதன் போது சுடர் ஏற்றப்பட்டு மாவீரர் 2 ஆம் லெப்.மாலதியின் படத்திற்கு மலர் மாலை அணிவித்து மலர் தூவி வணக்கம் செலுத்தினர்.

சமூக செயற்பாட்டாளர் சகீலா தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் க.தவராசா, முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் கெங்காதரன், சமூக செயற்பாட்டாளர்களான ஜூட்சன், பீற்றர் இளஞ்செழியன் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



# இரண்டு மாதங்களுக்கு மேலாக போராடும் கிளி–பூநகரி, பொன்னாவெளி மக்கள்!

அக்டோபர் 09, 2023

கிளிநொச்சி பூநகரி பொன்னாவெளி பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ள சுண்ணக் கல் அகழ்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து இரண்டு மாதங்களுக்கு மேலாக போராடிவரும் நிலையிலும் அதற்கான எந்த தீர்வுகளும் இதுவரை தமக்கு கிடைக்கவில்லை என போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில் மன்னார் ஆயர் பூநகரி பொன்னாவெளி பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ள சுண்ணக் கல் அகழ்வுக்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ளதுடன் போராட்டகாரர்களுடன் பேச வடக்கு ஆளுநரை கோரியுள்ளார்.

பொன்னாவெளி கிராமத்தில் டோக்கியோ சீமெந்து உற்பத்திக்கு தேவையான சுண்ணக்கல்லை அகழ்வது தொடர்பான ஆய்வுகள் கடந்த ஆண்டுகளில் முன்னெடுக்கப்பட்டு தற்போது சுண்ணக்கல் அகழ்வு மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட உள்ளது.

இந்நிலையில் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து பொன்னாவெளி பகுதிகயை சேர்ந்த மக்கள் தமது எதிர்ப்பை தெரிவித்து கடந்த இரண்டு மாதங்களாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமது கோரிக்கைகள் தொடர்பில் வடமாகாண ஆளுநர் மற்றும்



மாவட்ட செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் பிரதிநிதிகள் பொது அமைப்புகள் என்பவற்றிற்கும் என 28க்கும் மேற்பட்ட மகஜர்களை கையளித்துள்ளனர்.

இருந்த போதும் இதுவரை உரிய அதிகாரிகளிடமிருந்து எந்த விதமான பதில்களும் கிடைக்கவில்லை எனவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர்.

தமது பிரதேசத்தில் சுண்ணக்கல் அகழ்வு மேற்கொள்ளப்படுமாக இருந்தால் அயல் கிராமங்களான கிராஞ்சி வலைப்பாடு வேரவில் ஆகிய பகுதிகளில் மக்கள் வாழ முடியாத ஒரு சூழல் ஏற்படும் எனவும் ஆகவே இது தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து தமக்கான ஒரு நிரந்தரமான தீர்வை தர வேண்டும் எனவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர்.

# இந்திய இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட கொக்குவில் பிரம்படிப் படுகொலையின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல்!

அக்டோபர் 12, 2023

இந்திய இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட கொக்குவில் பிரம்படி படுகொலையின் 36 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று இடம்பெற்றது.



1987 ஆம் ஆண்டு இதே மாதம் பதினோராம் பன்னிரண்டாம் திகதிகளில் கொக்குவில் பிரம்படி பகுதியில் 50 இற்கும் மேற்பட்ட பொது மக்களை கொடூரமாக இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர்.




இந்தப் படுகொலையின் 36 ஆவது நினைவு தினம் நல்லூர் பிரதேச சபையின் தமிழ் தேசிய மக்கள் முன்னணி, மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள், மற்றும் இறந்தவர்களின் உறவுகளால் நினைவு கூறப்பட்டது.

இதன்போது வீதியோரமாக அமைந்துள்ள நினைவு தூபியில் சுடரேற்றி மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.





நிகழ்வில் சமூக செயற்பாட்டாளர் மு.தமிழ்மணி படுகொலை தொடர்பான நினைவு உரையை நிகழ்த்தினார்.

# லெப். கேணல் விக்டர் அவர்களின் 37ஆம் ஆண்டு நினைவேந்தல்

அக்டோபர் 04, 2023




ஈழவிடுதலைப் போராட்ட வரலாற்றில் மன்னார் மண் பெற்றெடுத்த மகத்தான மாவீரன் லெப்.கேணல் விக்ரர் அண்ணண் அவர் களின் 37 ஆம் ஆண்டு நினைவு நாளை முன் னிட்டு இன்றைய நாள் இலங்கை தமிழரசு கட்சி யின் மன்னார் மாவட்ட அலு வலகத்தில் மாலை 5.00 மணியளவில் அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது.

இவ் வணக்க நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலாதன் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினரும், தலை சிறந்த போர் தளபதியும், மன்னார் மாவட்ட சிறப்புத் தளபதியுமாகிய லெப். கேணல் விக்ரர் அண்ணா ஆகிய மாவீரரின் 37ம் ஆண்டு வீரவணக்க நாள் இன்றாகும்.

மன்னார் பனங்கட்டிக்கொட்டு கிராமத்தில் 1963ம் ஆண்டு பிறந்த மருசலனின் பியூஸ்லஸ் என்ற தளபதி விக்ரர் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியில் கல்வி பயின்றவர். எமது விடுதளைப்போராட்டமானது பறந்து விரிந்து, ஆழ வேருன்றி பெருகிவிட்டதாக தனக்கே உரித்தான வளர்ச்சி கண்டு நிற்பதை உலகம் புரிந்து கொண்டுள்ளது. அன்று எமது குரல்கள் அடங்கிக்கிடந்தன, எமக்கான குரல்களும் கேட்காது கிடந்தன, இன்று எட்டி நின்றவர்களும் எமக்காக குரல்கொடுகின்றனர். இது ஒரு கால மாற்றம். இந்த மாற்றத்தை எம் இனத்திற்கு பெற்றுத் தந்த பல்லாயிரக்கணக்கான மாவீரர்களின் வரிசையில் அத்திவாரக் கற்களாகி நிற்கும் விக்டர் போன்ற வீரத்ளதபதிகளை தமிழினம் மறக்காது. விடுதலைப் பயிரானது ஆதிக்க பாதங்களினால் மிதிபட்டுப் போய்விடுமோ, பேரினவாதிகளின் பெருமூச்சினில் கருகிவிடுமோ என்ற ஏக்கம் நிறைந்த காலங்களிலெல்லாம் தலைவருக்குப் பக்க பலமாக நின்று விடுதலைப் பயிரை உரமிட்டுப் பாதுகாத்துத் தந்த மூத்த தளபதிகளை வரலாறு நிச்சயம் பதிவு செய்யும்.

விடுதலைப்புலிகள் இராணுவ அழுத்தங்களுக்கு விட்டுக் கொடுக்கவோ அல்லது அரசியல் அழுத்தங்களுக்கு விளை போகக்கூடியவர்களோ அல்லர் என்பதை மிகப்பெரிய வரலாற்று சாதனை ஒன்றினூடாக சர்வதேச சமூகத்துக்கு சத்தியம் செய்து கொடுத்த சாதனையாளன் தளபதி விக்ரர். 12,10.1986 அன்று மன்னார் மாவட்டம், அடம்பன் பகுதி சூற்றிவளைக்க வந்த நூற்றுக்கணக்கான சிங்களப்படையினரை எண்ணிக்கையில் குறைந்தளவு போராளிகளைக் கொண்டு முற்றிலும் பாதகமான சூழ்நிலையிலும்… அதிகலை வேளையிலும் “இரண்டில் ஒன்று, ஒன்று அவன் அல்லது நாங்கள்” என்ற துணிவு மிகுந்த வார்த்தைகளை எங்கள் தொலைத்தொடர்பு சாதனங்களுாடாக வழங்கிவிட்டு களத்திலே நேரில் இறங்கி வியூகம் அமைத்து, ஊடறுத்து, சிதைத்து, சடலங்கள் ஆயுதங்களை அள்ளி, சிறை பிடித்து என்றவாறு தாக்குதலை நகர்த்தி “ஓட விடாதே”, “பார்த்துப் பார்த்து விழுத்து”, “ஹெலியை இறக்கவிடாதே”, இறங்கிய ஹெலியை பறக்கவிடாதே” என்றெல்லாம் தனது சுடுவிரல் அசைவினால் நெறிப்படுத்தி நின்ற வெற்றிகரமான சூழ்நிலையின் இறுதிக் கணத்தில் தளபதி விக்டரின் தொடர்பை இழந்து நின்ற அன்றைய சோகம் நிறைந்த நினைவுகளை பகிர்வதில் மனம் நிறைவடைய மறுக்கிறது.நாட்டுக்கு நாடு நடைபெற்ற யுத்தம்போன்று சர்வதேச யுத்த விதிகளுக்கு அமைவாக படையினரின் சடலங்களை ஒப்படித்தும், சிறைக் கைதிகளை பரிமாற்றம் செய்தமையும் விடுதலைப் போராட்ட வரலாற்றில் இன்று வரை விடுதலைப்புலிகள் கடைப்பிடித்துவரும் நடைமுறையினை சிறீலங்கா அரசும், சர்வதேசமும் புரிந்துகொண்டிருக்கும்.

சிறீலங்காப் படையினரை சிறைப்பிடித்தும், படையினரின் சடலங்களை மீட்பதும் தமிழ்மக்கள் மத்தியில் மெல்லமெல்ல துளிர்விட்ட விடுதலைப் போராட்டம் மீதான நம்பிக்கையினை மேலும் பலபடிகள் பாய்ந்து செல்லவைத்த அற்புத நிகழ்வாகவே தளபதி விக்ரர் தலைமையிலான அன்றைய தாக்குதல் சம்பவம் அமைந்திருந்தது.1983ம் ஆண்டு யாழ் திருநெல்வேலியில் சிங்களப் படையினருக்கு எதிரான கண்ணிவெடித் தாக்குதலில் முக்கிய பாத்திரம் வகித்த தளபதி விக்ரர் அவர்கள் தமிழீழப் பகுதியில் தலைவரின் நேரடி வழிகாட்டலில் நடைபெற்ற இராணுவத்திற்கு எதிரான தாக்குதலிலும் பங்குபற்றியவர் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.1985ம் ஆண்டு மன்னார் போலிஸ் நிலையத் தகர்ப்பின் பொது பாதகமான சூழ்நிலைகளையும் பொருட்படுத்தாது எமது அணியினை நகர்த்தி இடையில் ஒன்று கூட்டி ஒழுங்குபடுத்தி மீண்டும் வேகமாய் நிதானமாய் நகர்த்தி “ராதா ஸ்ராட்”, “குமரன் ஸ்ராட்” ( லெப் கேணல் குமரப்பா ) என்று ஆரம்பக் கட்டளைகளை அணித்தளைவர்களுக்கு வழங்கி குறுகிய நேரத்தில் போலிஸ் நிலையத்தை வெற்றி கொண்டு ஒரே ஒரு போராளியின் வீரச்சாவுடன் ஏனையோரை கடல் கடந்து பத்திரமாக கரைசெர்ப்பது வரையில் தளபதியின் வழிகாட்டல் என்பது மறக்கமுடியாத நினைவாகி நிற்கிறது. அன்றைய வெற்றிகரத் தாக்குதலை பி.பி.சி செய்தியாளர் தெரிவிக்கும் போது விடுதலைப்புலிகளின் மதிநுட்பமும், துணிவும் நிறைந்த வெற்றிகரத் தாக்குதல் என வர்ணித்தார். மன்னார் மக்கள் அன்றைய மகிழ்ச்சியை வெளிப்படுத்தி தளபதி விக்ரருக்கு தங்கச் சங்கிலி பரிசளித்து கௌரவித்தனர். பெரும் மகிழ்வுடன் மக்களை வரவேற்கும் பண்பு. நிமிர்ந்து உயர்ந்த அழகிய தோற்றம், அன்புத் தலைவரை இதயச் சுவர்களில் சுமந்து நின்று வழிப்படுத்திய அன்றைய நாட்கள் மறக்க முடியாதவை. எமது விடுதலை இயக்கம் பிரசவித்த அக்கினி



குஞ்சு என்பது மகளிர் படையணியின் வளர்ச்சி பற்றி எமது தலைவரின் வாக்கிற்கு உயிர் கொடுத்த தளபதியாக விக்டர் அன்று செயல்ப்பட்டார் எமது பெண் போராளிகளுக்கு முதன் முதல் களம் கற்றுக்கொடுத்து இன்று வியக்க வைக்கும் வளர்ச்சியை பெற்று நிற்கும் எமது விடுதலைப்புலிகள் மகளிர் படையணியின் மூத்த சகோதரனாகவே திகழ்ந்தார். தனது சிறந்த நிறைவான குரல்வளத்தால், பாடும் திறமையால் போராளிகளின் மனதை மற்றுமொரு கோணத்தில் இடம்பிடித்தும் தளபதி விக்டருக்கு இருக்கும் இன்னும் ஒரு சிறப்பு அம்சம். கைத்துப்பாக்கியை அழகாக கழற்றி குறிதவறாது சுட்டுக்காட்டி, கமராவை கையாள்வதும், கலையை ரசிப்பதும் இயற்கையிலேயே அழகுணர்ச்சியுடன் பழகிவந்த தளபதி அவர்கள் எமது தலைவரால் வளர்க்கப்பட்டவர் என்பதில் நாம் பெருமையடைகிறோம். இன்று எமது விடுதலைப் போராட்டமானது ஆயிரம் படையினரை ஒரே நாளில் களத்திலிருந்து அப்புறப்படுத்திய வரலாற்று வளர்ச்சியை பெற்று நிற்பதை உற்று நோக்கும் போது மிகுந்த பக்குவத்துடன் எமது தாயக விடுதலைப்பயணம் நகர்ந்து செல்வதை இலகுவில் இனங்கண்டு கொள்ளமுடிகிறது. இன்றும் அன்றும் எமது தலைவர் அவர்களின் நேர்த்தியான வழிகாட்டலினால் மிக மிக உன்னத நிலையை எமது போராட்டம் சந்தித்து நிற்கிறது என்பது தெளிவாகின்றது. என்றுமில்லாதவாறு எழுட்சி கொண்டு எமது மக்கள் நிற்கும் இவ்வேளையில் தாயகப்பற்றுணர்வுடன் ஆயிரம் ஆயிரம் விக்ரர்கள் புதிது துதிதாக எழுந்து வரவேண்டும் இதுவே இன்றுள்ள வரலாற்றுத் தேவையாகும்.

# ஹர்த்தலுக்கு முஸ்லீம் மக்களின் ஆதரவை பெறவும் தீவிர நடவடிக்கை!

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்

அக்டோபர் 13, 2023

வடக்கு கிழக்கு தழுவிய ரீதியில் முஸ்லிம் மக்களுடனும் இணைந்து எதிர்வரும் 20ஆம் திகதி ஹர்த்தாலை பெருமெடுப்பில், மேற்கொள்ளவுள்ளதாகவும் , அதற்கு வடக்கு - கிழக்கில் வசிக்கும் தமிழ், முஸ்லீம் மக்களின் ஆதரவை வேண்டி நிற்பதாக, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

ஹர்த்தால் தொடர்பான முன்னாயர்தக் கலந்துரையாடல் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனின் யாழ்ப்பாண இல்லத்தில் இடம் பெற்றது.

கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே சுரேஷ் பிரேமச்சந்திரன் அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களுக்கான நீதி என்பது தொடர்ந்து மறுதலிக்கப்படுகிறது. சிங்கள பௌத்தமக்கள் வாழாத தமிழ், முஸ்லிம் மக்கள் வசிக்கும் பிரதேசங்களில் தொடர்ச்சியாக காணிகள் அபகரிக்கப்பட்டு அங்கு பௌத்த விகாரைகள் நிறுவுவதற்கான வேலைகள் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றது.

அவ்வாறான அத்துமீறல்களை கண்டித்தும், மட்டக்களப்பு மயிலத்தமடு மேய்ச்சல் தரைபிரச்சினைக்கு தீர்வு கோரியும் எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஹர்தால் நடைபெறவுள்ளது.

ஹர்த்தால் ஏற்பாடுகள் தொடர்பில், மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தம் கருணாகரனுடனும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனுடனும் தொலைபேசியில் கலந்து பேசி உள்ளோம்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஹர்தால் தொடர்பான அடுத்த கட்டம் நடவடிக்கை தொடர்பாகவும் ஆராயவுள்ளோம்.

இங்கிருந்து கிழக்கு மாகாணத்துக்கு சென்று ஹார்த்தலை முன்னெடுக்க பல்வேறு தரப்பினருடனும் சந்திப்புகளை மேற்கொள்வதற்கும் தீர்மானித்துள்ளோம் என தெரிவித்தார்.

ஹர்தால் தொடர்பான முன்னாயர்தக் கலந்துரையாடலில் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன், ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தமிழீழ விடுதலைக் கழகத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சித்தார்த்தன், தமிழ் தேசிய கட்சியின் தலைவர் ஸ்ரீகாந்தா, செயலாளர் சிவாஜிலிங்கம், ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# 33 வருடங்களின் பின்னர் சொந்த இடத்தில் இயங்கவுள்ள வலி. வடக்கு பிரதேச சபை உப அலுவலகம்!

அக்டோபர் 13, 2023

யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் காங்கேசன்துறை உப அலுவலகம் மற்றும் பொது நூலகம் என்பன சுமார் 33 வருடங்களின் பின்னர், எதிர்வரும் புதன்



பொது அறிவித்தல்

வலிகாமம் வடக்கு பிரதேச சபை,

காங்கேசன்துறை உப அலுவலகம், பொது நூலகம், 18/10/2023 முதல் சொந்த இடத்தில்(பட்டினசபை காங்கேசன்துறை)இல் இயங்கும் என்பதை அறியத்தருகின்றோம்.

கிழமை முதல் சொந்த கட்டடத்தில் இயங்கவுள்ளதாக பிரதேச சபை அறிவித்துள்ளது.



யுத்தம் காரணமாக வலி, வடக்கில் இருந்து 1989 ஆம் ஆண்டு கால பகுதியில் மக்கள் இடம் பெயர்ந்த போது, அலுவலகம் மற்றும் நூலகம் என்பனவும் இடம் பெயர்ந்தது.

இடம்பெயர்ந்த நூலகம் மற்றும் அலுவலகம் என்பன யாழின் பல்வேறு பகுதிகளில் இயங்கி வந்த நிலையில், 2016ஆம் ஆண்டு கால பகுதியில் காங்கேசன் துறை உள்ளிட்ட சில பகுதிகள் விடுவிக்கப்பட்ட நிலையில் மக்கள் மீள் குடியேற தொடங்கினர்.

அக்கால பகுதியில் காங்கேசன்துறையில் சில பகுதிகள் விடுவிக்கப்பட்ட போதிலும், வடக்கு பிரதேச சபை அலுவலக கட்டடம் இராணுவ கட்டுப்பாட்டு பகுதிக்குள் இருந்தமையால், காங்கேசன்துறை நடேஸ்வரா கல்லூரிக்கு அருகில் உள்ள தனியார் கட்டடம் ஒன்றில் வலி.வடக்கு பிரதேச சபையின் காங்கேசன்துறை உப அலுவலகம் மற்றும் பொது நூலகம் என்பன இயங்கி வந்தன.

இந்நிலையில் இந்த வருட ஆரம்ப கால பகுதியில் வலி. வடக்கு பிரதேச சபையின் கட்டடம் அமைந்துள்ள பகுதி உள்ளிட்ட சில பகுதிகளை இராணுவத்தினர் விடுவித்து இருந்த நிலையில், சுமார் 33 வருடங்களின் பின்னர் மீண்டும் எதிர்வரும் புதன் கிழமை முதல் தனது சொந்த கட்டடத்தில் வலி.வடக்கு பிரதேச சபை உப அலுவலகம் இயங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நீதித்துறையின் சுயாதீனத்துவத்தை உறுதிசெய்வதில் தலையிடுங்கள்!

அக்டோபர் 13, 2023

முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் ரி.சரவணராஜா விவகாரத்தில் தலையீடு செய்யுமாறு வலியுறுத்தி 7 தமிழ் அரசியல் கட்சிகள் கூட்டிணைந்து சர்வதேச சமூகத்துக்கு எழுதியுள்ள கடிதம், வெள்ளிக்கிழமை (13) உரிய இராஜதந்திரிகளிடம் கையளிக்கப் படவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் ரி.சரவணராஜா உயிரச்சுறுத்தல் மற்றும் பல்வேறு அழுத்தங்கள் காரணமாகப் பதவி விலகுவதாகக் குறிப்பிட்டு கடந்த மாத இறுதியில் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு அவரது இராஜினாமா கடிதத்தை அனுப்பிவைத்திருந்ததுடன், நாட்டிலிருந்தும் வெளியேறியமை பல்வேறு சர்ச்சைகளையும் நீதித்துறை சுதந்திரம் தொடர்பில் பல்வேறு கேள்விகளையும் தோற்றுவித்திருந்தது.

இவ்வாறானதொரு பின்னணியில் இவ்விவகாரம் தொடர்பில் அவதானம் செலுத்துமாறு வலியுறுத்தி சர்வதேச நாடுகளுக்கு கூட்டாகக் கடிதமொன்றை எழுதுவதற்கு 7 தமிழ் அரசியல் கட்சிகள் ஏற்கனவே தீர்மானித்திருந்தன.

இலங்கைத் தமிழரசுக்கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ, புளொட், ஜனநாயகப் போராளிகள் கட்சி, தமிழ் மக்கள் தேசிய கூட்டணி மற்றும் தமிழ்தேசிய கட்சி ஆகிய 7 கட்சிகளின் கூட்டுத்தீர்மானத்தின் பிரகாரம் சர்வதேச சமூகத்துக்கு எழுதப்பட்டுள்ள



இக்கடிதம் இன்றைய தினம் (13) உரிய இராஜதந்திரிகளிடம் கையளிக்கப்படுமென கட்சி பிரதிநிதியொருவர் தெரிவித்தார்.

அதன்படி முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் ரி.சரவணராஜாவுக்கு பாராளுமன்றத்துக்கு உள்ளேயும், வெளியேயும் அச்சுறுத்தல் காணப்பட்டதாகவும், தனக்கு அச்சுறுத்தல் இருந்ததை நீதிவான் வெளிப்படையாகவே கூறியிருப்பதாகவும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ள தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், தமிழ் நீதிபதிக்கு எதிரான இத்தகைய அழுத்தங்கள் அவர் சார்ந்திருக்கும் சமூகத்துக்கும் எதிரானவை என்று சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே இவ்விவகாரத்தில் சர்வதேச சமூகம் தலையிட வேண்டும் என்றும், நாட்டின் நீதிக்கட்டமைப்பு சுயாதீனமாக செயற்படுவதை உறுதிசெய்யுமாறு அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகிக்கவேண்டும் என்றும் தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதிகள் அக்கடிதத்தில் வலியுறுத்தியுள்ளனர்.

# கனடிய செய்திகள்

## ஒன்ராரியோவின் போக்குவரத்துத்துறை இணை அமைச்சராக விஜய் தனிகாசலம் அவர்கள் நியமனம்!

அக்டோபர் 01, 2023

செப்டம்பர் 22ஆம் திகதி, வெள்ளிக்கிழமையன்று ஒன்ராரியோ மாநில சட்டமன்றத்தில் செய்யப்பட்டுள்ள அமைச் சரவை மாற்றங்களின் அடிப்படையில் போக்குவரத்து அமைச் சகத்தின் இணை அமைச்சராக விஜய் தணிகாசலம் அவர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட் டுள்ள



அறிக்கையில், "முதல்வர் டக் ஃபோர்ட் மற்றும் அமைச்சர் பிரப்மீத் சர்க்காரியா ஆகியோருடன் இணைந்து ஒன்ராரியோ வாழ் மக்களுக்காகப் பணியாற்றுவதற்கென போக்குவரத்து அமைச்சகத்தின் இணை அமைச்சராக நியமிக்கப்பட்டுள் ளதையிட்டு நான் பெருமை கொள்கிறேன். இத்தருணத்தில், என் தொகுதியாகிய ஸ்காபரோ - றூஜ் பார்க்கிலுள்ள மக்கள் அனைவரும் என் மீது வைத்துள்ள நம்பிக்கைக்கும் அவர்கள் வழங்கி வரும் ஆதரவுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

விஜய் தணிகாசலம் அவர்கள், கடந்த 2018ஆம் ஆண்டு ஜூன் 7ஆம் திகதி நடைபெற்ற ஒன்ராரியோ மாநில சட்டமன்றத் தேர்தலில் ஸ்காபரோ றூஜ் பார்க் தொகுதிக்கான மாநில சட்ட மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் 2019 இல் இவர் போக்குவரத்து அமைச்சரின் உதவியாளராக நியமிக்கப்பட்டு, ஒன்ராரியோ அரசினால் அறிவிக்கப்பட்டு நடைபெற்றுவரும் ஸ்காபரோ நிலக்கீழ் தொடருந்து வழித்தட விரிவாக்க கட்டுமானப் பணிகளிலும் முன்னின்று செயற்பட்டு வருவதுடன், 2022ஆம் ஆண்டில் ஸ்காபரோ சுகாதாரக் கட்டமைப்பை மேம்படுத்தும் அரசின் ஒரு மில்லியன் திட்டத் துக்கும் ஆதரவளித்திருந்தார். இதில் சென்டினரி மருத்துவ மனையில் புதிய அவசர சிகிச்சைப் பிரிவும், பேர்ச்மவுண்ட் மருத்துவமனைக் கட்டமைப்பும் அடங்கும். அத்துடன்



ரொரான்ரோ பல்கலைக்கழக ஸ்காபரோ வளாகத்தில் அமைக் கப்பட்ட ஸ்காபுரோவின் முதல் மருத்துவப் பள்ளியான SAMIH



இன் அமைவுக்கும் இவர் பெரும் பங்காற்றியிருந்தார். அது போன்று, தமிழ் மக்கள் அதிகமாக வசிக்கும் ஸ்காபரோ றூஜ் பார்க் பகுதியில் தமிழ் சமூக மையத்துக்கான நிதியுதவியையும் இவர் பெற்றுக்கொடுத்திருந்தார்.

இவை தவிர, ஒன்ராரியோ மாநில சட்டமன்றத்தில் இவரால் கொண்டுவரப்பட்ட சட்டம் - 104 தமிழின அழிப்பு தொடர்பான கல்வி வாரம் உலகில் முதல் முதலாக தமிழர்கள் இன அழிப் புக்கு உள்ளானார்கள் என்பதை அங்கீகரிக்கும் சட்டமாகக் கருதப்படுகிறது.

பதினைந்து மில்லியன் மக்கள் வாழும் ஒன்ராரியோ மாநிலத்தின் சட்டமன்றத்தில் தெரிவான முதல் தமிழ் அமைச்சர் விஜய் தணிகாசலம் அவர்கள் ஆகும். அத்துடன், இவர் தனது அமைச்சுப் பதவியைப் பெற்றுக்கொள்ளும்போது திருக்குறள் மீது பதவியேற்பு உறுதிமொழியை வழங்கியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதன்மூலம் தெற்காசியாவிற்கு வெளியே திருக்குறள் மீது பதவியேற்ற முதலாவது அமைச்சர் இவராவார். மேலும் இவர் ஏனைய சட்டமன்றப் பதவிகளை வகித்த வேளையிலும் திருக்குறள் மீது பதவியேற்பு உறுதிமொழியை மேற்கொண்டிருந்தார் என்பதுடன், இவ்வாறு இவர் திருக்குறள் மீது பதவியேற்பு உறுதிமொழி மேற்கொள்வது இது மூன்றாவது முறையாகும்.

## ஒன்ராரியோ மாகாணத்தில் குறைந்தபட்ச சம்பளமாக 16.55 டொலராக அதிகரிப்பு!

அக்டோபர் 02, 2023

ஒன்ராரியோ மாகாணத்தில் குறைந்தபட்ச சம்பளம் அதிகரிக்கப் பட்டுள்ளது.

மாகாணத்தில் சுமார் ஒரு மில்லியன் பணியாளர்கள் பேர் இன் றைய நாள் சம்பள அதிகரிப்பினை பெற்றுக்கொள்கின்றனர்.

இன்றைய நாள் முதல் குறைந்தபட்ச சம்பளம் சுமார் ஏழு வீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி சம்பளம் மணித்தியாலம் ஒன்றுக்கு 16.55 டொலர் களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

குறைந்தபட்சம் வாராந்தம் 40 மணத்தியாலங்கள் வேலை செய்யும் பணியாளர் ஒருவர் சுமார் 2200 டொலர்களை சம்பள அதிகரிப்பாக பெற்றுக்கொள்வார் என தெரிவிக்கப்படுகின்றது.

ஒன்ராரியோவில் பணியாற்றும் அனைத்து பணியாளர்களும் இந்த சம்பள அதிகரிப்பிற்கு தகுதியுடையவர்கள் என தெரிவிக் கப்படுகின்றது



## கனடாவில் முதல் முறையாக கறுப்பினத்தவருக்கு கிடைத்த அங்கீகாரம்!

அக்டோபர் 04, 2023

கனடிய நாடாளுமன்றின் சபாநாயகராக முதல் தடவையாக கறுப்பினத்தவர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

லிபரல் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கிரெக் பெர்குஸ் இவ்வாறு சபாநாயகர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

14 வயது முதலே நாடாளுமன்ற அமர்வுகள் பற்றிய விட யங்களை பின்தொடர்ந்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

நாசி போராளி ஒருவரை நாடாளுமன்றிற்கு அழைத்து கௌர வித்த சம்பவம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இதனால் கனடிய நாடாளுமன்றின் சபாநாயகராக கடமை யாற்றிய அன்தனி ரோட்டா பதவி விலகினார்.

இதனால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு பெர்குஸ் நியமிக்கப் பட்டுள்ளார்.

இரகசியமான முறையில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பு மூலம் பெர்குஸ் சபாநாயகர் பதவிக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

54 வயதான பெர்குஸ் கடந்த 2015ம் ஆண்டில் முதல் தடவை யாக கியூபெக் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவாகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# ரொரான்ரோ பெரும்பாகத்தில் வீடுகள் வீற்பனையில் வீழ்ச்சி!

அக்டோபர் 04, 2023

ரொரான்ரோ பெரும்பாக பகுதியில் வீட்டு விற்பனையில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

கடந்த செப்டம்பர் மாதத்தில் வீட்டு விற்பனை 7.1 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த 2022ம் ஆண்டு செப்டம்பர் மாதத்துடன் ஒப்பீடு செய்யும் போது இவ்வாறு வீட்டு விற்பனையில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

கடந்த மாதம் 4642 வீடுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும் ஆகஸ்ட் மாதத்தை விடவும் வீட்டு விற்பனை 12.1 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

ரொரான்ரோ பிராந்திய வலய ரியல்எஸ்டேட் சபை இந்த விடயத்தை தெரிவித்துள்ளது.

வடன் வட்டி வீத அதிகரிப்பு, உயர்ந்த பணவீக்க வீதம், கனடிய மத்திய வங்கியின் எதிர்காலத் தீர்மானங்கள் குறித்த நிச்சயமற்றத்தன்மை போன்ற காரணிகளினால் இவ்வாறு வீட்டு விற்பனை வீழ்ச்சியடைந்துள்ளது.



இதேவேளை, செப்டம்பர் மாதத்தின் சராசரி வீட்டு விலை 1,119,428 டொலர்கள் எனவும், இது ஆகஸ்ட் மாதத்தை விடவும் 3.4 வீத அதிகரிப்பு எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# கனடேிய பிரதமர் உக்ரைனுக்கு உறுதிமொழி!

அக்டோபர் 06, 2023

ரஸ்யாவடனான போரில் வெற்றி அடையும் வரை உதவிகள் வழங்கப்படும் என உக்ரைனுக்கு, கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ உறுதி அளித்துள்ளார்.

கனடிய அரசாங்கம் இராணுவ, மனிதாபிமான, மற்றும் நிதி ரீதியாக உக்ரைனுக்கு சுமார் 9 பில்லியன் டாலர்கள் வரையில் உதவியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

உக்ரைனுக்கு தொடர்ந்தும் உதவிகள் வழங்கப்படும் என அவர் அறிவித்துள்ளார்.

உலக மக்களுக்கு அத்தியாவசியமான சமாதானம், சுபிட்சம் மற்றும் ஸ்திரதன்மையை உருவாக்குவதற்காக சர்வதேச சட்டங்களுக்கு ஆதரவு அளிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைனுக்கு தேவையான சகல உதவிகளையும் வழங்க தயார் என கனடிய பிரதமர் தெரிவித்துள்ளார்.



# செப்டம்பர் மாதத்தில் 65, 500 புதிய வேலை வாய்ப்புகள் உருவாகியுள்ளது

## கனடா புள்ளிவிபரவியல் திணைக்களம்!

அக்டோபர் 06, 2023

கனடாவில் வேலை வாய்ப்பு தொடர்பில் அந்நாட்டு புள்ளிவிபரவியல் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

இதன்படி கடந்த செப்டம்பர் மாதத்தில் கனடிய பொருளாதாரத்தில் 65000 புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் வேலையற்றோர் வீதம் தொடர்ந்தும் 5.5 வீதம் என்ற அடிப்படையில் காணப்படுவதாகவும் தொடர்ச்சியாக மூன்றாவது மாதமாக இந்த நிலைமை பேணப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கல்வித்துறையில் அதிக அளவு தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பகுதிநேர வேலை வாய்ப்புகளே அதிக எண்ணிக்கையில் உருவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சனத்தொகை அதிகரிப்பு வலுவான நிலையில் காணப்படுவதனால் மாதாந்தம் தொழில் வாய்ப்புகளின் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்வதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




# பிரம்ரன் நகரில் தமிழின அழிப்பு நினைவாலயம் செயல் வடிவப் பணிகள் முடக்க நிலையிலா?



## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# தமிழக செய்திகள்



## அறவழியில் போராடிவரும் ஆசிரியப்பெருமக்களின் மீது கொடும் அடக்குமுறைகளை ஏவுவதா? செந்தமிழன் சீமான்

அக்டோபர் 03, 2023

‘சமவேலைக்கு, சம ஊதியம்’ வழங்கக்கோரி இடைநிலை ஆசிரியர்களும், பணி நிரந்தரம் செய்யக்கோரி பகுதிநேர ஆசிரியர்களும், ஆசிரியர் தகுதித்தேர்வில் தேர்ச்சிப் பெற்றும் 10 ஆண்டுகளாக ஆசிரியர்ப் பணிக்காக காத்திருக்கும் பட்டதாரி ஆசிரியர்களும் என மூன்று பிரிவாக தங்களது கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி, கடந்த ஒரு வாரகாலமாக சென்னை, நுங்கம்பாக்கத்தில் உள்ள பள்ளிக் கல்வித்துறை இயக்குனரக வளாகத்தில் இரவும் பகலும் தொடர் உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

வளமான நாளைய தலைமுறையை உருவாக்கும் அறிவுக் கருவூலங்களான ஆசிரியர்கள் தங்களது உரிமைகளுக்காக வீதியில் இறங்கிப்போராடிவரும் இழிநிலையை தாங்க மாட்டாது, நேற்று (02-10-2023) போராட்டக்களத்திற்கு நேரில் சென்று, அவர்களது நியாயமான கோரிக்கைகள் வெல்ல, நாம் தமிழர் கட்சி இறுதிவரை தோளோடு தோளாகத் துணைநிற்கும் என உறுதியளித்து வந்தேன். மேலும், போராட்டத்தில் ஈடுபட்டுவரும் ஆசிரியர்களின் உடல்நலனைக் கருத்திற் கொண்டு, உடனடிப் பேச்சுவார்த்தை மூலம் அமைதியான முறையில் இப்போராட்டத்தினை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென தமிழ்நாடு அரசுக்கும் கோரிக்கை விடுத்திருந்தேன்.

இந்நிலையில், போராட்டக்களத்தில் இருந்து ஆசிரியப் பெருமக்களை வலுக்கட்டாயமாக அப்புறப்படுத்தும் நோக்கில், அவர்களின் மீது காவல்துறையினர் மூலம் கடும் அடக்குமுறைகளை ஏவியுள்ள திமுக அரசின் கொடுஞ்செயல் வன்மையான கண்டனத்திற்குரியது. கடந்த அதிமுக ஆட்சியில், இதே கோரிக்கைகளை வலியுறுத்தி ஆசிரியப் பெருமக்கள் போராடிய போது இதேபோன்ற அதிமுக அரசின் அடக்குமுறைகளைக் கடுமையாக கண்டித்ததோடு மட்டுமின்றி, திமுக தலைமையிலான ஆட்சி அமைந்தால் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவதாக உறுதியளித்து, தேர்தல் அறிக்கையிலும் வாக்குறுதிகளாக வெளியிடப்பட்டது. இதன்மூலம், ஆசிரியப் பெருமக்களின் குடும்பங்களின் நம்பிக்கையைப் பெற்று, அதன்மூலம் பெருவாரியான வாக்குகளை அறுவடை செய்து, ஆட்சி கட்டிலில் ஏறி அமர்ந்ததும் தேர்தல் வாக்குறுதிகளை காற்றில் பறக்க விட்டு, கடந்த இரண்டரை ஆண்டுகளாக திமுக அரசு அவர்களை வஞ்சித்து வருகிறது.

இதனால் கொதிப்படைந்துள்ள ஆசிரியப் பெருமக்கள் இறுதி வாய்ப்பாக, தங்கள் உயிரையும் பொருட்படுத்தாது தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர். இதுவரை 300க்கும் மேற்பட்ட ஆசரியர்களின் உடல்நிலை கடுமையாகப் பாதிக்கப்பட்டு உள்ளது. இத்தகைய கொடுஞ்சூழலினை, பள்ளிக்கல்வித்துறை அமைச்சரும், துறை சார் அரசு அதிகாரிகளும் நேர்மறையாக எதிர்கொண்டு உரிய முறையில் பேச்சுவார்த்தை நடத்தி, தீர்வு எட்டுவதை விடுத்து காவல்துறையினர் மூலம் கொடும் அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விடுவது மக்களாட்சி முறைமைக்கு எதிரான கொடுங்கோல் போக்காகும்.

எனவே, காவல்துறையினரின் அடக்குமுறைகளை உடனடியாக நிறுத்தி, உரிய முறையில் பேச்சுவார்த்தை நடத்த திமுக அரசு முன்வராவிட்டால், போராட்டக்களத்திற்கு மீண்டும் நேரில் சென்று, ஆசிரியப் பெருமக்களுடன் அமர்ந்து மாபெரும் மக்கள் திரள் போராட்டமாக மாற்றவேண்டிய சூழலுக்கு என்னை உள்ளாக்கவேண்டாம் என தமிழ்நாடு அரசையும், மாண்புமிகு தமிழ்நாட்டு முதல்வர் ஐயா மு.க.ஸ்டாலின் அவர்களையும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.



– செந்தமிழன் சீமான்

தலைமை ஒருங்கிணைப்பாளர்

நாம் தமிழர் கட்சி

## தமிழரின் தொன்மையைத் தனது ஆய்வுகளால் வெளிப்படுத்திய கடல்சார் ஆய்வாளர் ஒரிசா பாலு காலமானார்!

அகடோபர் 06, 2023

ஒரிசா பாலு என்ற பெயரில் அதிகம் அறியப்படும் சிவ பாலசுப்ரமணி  தமிழக ஆய்வாளர் இன்று காலமானார் . தமிழ் தொன்மையை உலகளவில் கடல் வழியாகத் தேடி வந்த இவர் தமிழர் வரலாற்றை புவியியலை அடிப்படையாகக் கொண்டு நவீன தொழில்நுட்பங்களுடன் பண்டைய மரபுசார் அறிவை பின்புலமாகக் கொண்டு ஆய்வு செய்து வந்தவராவார்.

இவரின் குமரிக்கண்டம், லெமூரியாக் கண்டம் என்று தமிழின் அடி ஆழத்தைத்தேடி நடத்திய தேடல்கள் காலத்தால் அழியாதது, தமிழுக்கு மிகுந்த மரியாதையை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இந்தச் சீரிய தமிழின் ஆய்வாளர் பாலு அவர்கள் கடந்த பல மாதங்களாகப் புற்று நோய்க்கு இலக்காகித் தனது நாக்கின் ஒரு பகுதியை அகற்றிய நிலையிலும் தமிழுக்காகத் தொடர்ந்து உழைத்து வந்திருந்தார். தனது இறுதி நாட்களில் முற்றாகப் பேச முடியாது போனாலும் இறக்கும்வரை தமிழுக்காக எழுதிக் கொண்டிருப்பேன்  என எடுத்துக்கூறிய பாலு அவர்கள் இந்த




உலகை விட்டு மறைந்த செய்தி உலகத்தமிழர்கள் மத்தியில்



ஆழ்ந்த சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## இஸ்ரேலில் சிக்கிய தமிழர்களை மீட்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்!

### வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான்

அக்டோபர் 08, 2023

இஸ்ரேலில் சிக்கிய தமிழர்களை மீட்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் உறுதி அளித்துள்ளார்.

பாலஸ்தீனத்தைச் சேர்ந்த ஹமாஸ் நேற்று (சனிழ்க்கிழமை) காலை இஸ்ரேல் மீது 5,000 ராக்கெட் குண்டுகளை வீசி திடீர் தாக்குதல் நடத்தினர். இதில் இதுவரை இரு தரப்பிலும் சேர்த்து 500க்கும் மேற்பட்ட உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.

இஸ்ரேலுக்கு எதிராக ஹமாஸ் அமைப்பினர் தாக்குதல் நடத்தி வரும் நிலையில், அவர்களின் தாக்குதலை நியாயப்படுத்தி உள்ள பாலஸ்தீன அதிபர் மஹ்முத் அப்பாஸ், பயங்கரவாதத்துக்கு எதிராக தற்காத்துக்கொள்ளும் உரிமை என்பது பாலஸ்தீனியர்களுக்கு உண்டு என்று கூறியுள்ளார். இஸ்ரேல் - பாலஸ்தீனத்தைச் சூழ்ந்துள்ள போர் மேகத்தால் பல நாடுகளும் தத்தம் மக்களுக்கு பயண எச்சரிக்கைகளை விடுத்து வருகிறது. மத்திய அரசும் இஸ்ரேலில் வாழும் இந்தியர்கள் அவசர தேவைக்கு 97235 256748 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம் என்றும் அல்லது cons1.telaviv@mea.gov.in என்ற மின்னஞ்சலுக்கு தகவல் அனுப்பலாம் என்றும் அறிவித்திருக்கிறது.

இந்நிலையில், இஸ்ரேலில் இருந்து தங்களை மீட்க வேண்டும் என இதுவரை அயலகத் தமிழர் நல வாரியத்தில் 18 பேர் தொடர்பு கொண்டிருப்பதாகவும், அதில் கோவையைச் சேர்ந்த 3 மாணவர்களும் உள்ளதாகவும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலவாரிய அமைச்சர் செஞ்சி மஸ்தான் தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலையில், 18 பேரும் பாதுகாப்பாக இருப்பதாகவும், அவர்களை மீட்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலில் இருக்கும் தமிழர்கள் nrtchennai@tn.gov.in, என்ற nrtchenna.in@gmail.com மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளலாம் என்றும் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தெரிவித்துள்ளார். மேலும், +91-87602 48625, +91-99402 56444, +91-96000



23645 போன்ற தொடர்பு எண்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஏற்கெனவே போரினால் பாதிக்கப்பட்ட உக்ரைனிலும் இருந்தும் உள்நாட்டுக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட சூடானில் இருந்தும் தமிழர்கள் மீட்கப்பட்டது நினைவுகூரத்தக்கது.

# ஈழத்திற்கு திருப்பி அனுப்பக் கோரிய சாந்தன் வழக்கு நீதிபதி சுந்தர் மோகன் விலகியுள்ளார்!

அக்டோபர் 09, 2023

ஈழத்திற்கு திருப்பி அனுப்பக் கோரி, ராஜீவ் கொலை வழக்கில் விடுதலையான சாந்தன் தாக்கல் செய்த மனு மீதான விசாரணையில் இருந்து நீதிபதி சுந்தர் மோகன் விலகியுள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் உச்ச நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட ஏழு பேரில் ஒருவரான சாந்தன், ஈழத்தைச் சேர்ந்தவர். அவர் தன்னை ஈழத்திற்கு திருப்பி அனுப்பக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். அந்த மனுவில், ஈழத்தில் உள்ள தனது தாயார் உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டுள்ளதால், உடனிருந்து அவரை கவனித்துக்கொள்ளும் வகையில் திருச்சி முகாமில் இருந்து விடுவித்து ஈழத்திற்கு அனுப்ப வேண்டுமென கடந்த மாதம் மனு அளித்ததாக தெரிவித்துள்ளார்.

இந்த மனு மீது நடவடிக்கை எடுக்காத நிலையில் தன்னை இலங்கை அனுப்ப மத்திய, மாநில அரசுகளுக்கு உத்தரவிட வேண்டுமென மனுவில் கோரிக்கை வைத்திருந்தார். இந்த மனு நீதிபதிகள் எஸ்.எஸ்.சுந்தர், சுந்தர் மோகன் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, இந்த வழக்கின் விசாரணையில் இருந்து விலகுவதாக நீதிபதி சுந்தர் மோகன் தெரிவித்தார். இதனையடுத்து, இந்த மனுவை வேறு நீதிபதிகள் அமர்வில் பட்டியலிட, தலைமை நீதிபதிக்கு பரிந்துரைக்கப் பட்டது.



# காவிரியில் தண்ணீர் திறக்க தனித் தீர்மானம்!

அகடோபர் 09, 2023

தமிழகத்துக்கு தண்ணீரை திறந்துவிடுமாறு கர்நாடக அரசுக்கு உத்தரவிட மத்திய அரசை வலியுறுத்தி தமிழக சட்டப்பேரவையில், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கொண்டு வந்த தனித்தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

சட்டப்பேரவையின் மழைக்கால கூட்டத்தொடர் இன்று (அக்.9) தொடங்கியது. அவை மரபுப்படி, காலை 10 மணிக்கு கூட்டம் தொடங்கியதும், மறைந்த முன்னாள் உறுப்பினர்களுக்கு இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. வினாக்கள் விடைகளுக்கு துறை சார்ந்த அமைச்சர்கள் பதிலளித்தனர். 2023-24 நிதியாண்டுக்கான கூடுதல் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகளை நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்தார்.

பின்னர், “தமிழக விவசாயத்துக்கு அடித்தளமாக விளங்கும், காவிரி டெல்டா பாசன விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்திட, உச்ச நீதிமன்றத்தின் இறுதி தீர்ப்பில் வரையறுக்கப் பட்டுள்ளபடி, தமிழகத்துக்கு தண்ணீரை திறந்துவிடுமாறு கர்நாடக அரசுக்கு உத்தரவிட மத்திய அரசை வலியுறுத்தி” தமிழக சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தனித்தீர்மானம் கொண்டு வந்தார். இந்த தனித் தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய முதல்வர் ஸ்டாலின், தீர்மானத்தை நிறைவேற்றித் தருமாறு உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டார்.

இதைத்தொடர்ந்து, அதிமுக சார்பில் எடப்பாடி பழனிசாமி, பாமக சார்பில் ஜி.கே.மணி, காங்கிரஸ் கட்சியின் சார்பில் செல்வப் பெருந்தகை, புரட்சி பாரதம் கட்சியின் சார்பில் ஜெகன் மூர்த்தி, தமிழக வாழ்வுரிமை கட்சியின் சார்பில் வேல்முருகன், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் சார்பில் ஈஸ்வரன், மனிதநேய மக்கள் கட்சியின் சார்பில் ஜவாஹிருல்லாஹ், மதிமுக சார்பில் சதன் திருமலைக்குமார், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கே.மாரிமுத்து, மார்க்சிஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நாகை மாலி, விசிக சார்பில் சிந்தனை செல்வன், ஆகியோர் முதல்வர் கொண்டுவந்த தனித்தீர்மானத்தை ஆதரித்துப் பேசினர்.



இத்தீர்மானம் முழுமையானதாகவும், நிரந்தர தீர்வை நோக்கியதாகவும் இல்லை எனக் கூறி பாஜக சார்பில் வானதி சீனிவாசன் எதிர்ப்பு தெரிவித்தார். பின்னர் பாஜக எம்எல்ஏக்கள் சட்டப்பேரவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர். இதைத் தொடர்ந்து, பேரவையில் தனித்தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

# முழுமையான பாலஸ்தீன விடுதலையே அமைதிக்கான நிரந்தரத் தீவு!

## நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமான்

அக்டோபர் 10, 2023

இஸ்ரேல் மீது பாலஸ்தீன விடுதலை அமைப்பான ‘ஹமாஸ்’ நடத்திய தாக்குதல்களும், அதனைத்தொடர்ந்து பாலஸ்தீனத்தின் காசா சிறுநிலத்தின் மீது இஸ்ரேல் இராணுவம் நடத்தி வரும் தாக்குதல்களாலும் இருதரப்பிலும் இதுவரை 1000க்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுள்ள செய்தி மிகுந்த



மனவேதனையை அளிக்கிறது.

போரினால் மக்கள் பேரிழப்பைச் சந்திக்க நேரிடும் என்பதையும், போர் மட்டுமே நிரந்தரத் தீர்வில்லை என்பதையும் உலகில் வேறு எந்த மக்களையும் விட 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஈழத்தாயக விடுதலைப்போரில் இலட்சக்கணக்கான இன உறவுகளை இழந்து நிற்கும் தமிழின மக்களாகிய நாங்கள் நன்கு அறிவோம். ஆனால், அடிமையாய் வாழ்வதை விடவும் போராடிச் சாவது மேலானது என்பதுதான் வரலாறு காட்டும் விடுதலைக்கான பெரும் தத்துவம். அன்றைக்கு ஆயுதம் தாங்கிய ஈழ மக்கள் இராணுவமான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினை பயங்கரவாத இயக்கம் என்று உலக நாடுகள் முத்திரை குத்தி ஈழ விடுதலைப்போராட்டத்தை எப்படி நசுக்கியதோ, அதைப்போலவே தற்போது ஹமாஸையும் வெறும் பயங்கரவாத இயக்கமாக மட்டுமே உலக நாடுகள் சித்தரித்து வருகின்றனவே அன்றி அதன் போராட்டத்தின் நியாயத்தை எவரும் உணரவில்லை.

இன்றைக்கு இஸ்ரேல் மீதான தாக்குதலுக்குக் கண்டனம் தெரிவிக்கும் உலக வல்லாதிக்க நாடுகள், உலகப் பெரும் தலைவர்கள், பன்னாட்டு அமைப்புகள் பாலஸ்தீனத்தின் மீது பல ஆண்டுகளாகத் தாக்குதல் நடத்திவரும் இஸ்ரேலைக் கண்டிக்காது அமைதி காத்தது ஏன்? இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீன பகுதிகள் எவ்வளவு? அமைதி ஒப்பந்தம் ஏற்பட்ட 1993க்கு பிறகு கடந்த 30 ஆண்டுகளில் இஸ்ரேலால் கொல்லப்பட்ட பாலஸ்தீனர்களின் எண்ணிக்கை எவ்வளவு? அகதிகளாக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்? இஸ்ரேல் இராணுவம் அழித்தொழித்த பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள் எத்தனை? 2008 ஆம் ஆண்டுக்குப் பிறகு 50,000 குழந்தைகள் உட்பட 1,50000க்கும் மேற்பட்ட பாலத்தீனர்கள் இஸ்ரேல் அரசால் கொல்லப்பட்டுள்ளனர். அவற்றையெல்லாம் பற்றி ஏன் உலக நாடுகள் வாய்திறக்கவில்லை? இதோ இந்த நொடியில் கூடத் தடை செய்யப்பட்ட பாஸ்பரஸ் கொத்து குண்டுகளைப் போட்டு அப்பாவி பாலஸ்தீன மக்களை அழித்தொழிக்கும் இஸ்ரேலை உலக நாடுகள் இதுவரை தடுத்து நிறுத்தாதது ஏன்?

“என் ஒரு கையில் துப்பாக்கி இருக்கிறது, மறு கையில் அமைதியைக் குறிக்கும் ஆலிவ் இலை இருக்கிறது; எதைத் தூக்க வேண்டுமென்று நீங்கள்தான் முடிவு செய்ய வேண்டும்” என்று ஐ.நா. மன்றில் தோன்றி உலகத்தின் முன் வரலாற்றுச் சிறப்புமிக்கப் பேருரையை ஆற்றிய பாலஸ்தீன தந்தை விடுதலைப் போராளி, புரட்சியாளர் யாசர் அராபத்திற்கு உலக நாடுகள் முன்னிலையில் அளித்த உறுதிமொழியைக் காலில் போட்டு மிதித்து, பாலஸ்தீன விடுதலைக் கனவை நசுக்கிய இஸ்ரேல் மீது இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

இஸ்ரேலுடன் சமாதான ஒப்பந்தம் செய்துகொண்ட பாலஸ்தீன தந்தை யாசர் அராபத்திற்கும், பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கும் இஸ்ரேல் அரசு செய்த பச்சைத் துரோகமே ஹமாஸை பாலஸ்தீனியர்களின் பெரும்பான்மை ஆதரவுப்பெற்ற விடுதலை இயக்கமாக உருவெடுக்கச் செய்தது. இன்றைக்கு இஸ்ரேல் எதிர்கொள்ளும் அத்தனை தாக்குதல்களும், கடந்த காலங்களில் இஸ்ரேல் செய்த தீவினைக்கான எதிர் வினைகளே. எப்பொழுதும் அடிப்பதுதான் வன்முறை; திருப்பி அடிப்பது என்பது ஒருபோதும் வன்முறை ஆகாது. அதுதான் அடிமைத் தளையை அறுத்தெறியும் விடுதலைக்கான பெருவழி.



எப்படி சிங்கள இராணுவ வீரன் ஒருவன் தன் பிடரியில் துப்பாக்கியால் தாக்கியபோது ஏற்பட்ட வலி குறித்து, ஒரே ஒரு நிமிடம் அன்றைய பிரதமர் ராஜீவ்காந்தி சிந்தித்திருந்தால் அமைதிப் படையை அனுப்பி ஈழ விடுதலையை அழிக்கும் முடிவை எடுத்திருக்க மாட்டாரோ, அதுபோல உலகம் முழுவதும் ஒவ்வொரு நூற்றாண்டிலும் இனப்படுகொலைக்கு ஆளாகி பேரழிவைச் சந்தித்த யூத இனம், உலகம் தனக்குச் செய்ததை தாம் இன்னொரு இனத்திற்கு செய்திடக் கூடாது என்று ஒரே ஒரு நிமிடம் சிந்தித்திருந்தால், தங்களை அரவணைத்து, ஆதரித்து, அடைக்கலமளித்து அதனால் நிலங்களையும் இழந்த பாலஸ்தீனத்தை, அதன் மக்களை ஒருபோதும் இஸ்ரேல் சிதைத்து அழித்திருக்காது.

பேரழிவை ஏற்படுத்தும் போர் கூடவே கூடாததுதான். உலகம் முழுவதும் அமைதியும், சமாதானமும் வேண்டும்தான். ஆனால் உண்மையான அமைதி என்பது முழுமையான பாலஸ்தீன விடுதலையில்தான் இருக்கிறது என்பதை உலக நாடுகள் உணர்வதுதான் அமைதிக்கான நிரந்தரத் தீர்வாக இருக்க முடியும்!

– செந்தமிழன் சீமான், தலைமை ஒருங்கிணைப்பாளர்
நாம் தமிழர் கட்சி

# இஸ்லாமிய சிறை கைதிகள் விடுதலை; அரசு ஆளுநருக்கு அழுத்தம் கொடுக்காதது வருத்தமளிக்கிறது!

## பாமக தலைவர் அன்புமணி இராமதாஸ்

அக்டோபர் 11, 2023

"இஸ்லாமிய சிறைக்கைதிகளை விடுதலை செய்வது தொடர்பாக சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அளித்த பதிலில் நம்பிக்கையளிக்கும் செய்தி இருக்கும் என்று ஒட்டுமொத்த தமிழகமும் எதிர்பார்த்தது. ஆனால், அத்தகைய நம்பிக்கை அளிக்கும் உத்தரவாதம் எதுவும் அரசு சார்பில் அளிக்கப்படவில்லை" என்று பாமக தலைவர் அன்புமணி இராமதாஸ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழகத்தில் பல்வேறு வழக்குகளில் தண்டனை விதிக்கப்பட்டு, சிறைகளில் தண்டனைக் காலத்தை நிறைவு செய்த இஸ்லாமியக் கைதிகளை விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளில் எந்த முன்னேற்றமும் ஏற்படாதது வருத்தமளிக்கிறது. அனைத்துக் கட்சிகளின் சார்பில் அழுத்தம் கொடுத்தும் இந்த சிக்கலில் ஆக்கப்பூர்வமான விடையோ, உத்தரவாதமோ அரசுத் தரப்பிலிருந்து கிடைக்காதது ஏமாற்றம் அளிக்கிறது.

ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் அதிக அளவாக 14 ஆண்டுகளில் விடுதலை செய்யப்படுவர். நன்னடத்தை அடிப்படையில் பலர் 7 ஆண்டுகளில் விடுதலை செய்யப்பட்டதும் தமிழகத்தில் நிகழ்ந்துள்ளது. ஆனால், வேறு சில வழக்குகளில் கைது செய்யப்பட்ட இஸ்லாமியக் கைதிகள், அவர்களின் தண்டனைக் காலம் நிறைவடைந்தும் கூட, 25 ஆண்டுகளுக்கும் மேலாக பல்வேறு சிறைகளில் வாடிக் கொண்டுள்ளனர். கோவை மத்திய சிறையில் மட்டும் 38 கைதிகள் இவ்வாறு அடைக்கப்பட்டுள்ளனர். தண்டனைக் காலத்தை நிறைவு செய்த அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக பாமக தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறது. எனினும் எந்த பயனும் ஏற்படவில்லை.

இஸ்லாமிய சிறைக்கைதிகளை விடுதலை செய்வது தொடர்பாக சட்டப்பேரவையில் நேற்று பாமக சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தது. அதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அளித்த பதிலில் நம்பிக்கையளிக்கும் செய்தி இருக்கும் என்று ஒட்டுமொத்த தமிழகமும் எதிர்பார்த்தது. ஆனால், அத்தகைய நம்பிக்கை அளிக்கும் உத்தரவாதம் எதுவும் அரசு சார்பில் அளிக்கப்படவில்லை.

நீண்டகாலமாக சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கும் கைதிகளை விடுதலை செய்வது குறித்து அரசுக்கு பரிந்துரைக்க அமைக்கப்பட்ட நீதிபதி ஆதிநாதன் குழு, ஒட்டுமொத்தமாக 264 கைதிகளை முன்கூட்டியே விடுதலை செய்ய பரிந்துரைத்தது. ஆனால், அவர்களில் 49 பேரை மட்டுமே, முதல்கட்டமாக, விடுதலை செய்ய ஆளுனருக்கு தமிழக அரசு பரிந்துரைத்திருக்கிறது. அவர்களில் 20 பேர் இஸ்லாமியர்கள் என்பது மனநிறைவளிக்கும் செய்தியாகும். அவர்களை விடுதலை செய்வதற்கான பரிந்துரை ஆகஸ்ட் 28ம் நாள் அனுப்பப்பட்டு, 45 நாட்களாகியும் இதுவரை ஆளுநரிடமிருந்து எந்த பதிலும் வரவில்லை. அது தொடர்பாக அரசின் சார்பில் ஆளுநருக்கு எந்த அழுத்தமும் தரப்படவில்லை என்பது தான் கூடுதல் வருத்தமளிக்கிறது.

ஆளுநருக்கு பரிந்துரை அளித்ததுடன் தங்களின் பணி முடிவடைந்து விட்டது என்பதைப் போல, இந்த விவகாரத்தில் ஆளுநர் முடிவெடுத்த பிறகு இஸ்லாமியக் கைதிகள் உள்ளிட்ட 49 பேரும் விடுதலை செய்யப்படுவார்கள் என்று முதல்வர் கூறியிருக்கிறார். கைதிகளை விடுதலை செய்ய ஆளுநருக்கு அழுத்தம் கொடுக்கப்படும் என்ற உத்தரவாதத்தைக் கூட முதல்வர் மு.க.ஸ்டாலின் அளிக்கவில்லை.

தமிழகத்துக்கு கடந்த பத்தாண்டுகளாக ஆளுநர்களாக வருபவர்கள், தண்டனைக் காலத்தை முடித்த கைதிகளை கருணை அடிப்படையில் விடுதலை செய்யும் விஷயத்தில் எத்தகைய நிலைப்பாட்டை எடுக்கின்றனர் என்பது அனைவரும் அறிந்த உண்மை தான். பேரறிவாளன் உள்ளிட்ட 7 தமிழர்கள் விடுதலை குறித்து கடந்த 09.09.2018 ஆம் நாள் அமைச்சரவைத் தீர்மானத்தை தமிழக அரசு நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பி வைத்த போதிலும் கூட அப்போதிருந்த ஆளுநர் அதன் மீது எந்த முடிவும் எடுக்காமல் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்த அநீதி நடந்தது. அதன்பிறகு பேரறிவாளனே உச்சநீதிமன்றத்தில் சட்டப் போராட்டம் நடத்தி 1346 நாட்களுக்குப் பிறகு கடந்த ஆண்டு மே மாதத்தில் விடுதலை செய்யப்பட்டார்.



இஸ்லாமியர்கள் உள்ளிட்ட 49 கைதிகள் விடுதலை விவகாரத்திலும், அரசுத் தரப்பில் அழுத்தம் கொடுக்கப்படாவிட்டால், அவர்களின் விடுதலைக்கான பரிந்துரை ஆளுநர் மாளிகையின் அலமாரிகளில் உறங்கிக் கொண்டே தான் இருக்கும். 25 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் வாடும் இஸ்லாமியக் கைதிகளின் விடுதலை கானல் நீராகவே இருக்கும். அவர்களின் விடுதலைக்கான நடவடிக்கைகளை தமிழக அரசு போர்க்கால வேகத்தில் மேற்கொள்ள வேண்டும். அதன் மூலம் தான் அவர்களுக்கு நீதி வழங்க முடியும்.

எனவே, உடனடியாக அமைச்சரவையைக் கூட்டி, நீதிபதி ஆதிநாதன் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட 264 கைதிகளில், ஏற்கெனவே ஆளுநருக்கு பரிந்துரைக்கப்பட்ட 49 பேர் தவிர மீதமுள்ளவர்களையும் விடுதலை செய்ய தீர்மானம் நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பி வைக்க வேண்டும். முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் மூத்த அமைச்சர்கள் குழுவினர் ஆளுநரை நேரில் சந்தித்து இஸ்லாமியக் கைதிகள் உள்ளிட்ட நீண்ட காலமாக சிறைகளில் வாடும் 264 பேரின் விடுதலை குறித்து விரைந்து முடிவெடுக்க வலியுறுத்த வேண்டும். ஆளுநர் தரப்பில் தாமதம் செய்யப்பட்டால், அவர்கள் அனைவரையும் நிபந்தனை இல்லாத சிறை விடுப்பில் அவர்களின் இல்லங்களுக்கு அனுப்ப வேண்டும்", என்று அவர் கூறியுள்ளார்.

# ஒருநாள் மழைக்கே தாங்காத மதுரை மழைநீர் வடிகால் வசதியின்றி ஆறுகளாக மாறிய சாலைகள்!

அக்டோபர் 10, 2023

ஒரு நாள் பெய்த மழைக்கே தாக்குப்பிடிக்க முடியாமல், மதுரை மாநகரின் அனைத்து சாலைகளிலும் மழைநீர் ஆறுபோல் பெருக்கெடுத்து ஓடியதால், கார், இரு சக்கர வாகனங்கள் செல்ல முடியாமல் திணறின.

கடந்த 3 ஆண்டுகளாக, மதுரை மாவட்டத்தில் கோடை மழை, தென்மேற்கு பருவமழை, வடகிழக்குப் பருவமழை மற்றும் பருவம் தவறிய மழை பெய்தது. அதனால் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து, தண்ணீர் தட்டுப்பாடின்றி குடிநீருக்கும், விவசாயத்துக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. ஆனால், கடந்த 8 மாதங்களாக மதுரை மாவட்டத்தில் கனமழை ஏதும் பெய்யவில்லை.

இதனால் கண்மாய்கள், குளங்கள் உள்ளிட்ட நீர்நிலைகள் வறண்டு கொண்டிருந்தன. இந்நிலையில், வட கிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன்னரே, நேற்று முன்தினம் மாலை 6 முதல் இரவு 11 மணிக்கு மேல் வரை மதுரை மாவட்டத்தில் இடியுடன் கூடிய கனமழை பெய்தது. தொடர்ச்சியாக கனமழை பெய்ததால், சாலைகளில் தண்ணீர் ஆறுபோல் பெருக்கெடுத்து ஓடியது.

கார், இரு சக்கர வாகனங்களை மூழ்கடிக்கும் அளவுக்கு சாலைகளில் தண்ணீர் ஓடியதால், பொதுமக்கள் தங்களது வீடுகளுக்குச் செல்ல முடியாமல் தவித்தனர். பலரது வாகனங்கள் தண்ணீரில் மூழ்கி செயலிழந்தன. சிலர் வாகனத்துடன் கீழே விழுந்து காயமடைந்தனர்.

கோ.புதூர், பெரியார் பேருந்து நிலையம், கே.கே.நகர், அழகர் கோவில் செல்லும் சாலை, தமுக்கம், கோரிப்பாளையம், செல்லூர், பைபாஸ் சாலை, நத்தம் சாலை, மாசி வீதிகள், வெளி வீதிகள், மீனாட்சியம்மன் கோயில் பகுதிகள், சிம்மக்கல், பழங்காநத்தம் சாலை, டிவிஎஸ் நகர் உள்ளிட்ட மதுரை மாநகரின் பெரும்பான்மையான பகுதிகள் மற்றும் தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தெப்பம்போல் தேங்கியது.

'ஸ்மார்ட் சிட்டி' திட்டம் தொடங்கும் போது மழை பெய்தால், தண்ணீர் நகர்பகுதியில் தேங்காமல் வழிந்தோடும் வகையில் மீனாட்சிம்மன் கோயில் பகுதியில் வடிகால் வசதிகள் ஏற்படுத்தப்படும் என, மாநகராட்சி உறுதியளித்திருந்தது. ஆனால், மீனாட்சியம்மன் கோயிலைச் சுற்றி சாலையை மட்டும் அமைத்து விட்டு, கழிவு நீர் கால்வாய், மழை நீர் கால்வாய்களை ஒழுங்குபடுத்தாமல் சென்றுவிட்டனர்.



இதனால் கோயிலைச் சுற்றியுள்ள மாசி வீதிகள், சித்திரை வீதிகள், வெளி வீதிகளில் மழைநீர் ஆறு போல் பெருக்கெடுத்து ஓடுகிறது. கே.கே.நகர், செல்லூர், ஆரப்பாளையம், தத்தனேரி உள்ளிட்ட நகரின் பல்வேறு பகுதிகளில் இருந்து மழைநீர் சென்று வைகை ஆற்றில் கலக்கும். ஆனால், தற்போது வைகை ஆற்றின் இருபுறமும் கட்டப்பட்டுள்ள தடுப்புச் சுவரால்,

மழைநீர் வைகை ஆற்றில் சென்று கலக்க வழியில்லாமல் ஆங்காங்கே தேங்கி விடுகிறது. இதனால், ஒரு நாள் மழைக்கே மதுரை மாநகர் தாங்காமல் ஸ்தம்பிக்கிறது. எனவே, வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன், மாநகராட்சி நிர்வாகம் மழைநீர் கால்வாய்கள், வைகை ஆற்றின் நீர்வரத்து கால்வாய்கள், கண்மாய்கள், குளங்களை தூர்வாரி தயாராக வேண்டும் என, பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.

மதுரை மாவட்டத்தில் நேற்று காலை 8 மணி வரை 24 மணி நேரத்தில் பெய்த மழை விவரம் (மி.மீட்டரில்): மதுரை விமான நிலையம் - 51.20, விரகனூர் - 52.50, மதுரை நகர் - 120.80, சிட்டம்பட்டி - 10.40, இடையபட்டி - 12.40, கள்ளந்திரி - 38.20,

மேலூர் - 8, புலிப்பட்டி - 16.80, தனியாமங்கலம் - 15, சாத்தையாறு அணை - 78, மேட்டுப்பட்டி - 96.40, ஆண்டிப்பட்டி - 40, சோழவந்தான் - 17.50, வாடிப்பட்டி - 50, உசிலம்பட்டி - 8, குப்பணம்பட்டி - 10, கள்ளிக்குடி - 50.60, திருமங்கலம் - 44.60, பேரையூர் - 13.60, எழுமலை - 18.80, பெரியபட்டி - 85.

# உலக செய்திகள்

## மேற்குலக நாடுகளிடம் இருந்து நிதியுதவி கிடைக்காவிட்டால் மோசாமான நிலையை சந்திக்கவுள்ள உக்ரைன் நாடு!

அகடோபர் 06, 2023



ரஷ்யா, தனது அண்டை நாடான உக்ரைனை கடந்த 2022 பெப்ரவரி மாதம் ஆக்ரமிக்க துவங்கியது. இதனை எதிர்த்து உக்ரைன், அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளின் பொருளாதார மற்றும் இராணுவ உதவியுடன் தீவிரமாக போரிட்டு வருகிறது.

இரு தரப்பிலும் ஏராளமாக சேதங்களும் உயிரிழப்புகளும் நடைபெற்றும் போர் 590 நாட்களை கடந்து தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதற்கிடையே, அமெரிக்காவிற்கு உள்ள கடன் ரூ. 2,74,63,90,35,00,00,000 (33 டிரில்லியன் அமெரிக்க டொலர்) எனும் அளவை தொட்டு விட்டதால், அந்நாட்டில் செலவினங்களை குறைக்க கோரி பெரும் விவாதங்கள் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் நடந்தது.

இந்த விவாதங்களில் ரஷ்ய உக்ரைன் போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா தற்போது வரை வழங்கிய பல கோடி நிதியுதவி ஒரு பிரச்சனையாக உருவெடுத்தது.

தற்போதுள்ள சூழலில் முன்பு போல் இனியும் அமெரிக்காவால் தொடர்ந்து உக்ரைனுக்கு நிதி உதவி அளிக்க முடியுமா என கேள்வி எழுந்துள்ளது. அமெரிக்க அதிபர் ஜோ பைடன், உக்ரைனுக்கு அமெரிக்கா வழங்கி வரும் நிதியுதவி தடைபடும் சாத்தியம் அதிகம் உள்ளது என தெரிவித்தார்.

இப்பின்னணியில் ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் ஒரு சந்திப்பில் பேசிய ரஷ்ய அதிபர் வோலோடிமிர் புதின் இது குறித்து பேசினார். மேற்கத்திய நாடுகளின் ஆதரவு மட்டும் இல்லையென்றால் உக்ரைன், ரஷியாவிற்கு எதிராக ஒரு வாரத்திற்கு மேல் போரில் தாக்கு பிடிக்க முடியாது.

மாதாமாதம் உக்ரைன் பெறும் நிதியுதவியினால் ரஷ்யாவிற்கு எதிராக உக்ரைன் தூக்கி நிறுத்தப்பட்டு வருகிறது. உதவி நின்றால், ஒரு வாரத்தில் அனைத்தும் நின்று விடும். நிதியுதவி மட்டுமல்ல் இராணுவ தளபாட உதவிகளும் நிற்க தொடங்கினால், ஒரு வாரத்தில் உக்ரைன் நிராயுதபாணியாகி விடும்.

தற்போது வரை ரஷ்யாவிற்கு எதிராக உக்ரைன் போரிட்டதில், உக்ரைன் 90 ஆயிரம் வீரர்களுக்கு மேல் இழந்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார். இதற்கிடையே, “அமெரிக்காவை போன்று நிதியுதவியோ இராணுவ உதவியோ உக்ரைனுக்கு நிச்சயமாக ஐரோப்பிய ஒன்றியத்தால் வழங்க முடியாது,” என ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவு கொள்கைக்கான தலைவர் ஜோசப் போரெல் தெரிவித்தார்.

## சிரியாவில் ஆளில்லா விமானம் மூலம் நடத்திய தாக்குதலில் 100க்கும் மேற்பட்டோர் பலி!

அக்டோபர் 06, 2023

சிரியாவில் ஹோம்ஸ் மாகாணத்தில் உள்ள இராணுவ அகாடமி மீது ஆளில்லா விமானம் நடத்திய தாக்குதலில் 100க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். 240 க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்ததாகவும் அந்நாட்டு சுகாதார துறை அறிவித்துள்ளது.



இத்தாக்குதல் இராணுவக் கல்லூரியின் பட்டமளிப்பு விழாவின் போது இந்த தாக்குதல் நடந்துள்ளது. இறந்தவர்களில் இராணுவ வீரர்களின் குடும்ப உறுப்பினர்கள், பெண்கள் மற்றும் சிறுவர்களும் அடங்குவர்.

உயிரிழந்தவர்களின் 6 குழந்தைகள் உட்பட பொதுமக்களும் இராணுவ வீரர்களும் அடங்குவதாக சுகாதார அமைச்சர் ஹசன் அல் கபாஷ் தெரிவித்தார்.

காயமடைந்தவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது. இந்த தாக்குதலுக்கு உடனடியாக எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

நேற்று பட்டமளிப்பு  விழா முடிவடைந்த நிலையில் வெடி பொருட்கள் நிரப்பப்பட்ட ஆளில்லா விமானங்கள் விழாவை குறிவைத்து தாக்கியதாக அந்நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது.

அந்நாட்டு அரசு வெளியிட்ட ஒரு அறிக்கையில்,

சர்வதேச சக்திகளால் ஆதரிக்கப்பட்ட போராளிகள் தான் தாக்குதல் நடத்தியிருப்பார்கள் என இராணுவம் குற்றம் சாட்டியுள்ளது. ஐநா பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ், ஹோம்ஸில் நடந்த ட்ரோன் தாக்குதல் மற்றும் வடமேற்கு சிரியாவில் பழிவாங்கும் ஷெல் தாக்குதல் பற்றிய அறிக்கைகள் குறித்து ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தினார் என்று அவரது செய்தித் தொடர்பாளர் ஸ்டீபன் டுஜாரிக் குறிப்பிட்டுள்ளார். இந் நிகழ்ச்சியின் போது சிரியாவின் பாதுகாப்புத் துறை அமைச்சர் கலந்துகொண்டதாகவும், தாக்குதலுக்கு சில நிமிடங்களுக்கு முன் அவர் புறப்பட்டு சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக வெள்ளிக்கிழமை முதல் மூன்று நாட்கள் துக்கம் அனுசரிக்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது. விழா முடிந்ததும், மக்கள் முற்றத்திற்குச் சென்றனர்,



அப்போது வெடிமருந்துகள் நிரப்பப்பட்ட ஆளில்லா விமானம் மூல தாக்குதல் நடத்தப்பட்டது. அது எங்கிருந்து வந்தது என்று எங்களுக்குத் தெரியவில்லை, ஆனால் தாக்குதலுக்கு பின் நொடி பொழுதில் ஏராளமானவர்கள் இறந்து அவர்களது சடலங்கள் தரையில் சிதறிக்கிடந்தது,  என்று விழா மேடையை அலங்கரித்த நபர் கூறியுள்ளார்.

இன்று வெள்ளியன்று ஹோம்ஸ் இராணுவ மருத்துவமனைக்கு வெளியே சிரியக் கொடிகளால் மூடப்பட்ட சவப்பெட்டிகள்  தெருக்களில் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. ஒரு இராணுவ இசைக்குழு அமைதியான இசையை வாசித்தது மற்றும் வீரர்களுக்கு வணக்கம் செலுத்தப்பட்டது.

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# ஹமாஸ் தக்குதலில் பற்றி எரியும் இஸ்ரேல்!

அக்டோபர் 07, 2023




இன்று சனிக்கிழமை காசா முனையில் இருந்து 20 நிமிடங்களில் 5 ஆயிரம் ரொக்கெட்டுகள் இஸ்ரேல் மீது ஏவப்பட்டுள்ளன. மேலும், இஸ்ரேலின் பல்வேறுநகரங்களுக்குள் நுழைந்த பாலஸ்தீனிய ஆயுதக்குழுவினர் துப்பாக்கிச்சூடு தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இஸ்ரேல் மீது காசா முனையில் செயல்பட்டு வரும் ஹமாஸ், பாலஸ்தீனியன் இஸ்லாமிக் ஜிகாத் உள்ளிட்ட ஆயுதக்குழுக்கள், 'ஆபரேஷன் அல் அக்சா ஃபிளட்' என்ற பெயரில் இன்று திடீர் தாக்குதல்களை இஸ்ரேல் மீது நடத்தினர்.



இத்தாக்குதல்களால் டெல் அவிவ் உட்பட இஸ்ரேல் முழுவதும் பல நகரங்களில் எச்சரிக்கை சைரன்கள் ஒலித்தன. காசா பகுதியிலிருந்து ஹமாஸ் போராளிகள் இஸ்ரேலிய எல்லைக்குள் ஊடுருவியுள்ளனர். காசா பகுதியைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசிப்பவர்கள் தங்கள் வீடுகளிலேயே இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர் இஸ்ரேல் பாதுகாப்புப் படையினர் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளனர்.

இத்தாக்குதலில் இதுவரை 40 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் 250 பேர் காயமடைந்தாகவும் நூற்றுக்கணக்கான மக்களுக்கு சிகிற்சை அளிக்கப்பட்டுள்ளது. காலை 6 மணிக்கு இந்த தாக்குதல் தொடங்கியதாகவும், இதில் பல கட்டடங்கள் தரை மட்டமானதோடு, இராணுவ வீரர்கள், பொதுமக்கள் பலர் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. சமூக வலைத்தளங்களில் சாலைகளில் மக்கள் கொத்து கொத்தாக இறந்து கிடக்கும் காட்சிகள் வீடியோக்களாக பதிவிடப்பட்டு வருகிறது.

பாலஸ்தீன போராளிகள் தெற்கு இஸ்ரேலின் எல்லை நகரமான ஸ்டெரோட்டை அடைந்து பலரை பிணைக் கைதிகளாக பிடித்து வைத்துள்ளதாக உள்ளூர் மற்றும் சமூக ஊடகங்களில் இருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஹமாஸின் இராணுவத் தலைவர் மொஹமட் டெய்ஃப், இஸ்ரேலிய அத்துமீறல்களை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் ஆபரேஷன் அல்-அக்ஸா புயல் என்று அழைப்பதாக அவர் குறிப்பிட்டார்.

சிம்சாத் தோரா என்ற யூதர்களின் திருவிழாவின் போது இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்னர். இத்தாக்குதலை அடுத்து இஸ்ரேல் போர்ப் பிரகடனத்தை அறிவித்துள்ளது. காஸா பகுதியில் உள்ள ஹமாஸ் போராளிகளின் இலக்குகளுக்கு எதிராக இஸ்ரேல் தொடர்ச்சியான வான்வழித் தாக்குதல்களை நடத்தி வருகிறது.



காசாவில் உள்ள இலக்குகள் மீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்தி 161 பேர் கொல்லப்பட்டதாக பாலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஜேர்மனி, பிரித்தானியா போன்ற நாடுகள் தங்களது கண்டனத்தை வெளியிட்டுள்ளன. லெபனானைத் தளமாகக் கொண்டு இயங்கும் ஈரானை ஆதரவாகக் கொண்டு இயங்கும் ஹிஸ்புல்லாஹ் இயக்கம் ஹமாஸ் தாக்குதலுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளது.

அத்துடன் இஸ்ரேலின் குற்றங்களுக்கு பதிலடி கொடுக்க ஹமாசுக்கு தெய்வீக ஆதரவு இருப்பதாக அந்த இயக்கம் மேலும் கூறியுள்ளது. ஜெர்மனி, அமெரிக்கா மற்றும் பல அரபு நாடுகளால் ஹிஸ்புல்லா பயங்கரவாத அமைப்பாக பட்டியலிடப்பட்டுள்ளது.

இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனம் ஆகிய நாடுகளில் எல்லைப்பகுதியாக உள்ள காசாவுக்கு இருநாடுகளும் தொடர்ந்து சொந்தம் கொண்டாடி வருகிறது. பல ஆண்டுகளாக இருநாடுகளும் இந்த சம்பவம் தொடர்பாக மாறி மாறி தாக்குதல் நடத்தி வருகிறது. இதன் ஒரு பகுதியாக பாலஸ்தீனத்தில் உள்ள ஹமாஸ் போராளிகளை இஸ்ரேல் பயங்கரவாதிகளாக அறிவித்துள்ளது. இரு நாட்டு அரசுகளும் அமைதிப் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் என பல நாடுகளும் வலியுறுத்தி வரும் நிலையில் இன்றைய நாள் மீண்டும் தாக்குதல் சம்பவமானது நடைபெற்றுள்ளது.

ஹமாஸ் போராளிகள் ஆயுதங்களோடு காசாவுக்கு வெளிப்பகுதிக்கு ஊடுருவியுள்ளதாக கூறப்பட்டுள்ள நிலையில் அங்கு பதற்றமான சூழல் நிலவி வருகிறது. இதனைத் தொடர்ந்து இஸ்ரேலில் போர் பிரகடனம் அமுல்படுத்தப்பட்



டுள்ளது. கிட்டதட்ட 80 கி.மீ. அளவுக்கு இந்த பிரகடனம் அமல்படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியே வர வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு பாதுகாப்பு அதிகாரிகளுடன் அவசர ஆலோசனையில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலின் சில இடங்களில் ஹமாஸ் படையினர் துப்பாக்கிச்சூடு நடத்தி தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாகவும், காசா பகுதியில் இஸ்ரேல் இராணுவம் செயலிழந்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர். பாலஸ்தீன படைகளுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் இஸ்ரேல் இராணுவத்தினர் அனைத்து இடங்களிலும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஹமாஸின் இராணுவப் பிரிவின் தலைவரான முகமது டெய்ஃப் இந்த தாக்குதல் குறித்து கருத்து தெரிவித்துள்ளார். அதில், இஸ்ரேலுக்கு எதிராக ஒரு புதிய இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாகவும், "ஆபரேஷன் அல்-அக்ஸா புயல்" என இதற்கு பெயரிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

ஹமாஸ் போராளிகள் பொதுமக்களையும், இராணுவ வீரர்களையும் சிறை பிடித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்



கின்றன. பதிலுக்கு இஸ்ரேல் இராணுவமும் பதிலடி கொடுத்து வருகிறது. காசா பகுதியில் இதுவரை 4 முறை நடைபெற்ற போரால் ஏராளமான பொதுமக்கள் பாதிக்கப்பட்டனர். தற்போது அங்கு போர் பதற்றம் நிலவுவதால் இம்முறை பலி எண்ணிக்கை அதிகரிக்கலாம் என கூறப்படுகிறது.

# ஆப்கானிஸ்தான் நிலநடுக்கத்தில் பலியானோர் எண்ணிக்கை அதிகரிப்பு!

அக்டோபர் 10, 2023

ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தில் பலியானோரின் எண்ணிக்கை 4,000க்கும் அதிகமானோர் ஆக உயர்ந்துள்ளது.



ஆப்கானிஸ்தானின் ஹெராத் மாகாணத்தில் 6.3 ரிக்டர் அளவிலான சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனை தொடர்ந்து சில 5.9, 5.5 ரிக்டர் அளவிலான அடுத்தடுத்த நிலநடுக்கங்களும் அங்கு உணரப்பட்டது.

சில நிமிடங்கள் நீடித்த இந்த நிலநடுக்கத்தால் அங்கு பல கட்டிடங்கள் இடிந்து தரைமட்டமாகின. ஏராளமான அடுக்குமாடி குடியிருப்புகள் சீட்டுக்கட்டு போல சரிந்து விழுந்தன. இதனால் அந்த பகுதியே போர்க்களம் போல காட்சியளித்தது.

எனவே பொதுமக்கள் தங்களது வீடுகளில் இருந்து வெளியேறி வீதிகளில் தஞ்சமடைந்தனர். இதனையடுத்து மீட்பு படையினர் அங்கு விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். அவர்கள் கட்டிட இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்டு வைத்திய சாலைக்கு அனுப்பி வைத்தனர்.

இதனால் அங்குள்ள வைத்தியசாலைகள் நிரம்பி வழிகின்றன. முதலில் இந்த நிலநடுக்கத்தால் பலியானோரின் எண்ணிக்கை இரட்டை இலக்கத்தில் இருந்தது. ஆனால் நேரம் செல்ல செல்ல ராக்கெட் வேகத்தில் இதன் எண்ணிக்கை உயர்ந்தது.

தற்போதைய நிலவரப்படி பலி எண்ணிக்கை 4,000பேரைத் தாண்டியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. படுகாயம் அடைந்த 9 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தொடர்ந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை மேலும்



உயரும் என அஞ்சப்படுகிறது.

இந்தநிலையில் ஆப்கானிஸ்தானுக்கு உதவி செய்ய மனிதாபிமான அடிப்படையில் பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகள் முன்வந்துள்ளன. அதன் ஒருபகுதியாக சீன செஞ்சிலுவை சங்கம் சார்பில் சுமார் ரூ.1 கோடியே 66 லட்சம் நிவாரண உதவி அறிவிக்கப்பட்டுள்ளது.

# 1.1 மில்லியன் பாலஸ்தீனியர்களை 24 மணித்தியாலங்களுக்குள் வெளியேறுமாறு இஸ்ரேல் உத்தரவு!

அக்டோபர் 13, 2023

அனைத்து பாலஸ்தீனியர்களும் 24 மணி த்தியாலங்களுக்குதல் வடக்கு காசாவை காலி செய்ய வேண்டும் என்று இஸ்ரேல் கூறியது. இந்த அறிவிப்பால் சுமார் 1.1 மில்லியன் மக்கள் கட்டாய இடப்பெயர்வை நோக்கித் தள்ளப்பட்டனர்.

காஸாவில் 5 பகுதிகளில் சுமார் 2.3 மில்லியன் மக்கள் வசிக்கின்றனர். அவை வடக்கு காசா, காசா நகரம், டெய்ர் எல்-பாலா, கான் யூனிஸ் மற்றும் ரஃபா என்பவாகும்.

மத்திய தரைக்கடல் கடற்கரையில் இஸ்ரேல் மற்றும் எகிப்தின் எல்லையில், இந்த துண்டு சுமார் 365 சதுர கிலோ மீட்டர் (141 சதுர மைல்கள்) கொண்டதே காசாப் பகுதியாகும்.

41கிமீ (25 மைல்) நீளத்தில், தெற்கில் உள்ள ரஃபாவிலிருந்து வடக்கே பெய்ட் ஹனூனுக்கு பயணிப்பதற்கு ஒரு மணி நேரத்திற்கும் குறைவான நேரமே எடுக்கும்.

இதேநேரம் உங்கள் வீடுகளில் உறுதியாக இருங்கள் என்று ஹமாஸ் பாலஸ்தீனிய மக்களுக்கு அறிவித்துள்ளது. இஸ்ரேலின் வெளியேற்றும் எச்சரிக்கைக்குள் விழ வேண்டாம் என ஹமாஸ் அப்பகுதி மக்களை வலியுறுத்தியுள்ளது.

அத்துடன் அகதிகள் விவகாரங்களுக்கான ஹமாஸ் ஆணையம் வடக்கில் வசிப்பவர்களிடம் உங்கள் வீடுகளில் உறுதியாக இருங்கள் மற்றும் ஆக்கிரமிப்பினால் நடத்தப்படும் இந்த அருவருப்பான உளவியல் போரை எதிர்கொண்டு உறுதியாக நிற்க வேண்டும் என்று கூறியது.




இப்போரில் இதுவரை ஏற்பட்ட உயிரிழப்புகள்:

காசா

கொல்லப்பட்டவர்கள்: 1,537
காயமடைந்தவர்கள்: 6,612

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை

கொல்லப்பட்டவர்கள்: 31
காயமடைந்தவர்கள்: 600

இஸ்ரேல்

கொல்லப்பட்டவர்கள்: 1,300
காயமடைந்தவர்கள்: 3,200

# காசா மீது ஒரே இரவில் 750 தாக்குதல்கள் மக்கள் குடியிருப்புக்கள் தரைமட்டம்!

அக்டோபர் 13, 2023

இஸ்ரேலிய போர் விமானங்கள் காசா மீது ஒரே இரவில் 750 தாக்குதல்களை நடத்துகின்றனர். 12 உயரமான கட்டிடங்கள் உட்பட அடர்த்தியான மக்கள்தொகை கொண்ட காசா பகுதியில் ஒரே இரவில் அதன் போர் விமானங்கள் 750 "இராணுவ இலக்குகளை" தாக்கியதாக இஸ்ரேல் கூறுகிறது.

எண்ணற்ற கட்டிடங்கள் ஏவுகணைகளால் தாக்கப்பட்டு இடிந்து தரைமட்டமாக்கப்பட்டதாகக் கூறப்படும் தாக்குதல்களின் வீடியோ காட்சிகளை வெளியிட்ட இஸ்ரேலின் இராணுவம், தங்கள் விமானம் 12 உயரமான கட்டிடங்களையும் ஒரு நிமிடத்திற்குள் ஏவுகணைகளால் தாக்கியதாகக் கூறியது.

இதுவரை 1,500க்கும் அதிகமான மக்களைக் கொன்ற முற்றுகையிடப்பட்ட பாலஸ்தீனியப் பகுதியில் நடந்த ஒரு போரில் ஒரே இரவில் நடத்தப்பட்ட தாக்குதல்களால் ஏற்பட்ட இறப்புகள் அல்லது காயங்கள் அல்லது சாத்தியமான எண்ணிக்கையிலான பொதுமக்கள் உயிரிழப்புகள் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.





# இடம்பெயரும் மக்கள் மீது இஸ்ரேல் வான் தாக்குதல் 70 பேர் பலி!

அக்டோபர் 14, 2023

காசாவின் வடக்குப் பகுதியிலில் இருக்கும் 1.1 மில்லியன் பாலஸ்தீனியர்களை தெற்குப் பகுதிக்கு இடம்பெயருமாறு இஸ்ரேல் 24 நேர காலக்கெடுவை விதித்தது. அத்துடன் வான்வழியால் துண்டுப் பிரசுரங்களையும் வீசினர்.



இந்த அறிவித்தலைத் தொடர்ந்து பாலஸ்தீனியர்கள் உயிரைக் காப்பாற்றும் நோக்குடன் தெற்கு நோக்கிச் சென்ற மக்கள் மீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதலை நடத்தியது.

இடம்பெயர்ந்த மக்கள் மீது இஸ்ரேலிய வான்படையினர் நடத்திய தாக்குதலில் 70 பொதுமக்கள் அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் என ஹமாஸ் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

முற்றுகையிடப்பட்ட காசா பகுதியை ஆளும் பாலஸ்தீனக் குழுவான ஹமாஸின் ஊடக அலுவலகம், காசா நகரிலிருந்து புறப்படும் கார்கள் மீது நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்ட 70 பேரில் பெரும்பாலும் பெண்களும் குழந்தைகளும் அடங்குவர் எனத் தெரிவித்தனர்.

இந்த இடம்பெயர்வு ஐக்கிய நாடுகள் சபையால் நிராகரிக்கப்பட்டது. அத்துடன் இது சாத்தியமற்றது எனவும் கூறியது.



# MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC

www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker



**Cell : 416-624-4843**

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

RIGHT AT HOME REALTY INC.

MORTGAGE ALLIANCE

RIGHTBROKER=RIGHTMORTGAGE

Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4




RE/MAX HALLMARK FIRST GROUP REALTY

1154 Kingston Rd
Pickering, ON
L1V 1B4 CA

சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

**உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்**
**சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?**

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# “தமிழரின் தேச சுதந்திரத் தீயை அணையாது காப்பவர்கள் மாவீரர்கள் அவர்கள் எம் தாயக விடுதலையின் காவற் தெய்வங்கள்”

**–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –**



தலைமைச் செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.
நவம்பர் 27, 1996.

எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே…

இன்றைய நாள் வணக்கத்திற்குரிய நாள்.

ஆயிரம் ஆயிரம் சுதந்திரச் சுடர்களாக எமது விடுதலைக் கோவிலை அலங்கரித்து நிற்கும் எமது மாவீரர்களுக்கு இன்று நாம் வணக்கம் செலுத்தி கௌரவிக்கும் புனித நாள்.

இன்றைய நாள் சாவுக்கு கலங்கி அழும் சோக நாள் அல்ல. அன்றி, துயரத்தில் உறைந்து போகும் துக்க நாளுமல்ல. இன்று தியாகிகளின் திருநாள்.

ஒரு சத்திய இலட்சியத்திற்காக தம் இன்னுயிரை ஈகம் செய்த எம் இனிய வீரர்களை இன்று நாம் எமது நெஞ்சப் பசுமையில் நினைவு கூர்ந்து கௌரவிப்போம். அவர்களது வீரத்திற்கும், அதியுயர்ந்த தியாகத்திற்கும் தலைகுனிந்து வணக்கம் தெரிவிப்போம்.

ஈடிணையற்ற ஈகங்கள் மூலம் விடுதலைக்கு நாம் கொடுத்த விலை அளப்பற்றது. எமது மக்கள் இறைமை பெற்று பெருமையுடன் வாழவேண்டும் என்ற இலட்சியத்திற்காக எமது மாவீரர்கள் புரிந்த தியாகங்கள் உலக வரலாற்றில் ஒப்பற்றவை. எந்த ஒரு நாட்டிலும், எந்த ஒரு காலத்திலும், எந்த ஒரு போராட்டத்திலும் நிகழாத அற்புதமான அர்ப்பணிப்புக்கள் எமது மண்ணில், எமது காலத்தில் எமது போராட்டத்தில் நிகழ்திருக்கிறது. மானிட வரலாறு கண்டிராத ஒரு வீரகாவியம் எமது மண்ணில் படைக்கப்பட்டிருக்கிறது.

நீண்ட காலமாகக் தமிழரின் விடுதலை எழுச்சி, நெருப்பாக எரிந்து கொண்டிருக்கிறது. இந்த விடுதலைத் தீயை அணைத்துவிட எமது எதிரியோடு கைகோர்த்து நின்று எத்தனையோ சக்திகள், எத்தனையோ வகையில் அயராது முனைந்து வருகின்றன. இதனால், எமது சுதந்திர இயக்கம் காலத்திற்குக் காலம் பல சரிவுகளை, பல திருப்பங்களை, பல நெருக்கடிகளை சந்தித்து வருகிறது. எந்தவித உதவியுமின்றி, எந்தவித ஆதரவுமின்றி, எமது பலத்திற்கு மிஞ்சிய பாரிய சக்திகளுக்கு எதிராக நாம் தனித்து நின்று போராட நிற்பந்திக்கப்பட்டுள்ளோம். இதனால் விடுதலைக்கு நாம் கொடுக்கும் விலை மிகப் பெரிது. தமது உயிரையே விலையாகக் கொடுத்து தமிழரின் தேச சுதந்திரத் தீயை அணையாது காத்துவருபவர்கள் மாவீரர்கள். எனவே, மாவீரர்களை எமது தாயக விடுதலையின் காவற் தெய்வங்களாக நாம் கௌரவிக்க வேண்டும்.

நீண்டதாகத் தொடரும் எமது விடுதலைப் பயணத்தில் நாம் பல நெருப்பு ஆறுகளை நீந்திக் கடந்துள்ளோம். இந்த அக்கினிப் பிரவேசத்தில் நாம் அழிந்து போகாமல் நிலைத்து நிற்பதற்கு, எமது இலட்சிய உறுதிதான் காரணம். அடக்குமுறைக்கு ஆளாகி, இன அழிவைச் சந்தித்து நிற்கும் எமது மக்களுக்கு தன்னாட்சி கோரி நாம் வரித்துக்கொண்ட இலட்சியம் நேரானது, சரியானது, நியாயமானது. அன்றிலிருந்து இன்றுவரை நாம் எமது கொள்கையை உறுதியாகப் பற்றி நிற்கின்றோம். எமது இலட்சியமே எமது மலையான பலம். அந்த மலையான பலத்தில் நாம் நிலையாக நிற்பதால்தான் எமது இயக்கத்திற்கு ஒரு தனித்துவமும், முக்கியத்துவமும், சிறப்பான சரித்திரமும் உண்டு. தமிழீழத்தில் அதிர்ந்த அரசியற் பூகம்பங்களுக்கு தாக்குப் பிடிக்க முடியாமல் ஏனைய தமிழ்க் குழுக்களின் இலட்சியக் கோட்டைகள் தகர்ந்து போயின. எமது உறுதியை மட்டும் எந்தவொரு சக்தியாலும் உடைத்துவிட முடியவில்லை.

தமிழீழ மண்ணை முழுமையாக விழுங்கிய இந்தியப் படையெடுப்பு, அன்று எமது உறுதிக்கு பெரும் சவாலாக எழுந்தது. அன்றைய அந்த வரலாற்றுச் சூழலில், ஒரு உலக வல்லரசின் இராணுவ வல்லாதிக்கம் எம்மைப் பலமாக நெருக்கிய பொழுதும் நாம் எமது இலட்சியத்தை தளரவிடாது நெஞ்சுறுதியுடன் போராடினோம். அந்த ஆபத்தான கட்டத்தில் உறுதிதான் எமது இறுதி ஆயுதமாக இருந்தது. அந்த ஆன்மீக பலத்துடன் உலகின் மிகப் பெரிய ஆயுத பலத்தை எம்மால் எதிர்கொள்ள முடிந்தது.

இன்று நாம் ஒரு புதிய சவாலை சந்தித்து நிற்கிறோம். ஒரு புதிய ஆக்கிரமிப்புப் போரை எதிர் கொண்டு நிற்கிறோம்.

எமது வரலாற்றுப் பகைச் சக்தியான சிங்கள - பௌத்த பேரினவாதம் “சந்திரிகா அரசு” என்ற நிறுவன வடிவம் கொண்டு, தமிழினத்திற்கு எதிராக இன அழிப்புப் போர் ஒன்றை நடத்தி வருகிறது. சிங்களத்தின் முழுப் படை பலத்தையும் ஒன்று திரட்டி வடபுலத்தில் தமிழரின் வரலாற்று நிலங்களை ஆக்கிரமித்து நிற்கிறது.

பெரிய தொகையில் படையணிகளையும், பெரிய அளவில் வெடிப் பொருள் சக்தியையும் பயன்படுத்தி, புலிகளின் படை வலுவை அழிப்பதுதான் இந்த ஆக்கிரமிப்புப் போரின் முக்கிய இராணுவ மூலோபாயமாக அமைந்தது. ஆயினும் இந்தக் குறிக்கோளை அடைவதில் சிங்கள

இராணுவம் படுதோல்வியையே சந்தித்திருக்கிறது.

நான்கு புறமும் கடல் சூழ்ந்த குடாநாட்டுப் பகுதியில், புவியியல் ரீதியாக எமக்குப் பாதகமான நிலப் பரப்பில், பெரும் மரபுவழிச் சமர்களை தொடுத்து எமது படைவலுவை அழிக்க இராணுவம் திட்டமிட்டது. இந்தச் சூழ்ச்சிகர திட்டத்தை நாம் நன்கறிவோம். ஆகவே, எதிரியின் இராணுவப் பொறிக்குள் சிக்கிவிடாது, மிகவும் சாதுரியமாகப் போரிட்டு, தந்திரோபாயமான படை நகர்வுகளை மேற்கொண்டு, எமது படை வலுவைச் சீர்குலையாது நாம் பாதுகாத்தோம். இதன் காரணமாக, யாழ்ப்பாணச் சமரில் இராணுவத்தின் முக்கிய மூலோபாயம். கைகூடவில்லை என உறுதியாகச் சொல்லலாம்.

கொரில்லாப் போர்முறையைக் கையாளும் ஒரு விடுதலை இயக்கம், பெரும் உயிர் சேதத்தை தவிர்க்கும் நோக்கில், படையணிகளை பின் நகர்த்துவதும் சில நிலப் பகுதிகளிற் கட்டுப்பாட்டை இழப்பதும் தோல்வியைக் குறிக்காது இதனை ஒரு தற்காலிகப் பின்னடைவாகவே கொள்ளலாம். படை வலுவையும், போராட்ட உறுதியையும் தக்கவைத்துக் கொண்டால் எமக்கு சாதகமான புறநிலைச் சூழலில், நாம் தெரிவு செய்யும் நேரத்தில், தாக்குதலை நடத்தி எதிரியின் படை வலுவை எம்மால் அழிக்க முடியும். இதனால் இழந்த பிரதேசங்களையும் நாம் மீட்டெடுப்பது சாத்தியமாகும். முல்லைத்தீவில் நாம் ஈட்டிய மகத்தான இராணுவச் சாதனை இதற்கு ஒரு சிறப்பான உதாரணமாகும். இத்தாக்குதலில் சிங்களப் படைகளுக்கு பாரிய உயிர்ச் சேதத்தை விளைவித்து, எதிரியின் படைவலுவைப் பலவீனப் படுத்தியதோடு இழந்த பிரதேசங்களையும் நாம் மீட்டெடுக்க முடிந்தது. எமது படை வலுவை நாம் தக்கவைத்துக் கொண்டதால்தான் இந்த வெற்றியை எம்மால் ஈட்டமுடிந்தது. அத்தோடு எமது படை வலுவை நாம் மேலும் பலப்படுத்தவும் முடிந்தது.

“சமாதானத்திற்கான போர்” என்றும், “தமிழரை விடுதலை செய்யும் படையெடுப்பு” என்றும், பரப்புரை செய்து ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆக்கிரமிப்புப் போர், தமிழரின் அமைதியைக் குலைத்து, தமிழரை அகதிகளாக்கி, தமிழரை அடிமைகளாக்கி, தமிழரின் சமூக பொருளாதார வாழ்வைச் சீரழித்து, தமிழருக்கு என்றுமில்லாத பெரும் அவலத்தைக் கொடுத்திருக்கிறது. சமாதானத் தத்துவம் பேசி உலகத்தை ஏமாற்றிய போதும், இது தமிழருக்கு எதிரான போர் என்பதை சந்திரிகா அரசு நடைமுறையில் காட்டியுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாடு ஒரு திறந்தவெளிச் சிறைச்சாலையாக மாற்றப்பட்டிருக்கிறது. பாதுகாப்பு வலயங்களாக துண்டு போடப்பட்டு, மண்மேட்டு அரண்களும், முட்கம்பி வேலிகளும், மூலைக்கு மூலை காவற் சாவடிகளுமாக காட்சிதரும் தமிழரின் இப் புகழ் மிக்க வரலாற்று மண்ணில் ஒரு இராணுவப் பயங்கரவாத ஆட்சி நடைபெறுகிறது. கைதுகளும், சிறைவைப்பும், சித்திரவதைகளும், பாலியல் வல்லுறவுகளும், கொலைகளும், காணாமல் போதலும், பின் மனித புதைகுழிகளுக்குள் கண்டெடுக்கப்படுவதுமாக நிகழ்ந்துவரும் கோரமான சம்பவங்கள் ஒரு உண்மையைப் புலப்படுத்தி காட்டுகிறது. அதாவது, இராணுவ ஆட்சி நடைபெறும் தமிழ்ப் பகுதிகளில் மிக மோசமான ஒரு இன அழிப்புக் கொள்கை மறைமுகமாக செயற்படுத்தப்படுகிறது என்பதையே இது காட்டுகிறது.

ஆக்கிரமித்த பகுதிகளில் நிகழும் அட்டூழியங்களும், மற்றும் பரவலாக தென்னிலங்கையில் நடைபெறும் தமிழர் விரோத நடவடிக்கைகளும் சந்திரிகா அரசின் உண்மையான இனவாத முகத்தை அம்பலப்படுத்தி காட்டுகிறது. முந்திய இனவாத அரசுகளை விட சந்திரிகாவின் ஆட்சிபீடம் தமிழரின் தேசிய ஆன்மாவை ஆழமாக புண்படுத்தியிருக்கிறது என்றே சொல்ல வேண்டும்.

சந்திரிகா அரசு தமிழருக்கு நீதி வழங்கப் போவதில்லை என்பதையும், தமிழரின் தேசிய பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணப்போவதில்லை என்பதையும் நாம் ஆரம்பத்தில் இருந்தே உணர்ந்து கொண்டோம். சமாதானப் பேச்சுக்களின் போது சந்திரிகா அரசு கடைப்பிடித்த கடுமையான போக்கும், விட்டுக்கொடாத மனப்பாங்கும் எமக்குப் பெரும் ஏமாற்றத்தை தந்தது. தமிழரின் சாதாரண வாழ்க்கைத் தேவைகளை பூர்த்தி செய்யும் அற்ப சலுகைகளை மறுத்து, இராணுவத்தின் மேலாதிக்க நலன்களைப் பேண முனைந்ததால் அன்றைய பேச்சுக்கள் அர்த்தமற்றதாக முடிவுற்றது. இராணுவப் பலத்திலும் இராணுவ அணுகுமுறையிலும், இராணுவத் தீர்விலும் நம்பிக்கை கொண்டிருந்ததால் பேச்சுக்களுக்கு முக்கியத்துவம் கொடாது. பேச்சுக்கள் முறிவடைவதற்கான புற நிலைகளையும் சந்திரிகா அரசு உருவாக்கியது. தமிழர் தாயகத்தில் இராணுவ மேலாதிக்கத்தை நிலைநாட்டி ஆயுத அடக்குமுறையின் கீழ் தமிழர்களை ஆட்சி புரிய வேண்டும் என்பதே. அன்றும் இன்றும் இந்த அரசின் ஆழமான அபிலாசையாக இருந்து வருகிறது.

இராணுவவாதமும், இனவாதமும் மேலோங்கி நிற்கும் இந்த அணுகு முறையானது இனப் பிரச்சினையை என்றும் இல்லாதவாறு சிக்கலாக்கியுள்ளது. சமாதானத்தின் கதவுகளை இறுக மூடியுள்ளது. போரை விரிவுபடுத்தி தீவிரமாக்கியுள்ளது. சிங்களத்தின் பொருண்மியத்தை சீரழித்துள்ளது. ஒட்டுமொத்தத்தில் சந்திரிகாவின் அரசாங்கம் இன்று மீள முடியாத ஒரு நெருக்கடிக்குள் சிக்குப்பட்டு நிற்கிறது.

சந்திரிகாவின் “சமாதானத்திற்கான போர்” தமிழரின் தேசிய வாழ்வை சீரழித்து இருப்துடன், முழு இலங்கையையுமே பேரழிவிற்குள் தள்ளிவருகிறது என்பதை சர்வதேச சமூகம் இன்று உணரத் தொடங்கியுள்ளது. விரிவடைந்து செல்லும் போருக்கும், இராணுவ கடும் போக்கிற்கும் எதிராக உலகத்தில் இருந்து எழும் அழுத்தத்தை திசைதிருப்பும் நோக்கில் சந்திரிகா அரசு சமாதான சமிக்ஞைகளை விடத் தொடங்கியுள்ளது.

மூன்றாம் தரப்பு மத்தியத்துவம் என்றும் புலிகளுடன் பேசத்தயார் என்றும் சமீபத்தில் அறிக்கைகளை விட்டுவரும் சந்திரிகா, புலிகள் இயக்கம் ஆயுதங்களை சரணடைவு செய்ய வேண்டும் என்ற கேலிக்கூத்தான நிபந்தனையையும் முன்வைக்கிறார். எந்த ஒரு தன்மானமுள்ள விடுதலை இயக்கமும் இத்தகைய அவமதிப் பூட்டும் நிபந்தனையை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்தை “பயங்கரவாதம்” என்றும், அந்தப் போராட்டத்தை தலைமை தாங்கி முன்னெடுக்கும் எமது விடுதலை இயக்கத்தை “பயங்கரவாத அமைப்பு” என்றும் சர்வதேச உலகில் தீவிர பரப்புரை செய்து, உள்நாட்டிலும், வெளியுலகிலும் எமது இயக்கத்திற்கு தடைவிதிக்க இந்த அரசு பகீரத முயற்சிகளைச் செய்து வருகிறது. அதேவேளை ஒரு ஆண்டிற்குள் புலிகளை ஒழித்துவிடுவோம் என அறைகூவல்களை விடுத்து போரைத் தொடர்வதற்கு படைகளை தயார் நிலைப்படுத்தியும் வருகிறது. இந்தச் சூழலில், சந்திரிகா சமாதானம் பற்றி பேசுவது எமக்கு சந்தேகத்தை எழுப்புகிறது.

நாம் சமாதானத்தின் விரோதிகள் அல்லர். அன்றி, சமாதான வழியில் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எதிரானவர்களும் அல்லர். நாம் வேண்டுவது உண்மையான சமாதானத்தையே. எமது மக்கள், எமது மண்ணில், நிம்மதியாக, சுதந்திரமாக, அந்நியத் தலையீடு இன்றி அமைதியாக வாழ்ந்து, தமது அரசியல் வாழ்வை தாமே தீர்மானிக்கக் கூடிய உண்மையான, கௌரவமான, நிரந்தரமான சமாதானத்தையே நாம் விரும்புகிறோம். இந்த சமாதான வாழ்வை தமிழருக்கு வழங்க சிங்கள – பௌத்த பேரினவாத சக்திகள் இணங்குமா என்பது சந்தேகத்திற்கு உரியது.

இனவிரோதமும், ஆதிக்க வெறியும், இராணுவத் தீர்வில் நம்பிக்கையும் கொண்ட எந்தவொரு சிங்கள அரசும் தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வு காணப்போவதில்லை. தமிழீழ மக்கள் வரலாற்று ரீதியாகக் கண்டுகொண்ட உண்மை இது. சிங்கள – பௌத்த பேரினவாதத்தின் பாதுகாவலனாகவும், அரசியல் பிரதிநிதியாகவும் விளங்கும் சந்திரிகா அரசு, இனப் பிரச்சினைக்கு தீர்வுகண்டு தமிழ் மக்களுக்கு உண்மையான சமாதான வாழ்வை உருவாக்கி கொடுக்கும் என நாம் நம்பவில்லை. இந்த நம்பிக்கையீனத்தின் அடிப்படையில்தான் நாம் மூன்றாம் தரப்பு நடுநிலையை நாடினோம். எதிர்காலத்தில் சமாதானப் பேச்சுக்கள் சாத்தியமாவதானால், அது சர்வதேச மத்தியத்துவத்துடன் நடைபெறவேண்டும் என ஒரு வருடத்திற்கு முன்னரே நாம் அறிவித்திருந்தோம். ஆனால், சந்திரிகா அரசு அப்பொழுது எமது யோசனையைக் கருத்தில் எடுக்கவில்லை. மாறாக வடபுலத்தில் ஆக்கிரமிப்புப் போரை விஸ்தரித்து, இன நெருக்கடியை மோசமாக்கி, சமாதானப் பேச்சுக்கான சூழ்நிலையைக் கெடுத்தது.

தமிழர் மண்ணை ஆக்கிரமித்து, அந்த ஆக்கிரமிப்பை இராணுவ மேலாதிக்க நிலையாகக் கருதி, அதனைத் தனக்கு அனுகூலமான அழுத்தமாகப் பாவித்து, பேச்சுக்களை நடத்த சிங்கள அரசு எண்ணலாம். ஆனால், எம்மைப் பொறுத்தவரை இவ்விதமான பேச்சுவார்த்தை சுதந்திரமானதாக, சமத்துவமானதாக அமையாது. ஏனெனில், இராணுவ பலத்தை துருப்புச் சீட்டாக வைத்து எமது மக்களின் உரிமைகளுக்காகப் பேரம்பேச முயலும் ஒரு அரசிடம் நாம் நீதியை எதிர்பார்க்க முடியாது. அதனால் தான், இராணுவ ஆக்கிரமிப்பின் அழுத்தம் நீங்கிய சுமூகமான இயல்பு நிலையில் பேச்சுக்கள் நடைபெறுவதை நாம் விரும்புகிறோம். படைகள் விலகுதல், நெருக்கடியைத் தணித்தல், இயல்பு நிலையைத் தோற்றுவித்தல் ஆகியன அரசியல் பேச்சுவார்த்தைகளுக்கு முன் நிகழ்வாக அமைதல் அவசியம் என்பதே எமது நிலைப்பாடாகும். இப்பிரச்சினைகள் பற்றிப் பேசி ஓர் உடன்பாட்டைக் காணவும் நாம் தயாராக இருக்கிறோம்.

எமது நியாயமான நிலைப்பாட்டை சந்திரிகா அரசு ஏற்றுக்கொள்ளும் என நாம் எதிர்பார்க்கவில்லை. சிங்கள – பௌத்த பேரினவாதமானது, காலம் காலமாக, இராணுவ மேலாண்மையில் நம்பிக்கைகொண்டு செயற்பட்டு வருகிறது. இராணுவ பலத்தின் நிழலின் கீழேயே சந்திரிகாவினது ஆட்சியும் நடக்கிறது. எனவே, இராணுவ பலத்தைக் கைவிட்டு, தார்மீக பலத்தின் அடிப்படையில், நீதியின் அடிப்படையில் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க சந்திரிகா அரசு முன்வருமா என்பது சந்தேகத்திற்குரிய விடயமே.

சிங்கள ஆட்சியாளரிடம் கைநீட்டி நின்று, நாம் எமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடியாது. நாமே எமது உரிமைகளைப் போராடி வென்றெடுக்க வேண்டும். போராடாது, இரத்தம் சிந்தாது, சாவையும் அழிவையும் சந்திக்காது, தியாகங்கள் புரியாது எந்தவொரு தேசமும் விடுதலை பெற்றுக்கொண்டதாக வரலாறு இல்லை.

ஆகவே, நாம் போராடுவோம். எமது இரத்தத்தை விலையாகக் கொடுக்கும் எமது இலட்சியத்திற்காகப் போராடுவோம். வெற்றிகளை ஊக்கமாக எடுத்து, பின்னடைவுகளைச் சவாலாக ஏற்று, நாம் தொடர்ந்து போராடுவோம். எவ்வித இன்னல்கள் வந்தாலும், எவ்விதத் துன்பங்கள் நேர்ந்தாலும் நம்பிக்கை இழக்காது நாம் தொடர்ந்து போராடுவோம். எமது மண்ணிலிருந்து சிங்களப் படைகளை விரட்டும் வரை, எமது தேசத்திற்கு விடுதலை கிட்டும்வரை, எமது மக்களுக்கு விடிவு ஏற்படும் வரை நாம் உறுதி தளராது துணிந்து போராடுவோம்.

ஆக்கிரமிப்பாளனின் அடக்குமுறைக்கு ஆளாகி, அவலக்குரல் எழுப்பி நிற்கும் எமது தேசத்திற்குரியவர்களின் துயரக் கண்ணீரைத் துடைப்போம் என உறுதியெடுத்து, மாவீரர்களுக்கு இன்று எமது வீரவணக்கத்தைச் செலுத்துவோம்.

“புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்”
வே. பிரபாகரன்
தலைவர்
தமிழீழ விடுதலைப் புலிகள்.

குறிப்பு: தமிழீழ தேசியத் தலைவரின் மாவீரர் நாள் உரை 1996 .












INVESTMENT PROPERTY CONDO (KENNEDY & HWY 401)

3 Bed Rooms + Den,
Central A/C + Heater,
Swimming Pool & Sauna
Jym & 2 Car Parking
Garage Indoor, Party Room
Dishwasher, Kitchen,
Washer Dryer,
One & Half Bath Room

Surrounding Area:
Kenndy Common, School,
Resort Park, Metro,
Foody World Super Market
LA . Fitness, Park & More!

Please Contact

647-294-2996

# உழவுக்குக்காத்திருக்கும் வயல்!

*- வியாசன்*



ஏனோ தெரியவில்லை
எம் தாயின் வடிவை
இன்னும் எழுத வேண்டும் போலிருந்தது.
கூறிய கூறல் மிகைக் கூறல் குற்றம்தான்.
தண்டனை எதுவாயினும் தயார்
எவரளிப்பார் சிறை.
தாய் மடியே!
தமிழீழப் பொற்சிலையே!
வாய் கொண்டு உரைக்கவொண்ணா வடிவே!
வசியப் பெண்ணே!
பிள்ளையாய் உன் அழகிற்கிறங்கி உலவிய போதுதான்.
என்னே அழகு நீயென அறிந்தேன்.
இரவும், பகலும் உன் தெருவிலும்
வயலிலும், வரம்பிலும் கடலிலும், காட்டிலுமாக
ஒன்றிக்கலந்திளகி உருகிய போதுதான்
நீ பேரழகுப் பெட்டகமெனப் புரிந்தேன்.
நிலவு நாளொன்றில் நின் கூந்தல் விரித்து
கைகளைப்பரத்தி வளைந்து படுத்திருந்தாய்.
அளகபாரம் சமுத்திரமாய் அலையெற்றிக் கிடந்தது.
உன்தலையை யாழ்ப்பாணத்தில் தடவி
கையொன்றை முல்லைத்தீவிலும்
மற்றொன்றை மன்னாரிலும் தொட்டேன்.
வயிற்றை வவுனியாவிற் பார்த்து
இடுப்பைத் திருமலையிற் கண்டேன்.
மூதூர் கதிரவெளியென தாயேயுன் கால்கள் நீண்டிருந்தன.
மட்டக்களப்பில் முழங்காலைத் தொட்டு
உகந்தையில் உன் பாதங்களைச் சேவீத்தேன்.
கண்களில் நீர் பனித்தது தாயே
புண்ணியம் செய்தான் உன்பிள்ளை.
ஓவிய அழகு!
உன் அடிமுடி அறிந்ததில் எத்தனை ஆனந்தம்.
உண்ணாமுலை அம்மனல்ல நீ
எத்தனை பேருக்கு மார்பமிர்தம் வழங்கிய தாயாள்.
அவர்களிலொருவன் நானென்பதில்
சிரசில் அடிக்கிறது செருக்கு.
இத்தனை எழிலுற்றிருக்கும் உன்னை எப்படி இழப்பது?
இவளுன் தாயில்லை என்கிறான் ஒருவான்,
இடுப்போடு வெட்டி இரண்டாக்குவேன் என்கிறாள்
இன்னொருத்தி,
வந்தேறுகுடி என்கிறான் மற்றொருவன்.
எல்லோருக்கும் எம்தாயைச் சிதைப்பதில் அவசரம்.
முலையருந்திய பிள்ளைக்கு மட்டும்
பேச்சடங்கி பெருந்தூக்கம்.
இங்கு பிறப்பெடுத்த எல்லோருல் வாருங்கடா.
எத்தனை அழகு விதைத்து இலங்கிறாள் எம்தாய்.
விழிகளால் ஒருமுறை தரிசித்தால் போதும்
பேதங்கள் அழியும்
பிரதேச வாதங்கள் தொலையும்.
யாழ்ப்பாணப் பனங்கொட்டைசூப்பி,
வன்னிக்காட்டான்,
மட்டக்களப்பு சூனியக்காரன்,
மன்னார்ச் சூடைமீன்சப்பி,
திருமலைச் செம்படைத்தலையன் எவனடா
இந்த அகராதி எழுதியவன்?
கொண்டுவா; அவனைக் கொன்றாலும் தகும்.
சாதியென்றாய்,
சாத்திரமென்றாய்,
குலப்பெருமையுடன் கூடிய கோத்திரமென்றாய்
இன்னும் இடிந்துவிழவில்லையே இந்தக் கனவுக் கோட்டை.
தாயின் எழில்குலைத்தோர் முகத்திலறைந்து,
எம் வாழ்வை ப் பறித்தோரின் உயிரைப் பறித்து,
எமக்கென்றோர் வரலாறெழுதி வைத்துவிட்டு
துயிலுமில்லத்தில் தூங்குகின்றனரே பிள்ளைகள்.
அவர்கள் அருகருகாய் நின்றுதானே போராடினர்.
ஒருவர் மடியில் ஒருவர் உறங்கியபடி,
ஒருவர் உணவை ஒருவருக்குத் தீத்தியபடி
தேமற்றல்லவா அந்தப்புனிதர் போர்க்களம் நின்றனர்.

இன்றும் அருகருகாய்த்தானே
அவர்களை வளர்த்தியுள்ளோம்
எந்த ஏற்றத்தாழ்வும் எழவில்லையே.
வ்நதபகையைச் சங்கரித்துவிட்டு வெளியே வந்தால்
எந்த அசைவுமற்றிருக்கின்றன எல்லாமும்.
கட்டிப்போட்ட கல்லாய்,
பதனப்பெட்டி நீராய்
உறைந்து கிடக்கின்றன ஊத்தைகள்.
புலம்பெயர்ந்த நாடுகளிற்கூட
சாதியின் நாமம்சொல்லிக் கோயில்கள்
பிரதேசப் பெயர்களில் சங்கங்கள்.
என்ன இழிவடா எம் இனத்துக்கு?
முளாசியெரிந்த இந்த ரெுப்பிடையும்
மீதமாய் உள்ளதா குப்பை?
வெளியே சிரித்தபடி பொய்பூசித்திரிகிறதா
போரிடும் பூமி?
முதுகைக் கழுவாமல் முகத்துக்கேன் ஒப்பனை?
விடியும் வைகறையில்
அழகு கொண்டிருக்கவேண்டாமா எம்வாசல்?
வாரடித்தோடிய வெள்ளத்தில்
அசிங்கங்கள் அள்ளுப்பட்டிருக்க வேண்டுமே
இல்லையெனில் எத்தனை சோகம்.

இன்று நடப்பதென்ன பாதிக்கிணறு கடந்து
நடுக்கிணற்றில் நின்று அல்லாடுகின்றோம்.
அந்தரத்திலல்லவா இன்றைய நாட்கள்?
அவதானம் வேண்டும்.
எல்லோரும் ஒன்றாகி நின்றாகவேண்டும்.
மெல்ல நகரவேண்டிய முள்வழி.
பழியை எம்தலையில் இறக்கி
உலகையேமாற்ற நடக்குதோர் நாடகம்.
ஒப்பனை வெகுநேர்த்தி.
கதை வசனம் கச்சிதம்.
நாடகத்தில் மெய்மறந்தால் நமக்குத்தான் அழிவு.
அறுவடை முடித்த வயற்காடு
மறுவுழவுக்காகக் கிடக்கிறது.
மழைக்காகக் காத்திருக்கிறான் வயற்காரன்.
உழவும் விதைப்பும் அறுவடைக்கானது.
விதைநெல்லு பழுதாகாது காத்தல்
நமக்கான கடன்.
காத்திருப்பதில் களங்கமில்லை
அறுவடை நமக்காகும் என்றால்.

– விடுதலைப்புலிகள் – புரட்டாசி, ஐப்பசி 2003




# தமிழீழக் கடற்புலிகள்!






**தமிழீழக் கடல்**

தமிழீழத்தைப் பொறுத்தளவில், இது மிக மிகப் பிரதானமானது.

எங்கள் தாய்த்திருநாட்டில் நிலத்திற்கு நிகராகக் கடலும் இணைந்திருக்கிறது.

தமிழீழ நிலப்பகுதிய எங்கள் கடல் மூன்று பக்கங்களில் அரவணைத்தபடி உள்ளது.

பலர் நினைப்பதுபோல எமது பாரம்பரிய வாழிடமான நிலப்பகுதி , மட்டும்தான் , தமிழீழத் தாயகம் அல்ல.

பெருமையும், பழமையும், செழுமையும் கொண்ட இந்தக் கடலும் நிலமும் இணைந்தது தான், எமது தமிழீழத் தாயகம் ஆகும்.

**இது எங்கள் கடல்**

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக எமது முன்னோர்களின் சமூக , பொருளாதார வாழ்வோடு இது பின்னிப்பிணைந்து நிற்கிறது.

எமது முன்னோர்களின் கட்டுபரங்களும், வாணிபக் கப்பல்களும், போர்ப் படகுகளும் இக்கடலன்னையின் மடியில் தான் தவழ்ந்து திரிந்தன.

தமிழீழக் கடல், பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும், வெளி உலகவர்த்தகத் தொடர்புகளுக்காகவும் முக்கியம் பெறுகின்றது.

ஆனால் அதைவிட முக்கியமாக, தமிழீழத்தின் பாதுகாப்புக்கு இக்கடல் மிகமிகப் பிரதானமானது.

இக்கடல் எமது கட்டுப்பாட்டில் உள்ளவரை மட்டும்தான் அதனால் வரும் பொருளாதார நன்மைகளையும், அரசியல் நன்மைகளையும் எமது மக்கள் அனுபவிக்கமுடியும்.

ஆகவே எமது கடல், எமது தேசத்தின் பாதுகாப்போடு பின்னிப் பிணைந்து கிடக்கின்றது.

ஆசியாவிலேயே மிகச் சிறந்த இயற்கைத் துறைமுகமான திருகோணமலையைக் கொண்டிருப்பது, எமது கடலின் சிறப்பியல்புகளில் ஒன்றாகும். இது தவிர, கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பல துறைமுகங்களையும், பொருளாதார மையங்களையும் எமது கடல் கொண்டிருக்கிறது.

தமிழீழத் தாயக மீட்பிற்கான ஆயுதப் போராட்டம் கருக்கொண்டு ஆரம்பமாகிய முனைய காலத்திலும் சரி, அது முனைப்புற்று வளர்ந்து செல்லப்படும் நிகழ்காலத்திலும் சரி, விடுதலைக்குப் பின் நிருவப்படப்போகின்ர தனியரசு ஆட்சியில் நாட்டின் பாதுகாப்பு, பொருளாதாரம், அரசியல் ஆகிய விடயங்களைத் தீர்மானிக்கும் எதிர்காலத்திலும் சரி, எமது கடல் மிகப் பிரதான பங்கு வகித்தது - வகிக்கப்போகின்றது.

இப்படியாகப் பல பரிமாணங்களில் முக்கியத்துவம் பெற்ற பல சிறப்பியல்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ள. “எங்கள் கடலை, நாம் சிறீலங்காவின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்க வேண்டுமெனில் , தமிழீழக் கடற்பரப்பில் நாம் எதிரியை விடப் பலம் பொருந்தியவர்களாக மிளிர வேண்டும்.” இந்த யதார்த்த உண்மையை அன்றே புரிந்துகொண்ட எமது தேசியத் தலைவர் மேதகு வே . பிரபாகரன் அவர்கள், பல வருடங்களுக்கு முன்னரையே அதற்க்கு வேண்டிய திட்டங்களைத் தயாரித்து, படிப்படியாக அதற்க்கு நடைமுறை உருவமும் கொடுத்துள்ளார்.

சிங்களப் பேரினவாத அரசிடம் இருந்து எமது தாயகத்தை மீட்டேடுப்பதற்க்கான போராட்டம் என்னும் போது, தமிழீழத் தாயகத்தின் தரை எல்லைகளையும் - கடல் எல்லைகளையும் விடுவிப்பது என்பதையே , அது குறித்து நிற்கிறது.

எனவே, தமிழீழத் தாயகத்தின் ஒரு பகுதியாகிய தரையில் பிரமானடமான வளர்ச்சியுடன் இருக்கும் எமது தரைப்படையைப் போன்று தமிழீழம் தனக்கென்று ஒரு கடற்படையையும் கட்டி எழுப்ப வேண்டியது அவசியம்.

எமது மக்களின் சுதந்திர எழுட்சியை உற்று நோக்குவோமானால், அது புரட்சிகர ஆயுதப் போராட்டமாகப் பரிணமித்தபின், எந்த அளவுக்குக் கடலோடு பின்னிப் பிணைந்து இருக்கின்றது, என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

தமிழீழம், தரைத் தொடரில் தனது எல்லையாக சிறீலங்காவை மட்டுமே கொண்டிருக்கிறது. ஏனைய திசைகளில் கடலிலேயே எமது எல்லைகள் இருக்கின்றன. எமது ஆயுதப் போராட்டம் கடந்து வந்த ஒவ்வொரு வளர்ச்சிக்கட்டத்திலும், தமிழீழக் கடல் மிகப் பெரிய பாத்திரத்தை வகித்துள்ளது.

இச்சூழ்நிலையிலேயே 1984 ஆம் ஆண்டு, தேசியத்தலைவர் மேதகு வே . பிரபாகரன் அவர்கள், விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கடற்புலிகள் படைப் பிரிவுக்கு அதன் வரலாற்றுரீதியான பிறப்பைக் கொடுத்து, ஆரம்பத்தில் அதற்க்கு “கடற்புலிகள்” எனப் பெயரும் சூட்டினார்.

ஆரம்பத்தில் கடற்புலி அணியினருக்கு கடல் சம்பந்தமான அறிவு ஊட்டப்பட்டதுடன், கடற் சண்டைகளுக்குத் தேவையான பயிற்சிகளும் அளிக்கப்பட்டன.

ஆனால் கடற்புலி அணியினர் எதிரியிடம் வலிந்து சென்று கடற் சண்டைகளில் ஈடுபடுவதைத் தவித்தார்கள்.

விடுதலைப் போராட்டத்தில் அந்தந்தக் காலங்களோடு ஒட்டிய தேவைகளை நிறைவு செய்யும் பல பணிகளை, அவர்கள் ஆற்றவேண்டியிருந்தது. கடற்பயணங்கள் போவதற்கும் அவற்



நிறகுப் பாதுகாப்பு அளிப்பதற்குமான வேலைகளையே ஆரம்பத்தில் கடற்புலி அணியினர் செய்து வந்தனர்.

எனினும் சிறீலங்கா கடற்படையினரின் போர்ப் படகுகள் மீது, ஆங்காங்கே ஒருசில கடற்கண்ணித் தாக்குதல்களையும் நிகழ்த்தியுள்ளனர்.

1984 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டதிலிருந்து 6 வருடங்களாகப் பெரிய அளவிலான கடற் சண்டைகள் எதிலுமே ஈடுபடாதிருந்த கடற்புலி அணியினர், 1990 ஆம் ஆண்டு திரும்பவும் சிறீலங்கா இராணுவத்துடன் போர் ஆரம்பமாகிய போது, கடற் சண்டைகளில் ஈடுபடத் தொடங்கினர்.

இக் கடற்போரிலும் கரும்புலித் தாக்குதல் வடிவம் புகுத்தப்பட்டு, கடற்போர் ஓர் புதிய பரிமாணத்திற்குள் சென்றது.



இந்த வகையில் சிறீலங்காக் கடற்படை மீதான தனது முதலாவது பாரிய தாக்குதலை, 10.07.1990 அன்று வல்வைக்கடலில் வைத்துக் கடற் கரும்புலிகள் மேற்கொண்டனர்.

வெடி மருந்து நிரப்பிய படகொன்றுடன் சென்ற கடற்கரும்புலிகளான மேஜர் காந்தரூபன், கப்டன் கொலின்ஸ், கப்டன் வினோத் ஆகியோர் சிறீலங்கா கடற்படியின் ஒரு போர்க் கப்பலைச் சேதமாக்கி, இந்த வீரசாதனையைப் படைத்தார்கள்.

இதே போன்று 04.05.1991 அன்றும் வாழ்வைக் கடலில் வைத்துக் கட்டளைக் கப்பலொன்று கடற்கரும்புலிகளால் தகர்க்கப்பட்டது. இதுவும் ஒரு கரும்புலி நடவடிக்கை என்பது குறிப்பிடத்தக்கது. இதில் கப்டன் சிதம்பரம், கப்டன் ஜெயந்தன் ஆகியோர் வீரச்சாவை அனைத்துக்கொண்டனர்.

தமிழீழக் கடற்பரப்பில் சுதந்திரமாக உலாவந்த சிங்களக் கடற்படையினருக்கு இவ்விரண்டு கரும்புலி நடவடிக்கைகளும் பீதியைக் கொடுத்திருந்தன. அத்துடன் தமிழீழக் கடற்பரப்பில் சிங்களக் கடற்படை வைத்திருந்த கடல் ஏகபோகம் உடைந்து சிதறியது.

தமிழ் மக்களாகிய நாம் ஒரு யதார்த்தத்தை விளங்கிக்கொள்ள வேண்டும். தமிழீழ விடுதலைக்கான போராட்டம் நிலங்களை விடுவிக்கும் அளவிற்கு முன்னேறியபோது, சிறீலங்கா அரசானது கடல் மூலமே தனது படைபலத்தைப் பிரயோகித்து, எமது முன்னேற்றத்தைத் தடுக்க முயன்று வருவதை, நாம் கண்டு வருகின்றோம். அதாவது, தரையுத்தத்தை வெல்ல எதிரி கடலையே பயன்படுத்தி வருகின்றான்.

1987 ஆம் ஆண்டு வடமராட்சியைக் கைப்பற்ற "ஒப்பரேஷன் லிபரேஷன்" என்ற இராணுவ நடவடிக்கையைச் சிங்களப் படைகள் நடாத்திய போதும், 1990 ஆம் ஆண்டு முல்லைத்தீவு முகாமை நாம் வெற்றிகொள்ள முயன்ற சமயத்திலும், 1991 ஆம் ஆண்டு சிலாவத்துறை முகாமை நாம் கைப்பற்ற முயன்ற சமயத்திலும், 1991 ஆம் ஆண்டு ஆனையிறவுச் சமரின்போது எம்மிடம் விழ்ச்சியடையும் நிலையில் இருந்த ஆனையிறவுத் தளத்தைப் பாதுகாக்கும் போதும். சிறீலங்கா அரசு கடல்வழி மூலமே தனது பலத்தைப் பிரயோகித்து எமது முயற்சிகளுக்குக் குறுக்கே நின்றது.

இதற்குப் பிரதான காரணம் எமது கடலில் எதிரி வைத்திருந்த கடல் ஏகபோகம்தான்.

தேசியத்தலைவர் மேதகு வே . பிரபாகரன் அவர்கள் அடிக்கடி கூறுவார் :

"புவியியல் ரீதியாகத் தமிழீழத்தின் பாதுகாப்பு கடலோடு ஒன்றிப் போயுள்ளது. எனவே, கடற்பரப்பிலும் நாம் பலம் பொருந்தியவர்களாகி, எமது கடலில் எதிரி வைத்திருக்கும் கடல் ஆதிக்கத்தைத் தகர்த்து , எமது கடலில் நாம் பலம் பெறும் போதுதான், விடுவிக்கப்படும் நிலப்பகுதியை நிரந்தரமாக நிலைநிறுத்திக் கொள்வதுடன், தமிழீழத்தின் நிலப்பகுதிகளில் இருக்கும் எதிரிப் படியையும் விரட்டியடிக்க முடியும்."

ஒரு கடற்படையை நாம் கட்டியெழுப்ப வேண்டுமாயின், ஏராளமான பொருட் செலவைச் சந்திக்க நாம் தயாராக இருக்க வேண்டும். தரைச் சண்டைகளுக்குப் பயன்படுத்தப்படும் ஆயுதங்கள், உபகரணங்களின் பெறுமதியைவிடக் கடற் சண்டைகளுக்குப் பயன்படுத்தப்படும் ஆயுத உபகரணங்களின் பெறுமதி மிக மிக அதிகமாகும். எனவே ஒரு கடற்படையைக் கட்டி வளர்க்கப் பொருளாதார பலமும் தேவை.

தமிழீழத்தைப் பொருத்தவரை வெளியுலகத் தொடர்புகளுக்கும், போராட்டத்திற்குத் தேவையான விநியோகங்களுக்கும், அதற்குரிய செயற்பாடுகளுக்கும் கடலே பிரதான வழியாக இருக்கிறது.

எமது தரை எல்லையை (சிறீலங்காவுடனானது ) இதற்க்கு நாம் பயன்படுத்த முடியாது.

எனவே போக்குவரத்து, விநியோகங்கள், உலகத் தொடர்புகள்




யாவுமே கடல்மூலமே உள்ளன.

எனவேதான் எதிரி வைத்திருக்கும் கடலாதிக்கத்தைத் தகர்த்து, கடற்பரப்பில் அவனது நடமாட்டத்தைத் தடுக்க வேண்டியது, மிகமிக அத்தியாவசியமானது. அப்போதுதான் எமது தாயகப் போர் வெற்றிபெற முடியும்.

1984 ஆம் ஆண்டிலிருந்து கடற்புலிகள் என்ற பெயரால் அழைக்கப்பட்ட எமது கடல் அணி, 1991 ஆம் ஆண்டு பிற்பகுதியில், "விடுதலைப் புலிகளின் கடற்புலிகள்" என்ற புதிய பெயருடன் பெரியளவில் விரிவாக்கம் செய்யப்பட்டது.

இக்காலத்தில் இதன் சிறப்புத் தளபதியாக சூசை அவர்களும், தளபதியாக கங்கை அமரன் அவர்களும் நியமிக்கப் பட்டிருந்தனர்.

இக்காலத்திலேயே சிறீலங்காக் கடற்படையினர் மீது கடலில் வைத்தும், கடற்கரையோரங்களில் உள்ள காவலரண்கள் மீது, பல வெற்றிகரமான தாக்குதல்களை கடற்புலிகள் நிகழ்த்தினார்.

இத்தொடரான தாக்குதல்களின்போது, கனரக ஆயுதங்கள் பொருத்தப்பட்ட விசைப்படகுகள் சில, பல்வேறு முனைகளிலும் தாக்கி அழிக்கப்பட்டன.

ஆனையிறவுக் கடல்நீரேரியில் வைத்து 41 அடி நீளமான அதிவேகச் சண்டைப் படகொன்று, கடற்புலிகளால் மூழ்கடிக்கப்பட்டது. அத்துடன், நடுக்கடலில் வைத்துச் சிங்களக் கடற்படையுடன் வெற்றிகரமான படகுச் சண்டைகளிலும் கடற்புலிகள் ஈடுபட்டுள்ளனர்.

இக் கடற் தாக்குதல்களிலும் – கடற் சண்டைகளிலும் கணிசமான சிங்களக் கடற்படையினர் கொல்லப்பட்டதுடன், அவர்களிடம் இருந்த ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

கடற் கண்ணித் தாக்குதல்களை நிகழ்த்துவதில் இருந்து, நவீனமயப்படுத்தப்பட்ட சிங்களக் கடற்படைக்கெதிராக நேரடித் தாக்குதல்களையும், கடற் சண்டைகளையும் நடத்தக்கூடிய அளவிற்கு விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் அணியினர் பெற்ற வளர்ட்சி, சிறீலங்காவின் படைத்துறைத் தலைமையைத் திணறடித்துள்ளது. இதன் காரணமாக, கடற்படையின் பலத்தை நம்பிப் போராட்டத்தை நசுக்க அவர்கள் உருவாக்கிய நீண்டகால நோக்கிலான போர்முறைத் திட்டமும் கேள்விக் குறியாகி விட்டது.

அத்துடன் அண்மைக் காலத்திலிருந்து, தமிழீழக் கடற்பரப்பில் சிறீலங்காக் கடற்படையின் மேலாதிக்கம் படிப்படியாகச் சரிந்து கொண்டிருப்பதையும் காணலாம். அதனால் தமிழீழம் மீதான தனது ஆக்கிரமிப்புப் போர் மிகப் பெரிய பின்னடைவை எதிர்நோக்குவதையும், சிங்கள ஆளும் வர்க்கம் உணரத் தொடங்கியிருக்கும்.

தமிழீழக் கடலன்னை தியாகத்தாலும், சோகத்தாலும் உருவான ஒரு மகத்தான காவியத்தைத் தன்னுள் கொண்டிருக்கிறாள்.

எத்தனை இனிய தோழர்கள் . . .
எவ்வளவு திறமையான கடலோடிகள் . . . .
மீனுக்கு இணையான நீச்சல்காரர்கள் . .
தியாகத்தின் உயர் வடிவமான கடற் கரும்புலிகள் !

சாவு வரும் என்பதைத் தெரிந்தும் இவர்கள் பயணம் போனார்கள். ஒவ்வொரு முறையும் அவர்கள் பயணம் போன போது, கரையிலே நின்று கைவீசி அனுப்பிவைத்தோம். ஆனால் நாம் பார்த்துக்கொண்டிருந்த போதே, அந்தப் பரந்த கடலோடு கரைந்து போனவர்கள் பலர்.

தமிழீழக் கடலைன்னியின் மடியிலேயே இரவும் பகலும் கிடந்தது, பணியையும் குளிரையும், தம்முயிரையும் பாராது கடலோடிய தமிழீழத் தாயின் புதல்வர்களில் எத்தனையோ பேர், அந்த உப்பு நீருடனேயே சங்கமமானவர்கள்.

இது எங்கள் கடல் இது தமிழீழத் தாயகத்தின் இணைபிரியாத ஒரு அங்கம். அந்நியரின் ஆதிக்கத்திலிருந்து இது மீட்க்கப்பட வேண்டும். அதற்காகவே கடற்புலிகள் உயிரையும் மதியாது பயணம் பொய், உன்னதமான தியாகங்களைப் புரிந்து, வீர காவியங்களைப் படைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

ஒரு நாள், நிட்சயமாக எங்களின் கடற்படைக் கப்பல்கள் எங்களின் கடலில் பவனிவரும் அப்போது எங்களின் இளைய பரம்பரையினர் பயமின்றி, சுதந்திரமகா எங்களின் கடலில் உலாவருவார்கள்.

விடுதலைப்புலிகள் -புரட்டாதி – ஐப்பசி 1993



# "யாழ்ப்பாண இடப்பெயர்வு 30.10.1995" இன்றுடன் 28 வருடங்கள்!






பூவும் நடக்குது பிஞ்சும் நடக்குது
போகும் இடம் அறியாமல் – இங்கு
சாகும் வயதினில் வேரும் நடக்குதே
தங்கும் இடம் தெரியாமல்.

கூடு கலைந்திட்ட குருவிகள் – இடம்
மாறி நடக்கின்ற அருவிகள்
ஒற்றை வரப்பினில் ஓடும் இவர்களின்
ஊரில் புகுந்தது ஆர்மி – ஒரு
குற்றம் செய்யாதவர் முற்றத்திலாயிரம்
குண்டுகள் வீழுதே சாமி
சோகத்தின் கோடுகள் முகத்தில் – இங்கு
சொந்தங்கள் சேருமா நிலத்தில்?

கூடி மகிழ்ந்திட்ட கோயில் வயல்வெளி
யாவும் ,வர் ,ழந்தாரே – நேற்றுப்
பாடி மகிழ்ந்திட்ட ஊரைத் துறந்துமே
போகும் திசை யறியாரே

நெஞ்சில் வழிவதோ துயரம் –வழி
நீளும் திசையிவர் பயணம்
தாயின் மடியினில் ஆசையுடன் தலை
சாய்த்து உறங்கிய நேரம் – வந்த
பேய்கள் கொளுத்திய தீயில் எரிந்தவர்
போகும் வழியெல்லாம் ஈரம்
மாடுகள் கூடவா அகதி ? – தமிழ்
மண்ணிலே ஏனிந்தச் சகதி ?

பூவும் நடக்குது பிஞ்சும் நடக்குது
போகும் ,டம் அறியாமல் – இங்கு
சாகும் வயதினில் வேரும் நடக்குதே
தங்கும் இடம் தெரியாமல்

–புதுவை இரத்தினதுரை–




# 30.10.1995 அன்று மக்கள் அளித்த
# மாபெரும் பங்களிப்பு

28 வருடங்கள் கடந்த வரலாற்றில் மிகப் பெரும் அவலம் நிறைந்த வலிகாம இடப்பெயர்வு 30.10.1995

**28 வருடங்கள் கடந்த மிகப் பெரும் அவலம் நிறைந்த வலிகாம இடப்பெயர்வை குறித்தும் சிங்கள பேரினவாத அரசாங்கள் தமிழர்களுக்கு நிகழ்த்திய கொடுமைகள் குறித்தும் எமது இளைய தலைமுறையினருக்கு கொண்டு செல்லும் நோக்கில்...!**

30.10.1995ஆம் ஆண்டு வரலாற்றுப் பதிவாகிவிட்ட மாபெரும் யாழ்ப்பாண இடப்பெயர்வு.

தமிழீழ மக்களின் சமூக கலாச்சார பொருளாதார மைய மாகவும் தளராத கோட்டையாகவும் பொங்கிப்பிரவாகிக் கும் விடுதலைத்தீயின் பிறப்பிடமாகவும் இருந்து யாழ்ப் பாணத்தில் மண்ணும் மக்களும் எனப்பிணைந்து போயிருந்த உறவின் தொப்பிள்கொடியறுத்து ஐந்தரை இலட்சம் மக்களை ஓரிரு இரவில் குடிபெயரவைத்தது சிங்களத்தின் "சூரியகதிர்".

நல்லைக்கந்தன் முற்றத்திலிருந்து செம்மணி வெளி நிறைந்து நாவற்குழிப் பாலம் நிரம்பி இறுக்கி முட்டி மோதியது மனிதத் தலைகள் .ஒருகாலடி எடுத்துவைக்க குறைந்துத 30 நிமிடங்கள் பிடித்தது. இது மிகையல்ல. நிஜம. ஏனெனில் இம் மக்கள் வெள்ளத்தில் நானும் ஒருத்தன்.

மழை பெய்துகொண்டிருந்தது "ஆட்லறி" எறிகணைகள் மக்களைக்கடந்து சென்று அருகில் விழுந்து வெடித்துக் கொண்டிருக்க மேலே எதிரியின் "புக்காரா" குண்டுவீச்சு விமானம் வட்டமடித்து எந்நேரத்திலும் குண்டுகளை வீசக்கூடியதாக பறந்து கொண்டிருந்தது. வயோதிபர்கள் சிலர் அந்த இடங்களிலேயே விழுந்து இறந்து கிடக்க பிரசவங்களும் அவ்விடத்திலேயே நிகழ்ந்தேறின பிறந்த குழந்தையும் உப்பு நீரில் குளித்து மழைநீரை குடித்து பாலம் கடந்தது. தமிழ்மானம் உயர்ந்தது.இது




சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்து கிளாலிக் கடலினூடாக வன்னி நோக்கிச் செல்லும் யாழ்ப்பாண மக்கள்

எனது அனுபவத்தின் ஊடான மனப்பதிவின் சில பதிவுகள் மட்டுமே. இன்னும் எத்தனையோ சொல்லொணாத் துன் பங்கள் அனுபவித்து தமது நிலபுல சொத்து சுகங்களை கைவிட்டு உடுத்த உடுப்புடன் கையில் எடுத்த பொருட் களுடன் எதிரியின் எண்ணத்துக்கு வேட்டு வைத்து தம்மண்ணைவிட்டு வெளியேறி விடுதலைக்கு உரம் சேர்த்தனர் எம்மக்கள்.

தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் கூட அந்த வரலாற்று இடப்பெயர்வு குறித்து கூறும்போது 'இது எம்மக்கள் அளித்த ஒரு உயர்ந்த பட்ச பங்களிப்பு. அது எங்கள் வரலாற்றில் பதியப்பட்டுள்ளது. ஒட்டு மொத்தமாக ஐந்து இலட்சம் மக்களும் செய்த ஒரு பெரிய பங்களிப்பு" என்று குறிப்பிடுகின்றார்.

"யாழ்ப்பாண மக்களை விடுதலை செய்யப்போகின்றோம் அவர்களிற்கு விமர்சனமளிக்கப்போகின்றோம். அவர்கள் விடுதலைப்புலிகளின் பிடிக்குள் இருந்து கஸ்ரப்படு கிறார்கள். அவர்களிற்குமீண்டும் சுதந்திரத்தை பெற்றுக் பொடுப்பதே எமது பணி" எனக்கூறிக்கொண்டு 40,000 படைகளை களத்தில் இறக்கி பன்மடங்காக ஆயுத பலத்தை பெருக்கிக் கொண்டு "சூரியகதிர்" படைநடடிக் கைகளில் அரசாங்கம் இறங்கியது. இருந்தும் என்ன பயன் சிறீலங்கா அரசுக்கு பறைசாற்றிய எம்மக்கள் புலி களை ஆதரித்து அவர்கள் பின்னே சென்றனர். முகத்தில் கரிபூசிக்கொண்டது சிங்கள அரசு. விடுதலைப்புலிகளும் மக்களும் ஒன்றே என்றும் தமிழ் மக்கள் ஒட்டுமொத்தமாக சிங்கள அரசை வெறுக்கிறார்கள் விடுதலைப்புலிகளையே தமது தலைமையாக ஏற்றுக்கொண்டுசெயற்படுகிறார்கள் என்பதையும் முழு உலகிற்குமே தெரியப்படுத்தியது இந்த மாபெரும்







வரலாற்று இடப்பெயர்வு.

யாழ்குடாவில் இன்று வரைஆயிரக்கணக்கான மக்கள் இராணுவகட்டுப்பாட்டுக்குள் வாழ்ந்து வருகின்றனரே என சிலர் நினைக்ககூடும். ஆனால் அன்றைய தினத்தில் தரை வழியாக ஓர் ஒற்றையடிப்பபாதையாகிலும் அம்மக்களுக்கு கிடைத்திருக்குமாயின் இன்றுவரை யாழ்ப்பாணத்தில் இராணுவம் “இலையான்”தான் கலைத்துக்கொண்டிருக்கும். என்பது அவர்கள் அறிய வேண்டிய உண்மையாகும். ஒருவேளை அப்படி நடைபெற்று இராணுவம் மட்டுமே யாழ்குடாவில் இருந்திருக்குமாயின் எப்பொழுதோ இலகுவாக எந்தச்சிக்கலுமின்றி விடுதலைப் புலிகள் யாழ்குடாவை மீட்டிருப்பார்கள் என்பது உறுதி.

இப்படை நடவடிக்கையானது சிங்கள அரசின் அரசியல் தந்திரோபாயத்திற்கும் நோக்கத்திற்கும் கிடைத்த மிகப் பெரிய தோல்வி என்பதை உலக நாடுகளே சுட்டிக்காட்டியிருந்தன. தம்மிடம் இருந்த மிகப்பெரிய பலமான ஆட்பலத்தை வைத்துக்கொண்டு ஆயுத பலத்தின் உதவியுடன் விடுதலைப்புலிகளை வலிந்து சண்டைக்கிழுத்து அவர்களை பலவீனப்படுத்தி விடுவதென்று சமரை ஆரம்பித்த சிங்கள படைத்தலைமை சற்றும் எதிர்பார்க்கவில்லை யாழ்ப்பாணத்தை விட்டுபுலிகள் தந்திரோபாயமாக பின்வாங்கி விடுவார்கள் என்று யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய இந்த 5 வருட காலப்பகுதியில் பேரினவாத அரசால் எதனைச்சாதிக்க முடிந்தது. ஒன்றுமே இல்லை.

யாழ்குடாவை சிறீலங்கா இராணுவம் ஆக்கிரமித்த பின்னர் 1995 இல் தனது மாவீரர் நாள் உரையின் போது தமிழீழதேசியத்தலைவர் அவர்கள் கூறிய விடயமொன்றை இங்கு குறிப்பிடுவது இன்றைய காலத்திற்கு மிகவும்பொருத்தமாக அமைவதுடன் அவரது நுட்பமான திட்டமிடலுக்கும் தீர்க்கதரிசனத்திற்கும் ஒரு எடுத்துககாட்டாக இருக்கம் என்பது திண்ணம்.அது யாதெனில் “பெரும்படையை திரட்டி நிலத்தை கைப்பற்றுவது கடினமான காரியமல்ல. ஆனால் கைப்பற்றிய நிலத்தில் காலூன்றி நிற்பதுதான் கடினமான காரியம் .உலகெங்கும் ஆக்கிரமிப்பாளர்கள் எதிர்கொண்ட வரலாற்று உண்மையிது. இந்த வரலாற்றுப்பாடத்தை சிறீலங்கா இராணுவம் படித்துக்கொள்வதற்கு வெகுகாலம் செல்லாது என்பதே.



இவரது ஐந்து வருடத்திற்கு முந்தைய கூற்று இன்று செயல் வடிவம் பெற்று பெருவெற்றியைக் கண்டுவருவதானது “புலிகள் சொன்னதை செய்வார்கள்” என்பதை கட்டியங்கூறி நிற்கிறது.



நிலங்களை இழப்பதும் பின் அவற்றை மீட்பதும் உலக விடுதலைப்போராட்ங்கள் அனைத்துமே சந்தித்த சந்திக்கின்ற ஒரு பொதுவான நிகழ்வதான் .1943இல் “மாவோ சேதுங்”கின் “செஞ்சேனைப்” படைகள் “யேனான்” எனும் பகுதியை விட்டுப் பின்வாங்களப்பின் அதை மீட்டெடுத்த வரலாற்று வெற்றி. 1974இல் எரித்திரிய விடுதலை இயக்கம் “அஸ்மாறா”எனும் தனது தலைநகரை இழந்து சில வருடங்களின் பின்னர் மீண்டும் அதை மீட்ட வரலாறு. வியட்நாம் விடதலைப்போரில் நடைபெற்ற நில ஆக்கிரமிப்பு நிலமீட்புச்சம்பவங்கள் போன்று இன்னும் எத்தனையோ சம்பவங்கள் இதற்கு உதாரணம்.

இந்த உதாரணங்களின் அடிப்படையில் இன்று யாழ் மண்ணை புலிகளின் ஓயாத அலைகள் மீட்டெடுத்து வருவதானது 5வருடங்களுக்கு முன்பு தனது மண்ணுடனான உறவின் தொப்பிள்கொடியறுந்து இன்று வரை நெஞ்சில் வலிசுமந்து வாழ்ந்து வருகின்ற மக்களுக்கு மட்டுமன்றி முழு ஈழத்தமிழனுக்குமே தமிழீழ விடுதலைப்பலிகள் இயக்கம் பெற்றுக்கொடுக்கின்ற இனிப்பான செய்தி மட்டுமல்ல உடுத்த உடுப்புடன் எங்கே செல்வது எங்கே தங்குவது எதை உண்பது என்று எதுவுமே தெரியாத நிலையிலும் விடுதலைப்புலிகளின் சொல் கேட்டு அவர்களின் பின்னே சென்று போராட்டத்திற்கு வலுச்





சேர்த்த மக்களுக்கு தமிழீழ தேசியத்தலைவர் அவர்கள் மன நெஞ்சு நிறைந்து கொடுக்கின்ற பரிசாகவும் அமையும்.

இந்த பரிசுகளில் ஒன்றுதான் தமிழீழத்தின் தொண்டைக் குள் சிக்கிய “முள்” ஆக இருந்த ஆனையிறவு இன்று பகைவனின் உச்சியில்













அறைகின்ற ஆணியாக மாறி யிருப்பது ஆகும்.

யாழ்மண்ணை ஆக்கிரமித்து விடுதலைப்புலிகளை தனிமைப்படுத்திவிடலாம் எனப்பகற்கனவு கண்ட சிங்கள அரசுக்கும் அதன்படைகளுக்கும் இன்று அந்த மக்களின் துணையுடனேயே பிரபாகரனின் சேனைகள் சென்று புதைகுழி அமைத்து வருவது உலகவரலாற்றில் பதியப்பட வேண்டிய இன்னொரு அத்தியாயமாகும். தமிழ்மக்களை மீட்கவென வந்திறங்கிய சிங்களப்படைகள் இன்று மீண்டு செல்ல முடியாது விழிபிதுங்கி நிற்பதானது இன்று உலகறிந்த பரிதாபம்.

தமிழ்மக்களின் நீண்ட விடுதலைப்பயணமானது பல தடைகளைத்தாண்டி இன்று வெற்றிப்படிகளில் முன்னேறி வருகிறது. எதிரி ஆக்கிரமித்திருந்த பெரும் பிரதேசங்கள் மீட்கப்பட்டு வருகின்றன. மிகப்பெரிய வரலாற்று இடப் பெயர்வை நினைவு கூர்ந்து நிற்கின்ற நாம் இவ்வேளை யில் ஒன்றை மட்டும் தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும்.

“ஈழத்தமிழனுக்கு இனிமேலும் குடிப்பெயர்வு என்பதே இல்லை எல்லாமே குடிபுகும் விழாக்கள்தான்”

-மொறிஸ் தர்மபாலன்
வெளியீடு-எரிமலை ஒக்டோபர் 2000




நான் பெரிது நீ பெரிது என்று
வாழாமல்
நாடு பெரிது என்று
வாழவேண்டும்
தமிழீழத் தேசியத் தலைவர்
தமிழீழம்
விடியலை நோக்கி


வேலை இழப்பா?
வருமான பிரச்சனையா?
வேலை தேடுகிறீர்களா?
கவலையை விடுங்கள்
நம்பிக்கை
நாணயம்
உத்தரவாதம்
வாருங்கள் உங்கள் வாழ்க்கைப் பயணத்தில்
வழிகாட்டும்
உங்கள் நண்பன்
நாதன் பாலசிங்கம்
416.513.1000


MORTGAGE FINANCIAL
Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties
புதிய, முதல் தரம் வீடு வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge, Private மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற் உள்ளவர்களுக்கான
மோட்கேஜ், குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
SUBRA
MORTGAGE SOLUTIONS
Residential Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
Commercial Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com
Powered by
MORTGAGE ALLIANCE
WE DEAL WITH ALL BANKS
Brokerage # 10330
Canada Trust
Scotiabank
FIRST NATIONAL
radius financial
RFA
EQUITABLE BANK
HOME TRUST
RMG
MCAP
Off: 416-660-5656 / Fax: 647-351-3099 / 1585 Markham Rd, Unit 406, Toronto ON M1B 2W1




# தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

# இந்திய இராணுவத்தினரால் யாழ். போதனா வைத்தியசாலைப் படுகொலை 21,22.10.1987

யாழ் நகரத்தின் கிழக்குப் புறமாக நகரில் அமைந்துள்ள யாழ். போதனா வைத்தியசாலை யாழ் குடாநாட்டில் வாழ்கின்ற எட்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக் களிற்கு மட்டுமன்றி அயல் மாவட் டங்களான கிளிநொச்சி, முல்லைத் தீவு போன்ற இடங்களிற்கும் பிரதான வைத்தியசாலையாக உள்ளது. தினசரி ஆயிரம் பேர் வரையில் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவதோடு, பல கட்டட வசதிகளுடன், சத்திரசிகிச்சைப் பிரிவு, அவசர சத்திரசிகிச்சைப் பிரிவு எனப் பல பிரிவுகளுடனும் 1970 களிலிருந்து இயங்கி வருகிறது.



1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் பத் தாம் நாள் இந்தியப் படையினருக் கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக் கும் இடையிலான யுத்தம் தொடங் கியதிலிருந்து தொடர்ச்சியாக நடை பெற்ற போரின்மூலம் யாழ்நகரைக் கைப்பற்றும் முயற்சியில் இந்திய இராணுவத்தினர் ஈடுபட்டார்கள். யாழ்ப்பாணக் கோட்டையில் நிலை கொண் டிருந்த இந்திய இராணுவத் தினர் யாழ் நகரப்பகுதி மீது பெரு மளவு எறிகணைத் தாக்குதல், விமானத் தாக்குதலை மேற் கொண் டிருந்தபோதும் யாழ். வைத்திய சாலையில் வைத்தியர்கள், ஊழியர் கள், தாதிமார் தமது உயிரையும் பொருட்படுத் தாமல் மக்களுக்கான வைத்திய சேவையை வழங்கிப் பல உயிர்களைக் காப்பாற்றிக் கொண்டிருந்தார்கள்.

1987 ஒக்டோபர் இருபத்தோராம் திகதி இந்தியப்படையினர் எறி கணை வீச்சு, விமானத் தாக்குதல் களை நடத்தியவாறு யாழ். நகரை நோக்கி முன்னேறினார்கள். யாழ். வைத்தியசாலையில் பணிகளில்



ஈடுபட்ட வைத்தியர்கள், ஊழியர் கள், சிகிச்சை பெற வந்த நோயாளர் கள் போன்றோர் பாதுகாப்பிற்காக, வைத்தியசாலை எக்ஸ்றே பிரிவு அலுவலகம் அமைந்துள்ள இடத் தில் பாதுகாப்பு தேடினார்கள். பிற் பகல் 3:00 மணியளவில் யாழ் நகரப் பகுதிக்குள் இந்திய இராணு வம் உள்நுழைந்தது. பின்னர் 4:30 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலைக்குள் நுழைந்த இந்திய இராணுவம் அலுவலகப் பகுதியில் வைத்தியசாலைச் சீருடை யுடன் இருந்த ஊழியர்கள், நோயா ளர் வண்டில், கட்டில், பாய். வாங் குகளிற் படுத்திருந்த நோயாளர்கள் என எல்லோரையும் சுட்டுப்படு கொலை செய்தது.

**இச்சம்பவத்தில் பாதிக்கப்பட் டவர் கூறுகையில்**

“1987 ஒக்ரோபர் இருபத்திதோராம் திகதி மாலை 4:30 மணியளவில் வைத்தியசாலை யினுள் வந்த இந் திய இராணுவத்தினர் மறுநாள் காலை 10:00 மணி வரை வைத் தியசாலையில் மக்கள் மீது தாக்கு தலை நடத்தினார்கள். தாக்குதலிற் காயப்பட்டவர்கள் சத்தமிடும் போது அவர்கள் மீது கைக்குண் டினை எறிந்ததுடன், துப்பாகியாலும் சுட் டார்கள். மறுநாள் காலை 6:00 - 7:00 மணிக்கிடையில் வைத்திய சாலையின் இருபத்தாறாவது நோயாளர் விடுதிப் பக்க மிருந்து சம்பவ இடத்திற்கு வந்த வைத்தியர் திரு. சிவபாதசுந்தரம் அவர்களும், இரண்டு தாதியினரும் இந்தியச் இராணுவத்தினருடன் கதைத்து எஞ்சியிருக்கும் பொதுமக்களைக் காப்பாற்ற முயற்சித்தார்கள். ஆனால் இராணு வத்தினர் ஓடிச் சென்று துப்பாக்கியினை எடுத்து வைத்தியரையும் கூடச்சென்றவர் களையும் சுட்டதில் அவர்கள் அனைவரும் உயிரிழந்தார்கள். காலை 10:00 மணியள வில் ஏனைய வைத்தியர்கள் எடுத்த முயற்சி யினால் சம்பவத்தில் காயமடைந்து உயி ருடனிருந்தவர் கள் காப்பாற்றப்பட்டார்கள். சம்பவத் தில் உயிரிழ்நத மூன்று வைத்தியர் கள், இரண்டு தாதிமார்கள், மேற் பார்வை யாளர், ஊழியர்கள் உப்பட இருபத்தொரு மருத்துவமனை பணியாளர்களும், நோயளார் விடுதிகளிற் சிகிச்சை பெற்றுவந்த நாற்பத்தேழு நோயாளர்களுமாக மொத்தம் அறுபத்தெட்டுப் பேர் உயிரிழந்தார்கள். உயிரிழந்த அனைவரது உடல்களையும் வைத்தியசாலை பின்வாசற் பக்க முள்ள பிண அறைக்கு அருகிற் போட்டு இந்தியப்படை யினர் எரியூட் டினர்.” எனத் தெரிவித்தார்.

1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் இருபத் தோராம், இருபத்திரண்டாம் திகதியில் கடமை யின்பால் உயிர் நீத்த வைத்தியர்கள் உட்பட இருபத் தொரு ஊழியர்களையும் அவர் களுடன் உயிரிழந்த நோயாளர்கள் நாற்பத் தேழு பேரையும் யாழ். மருத்துவமனை ஒவ்வொரு வருட மும் நினைவுகூர்ந்து வருகின் றமை குறிப்பிடத்தக்கது.

**21,22.10.1987 அன்று யாழ். போதனா வைத்தியசாலைப் படுகொலையில் கொல்லப்பட் டோர் விபரம்:-**

1. சூடாமணி அவுடை யம்மா (55)
2. இராஜதுரை மகேஸ்வரி (46)
3. இராயப்பு சூசைப்பிள்ளை (74)
4. இராமநாதன் மங்கையற் கரசி (31)

5. இராமசாமி இலங்கேஸ் வரன் (25)
6. இராமலிங்கம் சுகுமார் (24)
7. இராசு சுப்பிரமணியம் (46)
8. இராசரத்தினம் இரத்தினராஜா (28)
9. நடராஜா ஜெயசீலன் ( 21)
10. கந்தையா செல்வராஜா (50)
11. கந்தையா செல்வராஜா (56)
12. கந்தையா வேதா ரணியம் (27)
13. கந்தையா சிவராஜா (25)
14. கந்தன் மார்க்கண்டு (39)
15. கதிர்காமு பரிமேலழகர் ( 40)
16. கிருபாகரன் இந்திராணி (32)
17. குருசுமத்து ஜோன்பீற்றர் ( 24)
18. கணபதி கிருஸ்ணராஜா (50)
19. கணபதி சிவலோகநாதன் (23)
20. பஸ் தியாம் பிள் ளை யோன் அரியமலர் (60)
21. பஸ் ரியாம் பிள் ளை நொய் லா விஜயந்தி (20)
22. வைத்திலிங்கம் சண் முகலிங்கம் (49)
23. துரைச்சாமி இரா ஜேந்திரா ( 70)
24. துரைச்சாமி மகேந்திரா (73)
25. துரைச்சாமி ஆறுமுகம் (72)
26. தம்பிப்பிள்ளை கனக லிங்கம் (64)
27. தம்பிப்பிள்ளை கிருபா கரன் (33)
28. தியாகராசா மதியரசன் (17)
29. திருமதி வடிவேலு (48)
30. தங்கவேலு சவுந்தரராஜா (06)
31. மார்க்கண்ட தியாகராசா (48)
32. முத்தையா லீலாவதி (28)
33. முத்துக்குமாரு துரை ராஜா (26)
34. அந்தோனிமுத்து அந் தோனி விக்ரர் (35)
35. அப்பையா மாணிக்கம் (76)
36. அரியகுட்டி இராச ரத்தினம் (53)
37. அரியரட்ணம் லில்லி நேசம் (75)
38. அருணாசலம் சிவபாத சுந்தரம் (-)
39. அல்பிரட் அந்தோனிப் பிள்ளை (65)
40. அல்பிரட் மேரியோ செப்பின் (37)
41. ஜெபமணி கீதபொன் கலன் (43)
42. ஜோன் சின்னையா (65)
43. யோன் சிமியோன் (67)
44. கோபாலப்பிள்ளை உருத் திரன் (24)
45. பொன்னம்பலம் வரத ராஜன் (28)
46. பெலிசியன் சதீஸ் யோகேந்திரன் (15)
47. தோம ஸ் பேரின பநாயம பஸ்தியாம்பிள்ளை (66)
48. செபஸ்தியன் தம்பிராஜா (55)
49. சேதுசிகாமணி கணேச ரட்ணம் (29)
50. செல்லையா தங்கமணி (58)
51. செல்லர் சிவபுரம் (-)
52. வேலுப்பிள்ளை சரவண முத்து ( 60)
53. ஞானப்பிரகாசம் செந்தூர் முருகன் (40)
54. சுப்பிரமணியம் ஜெண மோகன் (32)
55. சத்தியசீலன் ஜெயசீலன் (17)
56. சின்னப்பு ஜெயநாதன் (36)
57. சின்னத்தம்பி வேலுப் பிள்ளை (75)
58. சின்னவி சின்னத்துரை (57)
59. சிவலை குணரட்ணம் (49)



**காயமடைந்தவர்களின் விபரம்**

1. யூலியஸ் பிரதீபன் (06)
2. ந. அன்னம் (90)
3. நா. நவரத்தினம் (54)
4. நா. செல்லையா (21)
5. நடராசா தனபாலசிங்கம் (20)
6. நவரத்தினம் சந்திரகுமார் (18)
7. பூ. விஸ்ணுதாசன் (34)
8. பத்மநாதன் தனபாக்கிய லட்சுமி (43)
9. பற்குணராஜா கமலா (25)
10. தா. இராசேந்திரன் (44)
11. மா. அன்னலட்சுமி (75)
12. அ. சண்முகராசா (36)
13. அ. கந்தசாமி (36)
14. கே. பாலையா (44)
15. செ. பத்மநாதன் (46)
16. செ. தவராஜன் (22)
17. சின்னப்பொடி தெய் வானை (65)
18. வா. மதிஜீவன் (23)
19. ராஜரட்ணம் ஜனார்த் தனன் (20)



# அராலித்துறைப் படுகொலை 22.10.1987

அராலித்துறை யாழ் மாவட்டத்தின் வலிகாம் மேற்கு சங்கானைப் பிரதேச எல்லைக்குள் அமைந்துள்ளது. இலங்கை இராணுவம் யாழ்கோட்டைப்பகுதியில் நிலைகொண்டிருந்ததால், யாழ் கோட்டைப் பகுதியின் அருகாமையிலுள்ள பண்ணைப் பாலம் ஊடான போக்குவரத்துத் தடைப்பட்டிருந்தது. இதன் காரணமாக தீவுப் பகுதிக்கான போக்குவரத்துப் பாதையாக அராலித்துறை விளங்கியது.

அக்காலப்பகுதியில் தீவுப்பகுதி மக்கள் அராலித்துறைப் பாதையினூடாகப் போக்குவரத்தில் ஈடுபட்டனர்.

1987 ஆம் ஆண்டு ஒக்டோபர் இருபத்திரண்டாம் நாள் தீவுப் பகுதியிலிருந்து யாழ் நகரம் நோக்கி பதினைந்து வரையான இயந்திரப் படகுகளில் முந்நூறிற்கும் மேற்பட்ட மக்கள் பயணம் செய்தனர். அன்று மதியம் அராலித்துறைக் கரையில் தரையிறங்கிய பொதுமாக்கள் மீது இந்திய இராணுவத்தின் உலங்கு வானூர்தி மூலம் தாக்குதல் நடத்தியதால் அச்சமடைந்த மக்கள் அராலித்துறை மட்தில் தஞ்சம் புகந்தனர். பாதுகாப்புத்தேடி ஓடிய, தஞ்சமடைந்த மக்களை இலக்கு வைத்து ஏழிற்கும் மேற்பட்ட றொக்கட் குண்டுகள் வீசப்பட்டது. இதனால் அராலித்துறை மடத்தடியில் தஞ்சம் புகுந்த பயணிகள் முப்பத்தைந்து பேர் உயிரிழந்தனர். முப்பதிற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தார்கள். ஏழிற்கும் மேற்பட்ட படகுகள் முழுமையாக சேதமடைந்தன. சில படகுகள் பகுதியளவில் சேதமடைந்தன. இறந்தவர்களின் சடலங்கள், காயப்பட்டவர்கள் மீள மறுகரைக்கு செல்லப்பட்டன. இறந்தவர்களில் தீவுப்பகுதியைச் சேர்ந்த அரச உத்தியோகத்தார்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப்பலரும் இடங்குவர்.

**22.10.1987 அன்று அராலித்துறைப் பாடுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. யேசுதாசன் ஜீவகுமார் (06)
2. ஆரோக்கியம் ( 40)
3. யேசுதாசன் குமுதினி (09)
4. செ. சேவியர் (70)
5. கிறிஸ்ரிராஜா றீற்றம்மா (31)
6. கிறிஸ் ரிராஜா சகாய நாயகி (06)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப் படைந்த அனைவரது பெயர் விபரங் களையும் பெறமுடியவில்லை






# கொக்குவில் இந்துக்கல்லூரிப் பாடுகொலை 24.10.1987

கொக்குவிற் கிராமம் யாழ். மாவட்டத்தில் நல்லூர் பிரதேச செயலக பிரிவினுள் அமைந்துள்ளது. யாழ். நகரிலிருந்து காங்கேசன்துறை வீதியூடாகச் செல்லும் வழியில் ஏறக்குறைய யாழ் நகரிலிருந்து நான்கு மைல் தூரத்திலுள்ள கொக்குவிற் சந்திக்குக் கிழக்குப் புறமாக கொக்குவில் இந்துக்கல்லூரி அமைந்துள்ளது.



1987 ஒக்டோபர் பத்தாம் நாள் இந்திய இராணுவத்திற்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்தம் தொடங்கிய பின்னர் இந்திய இராணுவத்தின் பரவலான விமானக்குண்டு வீச்சு மற்றும் ஏறிகணைத்தாக்குதலுக்கு அஞ்சி கொக்குவில் கிழக்கு, ஆனைக் கோட்டைப் பகுதியைச் சோந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பாதுகாப்புக்கருதி கொக்குவில் இந்துக்கல்லூாயீல் தஞ்சமடைந்தார்கள். அத்துடன் தங்களை அகதிகள் என அடையாளப்படுத்தும் நோக்குடன் பாடசாலையின் முக்கிய இடங்களில் வெள்ளைக் கொடியைப் பறக்கவிட்டனர்.

1987 ஒக்டோபர் இருபத்துநான்காம் நாள் காங்கேசன்துறை வீதி வழியாக யாழ் நகரம் நோக்கிக் கவசவாகனங்கள், டாங்கிகள் சகிதம் முன்னேறிய இந்தியப் படையினர் கொக்குவில் இந்துக் கல்லூரியை வந்தடைந்ததும், கவச வாகனங்களிலிருந்து அங்கு அடைக்கலம் புகுந்திருந்த பொது மக்கள் தங்கியிருந்த பாடசாலைக் கட்டடங்களின் மேல் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர். இதனால் பாடசாலை வகுப்பறையில் தங்கியிருந்த இருபத்தாறு பொதுமக்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்கள்.

படுகாயமடைந்தவர்களில் பதின்நான்கு பேர் மருத்துவ வசதிகளற்று உள்ளூர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும் வழியிலும், மருத்துவமனைகளிலும் உயிரிழந்தனர். இச்சம்பவத்தில் யாழ் பல்கலைக்கழக கல்வியற்துறைப் பீடாதிபதி பேராசிரியர் சந்திரசேகரம் உட்பட மொத்தம் நாற்பது பேர் உயிரிழந்ததுடன், எண்பது பேர் படுகாயமடைந்தனர்.

உரிய முறைப்படி தகனம் செய்வதற்கான சூழ்நிலையில்லாததால் இறந்தவர்களின் சடலங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஒரோ குழியில் வைத்து அடக்கம் செய்யப்பட்டது.

**24.10 அன்று கொக்குவில் இந்துக்கல்லூரிப் பாடு கொலையில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. இராசையா பஞ்சலிங்கம் (43)
2. இராசையா செல்வராணி (37)
3. இராமு இராசு (60)
4. நாகரத்தினம் விஜயரத்தினம் (46)
5. நடராசா இராசகுமாரன் (44)
6. நடராசா இராசராசேஸ்வரி (24)
7. நடராசா குணராணி (35)
8. நடராசா தமிழ்ச்செல்வி (10)
9. நடராசா சபேஸ்குமார் (06)
10. நடராசா ரமதி (13)
11. நடேசு பரமேஸ்வரி (51)
12. நல்லையா பாக்கியம் (50)
13. கந்தையா சங்கரப்பிள்ளை (65)
14. கந்தவனம் மகேஸ்வரி (52)
15. குணபாலசிங்கம் பத்மசிறி (08)
16. பரமு தங்மணி (24)
17. பரமேஸ்வரன் மனோன்மணி (35)
18. பரமேஸ்வரன் மாலினி (01)
19. தர்மலிங்கம் நிசாந்தன் (02)
20. துரைச்சாமி குமாராசாமி (72)
21. தம்பிராசா நடராசா (61)
22. வேணுகோபால் மகாதேவன் (41)
23. மகாதேவன் இராசம்மா (28)
24. மகாதேவன் பாலமுருகன் (09)
25. மகாதேவன் வேணுகிருஸ்ணா (07)
26. மகாதேவன் விக்கினேஸ்வரன் (10)
27. அன்னசிங்கம் கமலாதேவி (33)
28. பெரியதம்பி இராசையா (30)
29. பேராசிரியர் சோ. சந்திரசேகரம் (-)
30. செல்வநாயகம் மாணிக்கரத்தினம் (69)
31. செல்லர் திரவியம் (53)
32. சுப்பிரால் கோவிந்தசாமி (73)
33. சிவகுரு செல்லத்துரை (85)
34. விஸ்வநாதி விஜயரத்தினம் (40)

# அளவெட்டி ஆச்சிரமப் படுகொலை 26.10.1987

அளவெட்டிக் கிராமம் யாழ் மாவட்டத்தில் வலிகாமத்தின் வடக்குப் பகுதியில் தெல்லிப்பளைப் பிரதேச செயலகப் பிரிவினுள் அமைந்துள்ளது. அளவெட்டி அம்பனைப் பகுதியில் அளவெட்டி – மல்லாகம் ப. நோ.கூ.சங்கம் அமைந்துள்ள கட்டடத்திற்கு முன்பா அளவெட்டி இந்து ஆச்சிரமம் அமைந்துள்ளது.

அளவெட்டிப் பிரதேசத்திலுள்ள இந்த இந்து ஆச்சிரமம் இந்து மக்களின் வயோதிபர் மடமாகவும், கடந்த கால வன்செயல்களால் கடும் பாதிப்புற்ற இளஞ்சிறார்கள் கல்வி கற்கும் இடமாகவும் செயற்பட்டுக்கொண்டிருந்தது.

1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இருபத்தாறாம் நாள் இந்திய இராணுவத்தினரின் தாக்குதல்கள் ஆரம்பித்ததன் பின்னர் அளவெட்டியில் அமைந்துள்ள இந்து ஆச்சிரமத்தின் மீது இந்திய இராணுவத்தினரின் "முதலை" என்னும் எம்.ஐ. 24 ரக உலங்குவானூர்தியால் நடத்திய றொக்கட் தாக்குதலில் ஆச்சிரமத்திலுள்ள வயோதிபர்கள், சிறார்கள் உட்பட பதினைந்து பேர் உயிரிழந்தனர். பன்னிரண்டு பேர் படுகாயமடைந்தனர்.

**26.10.1987 அன்று அளவெட்டி ஆச்சிரமப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. இராசரத்தினம் கோமதி (15)
2. இராசரத்தினம் ஞானகணேசன் (21)
3. குணசீலன் கோணேஸ்வரி (38)
4. பத்மநாதன் செல்வச்சந்திரன் (12)
5. தர்மலிங்கம் சிறிஸ்கந்தராசா (25)
6. துரைசிங்கம் மதி (01)
7. தம்பிராசா சிறீபவன் (12)
8. அமிர்தநாதர் நேசம்மா (50)
9. சின்னத்துரை தங்கலிங்கம் (47)
10. சின்னத்தம்பி தம்பிராசா (56)
11. சின்னத்தம்பி இரத்தினம் (47)
12. சின்னையா இராசரத்தினம் (62)
13. சிவகுருநாதன் சிவபாக்கியநாதன் (41)
14. விஜயரத்தினம் பத்மராணி (33)
15. வினாசித்தம்பி ஐயாத்துரை (80)



# சாவகச்சேரிசந்தைப் படுகொலை 27.10.1987

யாழ்ப்பாணக் குடாநாட்டின் கிழக்குத் திசையில் யாழ் நகரையும், வன்னிப் பெருநிலப் பரப்பையும் இணைப்பது தென்மராட்சிப் பிரதேச மாகும். யாழ்-கண்டி பிரதான நெடுஞ் சாலையில் யாழ். நகரத் திலிருந்து ஏறக் குறைய பதினைந்து கி.மீ. தூரத்தில் அமைந் துள்ள சாவகச்சேரி நகரமானது, தென்மராட்சி பிரதேசத்தின் பிரதான நகரமாகும். 1987 ஒக்டோபர் இருபத்தேழாம் திகதியன்று கந்த சட்டி சூரன் போர் ஆகையால், நகரத்திலிருந்த ஆலயத்திலிருந்து சூரன் வீதியால் வீதியுலா சென்று கொண்டிருந்த நேரம் மதியம் 12 மணியளவில் வானில் வந்த இந்திய இராணுவத் துக்குச் சொந்தமான இரண்டு எம்.ஐ 24 ரக உலங்குவானூர்திகள் மக் கள் மீது தாக்குதலை மேற்கொண்டன. பீதி யடைந்த மக்கள் என்ன செய்வதென்று தெரி யாது அங்குமிங்குமாகச்சிதறி ஓடினர். தொடர்ச்சி யாக மக்கள் மீது உலங்குவானூர்தி ஏவிய றொக்கட் குண்டகளால் சந்தைக்கு வந்த அறுபத்தொட்டுப் பொதுமக்கள் உயிரிழந் தார்கள். நூற்றி எழுபத்தைந்து பேர் காய மடைந்தார்கள். இந்து ஆலயத்தில் வீதியுலா சென்ற சூரன் சிலையும் சேதமடைந்தது.

**27.10.1987 அன்று சாவகச் சேரி சந்தைப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. இளையதம்பி நாகராசா (50)
2. இராசையா திரவியம் மரியாம்பிள்ளை (32)
3. இராசநாயகம் நந்தினி (20)
4. இராசநாயகம் அருந்தவ ராசா (13)
5. இராசா சிறிதரன் (26)
6. இராசதுரை இராசேந்திர போஸ் (18)
7. இராசசிங்கம் மனோ கரன் (38)
8. இராசசிங்கம் கௌரிதாஸ் (20)
9. நாகமுத்து தங்கம்மா (66)
10. நாகமுத்து தவராசா (27)
11. நாகராசா புஸ்பராசா (13)
12. நாகராசா தனலட்சுமி (21)
13. நாகராசா மகேஸ்வரி (41)
14. நாகராசா சண்முகராசா (10)
15. நல்லதம்பி இராசையா (56)
16. கனகு பொன்னு (57)
17. கந்தையா மனோன் மணி (58)
18. கந்தன் தங்கம் (51)
19. கந்தசாமி வைத்தீஸ்வர சர்மா (26)
20. வைத்திஸ்வரசர்மா கலைச்செல்வன் (02)
21. கந்தசாமி கெந்தீஸ்வரன் (20)
22. கார்த்திகேசு பெனடிக்ற் மத்தியூஸ் (32)
23. கணபதி மயில்வாகனம் (40)
24. பழனியாண்டி கனகரத்தினம் (34)
25. பிள்ளையாங்குட்டி துரைச்சாமி (49)
26. பிலிப்பு இராசேந்திரம் (42)
27. வைத்திலிங்கம் மயில்வாகனம் (45)
28. தம்பு ஜெயரத்தினம் (22)
29. தம்பிராசா சந்திரமோகன் (21)
30. மார்க்கண்டு துரைராசா (55)
31. முருகேசு நடராசா (50)
32. முருகேசு சிவசுப்பிரமணியம் (41)
33. ஆனந்தசாமி அருந்தவசிவனேசன் (25)
34. ஆறுமுகம் விஸ்வநாதன் (31)
35. அல்பிரட் நொபேட் லூயிஸ் ஸ்ரிப்ன (29)
36. ஜெயரத்தினம் வீரஜெயபரஞ்சோதி (23)
37. கோவிந்தசாமி மகேந்திரன் (27)
38. பொன்னுத்துரை கமமேஸ்வரி (10)
39. பொன்னுத்துரை தங்கரத்தினம் (56)
40. பொன்னுத்துரை மகேஸ்வரி (49)
41. பொன்னுத்துரை மஞ்சுளாதேவி (28)
42. பொன்னம்பலம் கனகசிங்கம் (41)
43. பொலோறஞ் அரியமலர் இராசசிங்கம் (65)
44. தேசிங்கன் செல்லையா (14)
45. டொனால்ட் நவீன் குண்டேக்ஸ் (20
46. சோமசுந்தரம் சின்னாச்சி (38)
47. செல்லத்துரை தயாபரன் (16)
48. செல்லத்துரை ரெங்கநாதன் (32)
49. வெற்றிவேலு சிவசிறி (18)
50. வேலுப்பிள்ளை குணபாலசிங்கம் (30)
51. வேலுப்பிள்ளை தங்கம்மா (72)
52. வேலுப்பிள்ளை யோகேஸ்வரன் (19)
53. ஞானமுத்து இரஞ்சிதமலர் (63)
54. சுப்பிரமணியம் பரந்தாமன் (12)
55. சுப்பையா பொன்னம்மா (60)
56. சின்னவன் நாகமுத்து (76)
57. சின்னவன் செல்லையன் (45)
58. சின்னராசா அருமைராசா (33)
59. சின்னையா அம்பிகைபாலன் (27)
60. சிதம்பரப்பிள்ளை குமாரசாமி (52)
61. சிவக்கொழுந்து மகேஸ்வரன் (55)
62. சண்முகம் பரராசசிங்கம் (34)
63. வன்னியசிங்கம் பாஸ்கரன் (19)
64. விசுவநாதன் கந்தையா (59)
65. எலியாஸ் சிறாயுதீன் (27)



# முல்லை. புதுக்குடியிருப்பு கைவேலிப் படுகொலை 16.10.2006

முல்லைத்தீவு மாவட்டம் புதக் குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிற் குட்பட்ட புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியிலுள்ள கைவேலி என்னும் கிராமம் மீது 2006 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 16 ஆம் நாள் மாலை 5:15 மணியளவில் சிறீலங்கா விமானப்படைக்குச் சொந்தமான நான்கு கிபிர் விமானங்கள் மேற்கொண்ட குண்டுத் தாக்குதலில் ஒரு மாதக் குழந்தை மற்றும் இரு சிறுவர்கள் உட்பட மூவர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர். மேலும் பத்து பொதுமக்கள் காயமடைந்த நிலையில் புதுக்குடியிருப்பு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டனர். இவ்வாறு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களில் தவராசா இந்திரா என்பவர் நான் காம் நாள் சிகிச்சை பலனளிக்காது மருத்துவமனையில் சாவடைந்தார்.

**இச்சம்பவத்தின் போது கொல லப்பட் டவர்களது பெயர் விபரம்**

1. யூட்கிறிஸ்ரின் டன்சிபா (01)
2. சிவகுமார் தனுசிகா (14)
3. தவராஜா துசாந்தினி (14)
4. தவராசா இந்திரா (42)

**இச்சம்பவத்தின் போது காய மடைந்தவர்களது பெயர் விபரம்**

1. முருகானந்தன் தியாக ராஜா (22)
2. கந்தசாமி நாகேந்திரம் (34)
3. வீரசிங்கம் நிதர்சன் (12)
4. நாகராசா நிரோஜினி (13)
5. புவனச்சந்திரன் புஸ்ப லதா (38)
6. பிறேமசிங் சிவாஜினி (32)
7. நாகேந்திரம் சுகந்தினி (29)
8. சர்மிலா (09)
9. மேலும் ஒருவர்







# பெரியமடுப் படுகொலை 25.10.2007



மன்னார் மாந்தை மேற்கில் விவசாயத்தினைப் பிரதான தொழிலாகக் கொண்டு மக்கள் செறிந்து வாழ்கின்ற கிராமங்களில் பெரிய மடு கிராமமும் ஒன்றாகும். இடம் பெயர்ந்தோர் குடியிருப்பின் மீது 20.10.2007 அன்று நண்பகல் 12:00 மணியளவில் சிறீலங்காப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கர்ப்பிணித் தாய் உட்பட ஒரே குடும்பத்தை சேர்ந்த 3 பேர் கொல்லப்பட்டும் 09 பேர் காயமடைந்துள்ளனர்.

மாந்தை மேற்குப் பிரதேச செயலர் பிரிவிலிருந்து 2007 ஒகஸ்ட் 25 ஆம் நாள் தொடக்கம் சிங்கள இராணுவத்தின் செல்வீச்சு காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களில் உள்ள அகதி முகாம்களில் தஞ்சமடைந்து வருகின்றனர். இவ்வாறு இடம் பெயர்ந்து வந்தவர்களில் பெரியமடு 30 வீட்டுத்திட்ட கிராமப் பகுதியில் 23 குடும்பத்தினர் தற்காலிக கொட்டகைகள் அமைத்து வசித்துக் கொண்டிருந்தனர்.

2007 ஒக்ரோபர் 25 ஆம் நாள் நண்பகல் 12:00 மணியளவில் இக் குடியிருப்பு பகுதி மீது மன்னார் தள்ளாடி சிங்கள இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட செல் வீட்டின் முற்றத்தில் வீழ்ந்து வெடித்ததால் வீட்டிற்குள்ளிருந்த நிறைமாதக் கர்ப்பிணியான செல்வநாதன் பரிமளா (வயது 19), அவரின் சகோதி தங்கவேல் கௌசல்யா (வயது 09), இவர்களின் தந்தை சோமசுந்தரம் ஜெயபாலசிங்கம் (வயது 61) ஆகியோர் உடல்சிதறிப் பலியானதுடன் பரிமளா, கௌசல்யா ஆகியோரின் தாயார் ஜெயபாலசிங்கம் திரவியம் (வயது 55) இவரது பேரப்பிள்ளை செல்வநாதன் கோகிலன் (வயது 03), பிரான்சிஸ் சுதர்சன் (வயது 45), இவர்களின் மகள் உமாதேவி (வயது 13), வசந்தன் றெபேக்கா (வயது05), சுப்பையா மோகன்ராஜ் (வயது 29), பா. சுப்பிரமணியம் (வயது 28) ஆகியோர் படுகாயமடைந்து, முழங்காவில், கிளிநொச்சி வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். இதில் செல்வநாதன் கோகுலன் என்ற மூன்று வயதுக் குழந்தை மிகவும் கவலைக்கிடமான நிலையிலுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதில் குறிப்பாக நிறைமாதக் கர்ப்பிணியான பரிமாளவின் வயிற்றுப்பகுதியை செல்துண்டுகள் வெட்டி சென்றதனால் வயிற்றிலிருந்த இரணைச்சிசுக்களும் வயிற்றிலிருந்து வெளியே வந்திருந்த கோரநிகழ்வும் இடம்பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.











# “என்ர ஆயுதத்தைக் கொண்டு போய் அண்ணையிட்டைக் குடுங்கோ” முதல் வித்து 2ம் லெப். மாலதி!

1987.10.10 தமிழீழ வரலாற்றில் புதிய சரிதம் ஒன்றைப் படைக்கப்போகும் அந்த இரவு அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தது. ஆணிவேர் ஆளப்பதிந்து கொண்டிருந்த எமது போராட்டத்தை அழித்துவிடும் நோக்குடன் தமிழீழத் திற்கு அனுப்பப்பட்ட இந்திய இராணுவம் போராளிகளைத் தேடி, இருள் கிழித்து உலாவத் தொடங்கியது. எல்லா இடங்களிலும் எம்மவரின் விழிகள் பகை வரவை எதிர் பார்த்தபடி காத்திருந்தன.

அப்போது நேரம் 1.15. கோப்பாய் கிறேசரடியில் நின்ற மகளிர் அணி வீதியில் போய்வரும் ஊர்திகள் யாருடை யவை என அவதானித்தவாறு தாக்குதலுக்குத் தயாராக நிற்க, அதில் ஒருவராக தனது M16 ஐ அணைத்துப்பிடித் தபடி மாலதியும் நிற்கின்றார்.

வானம் கரிய இருளைச் சொரிந்து கொண்டிருக்க, குவியல் குவியலாகச் சிந்திக்கிடந்தன நடசத்திரப் பூக்கள். இடை யிடையே வீதியால் போய்வரும் ஊர்திகளின் ஒளிகள் வானத்தை நோக்கி நீண்ட ஒளிக் கோடுகளை வரைய, ஒவ்வொன்றையும் அவதானித்தபடி நிற்கிறார் மாலதி.

அப்பால் கைதடி நோக்கி விரிந்திருந்த வெளிகளினூடாக ஊடுருவிய கண்கள், இப்பால் கோப்பாய்ச் சந்தி கடந்து மிக வேகமாக வந்து கொண்டிருந்த ஊர்தியை நோக்கித் திரும் பின. மிக அண்மையில் வந்து விட்ட ஊர்தியிலிருந்து குதித்த இராணுவம் இவர்களிருந்த பகுதி நோக்கிச் சுடத் தொடங்கியது. அந்த இடத்தில் இந்திய இராணுவத்தை நோக்கிச் சுழன்ற முதலாவது சுடகலனும் மாலதியி னுடையதுதான். கோப்பாய் - கைதடி வெளியில் எழுந்த சூட்டுச் சத்தங்கள் எங்கள் சரித்திரத்தில் புதிய அத்தியா யத்தை எழுதத் தொடங்கின.

சண்டை கடுமையாகத்தான் நடந்தது. சீறும் ரவைகளின் ஒலியும், அவற்றின் ஒளிர்வும் தாக்குதலின் கடுமையைப் பறைசாற்றின. மாலதி இராணுவத்தினருக்கு மிக அண் மையில் நின்று தாக்குதலைச் செய்து கொண்டிருந்தார். திடீரெனக் காலில் காயமுற்ற மாலதியின் குரல் வேட் டொலிகளையும் மீறி ஒலித்தது.

“நான் காயப்பட்டிட்டன். என்ர ஆயுதத்தைப் பிடியுங்கோ. என்ர ஆயதத்தைக் கொண்டு போய் அண்ணையிட்டைக் குடுங்கோ”

காயமுற்ற பின்னும் சுட்டுக் கொண்டிருந்தவர் இராணுவம் அதிகமாக நிற்பதைப் புரிந்து கொண்டார். தான் வீரச் சாவடைந்தாலுங்கூட, தான் நேசித்த ஆயுதம் எதிரியிடம் விடுபட்டுவிடக் கூடாது என்ற எண்ணத்தில், தன்னைப் பார்க்காமல் ஆயுதத்தைக் கொண்டு போகும் படி கூஃிக் கொண்டிருந்தார். அவரை எப்படியும் காப்பாற்ற வேண்டும் என்ற வேகத்துடன் ஊர்ந்து சென்ற விஜியிடம்,

“என்ர ஆயுதம் பத்திரம். என்னை விட்டிட்டு ஆயதத்தைக் கொண்டுபோ”

எனச் சொல்லி ஆயதத்தைக் கொடுத்தவர், கழுத்திலிருந்த நஞ்சையருந்தி மண்ணை முத்தமிட்டார். அவர் சொன்ன படியே ஆயுதம் பத்திரமாக கொண்டுவரப்பட்டு இன்னொரு போராளியின் கரங்களில் தயாரானது.

இயல்விலே புத்துணர்வும் துடிப்பும் நிறைந்த மாலதி சிறு வயதிலேயே விடுதலைப் போராட்டத்தோடு ஒன்றிப் போனவர்.

அதனால் ஒவ்வொரு ஆயுதங்களின் பெறுமதியையும், வெற்றி நோக்கிய நகர்விலே அவற்றின் முக்கியத் துவத்தை உணர்ந்திருந்தார். அதேபோல தாய் மண் ணிலே ஆழ்ந்த பற்றுக்கொண்டு உழைத்த மாலதியின் நினைவோடு இலட்சியத்தைச் சுமந்து நடக்கிறான போரணிகள்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்ட வரலாற்றில் முதல் பெண் மாவீரரான 2ம் லெப். மாலதி வழிகாட்டிச் சென்ற பாதையில் அதே நேசிப்போடு எமது பயணம் தொடர்கிறது. அவர் தம் உயிரிலும் மேலாக நேசித்த ஆயுதமும், இந்த தேசமும் அவரின் இந்த வரலாற்றைச் சுமந்திருக்க, மன்னார் மகளின் நாமத்தைத் தாங்கியே படையணியாய் நாம் நிமிர்ந்து நிற்கின்றோம்.



2ஆம்.லெப்.மாலதி

-2ம் லெப். மாலதி படையணி, தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழீழம்.

“புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்”



# 27ஆம் ஆண்டு வீரவணக்கம்

## வீரச்சாவு 26.10.1996





உயிர் வற்றிய மனிதம்
விழிகளில் ஜீவன் தேக்கி
மௌனப் புலம்பலுடன்
வைகறை வரம் தேடி
தவம் செய்து கிடக்கும்
மானிடத் தேடலில்
இந்த மரணங்கள்
மறுபடியும் உயிர்க்கும்
புலம் பெயர்ந்த மண்ணிலும்
தாய்நிலம் விடிய

வையமெல்லாம்
சுதந்திரப்பாடல் இசைத்துத்
திரிந்த இந்த விடுதலைப்
பறவைகள் பாரிஸ் நகரத்து
வீதியில் கடந்த 26.10.1996
அன்று கொடிய
கொலைக்கரங்களால்
வீழ்த்தப்பட்டார்கள்
விதையாய்...!



### லெப். கேணல் நாதன்

கந்தையா பேரின்பநாதன்
அரியாலை -யாழ்ப்பாணம்

### கப்டன் கஜன்

கந்தையா கஜேந்திரன்
கோண்டாவில் -யாழ்ப்பாணம்

# நீதிபதி சரவணராஜா விவகாரம் அரசின் இன அழிப்பு நிகழ்ச்சி நிரலை அம்பலப்படுத்துவதற்கு கிடைத்த முக்கிய சந்தர்ப்பம்!

## சமூக விஞ்ஞான ஆய்வு மைய இயக்ககுனர் சி. ஆ. யோதிலிங்கம்

06.10.2023

பல்வேறு அழுத்தம், நிர்பந்தம் அச்சுறுத்தல் காரணமாக பதவி விலகிய நீதிபதி சரவணராஜா விவகாரம் அரசின் இன அழிப்பு நிகழ்ச்சி நிரலை அம்பலப்படுத்துவதற்கு தமிழ் தரப்பிற்க்கு கிடைத்த முக்கிய சந்தர்ப்பம் என அரசியல் ஆய்வாளரும், சட்டத்தரணியும், சமூக விஞ்ஞான ஆய்வு மைய இயக்குனருமான சி.அ. யோதிலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் இன்று வெள்ளிக்கிழமை (06) ஊடகங்களுக்கு அனுப்பிய செய்திக் குறிப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா பதவி விலகல் பலத்த அதிர்வுகளை இலங்கையில் ஏற்படுத்தியுள்ளது.

அரசாங்கத்தின் கௌரவத்தை தலைகீழாகப் புரட்டிய விவகாரம் என்பதால் அரசாங்கம் ஆடிப்போயுள்ளது.

எல்லாவற்றையும் நீதிச்சேவை ஆணைக்குழுவின் பொறுப்பில் விட்டு விட்டு அரசாங்கம் ஒதுங்க நினைக்கிறது.

சுயாதீன விசாரணை ஒன்றிற்கு அரசாங்கம் தயாராக இல்லை. சுயாதீன விசாரணை இடம் பெற்றால் அச்சுறுத்தல் இருந்ததா? சட்டமா அதிபர் நீதிமன்றின் கட்டளைகளை வாபஸ் பெறும்படி கேட்டாரா? என்ற கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்ல வேண்டி ஏற்படும்.

பாராளுமன்றத்தில் விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்கள் பகிரங்கமானது. மேன்முறையீடு வழக்குகள் பகிரங்கமானது. இவற்றையெல்லாம் சுயாதீன விசாரணை நடக்கும் போது அரசாங்கத்தினால் மறைக்க முடியாது. சட்டமா அதிபரின் அழுத்தம், பாதுகாப்புக் குறைப்பு, புலனாய்வுப் பிரிவினரின் கண்காணிப்பு என்பன தான் விசாரிக்கப்பட வேண்டிய விடயங்கள். அவற்றிற்கு போதிய ஆதாரம் இல்லாமல் நீதிபதி சரவணராஜா அதனைக்கூறியிருக்க மாட்டார்.

இந்த அச்சுறுத்தல்கள் தமிழ் நீதிபதிகள் புதிதாக சந்திக்கின்ற விடயமல்ல. ஏற்கனவேயும் பலருக்கு அந்த அனுபவம் உண்டு.

சிறீநிதிநந்தசேகரன், விக்னேஸ்வரன் ஆகியோருக்கு இந்த அனுபவங்கள் கிடைத்தன. இளஞ்செழியனுக்கும் கிடைத்திருக்கலாம். ஆனால் அவர்கள் பதவிக்காலத்தின் போது அதனை பெரியளவிற்கு பகிரங்கத்திற்கு கொண்டு வந்து பேசுபொருளாக்கவில்லை.

சரவணராஜா தான் அதனை பேசுபொருளாக்கியுள்ளார். அதற்கான காலமும் சூழலும் அதற்கு பொருத்தமாக இருந்தது.

தனது வழக்குகள் தொடர்பாக தானாகவே நீதிபதி சரவணராஜா சட்டமா அதிபரைச் சந்தித்தார் என நீதியமைச்சர் கூறுகின்றார். இங்கு தானாக சென்றாரா? அழைப்பின் பேரில் சென்றாரா? என்பது முக்கியமான விடயமல்ல.

அவை இரண்டாம் பட்சமான விடயங்கள். சட்டமா அதிபர் அழுத்தம் கொடுத்தாரா? இல்லையா என்பது தான் முக்கியமான விடயம். இதற்கு சரியான பதில் இன்னமும் வழங்கப்படவில்லை.

பாராளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகரா அச்சுறுத்தல் வந்தால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டவர்களை கைது செய்யும் அதிகாரம் நீதிபதிக்கு உண்டு எனக் கூறுகின்றார். இது சிரிப்பிற்கு இடமானதான கருத்து.

நீதிபதி என்னதான் கட்டளைகளை விடுத்தாலும் அதனை நடைமுறைப்படுத்துபவர்கள் அரசாங்கத்தின் ஒரு அரங்கமாக உள்ள படையினரே! குருந்தூர் மலை தொடர்பான கட்டளைகளை மீறி விகாரை கட்டிய படையினரிடம் எவ்வாறு இவற்றை எதிர்பார்க்க முடியும்.

இது உண்மையில் சட்டப்பிரச்சினையல்ல அரசியல் பிரச்சினை.

இதனை சரியாக புரிந்து கொள்வதற்கு இந்த விவகாரத்தை கோட்பாட்டு ரீதியாக விளங்கிக் கொள்வது அவசியமானதாகும்.

இலங்கையின் இனப்பிரச்சினை என்பது தமிழ் மக்கள் ஒரு தேசமாக இருப்பது அழிக்கப்படுவதாகும்.

அதாவது தேசத்தை தாங்குகின்ற தூண்களான நிலம், மொழி ,



பொருளாதாரம், கலாச்சாரம் என்பன அழிக்கப்படுவதாகும் இதன் உச்ச வடிவமே உயிர் அழிப்பாகும். இலங்கைத்தீவு சிங்கள பௌத்தர்களுக்கு மட்டும் உரியது ஏனையவர்கள் வாழ்ந்து விட்டுப்போகலாம் ஆனால் தங்களைத் தாங்களே ஆளத்தகுதியான ஒரு தேசிய இனமாக இருக்க முடியாது. இதற்காகவே இந்த இன அழிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

இந்த இன அழிப்பு என்பது அரசின் செயல்திட்டம். மாறி மாறி ஆட்சிக்கு வருகின்ற அரசாங்கங்களின் செயல்திட்டமல்ல. அரசின் நோக்கங்களை நிறைவேற்றும் கடமையே அரசாங்கங்கள் கொண்டிருப்பதால் எந்த அரசாங்கங்கள் வந்தாலும் இவற்றை மேற்கொள்ளும். அளவு ரீதியில் மட்டும் அரசாங்கங்களுக்கிடையில் வேறுபாடுகள் இருக்கலாம்.

குருந்தூர் மலை விவகாரம் அரசின் இன அழிப்புச்செயல் திட்டத்தின் ஒரு பகுதியே.

அது ஒரே நேரத்தில் நிலப்பறிப்பு, கலாச்சார அழிப்பு என்கின்ற இரண்டு தாங்கு தூண்களை விழுத்துகின்றது. இந்த இன அழிப்பில் முக்கிய பாத்திரத்தை மேற்கொள்பவர்கள் படையினரே! குருந்தூர் மலையில் விகாரை படையினரரலேயே கட்டப்பட்டது. தையிட்டி விகாரையும் படையினராலேயே கட்டப்பட்டது.

அண்மைக்காலமாக இன அழிப்பின் கருவியாக விகாரைகளே பயன்படுத்தப்படுகின்றன. சிங்களக் குடியேற்றங்களுக்கு ஆரம்பத்திலேயே அதிக ஆட்கள் தேவைப்படும். வாழ்வாதார உதவிகள் தேவைப்படும். எல்லைப்புறங்களில் குடியேறுவதற்கு சிங்கள மக்கள் முன்வருவர். ஏனைய சமூகங்கள் வாழும் பிரதேசங்களின் நடுவில் குடியேற முன்வர மாட்டார்கள்.

இதனால் தான் ஆட்சியாளர்கள் விகாரைகளை தேர்ந்தெடுக்கின்றனர் அதற்கு தொல்லியல் பிரதேசங்கள் அவர்களுக்கு வசதியாகி விட்டது.

எதிர்காலத்தில் கொஞ்சம் கொஞ்சமாக சிங்கள மக்களை குடியேற்றுவது அவர்களது இலக்கு. திருகோணமலை நகரக் குடியேற்றங்கள் போன்ற சூழ்நிலையை உருவாக்கலாம் என அவர்கள் கருதலாம்.

போர் வெற்றிக்குப்பின்னர் இந்தக் கட்டமைப்பு சார் இன அழிப்பில் படையினர் தீவிரமாக உள்ளனர். தாம் உயிரைக் கொடுத்து கைப்பற்றிய இடங்களை அரசியல்காரர்கள் அபகரித்துச் செல்ல முடியாது என்ற கருத்தும் அவர்களிடம் உள்ளது. சுருங்கக் கூறின் அரசு படைகள் ஊடாக மேற்கொள்ளும் செயல்திட்டம் என இதனை கூறலாம்.

தொல்லியல் திணைக்களம், வனபரிபாலன திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், பௌத்தசாசன அமைச்சு, பொது நிர்வாக அமைச்சு என்பன படையினரின் செயல்திட்டங்களுக்கு உதவும் கருவிகளே!

இந்த இன அழிப்பு நிகழ்ச்சி நிரலுக்கு நீதிபதி சரவணராஜா தடையாக இருக்கின்றார். ஏனைய தழிழ் நீதிபதிகளும் தடைகளை கொடுக்க முன்வருகின்றனர். இதனை நிறுத்தியாக வேண்டும். என்பதற்காகவே நீதிபதி சரவணராஜா குறி வைக்கப்பட்டார்.

இந்த இன அழிப்பு விவகாரத்தை மறைத்து இது பொதுவான நீதித்துறை மீதான தலையீடு என்ற விம்பத்தையே தென்னிலங்கை அரசியல்வாதிகள் மேலே கொண்டு வர முயற்சிக்கின்றனர்.

மேற்குலகமும் அதனையே விரும்புகின்றது. தமிழ் அரசியல்வாதிகள் சிலரும் இதற்குத்துணை போவது தான் கவலைக்குரிய விடயம்.

பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் இதனை சிராணி பண்டாரநாயக்காவின் விவகாரத்துடன் ஒப்பிடுகின்றார். அது வேறு. இது வேறு. சிராணி பண்டாரநாயக்காவின் விவகாரத்தில் இன அழிப்பு இருக்கவில்லை. அது ஒரு வகையில் அதிகாரப்பிரச்சினை சுமந்திரனிடமும் இந்தப் பார்வையே உள்ளது.

இந்த விவகாரம் அரசின் இன அழிப்பு நிகழ்ச்சி நிரலை அம்பலப்படுத்துவதற்கு கிடைத்த முக்கிய சந்தர்ப்பம், தமிழ்த்தரப்பு இதனை கவனமாக பயன்படுத்தத் தவறக்கூடாது. நீதிபதி சரவணராஜா தனது வாழ்க்கையை பணயமாக வைத்து இந்த சந்தர்ப்பத்தை உருவாக்கி கொடுத்திருக்கின்றார். தமிழ்த்தரப்பு இதனை கோட்டை விடக்கூடாது.

ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க இரண்டு காரணங்களுக்காக இந்த விவகாரத்தில் தப்பியோட முனைவாரானால் ஒன்று இது படையினரால் நகர்த்தப்படுகின்ற செயல்திட்டம். ஜனாதிபதி தனது இருப்பிற்கு படையினரிலேயே தங்கியுள்ளார். எனவே படையினரின் விருப்பத்திற்கு மாறாக எதுவும் செய்ய மாட்டார்.

சர்வதேச அழுத்தங்களில் இருந்து படையினரைக் காப்பாற்றுவதும் ரணில் தான். கோத்தபாயாவை படையினர் கைவிட்டதாலேயே நாட்டைவிட்டு ஓட வேண்டியிருந்தது அந்நிலை தனக்கு வரக்கூடாது அவர் கவனமாக உள்ளார்.

இரண்டாவது அவரும் ஒரு பெருந்தேசியவாதியே! பெருந்தேசியவாதத்தின் லிபரல் முகம் அவருடையது. கொத்திக் கொள்ளும் பாம்புகளாக இல்லாமல் நக்கிக்கொள்ளும் பாம்புகளாக இருப்பவர். தமிழ் வாக்கு வங்கியை பாதுகாக்க வேண்டும் என்பதற்காக தமிழர் விவகாரத்தில் கரிசணை காட்டுவது போல தோற்றம் கொடுக்கின்றாரே தவிர அது உண்மையான தோற்றம் இல்லை.

சிங்கள் மக்களுக்கும் நல்ல பிள்ளை தமிழ் மக்களுக்கும் நல்ல பிள்ளை என்ற நிலையை எடுக்க அவர் முற்படுகின்றார்.

நீதிபதி சரவணராஜா பதவி விலகல் தொடர்பாக தமிழ்த்தரப்பின் எதிர்வினைகள் திருப்திகரமாக இருந்தது எனக் கூற முடியாது. தமிழ் சட்டத்தரணிகள் ஒப்பீட்டு ரீதியில் சில முயற்சிகளைச் செய்துள்ளனர். அதுவும் ஓரிரு நாட்கள் தான்.

முல்லைத்தீவு சட்டத்தரணிகளிடம் பொறுப்பை ஒப்படைத்து விட்டு அவர்கள் கடமைகளுக்குச் செல்லும் நிலையே உள்ளது. முல்லைத்தீவு சட்டத்தரணிகள் தனித்து விடப்பட்டுள்ளனர். குறைந்த பட்சம் ஒரு வாரமாவது போராட்டத்தை நடத்தியிருக்கலாம். கொக்குவிலில் நீதி தேவதையை முன்னால் இருத்தி நீதி கேட்டும் போராட்டத்தை முன்னெடுத்தமை முன்மாதிரியான போராட்ட வடிவமே! முன்னாள் மேஜர் மணிவண்ணனின் கைவண்ணம் இங்கு தெரிகின்றது.

தமிழ்த்தேசியக் கட்சிகள் ஒன்று சேர்ந்து மனிதச்சங்கிலி போராட்டத்தை நடாத்தின. சரியான ஒழுங்குபடுத்தல் இல்லாததினால் மனிதச் சங்கிலி போராட்டம் ஆர்ப்பாட்டமாக மாற்றப்பட்டது. மருதனார்மடத்தில் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது போதிய மக்கள் கூட்டம் இருக்கவில்லை. சிவில் அமைப்புக்களும் போதியளவிற்கு பங்கேற்கவில்லை. யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களின் ஒத்துழைப்பும் பெறப்பட்டதாக தெரியவில்லை.

போராட்ட வெளிப்படுத்தலிலும் குறைபாடு இருந்தது. இது ஒரு நீதிப்பிரச்சினை என்பது வெளிப்பட்டதே தவிர இது ஒரு இன அழிப்பு பிரச்சினை என்பது போதியளவிற்கு வெளிப்படுத்தப்படவில்லை. இது இன அழிப்பின் ஒரு பகுதி என்பது தென்னிலங்கை அடையாளம் கண்டதால் அறிக்கைகளுக்கு அப்பால் அவர்களின் எதிர்வினைகள் இருக்கவில்லை.

புலம்பெயர்நாடுகளிலும் தமிழ் நாட்டிலும் பேரெழுச்சியைக் கொண்டுவந்திருக்கலாம். இரண்டு தளங்களிலும் போதிய கரிசனைகள் காட்டப்படவில்லை. தாயகத்தில் எழுச்சிகன் இல்லாமல் தமிழ் நாட்டிலும் புலம்பெயர்நாடுகளிலும் எழுச்சிகளை எதிர்பார்க்க முடியாது.

வரலாறு சந்தர்ப்பங்களை எப்போதும் தருவதில்லை என்ற உண்மையை தமிழ்த்தரப்பு புரிந்து கொள்வது நல்லது என குறிப்பிடப்பட்டுள்ளது.

நன்றி: சி.ஆ. யோதிலிங்கம் ஐயா


JATHU RENOVATION
Free!
ESTIMATES
உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்
★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com


அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சினை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203


The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com


Call today to Save energy
Free Estimate!
Call today
$50 OFF
When you order more than $1000
Broken Glass...? (Door & window)
We will fix it within 24 hour.
Let us help with...
Replacement (Door & Windows)
Custom Door & Windows
Front Door & Patio Door
Garden Door
Door & Windows Re-Caulking (Important)
Painting Doors & Windows
Basement Separate Entrance Door
Home Painting
Spotlights installation
California Shutters
PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com




# இலங்கையின் பூர்வீககுடிகள் தமிழர்கள்!

தமிழர்களே சிறீலங்காவின் பூர்வீகக் குடிகள் எனவும் தமிழ் மொழியே சிறீலங்காவின் தொன்மையான மொழியெனவும் யாழ். பல்கலைக்கழகத்தின் சிரேஸ்ட பேராசிரியரும், வரலாற்றுத்துறை, தொல்லியல்த்துறைத் தலைவரும், சிறீலங்காவின் மரபுரிமைச் சின்னங்களைப் பாதுகாப்பதற்கான மத்திய கலாசார நிலையத்தின் தொல்லியல் பணிப்பாளருமான சிரேஸ்ட பேராசிரியர் புஸ்பரட்ணம் தெரிவித்துள்ளார்.

இதனை சிங்கள அறிஞர்களே சான்றுகளோடு குறிப்பிட்டுள்ளனரென இதழ் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் தெரி வித்துள்ளார்.




குறித்த நேர்காணலின் முழு வடிவம் வருமாறு,

01. கிழக்கு மாகாணத்திற்கென உருவாக்கப்பட்டுள்ள தொல்லியல் செயலணி தொடர்பான தங்களின் கருத்து என்ன?

சிறீலங்காவில் பிரித்தானியரின் ஆட்சிக்காலம் தொடக்கம் ஒரு தொல்லியல் திணைக்களம் இயங்கி வருகிறது.

அந்தக் காலம் தொடக்கம் ஒரு தொல்லியல் சான்றை அல்லது மரபுச்சின்னத்தைப் பேணிப் பாதுகாக்கின்ற பொறுப்பு அதன் பணிப்பாளர் நாயகத்திற்கே உரியது. அவருடைய மேலாண்மையின் கீழ் உதவிப் பணிப்பாளர்கள், அகழ்வாராட்சியாளர்கள் இருப்பார்கள்.

அதுபோல கல்வெட்டு, நாணயவியல், வெளியீடுகள் போன்றவற்றிற்குப் பொறுப்பான உதவிப் பணிப்பாளர்களும் இருக்கிறார்கள்.

தொல்லியல் சின்னங்களை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குக் கொண்டு செல்வதற்கு அல்லது அதற்குச் சேதம் ஏற்படுத்துவதைக் கண்காணிப்பதற்குத் தனியான ஒரு பொலிஸ் பிரிவும் இருக்கிறது.

ஆனால் கிழக்கு மாகாணத்திற்கெனத் தனியான ஒரு தொல்லியல் செயலணி உருவாக்கப்பட்டுள்ளது அது குறித்த எந்தத் தகவலும் எமக்கு முறையாக அறிவிக்கப்படவில்லை.

அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்? எங்கே செய்யப் போகிறார்கள்? என்னென்ன மரபுரிமைச் சின்னங்களைப் பாதுகாக்கப்போகிறார்கள்? என்பது பற்றிய எந்த விளக்கமும் இல்லை. அது தொடங்கப்பட்டு நடை முறைப்படுத்தப்படும் போது தான் அது குறித்துச் சொல்ல முடியும்.




அப்போது தான் தெரியும் அவர்கள் குறித்தவொரு சமூகத்தின் தொல்லியல் மரபுரிமைகளைப் பாதுகாக்கப் போகிறார்களா? அல்லது பல்லினப் பண்பாடு கொண்ட கிழக்கிலங்கையின் அனைத்து மக்களுடைய மரபுரிமைகளையும் பாதுகாக்கப் போகிறார்களா? என்று.

ஆனால் குறித்த செயலணியின் சிங்களவர் ஒரு சிலரால் கிழக்கிலங்கையின் எல்லா சமூகத்தினரதும் மரபுரிமைகள் பாதுகாக்கப்படும் என்றே கருத்துச் சொல்லப்படுகிறது. அதன் உண்மை நிலை என்ன என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

02. கிழக்குச் செயலணியில் தமிழ் மக்கள் இணைத்துக் கொள்ளப்படாமையை எவ்வாறு பார்ப்பது?

எனக்கும் அதுவொரு ஆச்சரியமான விடயமாகத்தான் தெரிகிறது. சிறீலங்காவின் தொல்லியல் திணைக்களத்தில் சிங்கள தொல்லியல் ஆய்வாளர்களும், அறிஞர்களும் பணியாற்றுவதைப் போலத்தமிழ் ஆய்வாளர்கள்களும், அறிஞர்களும் பணியாற்றுகிறார்கள்.

தென்னிலங்கையின் தொல்லியல் சார்ந்த பட்டப்படிப்புக்களில் தமிழ் மாணவர்களும் கற்றுப் பட்டதாரிகளாக வெளியேறியிருக்கிறார்கள்.

தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்கள் தமிழ் பட்டதாரிகளை மேற்படிப்புகளுக்காக இணைத்துக் கொள்கின்றன.

இந்நிலையில் கிழக்குச் செயலணியில் தமிழர்கள் இணைத்துக் கொள்ளப்படாமைக்கான காரணங்கள் என்னவெனத் தெரியவில்லை. காலப்போக்கில் தெரியவரும் என நினைக்கிறேன் .

03. "கிழக்குச் செயலணியில் சேர்த்துக் கொள்ளத்தக்க நிபுணத்துவம் மிக்க தமிழ்ப் பிரதிநிதிகள் யாரும் இல்லை." என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிடுகிறாரே? இது குறித்து உங்கள் கருத்து என்ன?

அப்படி நிபுணத்துவம் மிக்க யாரும் இல்லையென்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சொன்னதாக நான் பார்க்கவில்லை. ஆனால் செயலணியில் சேர்ப்பதற்குப் பொருத்தமானவர்களைத் தான் தேடிக்கொண்டிருப்பதாக அவர் சொல்லிய செய்தியொன்றை நான் பார்த்தேன்.

என்னைப் பொறுத்தவரை ஒரு செயலணி தொடங்குகின்ற பொழுது Terms of Reference என்பது மிக முக்கியமானது. அதாவது என்னென்ன மரபுரிமைச் சின்னங்களைப் பாதுகாக்கப் போகிறார்கள் அல்லது ஆவணப்படுத்தப் போகிறார்கள்? அது எப்படி மீளுருவாக்கம் செய்யப்படப்போகிறது? போன்ற விடயங்கள் பகிரங்கமாகத் தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

சிறீலங்காவிலே பௌத்த மதம் அல்லது பௌத்த பண்பாட்டுக்கு முன்னரே ஒரு தொன்மையான பண்பாடு கொண்ட பல இடங்கள் கிழக்கிலங்கையிலே இருந்தமை அடையாளப் படுத்தப்பட்டுள்ளன .

அவற்றையெல்லாம் கணக்கில் எடுப்பார்களா? அல்லது குறிப்பிட்ட சில மரபுரிமைச் சின்னங்களை மட்டும் கணக்கில் கொள்வார்களா? எதுவும் தெரியாது. இப்படியொரு நிலையில் அதில் தமிழர்களை இணைந்துக்க கொள்வது அவ்வளவு பொருத்தமாகத் தெரியவில்லை.

அதேபோல அதனுடைய உருவாக்கம், பின்னணி போன்ற தெளிவின்மையால் நிபுணர்கள் அதில் கலந்துகொள்வதற்குத் தயங்கலாம். அது அமைச்சருக்குத் தெரிந்திருக்கும் என்றே நினைக்கிறேன்.

அப்படித் தமிழ் நிபுணர்கள் இல்லையென்று யாராவது கூறினால் அது மிகவும் தவறான கூற்று. இத்தகைய நிலையில் இதில் பங்கு கொள்ள நிபுணர்களுக்கு ஆர்வமில்லாமல் இருக்கலாம் . அது அவரவரின் சொந்த நலன், விருப்பு சார்ந்தது.

04. தமிழர்கள் சிறீலங்காவின் ஆதிக்குடிகள் என்ற விடயத்தைப் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் குறிப்பிட்டமையானது சர்சையை ஏற்படுத்தியுள்ளது. அது குறித்து உங்கள் நிலைப்பாடு என்ன? அல்லது தமிழர்கள் சிறீலங்காவின் ஆதிக்குடிகள் என்பதற்கான வரலாற்றுத் தொல்லியல் சான்றுகளாக எதனைக் கருதலாம்?

சிறீலங்காவில் தமிழர்கள் முதலில் வந்தார்களா? சிங்களவர்கள் வந்தார்களா? என்ற பிரச்சினை மிக நீண்ட காலமாகவே இருந்து வருகிறது.

இது பாளி மற்றும் தமிழ் இலக்கியங்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு சொல்லப்படுகின்ற ஒருவாதம்.

ஆனால் தமிழ், சிங்கள மக்கள் அனைவருமே இன அடிப்படையில் ஒன்றுபட்ட மக்கள், மொழி பண்பாட்டு அடிப்படையில் வேறானவர்கள் என்பது தான் தொல்லியல், மானுடவியல், வரலாற்று ,மொழியியலாளர்களுடைய கருத்து.

விக்னேஸ்வரன் ஐயா சொன்ன கருத்து ஒரு புதிய விடயமல்ல. ஏனென்றால் இவருக்கு முன்பாகவே தென்னிலங்கைச் சிங்கள அறிஞர்கள் பலர் "தமிழர்கள் சிறீலங்காவின் பூர்வீகக் குடிகள்" என்பதையும், "தமிழ்மொழி தொன்மையான மொழி" என்பதையும் சொல்லியிருக்கிறார்கள்.

பேராசிரியர் குணத்திலக தமிழர்களின் அகழ்வு பற்றிக் குறிப்பிடும் போது "ஆழமாகத் தோண்டிக் கொண்டு சென்றால் அது






தமிழர்களுக்குச் சாதகமாகவும், அகலமாகத் தோண்டிக் கொண்டு போனால் அது பௌத்த சிங்களவர்களுக்குச் சாதக மாகவும் அமையும் எனக் குறிப்பிட்டிருந்தார்.

அதுபோல மூத்த தொல்லியல் அறிஞர் சேனக்க பண்டாரநாயக்க "விஜயன் யுகத்திற்கு முன்னரே ஒரு வளமான நாகரிகம் இருந்திருக்கிறது.

சிறீலங்கா மக்களிடையே உடற்கூற்றியல் வேறுபாடுகள் இல்லை, பண்பாட்டு வேறுபாடுதான் உண்டு. அந்தப் பண் பாட்டு வேறுபாடுகளை விஜயன் வருகைக்கு முன்னரான பண் புகளுடன் ஒப்பிட்டு ஆய்வுகளைச் செய்ய வேண்டும்." என குறிப்பிடுகிறார்.

பேராசிரியர் சத்தமங்கள கருணாரத்ன "1962ஆம் ஆண்டு சிறீலங்காவுக்கு பௌத்த மதத்தோடு சேர்ந்து மொழியும், எழுத் தும் வருவதற்கு முன்னரே தமிழ்நாட்டுக்குரிய எழுத்துவடிவம் செழிப்பாக இருந்திருக்கிறது ." என குறிப்பிடுகிறார்.

பின்னாளில் இந்தக் கருத்தைப் பேராசிரியர் பெர்ணான்டோ, கலாநிதி ஆரிய அபயசிங்க போன்றவர்களும், சிங்கள எழுத்து நெடுங்கணக்கை ஆராய்ந்த அறிஞர்களும் இதனை ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

இத்தனைக்கும் மேலாக கலாநிதி விக்கிரபாகு கருணாரத்தின அவர்களே "தமிழர்கள் தான் இலங்கையின் பூர்வீகக் குடிகள்" என்று கூறுகின்றார்.

அப்படி இருக்கையில் சபாநாயருக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் நிகழ்வில் இதனை ஒரு விடயமாகச் சொல்லாமல், சிறீலங் காவின் தொல்லியல், எமது கலாசாரம், பண்பாடு தொடர்பான நாடாளுமன்ற விவாதங்களில் பேசியிருக்கலாம். மற்றும்படி அவர் சொன்னதில் எந்தத் தவறும் கிடையாது. அது தான் நிதர்சனமான உண்மை.

05. கிழக்கு மாகாண மக்களின் தமிழ்த் தேசியம் சார்ந்த நிலைப்பாடு தற்போது எவ்வாறு உள்ளது?



மன்னார் கட்டுக்கரை சார்ந்த பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்ட தொல்லியல் சான்றுகளில் சில

கிழக்கு மாகாணத்தில் மட்டுமல்ல பொதுவாக வடக்கு கிழக்கு தழுவியதாகவே தமிழ் தேசியத்தில் பாரியளவு சரிவு ஏற்பட் டுள்ளது. எனக்கு நேரடி அரசியலில் அவ்வளவு ஆர்வம் கிடையாது.

ஆனாலும் இந்தமுறை தேர்தல் முடிவுகளை வைத்துப் பார்க் கின்ற போது தமிழ் தேசியம் சார்ந்து அதனுடைய வீச்சு வெகு வாகக் குறைந்திருக்கிறது.

அதற்குக் காரணம் தமிழ் தேசியம் சார்ந்து பேசும் கட்சிக ளுடைய பலவீனம் அல்லது அவர்களின் செயலின்மை தான் தேர்தலில் கொடுக்கப்படுகின்ற வாக்குறுதிகளை நடைமுறை யில் சாத்தியப்படுத்த முடிவதில்லை.

இதனால் மக்கள் ஏமாற்றமடைந்துள்ளார்கள். மக்களும் பல பொருளாதார சிக்கல்கள், பிரச்சினைகளை எதிர்கொள்வதால் அவர்களின் மனோ நிலையிலும் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

இதில் எந்தளவு உண்மை உள்ளது என்பதை அரசியல் ஆய் வாளர்கள் தான் ஆய்வு செய்ய வேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் தமிழ் தேசியம் பேசுவதில் பல அச்ச நிலைமைகள் உண்டு. ஆனால் வடக்கில் அவ்வாறில்லை. ஆனாலும் வடக்கில் பாரிய சரிவு ஏற்பட்டுள்ளது.

எனது தனிப்பட்ட கருத்து என்னவெனில் 'தமிழ் மக்களை வழி நடத்துகின்ற தலைமைகளிடையே எமது வரலாற்றுச் சின்னங் களைப் பாதுகாக்க வேண்டுமென்பதில் எந்த முகாந்திரமும் கிடையாது. அதுபற்றிய ஆர்வமோ கொள்கைப் பிரகடனங் களோ கிடையாது.

அது தேர்தல் காலங்களில் மட்டுமென்றில்லாமல், சாதாரண நிலமைகளிலும் அதற்கான ஒரு செயலணியை உருவாக்கி, அவற்றினை நாம் ஆவணப்படுத்திப் பாதுகாக்கலாம்.

தென்னிலங்கையில் அவர்கள் தங்களது மரபுரிமைச் சின்னங் களைக் கண்டறிந்து பாதுகாப்பதில் மிகவும் அக்கறை கொண் டுள்ளார்கள். அரசியல்வாதிகள் என்றில்லாமல் சாதாரண மக் களும் அதில் ஆர்வம் கொண்டுள்ளார்கள். அதனைப் பாட சாலைகள், பல்கலைக்கழகங்கள், பொதுநிறுவனங்கள் முன் னெடுத்துச் செல்கின்றன.

ஆனால் தமிழ் பாடசாலைகளில் ஒரு பாடசாலையில் கூட அந்தந்தக் கிராமத்தின் வரலாற்று மரபுரிமைச் சின்னங்கள் கூட பாதுகாக்கப்படுவதில்லை.

அதுபோல நயினாதீவில் உள்ள ஒரு ஆலயத்தைத் தவிர வேறெந்த ஆலயங்களிலும் இது தொடர்பான முயற்சிகள் எடுக் கப்படவில்லை. அதற்கு மாறாகத் தமிழர்களின் மரபுரிமைச் சின்னங்கள் விற்பனை செய்யப்படுவதைப் பல இடங்களில் அவதானிக்கிறேன்.

தென்னிலங்கையில் யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய மரபுரிமைச் சின்னங்களை விற்பதற்கென்றே பல கடைகள் உள்ளன.



அதற்கான காரணம் இது தொடர்பான விழிப்புணர்வு சாதாரண மக்களிடையே ஏற்படுத்தப்படவில்லை என்பதே நிதர்சனம் என அவர் தெரிவித்துள்ளார்.

நன்றி: பேராசிரியர் புஸ்பரட்ணம

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்யும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது.
இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு தொடர்புகளுக்கு
437.345.4203

# நீதிபதிக்கே கிடைக்காத நீதி?

03.10.2023




கடந்த வாரம் திலீபன். இந்த வாரம் ஒரு நீதிபதி. முல்லைத்தீவு நீதிபதிக்கு எதிரான சரத் வீரசேகரவின் கருத்துக்கள் வெற்றிடத்தில் இருந்து வரவில்லை. அவை ஒரு தனி நாடாளுமன்ற உறுப்பினரின் கூற்றுகள் என்றும் எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. அவை ஒரு கூட்டு உளவியலின் வெளிப்பாடுகள். கடந்த பல தசாப்தங்களாக சுமார் அரை நூற்றாண்டுக்கு மேலாக சிறீலங்கா நாடாளுமன்றம் எனப்படுவது வெறுப்பு பேச்சுக்களைக் கக்கும் ஓரிடமாகத்தான் காணப்படுகிறது. இனப்படுகொலை தொடர்பான ஐநாவின் நிபுணத்துவக் கூற்று ஒன்று உண்டு. “யூத இனப்படுகொலை எனப்படுவது காஸ் சேம்பர்களில் இருந்து - நச்சு வாயுக் கொலைக்கூடங்களில் இருந்து தொடங்கவில்லை. வெறுப்புப் பேச்சுகளில் இருந்துதான் தொடங்கியது” என்று.

இலங்கை நாடாளுமன்றம் கடந்த பல தசாப்தங்களாக தமிழ் மக்களுக்கு எதிரான வெறுப்பு பேச்சுக்களை அச்சமின்றிக் கூறும் ஓரிடமாகக் காணப்படுகின்றது. நாடாளுமன்றப் பதிவேட்டில் இருந்து நீக்கப்பட்ட மற்றும் நீக்கப்படாத வெறுப்புப் பேச்சுக்களைத் தொகுத்தாலே போதும், இனப்பிரச்சினையின் ஊற்றுக்களை; இனப்படுகொலையின; ஊற்றுக்களைத் தெளிவாகக் காணலாம். சரத் வீரசேகர ஒரு தனி நாடாளுமன்ற உறுப்பினராக முல்லைத்தீவு நீதிபதியை அவமதிக்கவில்லை. அவர் ஒரு சமூகத்தின் கூட்டு உளவியலைத்தான் பிரதிபலித்தார். ஒரு நாடாளுமன்றத்தின் அபகீர்த்திமிக்க ஒரு பாரம்பரியத்தின் ஆகப்பிந்திய வாரிசு அவர்.

முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தன தனக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கிய பிரதம நீதியரசர் நெவில் சமரக்கோனின் வீட்டை கற்களால் தாக்குமாறு தனது ஆதரவாளர்களை ஏவியதாக குற்றம் சாட்டப்படுகிறது. எந்தப் பிரதம நீதியரசரின் முன் அவர் பதவியேற்றாரோ, அதே பிரதம நீதியரசரின் வீட்டைத் தாக்குமாறு குண்டர்களே ஏவி விட்டார். ராஜபக்சக்கள் இலங்கைத் தீவின் முதற் பெண் பிரதம நீதியரசரான சிராணி பண்டாரநாயக்காவை நாடாளுமன்றத்தின் மூலம் பதவி நீக்கினார்கள். தங்கள் சொந்த இனத்தைச் சேர்ந்த பிரதம நீதியரசர்களையே அவமதிக்கும் ஓர் அரசியல் பாரம்பரியத்தில், ஒரு மாவட்ட நீதிபதிக்கு இவ்வாறு நடந்தமை புதுமையானது அல்ல.



அதுமட்டுமல்ல இந்த விடயத்தில் தமிழ் மக்கள் மேலும் ஆழமாக விளங்கிக் கொள்ள வேண்டிய ஒரு விடயம் உண்டு. சட்டம், நீதி பரிபாலனக் கட்டமைப்பு போன்றவை சுயாதீனமானவை என்று கூறப்படுவது ஒரு தோற்றமாயைதான். ஜனநாயக இதயம் செழிப்பாக இருக்கும் ஒரு நாட்டில் நீதி பரிபாலனத் துறைக்கும் சட்டவாக்கத்துறைக்கும் இடையே வலுவேறாக்கம் இருக்கக்கூடும். ஆனால் ஜனநாயகத்துக்குப் பதிலாக இனநாயகம் பயிலப்படும் ஒரு நாட்டில், இனநாயகத்தின் பாதுகாப்பிடமாகக் காணப்படும் ஒரு நாடாளுமன்றம் இனரீதியாக பாரபட்சமுள்ள சட்டங்களைத்தான் நிறைவேற்றும். அதாவது ஓர் அரசுக் கட்டமைப்பின் அரசுக் கொள்கை எதுவோ அதைத்தான் அவர்கள் சட்டமாக நிறைவேற்றுவார்கள். அந்த சட்டத்தைத்தான் நீதிபரிபாலானக் கட்டமைப்பு அமுல்படுத்தும். அதாவது சட்டமும் நீதிபரிபாலனக் கட்டமைப்பும் அரசின் உபகரணங்கள்தான். இதில் சில தனிப்பட்ட நீதிபதிகள் அந்த சிஸ்டத்தின் கைதிகளாக இருக்க மறுக்கும் பொழுது நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டி வரும்.

சட்டம் என்பது அதிகாரத்தின் சேவகன்தான். அதிகாரத்தில் இருப்பவர்கள் தமது ஆட்சிக் கொள்கையை அமுல்படுத்த சட்டங்களை இயற்றுவார்கள். பயங்கரவாதத் தடைச்சட்டம், இப்பொழுது விவாதிக்கப்படும் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம், நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் போன்ற எல்லாமே ஒடுக்கும் அரசுக்கட்டமைப்பின் உபகரணங்களே. இவை மட்டுமல்ல பெருந்தொற்று நோய்க் காலத்தில் தனிமைப்படுத்தல் சட்டமானது தமிழ் மக்களின் நினைவு கூரும் உரிமைக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டதை இங்கு சுட்டிக்காட்டலாம்.

இதுதொடர்பில் அதிகம் பகிரப்படும் ஓர் ஆங்கிலக் கூற்று உண்டு. “தென்னாபிரிக்காவின் இனஒதுக்கல் சட்டபூர்வமாகத்தான் செய்யப்பட்டது. ஹிட்லர் யூதர்களை இனப்படுகொலை புரிந்தமை சட்டபூர்வமாகத்தான் செய்யப்பட்டது. அடிமை முறைமை சட்டபூர்வமானது. கொலோனியலிசம் அதாவது குடியேற்றவாதம் சட்டபூர்வமானது. எது சட்டபூர்வமானது என்பது நீதியின் பாற்பட்ட ஒரு விவகாரம் அல்ல. அது அதிகாரத்தின் பாற்பட்ட ஒரு விவகாரமே”.

இலங்கைத்தீவில் நாடாளுமன்றம் இனரீதியிலான அதிகாரத்தைப் பிரதிபலிக்கும்போது இங்கு சட்டமும் அந்த அதிகாரத்தின் சேவகனாகவே காணப்படும். இந்த விளக்கத்தின் பின்னணியில் வைத்துத்தான் முல்லைத்தீவு நீதிபதியின் விவகாரத்தைப் பார்க்க வேண்டும்.

இலங்கைத்தீவின் உள்நாட்டு நீதியெனப்படுவது ஏற்கனவே கேள்விக்கு உள்ளாக்கப்பட்டு விட்டது. 2015ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நிறைவேற்றப்பட்ட ஐநாவின் நிலைமாறுகால நீதிக்கான அல்லது பொறுப்புக் கூறலுக்கான தீர்மானம் எனப்படுவது உள்நாட்டு நீதியின் நம்பகத் தன்மையை கேள்விக்கு உள்ளாக்குகின்றது. உள்நாட்டு நீதி போதுமாக இருந்தால் எதற் காக நிலைமாறு கால நீதி என்ற அனைத்துலக ஏற்பாட்டைக் குறித்துச் சிந்திக்க வேண்டி வந்தது?

மேலும் அண்மையில் வெளியிடப்பட்ட சனல் நாலு வீடியோவும் உள்நாட்டு நீதி தொடர்பாக ஏற்கனவே உள்ள சந்தேகங்களைப் பலப்படுத்துகின்றது.

கடந்த ஆண்டு ஐநாவில் நிறைவேற்றப்பட்ட 56/1 தீர்மானத்தின் அடிப்படையில் சாட்சிகளையும் சான்றுகளையும் சேகரித்துத் தொகுப்பதற்கான ஒரு கட்டமைப்பு ஐநா மனித உரிமைகள் ஆணையருடைய அலுவலகத்தின் கீழ் செயல்பட்டு வரு கின்றது. இதில் சேகரிக்கப்படும் தகவல்கள் என்றைக்கோ ஒரு நாள் இலங்கைக்கு எதிராக பயன்படுத்தப்படத்தக்கவை. அவை நிச்சயமாக இலங்கைத் தீவின் உள்நாட்டு நீதிபரிபாலனக் கட் டமைப்பிடம் வழங்கப்படப் போகும் தகவல்கள் அல்ல. இலங் கைத் தீவின் உள்நாட்டுப் புலனாய்வுக் கட்டமைப்பு மற்றும் நீதிபரிபாலான கட்டமைப்பு என்பவற்றின் மீதான நம்பகத் தன்மையை அந்த அலுவலகம் கேள்விக்கு உள்ளாக்கு கின்றது.

இவ்வாறான அனைத்துலகச் சூழலில்தான் முல்லைத்தீவு நீதிபதியின் பதவி விலகல் நடந்திருக்கிறது. இது பொறுப்புக் கூறல் தொடர்பில் இலங்கைத் தீவின் மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை மேலும் பலப்படுத்தக்கூடியது. தமிழ் மக்கள் ஏன் அனைத்துலக விசாரணையைக் கேட்கின்றார்கள் என்பதனை நிரூபிப்பதற்கு ஆகப்பிந்திய சான்று இது.

தென்னிலங்கையில் உள்ள பேராயர் மல்கம் ரஞ்சித், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன போன்றவர்கள் அனைத்துலக விசாரணை குறித்த தமது கோரிக்கைகளிலிருந்து பின்வாங்கும் ஓர் அரசியல் சூழலில், இந்த விவகாரம் தமிழ் நோக்கு நிலையில் பொருத்தமாகக் கையாளப்பட வேண்டிய ஒன்று. பேராயர் மல்கம் ரஞ்சித், மைத்திரிபால சிறிசேனா போன்றவர்கள் தொடக்கத்தில் அனைத்துலக விசாரணை தேவை என்று கேட்டார்கள். ஆனால் இப்பொழுது அவர்களுடைய கோரிக்கை தளம்பத் தொடங்கி விட்டது. சிங்கள பௌத்த கூட்டு உளவியலைப் பாதுகாப்பதற்காக அவர்கள் தளம்பத் தொடங்கி விட்டார்கள். எந்த ஒரு கூட்டு உளவியலின் பிரதிநிதியாக சரத் வீரசேகர பேசுகிறாரோ, அதே கூட்டு உளவியலின் வெவ்வேறு முகங்கள்தான் பேராயரும் முன்னாள் ஜனாதிபதியும்.

எனவே அனைத்துலக விசாரணைக்கான கோரிக்கையை தமிழ் மக்கள் பெரும்பாலும் தனியாகத்தான் முன்னெடுக்க வேண்டியிருக்கும். ஆனால் அதைக்கூட ஒரு கட்சியாக முன்னெடுப்பதற்குப் பதிலாக பல கட்சிகளாக முன்னெடுப்பதே பலம்.

கடந்த கிழமை திலீபன், இந்தக் கிழமை ஒரு நீதிபதி... என்றவாறாக தமிழ் மக்களின் கவனமும் ஊடகங்களின் கவனமும் புதிய புதிய விடயங்களின் மீது குவிக்கப்படுகின்றது. ஆனால் அவை வெவ்வேறு விடயங்கள் அல்ல. ஒரே ஒடுக்கும் கட்டமைப்பின் வெவ்வேறு வெளிப்பாடுகளே அவை. அவற்றை அவற்றுக்கேயான ஒட்டுமொத்த வரைபடத்துக்குள் வைத்து தமிழ்மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். அதாவது ஒடுக்குமுறைக்கு ஒரு நீண்ட கால வழி வரைபடமும் மாறாத நிகழ்ச்சி நிரலும் ஒன்றிணைந்த செயல்பாடும் உண்டு.

எனவே அதற்கு எதிரான போராட்டங்களும் ஒன்றிணைக்கப்பட்டதாக இருக்க வேண்டும். தாயகம், புலம்பெயர் சமூகம், தமிழகம் ஆகிய மூன்று தரப்புகளும் ஒன்றிணைந்து அந்தக் கோரிக்கையை உக்கிரமாக முன்வைக்க வேண்டும். அனைத்துலக குற்றவியல் நீதிமன்றங்களை நோக்கி செல்வதற்கான வழி வரைபடம் ஒன்று தமிழ் கட்சிகளிடமும் செயற்பாட்டாளர்களிடமும் இருக்க வேண்டும்.

அனைத்துலக விசாரணை வேண்டும் என்ற கோரிக்கை ஐநாவுக்கு எழுதும் கடிதங்களில் மட்டும் இருந்தால் போதாது. அல்லது ஐநாவின் பக்க நிகழ்வுகளில் அல்லது சிறீலங்கா நாடாளுமன்றத்தில் ஆற்றப்படும் உரைகளில் இருந்தால் மட்டும் போதாது. அல்லது ஊடகங்களுக்கு வழங்கப்படும் நேர்காணல்களில் இருந்தால் மட்டும் போதாது. அல்லது தேர்தல் கால விஞ்ஞாபனங்களில் இருந்தால் மட்டும் போதாது. அதற்குமப்பால், அதைவிட ஆழமான பொருளில், அதற்கு வேண்டிய கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும். அனைத்துலக விசாரணையைக் கோருவது அல்லது பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றங்களை நோக்கி விவகாரத்தை எடுத்துச் செல்வது போன்றன அறநெறியின் பாற்பட்ட அல்லது நீதிநெறியின் பாற்பட்ட கோரிக்கைகள் அல்ல. அவை முழுக்க முழுக்க வெளியுறவுச் செயற்பாடுகள். பலம் வாய்ந்த நாடுகள் அப்படி ஓர் அரசியல் தீர்மானத்தை எடுக்க வேண்டும். ஏனென்றால் இந்த பூமியிலே தூய நீதி என்று எதுவும் கிடையாது. அரசியல் நீதிதான் உண்டு. நிலைமாறுகால நீதியோ அல்லது பரிகார நீதியோ எதுவானாலும், அரசியல் நீதி என்பது நாடுகளுக்கு இடையிலான அரசியல், பொருளாதார, படைத்துறை நலன்களின் அடிப்படையில் எடுக்கப்படுவதுதான்.

நன்றி: நிலாந்தன்

# தடைகள் தகரும் தமிழீழம் மலரும்

## பாகம் 01 மற்றும் பாகம் 02






தடைகள் தகரும் தமிழீழம் மலரும் –பாகம் ஒன்று நூலானது, தமிழீழ நாட்டின் யாழ். மாவட்டத்திலுள்ள பலாலி சிறிலங்கா வான்படைத் தளம் மீது மேற்கொள்ளப்பட்ட கரும்புலித் தாக்குதல்கள் எவ்வாறு மேற்கொள்ளப்பட்டன என்பதைனையும், தடைகள் தகரும் தமிழீழம் மலரும் – பாகம் இரண்டு நூலானது தமிழீழ நாட்டின் யாழ். மாவட்டத்திலுள்ள அளவெட்டிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கரும்புலித் தாக்குதலையும் இயம்பி நிற்கின்றன.

இத்தாக்குதல்களில் பங்குபற்றி மீண்டும் தளம் திரும்பி, நீண்ட நெடுங்காலமாகக் கரும்புலி அணியில் பயணித்த சி. செ. புலிக்குட்டி அவர்களால் இந்நூல்கள் எழுதப்பட்டன.

காலத்தின் தேவை கருதியும், தமிழீழப் போராட்ட வரலாறுகள் தலைமுறை தலைமுறையாகத் தமிழ் மக்களின் கைகளில் வாழ வேண்டும் என்பதற்காகவும் மிகக் கடினமான பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் இந்நூல்கள் எம்மால் வெளியீடு செய்யப்படுகின்றன.

அண்மையில் பல நாடுகளில் இந்நூல்கள் வெளியீடு செய்யப்பட்டு இப்போது கனடா மண்ணிலும் வெளியாகியுள்ளது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வீரம் செறிந்த வரலாறுகளையும், உயர் ஈகம் செறிந்த வரலாறுகளையும் தமிழ் மக்களாகிய நீங்கள் அனைவரும் படித்து அறிதல் வேண்டும். இந்நூல்களை நீங்கள் பெற்றுக்கொள்வதற்கு கீழே தரப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளவும், நூல்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

நன்றி
அன்புடன் நிர்வாகம்.

பங்களிப்பு $30

தொடர்புகொள்ள வேண்டிய மின்னஞ்சல் முகவரி

tttamileelammalarum@gmail.com




# தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் வளர்ச்சிக்குப் பெரும் துணையாக நின்ற தளபதி ராயு

ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட அம்பலவாணர் நேமிநாதன் என்ற இயற்பெயருடைய ராயு அண்ணை, புலிகளின் இந்தியா-03 பயிற்சிப் பாசறையில் தனது அடிப்படை இராணுவப் பயிற்சியைப் பெற்றிருந்தார்.

நேரிய பார்வை, எதையும் தீர்க்கமாக ஆராய்ந்தறியும் தன்மை, ஓயாத உழைப்பு, இவைகள் ராயு அண்ணையின் அடையாளங்கள். போராளிகளோ பணியாளர்களோ யாரையும் சாதுரியமாக வேலை செய்விப்பதில் அவருக்கு நிகர் அவரேதான். கொடுக்கப்பட்ட பணிகள் உரிய நேரத்தில் செய்துமுடிக்கப் படாத பட்சத்தில் அவருடைய கோபங்களையும் பார்க்க முடியும்.

ஆனாலும் அதிலொரு நிதானமிருக்கும். கொடுக்கப்படும் தண்டனைகள் போராளிக்கு வேதனையைக் கொடுப்பதாக இருக்கக் கூடாது, பதிலாக விழிப்பைக் கொடுப்பதாக இருக்கவேண்டும் என்று அடிக்கடி கூறுவார். அவர் கற்றறிந்த விடயங்களை இயலுமானவரை அவரின்கீழ் செயற்படும் போராளிகளுக்குக் கற்றுக்கொடுக்க அவர் தவறியதில்லை.

அதேபோல் போராளியொருவர் புதிய விடயம் ஒன்றை அவருக்குச் சொல்ல விளையும்போது ஒரு மாணவனின் மனநிலையோடு அவற்றைச் செவிமடுத்துக் கற்றுக்கொள்ளவும் அவர் தவறியதில்லை. அவருடைய இந்தக் குணாம்சமே பொறியியற்றுறைப் போராளிகளிடமிருந்து பல புதிய கண்டுபிடிப்புக்கள் வெளிவரக் காரணமாக அமைந்தது.

“முடியாது என்றால் முயற்சிக்கவில்லை” என்பதே ராயு அண்ணையின் வாக்காக இருந்தது. புதிய முயற்சிகளை ஆதரித்து ஊக்குவிக்கும் அதேவேளை தேவையற்ற பொருள் மற்றும் வளவிரயங்கள் எவற்றையும் அவர் அனுமதித்ததே கிடையாது. அதுமட்டுமல்லாமல் அவர் எந்தவொரு வேலையிலும் முழுத் திருப்தி அடைந்துவிடமாட்டார்.



ஒவ்வொரு கருவியையும் எவ்வாறு மேம்படுத்தலாம் என்பதாகத்தான் அவருடைய அறிவுரைகள் எப்போதும் இருக்கும். போராளிகளிடம் வேலைகளை ஒப்படைத்துவிட்டு அந்த வேலைக்குரிய நுட்பங்கள் அப்போராளிகளின் சுய சிந்தனையிலிருந்து வெளிப்படவேண்டும் என்று எதிர்பார்ப்பார். அவ்வாறு அவர்களின் சிந்தனையில் உருவாகும் நுட்பங்களை அவர்களிடம் கற்றறிந்து அவற்றை மேம்படுத்துவது பற்றிக் கலந்தாலோசிப்பார்.

ராயு அண்ணை தன்னுடைய போராட்ட வாழ்க்கையை லெப்.




கேணல் ராதா அவர்களுடன் ஒரு தொலைத் தொடர்பாளராகத் தொடங்கினார். அவ்வாறு தொடங்கிய அவரது போராட்டச் செயற்பாடு அவரை ஒரு மாபெரும் சாதனை யாளனாக உயர்த்தியது எனில் அவரின் அறிவினை நோக்கிய விடாத தேடலே மிகமுக்கிய காரணமாகும்.

விடுதலைப் போராட்ட வரலாற்றில் விடுதலைப் புலிகள் நிகழ்த்திய இமாலயச் சாதனைகள் பலவற்றின் பின்னால் ராயு அண்ணையின் வெளித்தெரியாத செயற்பாடுகள் பல இருந்தன. தலைவர் அவர்களால் உருவாக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் தொழில்நுட்பப் பிரிவான “கேணல் ராயு படைய அறிவியல் தொழிநுட்ப ஆய்வு நிறுவன”த்தின் ஆணிவேர் ராயு அண்ணை என்றால் அது மிகையன்று.

விடுதலைப் புலிகளின் தொடக்ககாலத் தொலைத்தொடர்புத் துறையின் வளர்ச்சியில் ராயு அண்ணையின் பங்கு அளப்பரியது. ஒரு தொலைத்தொடர்பாளனாக இருந்தபோது தான் பெற்றுக்கொண்ட அனுபவம் மற்றும் தான் கற்றறிந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தொலைத்தொடர்புக்கான ஒரு தனித்துறையினைக் கட்டியெழுப்பும் பணியினை மேற்கொண்டார். உலகமே வியந்துபார்த்த விடுதலைப் புலிகளின் தொலைத்தொடர்புக் கட்டமைப்பின் வளர்ச்சியில் ராயு அண்ணையின் உழைப்பு ஒவ்வொரு கட்டத்திலும் மறைபொருளாக இருந்தது.

இந்தியப் படையினருடனான போர்க்காலப் பகுதி. மணலாற்றுக் காட்டுப்பகுதியில் இந்தியப் படையினர் தமது இராணுவ நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியிருந்த நேரம். இராணுவத்தினரின் நகர்வுகளைக் கட்டுப்படுத்துவதற்காக தலைவரின் சிந்தனையில் உதித்த “ஜொனி” மிதிவெடிக்கு அப்போதிருந்த இக்கட்டான சூழ்நிலையில் கிடைத்த பொருட்களைக் கொண்டு வடிவம் கொடுத்த பெருமை ராயு அண்ணையையே சாரும்.

கடலிலே முதலாவது கடற்கரும்புலித் தாக்குதல் நடத்துவதற்கான திட்டம் தலைவர் அவர்களால் போடப்பட்டு அதற்கான பணிகள் ராயு அண்ணையிடமும் அப்போதைய கடற்புறா (கடற்புலிகள் என்று பெயர் பெறுவதற்கு முன் இயங்கிவந்த விடுதலைப் புலிகளின் கடல் நடவடிக்கை அணி) தளபதியிடமும் ஒப்படைக்கப்பட்டிருந்தது.








முன்னெப்போதும் நடத்தப்படாத ஒரு புதியவகைத் தாக்குதலாக அப்போது அந்தக் கடற்கரும்புலித் தாக்குதல் இருந்தது. வெடி பொருள் தொகுதியை எவ்வாறு படகில் பொருத்துவது, எந்த வடிவில் பொருத்துவது என்பன தெரியாமல் இருந்த விடயங்கள். ஆயினும் ராயு அண்ணை அவற்றைச் செய்து முடித்தார்.

பலகட்டப் பரிசோதனைகளைச் செய்து அவற்றிலிருந்து ஒரு வடிவத்தினைச் செய்து உருவாக்கியிருந்தார். ராயு அண்ணை இதனை திறம்பட முடித்துவிடுவார் என்ற தலைவரின் நம்பிக் கையை நிரூபித்துக் காட்டினார். அன்றிலிருந்து தன்னுடைய இறுதிக் காலம்வரை கடற்கரும்புலிகளின் தாக்குதற் படகுகளிற் கான வெடிமருந்துத் தொகுதியினை மேம்படுத்துவதற்காக அயராது உழைத்துக் கொண்டிருந்தார்.

தொடக்க காலத்திலிருந்து மோட்டார் மற்றும் எறிகணைகளின் செயற்பாடுகளைக் கற்றறிந்து புலிகளின் சுயதயாரிப்பான "பசிலன்" எனும் எறிகணைச் செலுத்தியின் தயாரிப்புக்கு அடித்தளமிட்டுக் கொடுத்தார். இரண்டாம் கட்ட ஈழப்போர் தொடங்கியபோதே புலிகளின் பசிலன் பீரங்கிகள் சிறிலங்கா இராணுவத்துக்கு சிம்ம சொப்பனமாக அமைந்திருந்தன. யாழ்.



கோட்டை, மாங்குளம் போன்ற முகாம்கள் கைப்பற்றப்பட்ட தாக்குதல்களில் இப்பீரங்கிகளின் பங்கு அளப்பரியன.

1996 ஆம் ஆண்டு "ஓயாத அலைகள்-01" இராணுவ நட வடிக்கை மூலம் புலிகள் முல்லைத்தீவு இராணுவ முகாமைக் கைப்பற்றியபோது இரண்டு ஆட்லறிகள் புலிகள்வசம் வீழ்ந் தன. இயக்கத்தைப் பொறுத்தவரை அவை அப்போது பரிச்சய மற்ற பொருட்களாகவே இருந்தன.

இராணுவத்திடமிருந்து கைப்பற்றப்பட்ட மட்டுப்படுத்தப்பட் டளவிலான கையேடுகள் மற்றும் இதர அறிவியல் ஏடுகள் என் பவற்றின் உதவியுடன் அவ்விரு ஆட்லறிகளையும் பரிச்சய மிக்க போராயுதங்களாக மாற்றியதில் ராயு அண்ணையின் பங்கே முதன்மையானது. முதன்மையானது என்பதைவிட முழுமையானது என்பதே பொருத்தமாக இருக்கும்.

அக்காலப் பகுதியில் அவர் இரவில் நித்திரை கொள்வதே அரி தான விடயம். பொதுவாக ஆட்லறிகளுக்கான சூட்டுக்கட்டுப் பாட்டுத் தொகுதிகள் (Fire Control) அவ் ஆட்லறிகளின் தயாரிப்பு நிறுவனங்களினால் வழங்கப்பட்டவையாகவே இருக்கும். முல்லைத்தீவில் கைப்பற்றப்பட்ட சூட்டுக்கட்டுப்பாட்டுத் தொகுதி யும் அவ்வாறானதொன்றே. நிறைவான ஆட்லறிச் சூட்டுக்கு அவற்றின் செயற்பாடு போதுமானதாகவே இருக்கும்.



ஆயினும் ராயு அண்ணை அதனோடு திருப்திப்பட்டு விட வில்லை. சுயமாக ஆட்லறிக்கான சூட்டுக்கட்டுப்பாட்டுத் தொகுதி யினை உருவாக்கும் பணியில் போராளிகளை ஈடுபடுத்தினார். சாதாரண சூட்டுக்கட்டுப்பாட்டுத் தொகுதியைவிட மேம்பட்ட பல வசதிகளோடு சூடுகளை வேகமாகவும் மேலும் துல்லிய மாகவும் வழங்கக்கூடியவாறு பல்வேறுபட்ட வசதிகளுடன் புதிய சூட்டுக்கட்டுப்பாட்டுத் தொகுதி அவரின் வழிகாட்டலில் உருவாக்கப்பட்டது.

சிறீலங்கா படையதிகாரிகளாலேயே விடுதலைப் புலிகளின் ஆட்லறி சுடுதிறன் வியப்பாகப் பார்க்கப்படும் அளவுக்கு அதை வளர்த்தெடுத்த பெருமை ராயு அண்ணையையே சாரும். வேகமான செயற்பாடு மற்றும் துல்லியமான சூடு என்பவற்றினூடாக பீரங்கிப் படையணியின் நம்பகத்தன்மை போராளிகளிடமும் வளர்ந்திருந்தது.

ஜெயசிக்குறு எதிர்ச்சமர், ஓயாத அலைகள் என்ற குறியீட்டுப் பெயரிலமைந்த தொடர் நடவடிக்கைகள், ஆனையிறவுக்கான சமர் போன்றவற்றில் ராயு அண்ணையின் கட்டளையில் செயற்பட்ட பீரங்கிப் படையணியின் செயற்பாடு முக்கியமான பங்கினைப் பெற்றிருந்தது.

சிறிலங்கா அரசினை சமாதானம் நோக்கி ,ழுத்துவந்த சமரான தீச்சுவாலை முறியடிப்புச் சமரில் எதிரியின் தீச்சுவாலையை எதிரியை நோக்கியே திருப்பிவிட்டதில் ஒருபுறத்தில் ராயு அண்ணையின் கட்டளையில் செயற்பட்ட பீரங்கிப்படை பெரும் பங்காற்றியது எனில் மறுபுறத்தில் ராயு அண்ணையின் சிந்தனையில் உருவான கவச எதிர்ப்புக் கண்ணிகள் தம்பங்கினையும் ஆற்றின.

அப்போதிருந்த சூழலில் கண்ணிவெடிகளை உருவாக்குவதற்குத் தேவையான பொருட்களை உடனடியாகப் தருவிக்கமுடியாத நிலை. ராயு அண்ணையின் சிந்தனையோ கண்ணிவெடி தயாரிப்பதற்கு என்ன பொருட்கள் தேவையென்ற நிலையிலில்லாமல், ,ருக்கும் பொருட்களைக்கொண்டு எவ்வாறு கண்ணிவெடி தயாரிக்கலாம் என்பதாக ,ருந்தது.

பல்வேறு காரணங்களால் வெடிக்காத நிலையில் மீட்கப்பட்ட எதிரியின் எறிகணைகள் எதிரிகளின் கவசங்களையே குறிவைக்கும் கண்ணிவெடிகளாக உருவெடுத்தன. ஆனையிறவை மீளக் கைப்பற்றும் எதிரியின் கனவு அப்போது தகர்க்கப்பட்டது.

1992 ம் ஆண்டின் நடுப்பகுதி. யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த பிரிவுகளுக்குரிய போராளிகள் சிலர் சிறுத்தைப் படையணியின் பயிற்சிக்குச் செல்வதற்காக மாவட்டத் தலைமைச் செயலகத்திற்கு அனுப்பப்பட்டிருந்தோம். அங்குதான் சிறுத்தைப் படையணியின் முதலாவது ஆண்கள் அணிப் போராளிகளுக்கான தெரிவு நடைபெற்றது.

சிறுத்தைப் படையணியின் சிறப்புத் தளபதியாகவிருந்த ராயு அண்ணையே படையணிக்கான போராளிகளைத் தெரிவு









செய்வதற்கு வந்திருந்தார். அன்று ராயு அண்ணையின் மூலம் தெரிவாகி, சிறுத்தைப் படையணி, பின்னர் பொறியியற்றுறை ஆகியவற்றில் அவரின் கீழ் பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தது. ஒரு தந்தையாய், சகோதரனாய் அவர் போராளிகளை வழி நடாத்தினார்.

ஒவ்வொரு விடயங்களைக் கவனித்துக்கொள்வதற்கும் அவர் பொறுப்பாளர்களை நியமித்திருந்த போதிலும், போராளிகளுக் கான உணவு, உடை என்று அனைத்து விடயங்களிலும் கவன மெடுத்து நடந்துகொண்டார். போராளிகள் தமக்குள் கதைக்கும் போது அவரை “அப்பா” என்றே விழிப்பது வழமை. அந்த ளவிற்கு அவர் ஒரு தந்தையாக போராளிகள் மனதில் இடம் பிடித்திருந்தார். அவருக்குத் தலைவரால் வழங்கப்பட்டிருந்த பல்வேறுபட்ட பணிகளுக்கு மத்தியில் தன்னால் வளர்த் தெடுக்கப்படும் போராளிகள் என்ற கரிசனையோடு எம்மை உரு வாக்கிய விதம் என்றுமே நெஞ்சை விட்டகலா நினைவுகள்.

1993 ம் ஆண்டின் இறுதிப்பகுதி. தென்மராட்சியில் ஓரிடத்தில் எமக்கான சிறப்புப் பயிற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. திசைகாட்டி நகர்வுப் பயிற்சிகளை நாம் முகாமிற்கு வெளி யேதான் மேற்கொள்வதுண்டு. தென்மராட்சி மற்றும் வடம ராட்சிப் பகுதிகளில் காணப்படும் சதுப்புநிலக் காடுகளே இவ் வாறான நகர்வுகளுக்காகப் பயன்படுத்தப்பட்டன. நகர்வுகளுக் கான தொடக்க மற்றும் முடிவுப் புள்ளிகளாக இப்பகுதிகளில் அமைந்திருக்கும் சிறிய கோவில்களே தெரிவுசெய்யப்படும்.

அனைத்து அணிகளதும் நகர்வுகளை தானே நேரில் வந்து கண்காணிப்பதுடன் அந்தந்த இடங்களிலேயே நகர்வு உத் திகளைக் கற்றுத்தருவார். நகர்வில் ஈடுபடும் போராளிகளுக் கான உணவுப் பொருட்களை தானே எடுத்துவருவார். இருந்தபோதிலும், போராளிகளைக் கண்டிக்க வேண்டிய இடத் தில் கண்டிக்கவும் தண்டிக்க வேண்டிய இடத்தில் தண்டிக்கவும் அவர் தவறுவதில்லை.

ஒருமுறை எமது நகர்வு புத்தூரிலிருந்து தென்மராட்சியின் வரணிப் பகுதி நோக்கி இருந்தது. இவ்விரு பகுதிகளுக்கும் இடைப்பட்ட சதுப்புநிலக் காடுகளே நகர்வுப் பகுதியாக பயிற்சி ஆசிரியரால் தேர்வுசெய்யப்பட்டிருந்தது. எமது நகர்வுக்காக ஒவ் வோர் அணிக்கும் குறிப்பிட்டளவு குடிநீரே தரப்படும். மேலதிகத் தண்ணீரை நாம் எங்கும் பெறக்கூடாது என்பது கட்டளை.

அன்று எமது நகர்வுகளைக் கண்காணிப்பதற்காக வந்த ராயு அண்ணையின் வாகனம் சேற்றில் புதைந்துவிட எமது அணி யினரே அதனை வெளியெடுக்கும் பணியினையும் செய்ய வேண்டியதாகிவிட்டது. அந்தக் களைப்பின் காரணமாக எமக்கு வழங்கப்பட்ட தண்ணீரையும் குடித்து முடித்துவிட்டோம்.

ஆனால் போகவேண்டிய மீதித்தூரமோ இன்னும் அதிக மிருந்தது. இடையிலிருந்த கோவில் கிணறு ஒன்றில் மேலதிக தண்ணீரை நிரப்பிவிட்டோம். பயிற்சி ஆசிரியர் தண்டனை வழங்கினாலும் ராயு அண்ணை காப்பாற்றிவிடுவார் என்று எமக்கு நாமே சமாதானமும் சொல்லிக்கொண்டோம்.

பயிற்சி ஆசிரியருக்கும் விடயம் போய்விட்டது. நாம் காரணத் தைக்கூறி தண்டனையிலிருந்து தப்பலாம் என முயற்சித்தோம். ஆனால் ராயு அண்ணையின் பதில் எம்மால் நிராகரிக்க முடியாததாக இருந்தது. அவர் கூறியது இதுதான். “நீங்கள் சிறப்புப் படையணிப் போராளிகள். நீங்கள் நடவடிக்கையில் ஈடுபடும் இடங்களில் போதியளவு வளங்கள் கிடைக்குமென்று எதிர்பார்க்க முடியாது.

நீங்கள் நடவடிக்கையில் ஈடுபடும்போது திட்டமிடப்படாத எதிர்பாராத பணிகள் காத்திருக்கலாம். அதற்கெல்லாம் உங் களை நீங்கள் தயார்ப்படுத்த வேண்டுமாயின் நீங்கள் இவ் வாறான சாக்குப்போக்குகள் சொல்ல முடியாது”. இதன்பிறகும் எம்மால் அவருடன் எதைக் கதைக்க முடியும்? தண்டனை உறுதி. எமதணிக்கான அடுத்துவந்த நகர்வு குடிநீரின்றி முடிந்தது.

1993 ம் ஆண்டு பலாலிப் படைத்தளத்தினுள் கரும்புலித் தாக்குதல் ஒன்றினை நடாத்துவதற்குத் தலைவரினால் திட்ட மிடப்பட்டிருந்தது. கரும்புலிகளுக்கான வெடிமருந்துத் தொகு திகளை உருவாக்குவதற்கான பணி ராயு அண்ணையினால் அவரின் கீழிருந்த வெடிமருந்துப் பயிற்சிபெற்ற போராளியின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவருடன் அப்போது வெடிமருந்துப் பயிற்சியினை மேற்கொண்டிருந்த நாமிருவரும் அவ்வேலையில் .ணைக்கப்பட்டிருந்தோம். ராயு அண் ணையோ, வேலையை ஒப்படைத்ததோடு நில்லாமல் வேலை யின் ஒவ்வொரு கட்டத்திலும் தானும் எம்முடன் கூடவிருந்து அந்த வேலைகள் நிறைவடைந்தபோது, நாமே தனித்து அவ் வேலைகளைச் செய்யுமளவிற்கு எம்மை உருவாக்கி விட் டிருந்தார்.



ஒவ்வொரு விடயங்களைச் செய்யும்போதும், அவ்விடயங்களில் அவர் காட்டும் ஈடுபாடு மிகவும் நேர்த்தியானது. அதே நேர்த் தியினையே போராளிகளிடமும் வேலைகளில் எதிர்பார்ப்பார்.

எனது உடல்நிலையில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட இய லாமை காரணமாக என்னால் பயிற்சியினைத் தொடர முடிய வில்லை. சிலகாலம் வைத்தியசாலையில் இருக்கவேண் டியிருந்தது. இனிமேல் பயிற்சியில் ஈடுபடவே முடியாது என்ற நிலை. அடுத்து என்னவென்று தெரியாத சூழல்.

அவ்வாறான சூழ்நிலையிலிருந்து என்னை மீட்டு எனக்குப் பொருத்தமான பணிகளில் என்னை ஈடுபடவைத்து, எனது உடல்நிலையில் ஏற்பட்ட இயலாமை என்னையும் எனது போராட்டச் செயற்பாட்டையும் பாதிக்காது காத்தது ராயு அண் ணையே. அவரின் அணுகுமுறைகள் எப்போதுமே போராளிக ளிடமிருந்து அவர்களது செயற்பாடுகளைத் தனித்தன்மை யோடு வெளிக்கொணர்வதாகவே இருக்கும்.

ஒவ்வொரு போராளியிடமும் இருக்கும் தனித்தன்மைகளைச் சரியான முறையில் ,னங்கண்டு அதனை வெளிக்கொணர் வதில் அவருக்கு நிகர் அவரேதான். ஆயினும் கொடிய புற்று நோய் அவரைச் சிறிதுசிறிதாக அரித்துக்கொண்டிருந்த விடயத்தை அவரால் அறிந்துகொள்ள முடியாததாகவே காலம் அவருக்குத் தீர்ப்பெழுதி விட்டது.

அடிக்கடி வந்துபோகும் வயிற்றுவலியினை அவர் சாதாரண வயிற்றுவலியாக எண்ணியே மாத்திரைகளைப் பாவிப்பதோடு நிறுத்திக்கொண்டார். நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் இருந்த போதுகூட அவர் இயங்கிக்கொண்டேயிருந்தார், அனை வரையும் இயக்கிக்கொண்டுமிருந்தார்.

தீச்சுவாலை முறியடிப்புச் சமரின்போதே ராயு அண்ணையால் முழு உற்சாகமாகப் பணியாற்ற முடியாதபடி அவரது உடல் நிலை தளர்ந்திருந்தது. ஆனாலும் அந்த மூன்று நாட்களும் அவர் முழுமையாகப் பாடுபட்டார். நோய் முற்றியநிலையில் அவர் அவதிப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் வடகடலில் ஒரு கடற்கரும்புலித் தாக்குதல் நடத்தப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் நின்ற இராணுவத்தினருக்கான எரிபொருள் வழங்கலைச் செய்த எரிபொருள் தாங்கிக் கப்பல் மீதே அத் தாக்குதல் நடத்தப்பட்டது. ஆனால் எதிர்பார்த்தது போல் அக் கப்பல் தீப்பிடிக்கவுமில்லை, மூழ்கிப் போகவுமில்லை.

வழமையாகவென்றால் ராயு அண்ணையிடம் ஓடிவந்து நடந்த சிக்கல்களை ஆராய்ந்து அதற்குரிய மாற்றுத் திட்டங்களை அறிந்துகொள்வார்கள். ஆனால் இப்போது ராயு அண்ணை யின் உடல்நிலை மிகமிக மோசமாக இருந்தது.

இந்நிலையில் எப்படி அவரைப் போய்க் கரைச்சல் படுத்துவது என்று கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை நினைத்தார். ஆனாலும் தாக்குதல் பிசகியதைக் கேள்விப்பட்ட ராயு அண் ணையே நேரடியாக தளபதி சூசையையும் தொடர்புடைய மற் றப் போராளிகளையும் அழைத்து விடயத்தைக் கேட்டறிந்தார்.

படுத்த படுக்கையில் இருந்தும்கூட அக்கப்பலை மூழ்கடிப்பதற் கான வெடிபொருள் நுட்பம் பற்றிய ஆலோசனையைக் கடற் புலிகளுக்குச் சொல்லிக் கொடுத்தார். பின்னாளில் அவர் சொல் லிக் கொடுத்த அந்த நுட்பத்தைப் பயன்படுத்தி ஒரு கடற்கரும் புலித் தாக்குதல் மூலம் படையினரின் எண்ணெய்த் தாங்கிக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது.

பின்னாளில் அவரின் பெயரிலேயே தலைவரால் உருவாக்கப் பட்ட ‘கேணல் ராயு படைய அறிவியல் தொழிநுட்ப ஆய்வு நிறு வனப் பொறுப்பாளர்களில் ஒருவரிடம் தலைவர் சொன்ன வார்த்தைகள் “நீங்கள் அனைவரும் சேர்ந்தாவது ராயுவின் இடத்தினை நிரப்ப முயற்சிக்க வேண்டும்”.

ஆம்! அவரின் இழப்பு ஒருவரால் மட்டும் ஈடுசெய்யப்பட முடியாததுதான்.




AFFORDABLE
REFRIGERATION
SERVICES INC
Walk - In Freezers
Walk - In Coolers
Reach - In Freezers
Reach - In Coolers
We Sell. Install
used & new
Walk in Cooler
Walk in Freezer
kapil.afr@gmail.com
Kapil: 647.515.8643


வங்கிக் கடன்
தொல்லைகளிலிருந்து
விடுதலை
NEW LIFE FRESH START
Save
80%
கடன் 80% குறைய நடவடிக்கை
Reduce your debts upto 80%.
கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
Stop all interest on your debts.
கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள்,
சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, legal action & garnishments.
உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
Protect all your assets (House, Car, RRSP, RESP).
மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
Make one monthly patment to all of your creditors.
வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
GIve you solutions without bankruptcy.
Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation
Over 20 Years Experience
in the field of Insolvency
CRC CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca
Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca



# உரிமைக்கு உயிர்

- முத்து சிவஞானம் -

ஒடுக்குமுறைக்கெதிராக கடந்த 50 வருடங்களாக தமிழர்களாகிய நாம் போராடி வருகின்றோம். எமது போராட்ட வரலாற்றில் 1961ல் நடாத்தப்பட்ட சத்தியாக்கிரகம் முக்கியமானது. இந்தச் சத்தியாக்கிரகத்தின் மீதும் அரச படைகள் தம் வன முறையைப் பிரயேகித்தன. எனினும் தமிழீழப் பரப்பெங்கும் இரண்டு மாதங்களாக அரச நிர்வாகத்தைச் செயலிழக்கச் செய்த நிகழ்வு இது. இந்தக் கதை சத்தியாக்கிரக நிகழ்வைச் சித்தரிக்கிறது.

விசாலமான அந்தக் கண்டிறோட்டில் வாகனச் சந்தடி அற்றுவிட்ட நேரம். நடுஇரவு பன்னிரண்டு மணி.

யாழ்ப்பாணத்துக் கச்சேரி வாசல் முகப்பி தளராத உள்ளத்துடன் தமிழ்க் குலத்துச் செல்வங்கள், தமிழ் உணரிமைப்போரில் கலந்து கொண்டிருக்கின்றன. திரும்பும் இடமெல்லாம் தமிழர் வெள்ளம்; தமிழ் இசை.

உரிமைப் போருக்காக உடல் வருத்திக்கிடக்கும் பெண்கள்; குழந்தைகள்; பெரியவர்கள்; இளைஞர்கள், இவர்களிடையே, ஆண்கள் பகுதியில் முன்னணி வரிசையில் முகத்தில் முத்துக் கோர்க்கும் புன்னகையுடன் துரைராசா அமர்ந்திருக்கிறான். அவனுக்குப் பின்னால் தமிழ் மண்ணின் இளம் இரத்தத்திற்குரியவர்கள். அடுத்த பந்தியில் தமிழ் மொழியின் வாழ்வுக்காகத் தங்களை அர்ப்பணஞ் செய்ய வந்திருக்கும் தாய்க்குலம்!

அவர்கள் புரிவது,
அறபோர்; அன்னை
மொழியின்
விடுதலைப் போர்!
“வாழ்க தமிழ்மொழி
வாழ்க நிரந்தரம்
வாழிய வாழியவே”

தமிழ்த்தேன் குழைந்த தமிழிசை அங்கு தவழ்ந்து ஒரு புதிய தெம்பை ஊட்டிக்கொண்டிருக்கிறது.

குரலுக்குரியவன்.

கோமளா; துரைராசனின் தங்கை.

தமிழுக்காக உழைப்பதில் தமையனை மிஞ்சிவிட்டவள். அவளைத் தங்கையாகப் பெற்றதில் துரைராசனுக்கு அளவற்ற பெருமை.

தங்கையின் பாடலில் துரைராசனின் மனம் இளகிக் கரைகின்றது. இசையினுக்கு அவ்வளவு வல்லமையா?

தமிழன் நிலை அவன் நெஞ்சைக் கசக்கிப் பிழிய, அவனும் குரலெடுத்துப் பாடுகிறான்.
“வாழ்க தமிழ்மொழி
வாழ்க நிரந்தரம்
வாழிய வாழியவே”
மறுகணம்–

எத்தனை குரல்கள் ஒலிக்கின்றன.

உணர்ச்சி பீறிடுகின்றது. தமிழ் வெள்ளம் தங்கு தடையின்றிப் பாய்கிறது.

நேரம் பின்னிரவு – ஒரு மணியையும் தாண்டிக் கொண்டிருக்கிறது.

துரைராசனின் எண்ணத்தில் ஒரு துலக்கம்; முகத்தில் தவழ்ந்து கொண்டிருந்த புன்னகைக்குப் பதில் தீவிர எண்ண ஓட்டங்களின் பிரதிபலிப்பு. வாய் அசைவு பெறுமனே கீதங்களை இசைப்பதிற் தொழிற்பட்டிருந்ததே தவிர, சிந்தனைகள் நல்லூரில் ஒரு குச்சு வீட்டைச் சுற்றிப்படர்ந்து கொண்டிருந்தன.

இந்த நேரத்தில் என்னவோ ஏதோ? தங்கச்சி வைத்துக் குடுத்துவிட்டு வந்த குடிநீருக்குப் பிறகு ஒண்டுங் குடுக்கேல்லையே ஒண்டுக்கு ரண்டுக்குப் போறதுக்குப் பிடிச்சுக்கொணடு போய் விடவும் ஒருத்தரும் வீட்டில் இல்லை.

மனம் துலங்கிப் புழுங்குகிறது.

அரசடி வீதிக்கரையில் ஒரு சிறு குடிசை; செத்தை தட்டிகளின் மறைப்பில் உள்ளே ஒரு கிழிசற்பாயில், காசநோயால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் தாயின் உருவம் அவன் உள்ளத்தை ஆக்கிரமிக்கிறது.

பெற்று வளர்த்து ஆளாக்கிவிட்ட பெற்றதாய், படுத்த படுக்கையாய் கிடக்க…

இங்கே தமிழ்த் தாய்க்காகப் போராட்டம்.

எண்ணங்கள் தவித்துத் தவித்து, உணர்வுகள் வேகப்பட, நினைவுகளின் கிளைப்பில்…

“மோனை இப்பிடிக் கிட்ட வாமோனை. உன்ரை தேப்பன் செத்துப்போக நான் கையடிச்சு, நெருப்புத்திண்டு உங்களை இவ்வளவுக்கும் வளர்த்துப் போட்டன். இனி உன்ரை தங்கச்சியை ஒரு கரை சேர்ந்து, அவள் எங்கையன் சுகம்பெலமா இருக்கச் செய்யவேணும். இப்படி நீ நெடுக விளையாட்டுப் புத்தியிலை திரிஞ்சா என்னமோனை நடக்கும்”

துரைராசாவின் கண்களும் பனிக்கின்றன.

கோமளம் குடி நீரை ஆற்றியபடி எங்கோ பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

“அதெல்லாம் நான் செய்து வைப்பன அம்மா. நீ ஒண்டையும் யோசியாதை” துரைராசாவின் மனத்தில் எழுந்த உறுதி, வார்த்தையாக விழுகிறது. நினைவு தடுமாறுகிறது தங்கையின் எண்ணம் தலைதூக்கிறது.

தலையைத் திருப்பித் தங்கையைப் பார்க்கிறான். அவள் சலன முற்றுப் பாடிக்கொண்டே இருக்கிறாள்.

அவளை ஒரு கரை சேர்த்துவிட்டால் –

பிறகு தமிழ்வாழ்வுக்காகத் தன் உயிரையும் தியாகம் செய்ய அவன் தயார்.

நேரம் நகர்கிறது.

தூரத்தில் இராணுவ வாகனங்களின் பயங்கர உறுமல்.

கூட்டத்தில் ஒரே பதட்டம்; குசுகுசுப்பு!

“ஒருதரும் எழும்பாதையுங்கோ, உயிர்போனாலும் இருந்த இடத்தைவிட்டு ஒருதரும் எழும்பாதையுங்கோ” உரத்த குரலில் உற்சாகக் குரல்கள் கிளம்புகின்றன.

இராணுவ வாகனங்களின் உறுமல் மிகக் கிட்ட நெருங்கிக் கொணடிருக்கிறது.

துரைராசன் ஒரு கணம் திகைத்தான். சாவதைப்பற்றி அவனுக்குப் பரவாயில்லை. ஆனால் வீட்டில் சாக்கிடக்கும் தாய் அவனை எதிர்நோக்கி, அவன் வாழவைப்பான் என்ற நம்பிக்கையில் காலங்கழிக்கும் தங்கை கோமளா…

ஒரு கணச் சிந்தனை!

வினாடிகள் பறந்தன!

சட்! புட்! சட் ; புட்… வாகனங்களில் இருந்து சப்பாத்துக் கால்கள் குதிக்கின்றன.

அவல ஓலம்!

சப்பாத்துக்கள் அங்கும் இங்குமாக ஓடுகின்றன. துரைராசனுடைய உள்ளத்தில் எண்ணங்கள் பல அசுர கதியில் மின்னி மறைகின்றன.

உரிமைப் போராட்டத்தில் அவன் உயிரிழந்த பின் தாயின் பிணம் அனாதைப் பிணமாக, சீந்துவாரற்றுத் தருமச் செலவில் தகனஞ் செய்யப்படுகின்றது. தங்கை கண்ணீரும் கண்களு

மாகக் கையேந்திப் பிழைக்க, அவளைச் சுற்றி வல்லூறுகள்! அவள் மானமிழந்து, வாழ்விழந்து, தெருப்புழுதியில் புழுவோடு புழுவாய், அவனுடைய உள்ளம் ஒடிந்து விழுகிறது. இனந்தெரியாத ஓர் அவல உணர்வு அவனுள் எழுகிறது.

மின்னல் வினாடி –

அவன் ஓடுகிறான்; இருள் அவனைத் தன்னுள் மறைத்துக் கொள்கிறது.

சப்பாத்துக்கள் இன்னும் இயங்கிக் கொண்டே இருக்கின்றன.

கல்மாரிகள்!

அட்டூழியத்தனமான அடக்குமுறைகளின் முன், அறப்போர் நிலைகுலைகிறது; கூட்டம் கலைகிறது.

ஆனால்,

அவள் அசையவே இல்லை. ஒருசில நிமிடங்களில் நடந்துவிட்ட இத்தனை கொடுமைகளையும் பார்த்தும், அவள் கல்லாய், மரமாய் இம்மியளவு இங்கங்கு அசையாமலிருக்கிறாள். அவள் அதரங்களின் அசைவில் விடுதலைக் கீதம்.

"இழுத்தெறி அவளை"

அரக்கமனம் படைத்த ஒரு இராணுவ வீரன். அவனும் மனிதன் - அவளை இழுத்து எறிகிறான்.

இழுத்தெறியப்பட்ட வேகத்தில் கச்சேரிமதில் சுவரோடு அவளுடைய மண்டை மோத, "அம்மா" என்ற ஒரு அலறல் அவ்வளவுதான்.

அப்புறம் –, அவளைப் பொறுத்தவரையில்–, அமைதி; இருள்!

முகமலரைத் தவிர்த்து, தலையின் மற்ற எல்லாம் பாகங்களையும் மூடி மறைத்துக் கிடக்கும் பண்டேஜ் பந்தனங்குடன், பிரக்ஞையும் பிரக்ஞையற்றதுமான நிலையில் கோமளா துவண்டு கிடக்கிறாள். அவள் கட்டிலின் அருகே உயரத் தொங்கும் ஒரு மருந்துப் புட்டியிலிருந்து, இரப்பர் குழாய் வழியே சக்திமருந்து அவள் உடம்பில் ஏறிக்கொண்டிருக்கிறது.

ஒரு துளி; அது அவளுடைய உடலிற் போய்ச்சேர எவ்வளவு நேரம்?

துரைராசன் சித்தப்பிரமை பிடித்தவனாய் விம்மி விம்மி, வெம்மியபடி தலைகுனிந்து நிற்கிறான்.

எவளுடைய வாழ்வை மலரச் செய்ய வேண்டுமென்பதற்காக, அன்னை மொழியின் உரிமைப் போராட்டத்தை உதறிவிட்டு ஓடினானோ, அவளே அந்த உரிமைப்போரில் தன்னை அர்ப்பணித்துவிட்டு வாழ்வா? சாவா? என்ற நிலையில் ஊசலாடும் போது.

இனி, என்ன இருக்கிறது அவனுக்கு?

அவன் அழுகிறான்.

அவள் கண்கள் திறக்கின்றன.

அண்ணனைக் காண்கிறாள்.

வெளிறிக் கிடக்கும் அவள் வதனத்தில் குறுநகையோடுகிறது.

அது தியாகத்தின் சுடரா?

அவள் சிரிக்கிறாளா?

து



ரைராசன் மெல்லக் குனிகிறான்.




தியாகத்தின் ஒளி ஆளும் அவள் வதனத்து தீட்சண்யத்தைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை அவானல்.

அவள் ஏதொ சொல்ல முயல்கிறாள்; முடியவில்லை.

மீண்டும் அவளுடைய அதரங்கள் பிரிகின்றன.

"அ..ண்..ணை" அவள் குரல் சக்தியற்றுச் சன்னமாக ஒலிக்கிறது.

அவன் இன்னும் குனிகிறான்.

அவள் கையைத் தூக்கி அவனைத் தடவ முயல்கிறாள்.

"என்ன குஞ்சு; என்ன வேணும்" அவனுடைய அன்புக்குரல் அளவுக்கதிகமாகத் தடுமாறுகிறது.

"அண்…ணை நீ துக்கப்படா தை. நான் நான் இருக்க – மாட்டன். செத்தாலும் எங்கடை… உரிமை…க் காகச்…சாக வேணும். அவளுக்கு மூச்சு வாங்குகிறது.

"நீங்கள் ஏன் ஓடின…னிங்கள்?" அவன் கண்கள் கலங்கின.

"ஓம் குஞ்சு; நான் அண்டைக்கு இடையிலை எழும்பி ஓடினது பிழைதான். இனி என்ரை உயிர்போனாலும் இப்படிச் செய்யன். என்னை நம்பு குஞ்சு" அவனுடைய குரலிற் சற்று கொதிப்பு. அவள் முகத்தில் ஆனந்தத்தின் ஆட்சி; கண் மலர்கள் ஒளியுடன் சிரித்தன; அதரங்கள் ஏதோ சொல்லத் துடித்தன. அதற்கிடையில்…

ஒரு ஆணுவின் அணுவான் வினாடி நேரம் – அவள் தலை சாய்ந்தது. அவள் முகம்மட்டும் புன்னகைப் பொலிவு மாறாமல் அப்படியே இருந்தது.

அவன் இப்போ அழவில்லை. எதுவித உணர்ச்சிகளுமற்று அவளையே பார்த்தபடி நின்றான். என்றாலும் கண்கடைகளில் இரண்டு முத்துக்கள் உருண்டு விழுந்தன. அந்தத் தியாக உரு அவன் மனதில் மூட்டிவிட்ட தியாகத் தீ உள்ளே கனன்று கொண்டிருக்கிறது.

உலக வணிகம் ULAGA VANIKAM

# 2024



# LIST YOUR BUSINESS

ON OUR BUSINESS DIRECTORY



## உலக வணிகம் ULAGA VANIKAM

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

**தொடர்புகளுக்கு 437.345.4203**

# சிங்களப் படைகளும் தென் தமிழீழப் படுகொலைகளும்!

கலாநிதி க. சோமாஸ்கந்தன்

**"மக்களின் விடுதலை உணர்வை அடக்குமுறையால் அழித்துவிட முடியாது, உலக வரலாறு பகரும் உண்மை இது."**
**–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –**

முன்னெப்போதும் இல்லாதளவு மனிதப் படுகொலைகள் இருபதாம் நூற்றாண்டில் நடைபெற்றுள்ளன. இதனால் படுகொலை நூற்றாண்டு - THE CENTRUTY OF MASSACRES - என்று அது அழைக்கப்படுகின்றது. குண்டுவீச்சு விமானங்கள் தொடக்கம் மக்கள் இருப்பிடத்தைக் காட்டிக்கொடுக்கும் வேவுச் செய்மதிகள் வரையிலான பல்வேறு அழிப்புக்கருவிகள் படுகொலையில் ஈடுபடுகின்றன. தகவல் தொழில்நுட்பத்தின் (INFORMATION TECHNOLOGY) பிறப்பும், விரிவும் அதை உச்சக் கட்டத்திற்கு எடுத்துச் சென்றுள்ளது. படுகொலைகள் அரசுத் திட்டமிடலின் அங்கமாகவும், ஆயுத வர்த்தகத்தின் அவசியத் தேவையாகவும் இடம்பெறுகின்றன. இன்றைய உலகில் அது நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ளது.

நாடுகளுக்கிடையிலான போராயினும் சரி, இனங்களுக்கிடையிலான உள்நாட்டில் போராயினும் சரி கூடுதலான உயிரிழப்பு பொதுமக்கள் மத்தியில்தான் நடைபெறுகின்றது. ஆயுதம் தரித்த அணிகள் பெருகும்போது பொது மக்கள் பாதிக்கப்படுவதில்லை என்பது மிகவும் தவறான கற்பிதம்.

பொது மக்களின் உயிரிழப்பு ஒரு விபத்து என்று தள்ளிவிட முடியாது. பொதுமக்கள் மீதான தாக்குதல் நன்கு திட்டமிட்டு நடத்தப்படுகின்றன. பொதுமக்கள் குறிவைத்துத் தாக்கப்படுவதுதான் வழமை என்னுமளவுக்கு, அவர்களுடைய உயிரிழப்பு இருபதாம் நூற்றாண்டில் பல்கிப் பெருகிவிட்டது.

போரின்போது ஆயுதப் படைகள் எதிரிநாட்டின் மக்கள்மீது தாக்குதல் நடத்துவதற்குக் காரணம் பல உண்டு. பொதுமக்கள் உயிரிழப்பு உயரும்போது அந்த மக்களைச் சார்ந்த போர் வீரர்களின் மனவுறுதி உடைகின்றது, போரிடும் வலு பாதிக்கப்படுகின்றது. போர் வீரர்களுக்கு உதவும் போக்கை மக்கள் தமது பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு, குறைத்துக்கொள்வர். அடுத்ததாக மக்களைத் தாக்கி வெளியேற்றுவதன் மூலம் அவர்களுக்குச் சொந்தமான நிலப்பரைப்பைக் கட்டுப்பாட்டில் கொண்டு வரமுடியும். எல்லாவற்றிற்கும் மேலாக எதிரிநாட்டு மக்களைத் தாக்கி அழிப்பதை உலக சமுதாயம் கண்டிப்பதில்லை. உலக சமுதாயம் என்றும் தம்மை அடையாளப்படுத்தும் நாடுகள் இதே குற்றத்தைப் புரிகின்றன.

பொதுமக்கள் உயிரிழப்பைத் தவிர்கக் முடியாது. அது போரின் நடைமுறைப் பிரச்சினைகளில் ஒன்று என்று கூறும் தத்துவாசிரியர்கள் இத்தொடர்பில் ஒரு கோட்பாட்டையும் உருவாக்கியுள்ளனர். COLLATERAL DAMAGE என்று பெயரிடப்பட்ட கோட்பாடு பின்வரும் அர்த்தங்களைக் கொண்டது. கடன் வாங்கும்போது திருப்பிக் கொடுப்பதற்கு உத்தரவாதமாக பொறுப்புக்கொடுக்கிறோம். பொறுப்பை "கோலாற்றல்" என்று அழைக்கப்படுகின்றது. "டமேஜ்" என்றால் இழப்பு. போரின் போது பொது மக்களின் உயிரிழப்பு நடைபெறுவதை "பொறுப்பின் இழப்பு" என்று வரையறை செய்யப்படுகின்றது.

இருபதாம் நூற்றாண்டிற்கு படுகொலை நூற்றாண்டு என்ற பெயர்வர போர்க்கால இழப்புக்கள் மாத்திரம் காரணமல்ல. அரசுகள் தமது மக்கள்மீது நடத்திய கொலை வெறித் தாக்குதல்களின் காரணமாக உயிரிழந்தோர் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு "படுகொலை நூற்றாண்டு" என்ற சொற்பிரயோகம் செய்யப்பட்டுள்ளது. ஆரம்பம் தொட்டு முடிவுவரை உலக நாடுகள் பெரும்பாலானவற்றில் இவ்வகைப் படுகொலைகள் நடைபெற்றன. இதனால் இருபதாம் நூற்றாண்டு கறுப்பு நூற்றாண்டு என்றும் வர்ணிக்கப்படுகின்றது.

இருபதாம் நூற்றாண்டின் முதற்படுகொலை 1915ல் நடைபெற்ற ஆர்மீனிய மக்களின் படுகொலையோடு ஆரம்பிக்கின்றது. அப்போதைய ஆர்மீனியாவை ஆட்சிசெய்த துருக்கியர்கள் ஆர்மீனியாவின் பராதனகாலத் தலைநகர் வான் (VAN) பிராந்தியத்தில் வாழ்ந்தோரைக் கொண்டு குவித்தனர். இதில் உயிர் தப்பியோரை கால் நடையாக வெளியேறும்படி பணித்தனர். இப்பயணத்தில் மாத்திரம் ஒரு மில்லியன் வரையிலான ஆர்மீனியர்கள் உயிரிழந்தனர். மத வேறுபாடு மொழி மற்றும் இன வித்தியாசம் என்பன படுகொலைக்குத் தூண்டு கருவிகளாக அமைந்தன். ஆர்மீனியர்கள் இந்தோ-ஆரியன் இனக் குடும்பத்தைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள். பேசிய மொழி இந்தோ - ஆரியன் குடும்பமொழி. துருக்கியர்கள் முஸ்லிம்கள், மத்திய ஆசியாவைச் சேர்ந்தவர்கள்.




ஐரோப்பிய பாராளுமன்றம் ஆர்மீனியப் படுகொலைகளை 1987இல் பரிசீலணைக்கு எடுத்தது. அவற்றை ஒரு திட்டமிட்ட இன அழிப்பு நடவடிக்கை என்று அது தீர்ப்பு வழங்கியது. துருக்கியர் தரப்பில் படுகொலை போன்ற பாரிய உயிரிழப்பு நடைபெறவில்லை என்று கூறப்படுகின்றது. ஆர்மீனியப்படுகொலைகளின் எதிரொலி ஐரோப்பிய வரலாற்றில் காணப்படுகின்றது. யூதப் படுகொலைகளை நடத்திய ஆடொல்ப் ஹிற்லர் தனது மேடைப் பேச்சுக்களில் "ஆர்மீனியர்களுக்காக யார் குரல் கொடுத்தார்கள்?" என்று கேட்பது வழமை. தன்னை யாரும் தட்டிக்கேட்கப் போவதில்லை என்ற தீர்மானத்துடன் யூதப் படுகொலையைக் ஹிட்லர் நடத்தினான். சிறீலங்காப் படுகொலைகளும் தட்டிக்கேட்க யார் இருக்கிறார்கள் என்ற கருத்துடன் நடத்தப்படுகின்றன.

இரண்டாம் உலகப் போர் காலத்தில் ஹிற்லரின் நாட்சி (NAZI) அரசு நடத்திய படுகொலைகளின் பட்டியல் மிகவும் கொடுரமானது. ஜேர்மன் படைகளால் சோவியத் ஒன்றியத்தில் கொல்லப்பட்ட ருஷய பொதுமக்கள் மற்றும் படையினர் எண்ணிக்கை 26 மில்லியன். யூதர்கள் அல்லாத 3 மில்லியன் போலந்து மக்களும் அவர்களால் கொல்லப்பட்டனர். புராதன காலத்தில் கிழக்கு ஐரோப்பாவில் குடியேறிய நாடோடி இந்திய மக்கள் உட்பட வேறு பல முகமறியா இனங்களின் எண்ணிக்கை 2 மில்லியன். ஜேர்மனி மற்றும் ஜேர்மனி ஆக்கிரமித்த நாடுகளில் வாழ்ந்த யூதர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இவர்களுடைய எண்ணிக்கை 6 மில்லியன். இதை விட இரண்டாம் உலகப் போரில் (1939-1945) 6 மில்லியன் ஜேர்மன் பொதுமக்களும் படையினரும் கொல்லப்பட்டனர்.

உலகம் இப்படுகொலையை மறந்தாலும் யூதர்களின் இழப்பை மறக்க இயலாது, அவர்கள் மறக்க விடமாட்டார்கள். பெரும்பாலான பிரசார ஊடகங்கள அவர்கள் கைகளில் இருக்கின்றன. அவை மூலம் தமது துன்ப வரலாற்றை இடித்துரைத்துக் கொண்டேயிருப்பார்கள். அடுத்ததாக தமது நாட்டில் அழிக்கப்பட்ட 6 மில்லியன் யூதர்களுக்குத் காணிக்கையாக யாத் வாஷெல் (YAD VASHEM) என்று பெயரில் ஒரு நினைவாலயத்தைக் கட்டியெழுப்பியுள்ளனர். 2000 மார்ச்சு 23 ஆம் நாள் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் இஸ்ரேல் சென்றார். அச்சமயம் அவர் யாத் வாஷெம் சென்று அஞ்சலி செலுத்தினார். இழப்புக்களையும் அழிப்புக்களையும் பொருத்தமான நினைவாலயங்களை எழுப்பி எதிர்வரும் தலைமுறையினரும் உலகத்தோரும் மறவாதிருக்க வகை செய்யவேண்டும்.







சிறீலங்காவின் படுகொலைகள் தெற்காசியாவின் இருபதாம் நூற்றாண்டு வரலாற்றில் முக்கிய இடம் பிடித்துள்ளன. அரச பயங்கர வாதத்திற்கு முன்னுதாரணமாக இவை விளங்குகின்றன. சிறீலங்காவின் பொலிஸ்படையும் பிற ஆயுதப் படைகளும் ஒடுக்குமுறையின் சின்னங்களாகவும் தமிழர்களை உயிர்ப்பலி எடுப்பதற்கென்றெ உருவாக்கப்பட்டவையாகவும் அமைகின்றன. இனப்படுகொலைகள், இன அழிப்பு நடவடிக்கைகள் என்பனவற்றிற்கு அவை பொறுப்பாக இருந்து வருகின்றன.

1978இல் சிறீலங்கா சுதந்திரம் பெற்றபின்பு 1956 வரையிலான

எட்டு வருடங்கள் மாத்திரம் சிறீலங்கா பொலிஸ்படையின் சிறந்த காலமாக மதிப்பிடப்படுகின்றது. 1956 யூன் 05ல் காலி முகத்திடல் வன்முறைகளின்போது பிரதமர் பண்டாரநாயக் காவின் கட்டளைப்படி பொலிசார் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டாது ஒதுங்கி நின்றனர். பொலிஸ்படையின் இன்றுவரையி லான வீழ்ச்சிக்கு அது ஆரம்பகட்டமாகக் காணப்படுகின்றது. இதேநாளில் அம்பாறை இன்கினியாகலையில் திட்டமிட்டுத் தொடங்கப்பட்ட தாக்குதல்கள் அங்கு குடியேற்றப்பட்டிருந்த தமிழர்களும் முஸ்லிம்களும் விரட்டியடிக்கப்படும் வரை தொடர்ந்தது. இதுதான் சிறீலங்கா அரச பயங்கரவாதத்தின் ஆரம்பம்.



கோக்கட்டிச்சோலைப் படுகொலை

சீருடை தரித்த படையினரையும் காடையர்களையும் பயன் படுத்தி தமிழர்களின் நிலம் பறிப்புக்கொள்கையை சிறீலங்கா அரசு மீண்டும் மீண்டும் அமுலாக்கி வருகின்றது. கிழக்கு மாகாணத்தில் கனேடிய அரசின் உதவியோடு நடைமுறைப் படுத்தப்பட்ட மாதுறு ஓயாத்திட்டம் வடக்குக் கிழக்கைப் பிரிக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டது. உலகவங்கியின் நிதி உதவி யுடன் வடகிழக்கில் செயற்படுத்தப்பட்ட துரித மகாவலி அபி விருத்தித்திட்டமும் இதே இலக்கைக் கொண்டது.

1987இல் இலங்கை - இந்திய ஒப்பந்தம் வட-கிழக்கு இணைப்பை முன்வைத்தது. இதைச் செயலிழக்கச் செய்வதற் காக வடகிழக்குப் பிராந்தியத்தின் இணைப்புப் பாலமாக விளங்கிய மணலாறு 1988ல் துரித அபிவிருத்திக்குத் தெரிவு செய்யப்பட்டது. காணி அபிவிருத்தி அமைச்சரான காமினி திசாநாயக்கா ஏப்ரல் 14, 1988ல் விடுத்த தனது அரசாங்க கசற் அறிவித்தலின்படி முல்லைத்தீவின் மணலாறை வெலி ஓயா என்று பெயர்மாற்றம் செய்தார். வெலி ஓயாவை முழுச் சிங்கள வாழ்விடமாகச் செய்வது அவருடைய திட்டம். இதற்கு இந்திய அரசின் மறைமுக ஒத்துழைப்பும் இருந்தது.

மணலாறின் தண்ணிமுறிப்புக் கிராமத்தில் வாழ்ந்த 3000 தமிழ்க்குடும்பங்கள் ஜெனரல் ஜானக பெரேரா தலைமையி லான சிங்களப் படைகளால் 24 மணி நேரத்தில் வெளியேற்றப் பட்டனர். வெளியேற மறுத்த 29 தமிழ்க் குடும்பங்களைச் சேர்ந்தோர் ஜானக பெரேராவின் கட்டளைப்படி தண்ணிமுறிப்பு நூலகத்திற்கு அண்மையில் கொன்று ஏழியூட்டப்பட்டனர். ஜானக பெரேரா தனது பெயரை தண்ணி முறிப்புக்கு ஜானகபுர என்று வழங்கியுள்ளார்.

“உலகின் எல்லா விடுதலைப் போராட்டங்களிலும் ஒடுக்கு முறையின் நெருப்பில் குளிப்பது பொதுசனங்களே” என்று தேசியத் தலைவர் அவர்கள் கூறியது தென்தமிழீழத்தின் எமது உடன்பிறப்புக்களுக்கு மிகவும் பொருத்தமாக அமைகின்றது. தனது மகள் ரவி ஜெயவர்த்தனா தலைமையில் பிரித்தானியா வின் கீனிமீனி கூலிப்படை, இஸ்ரேலின் மொசாட், சின்பெத் போன்றவற்றின் பயிற்சியோடு விசேட அதிரடிப்படை (STF) என்ற பொலிஸ்படையின் இராணுவப் பிரிவை ஜெயவர்த்தனா உருவாக்கினார். காடையர்களுக்கும் ஆயுதப்பயிற்சி வழங்கி அவர்களுக்கு ஊர்காவற்படை என்ற பெயரும் அவர்க வழங்கினார்.




தமிழர் படுகொலையில் கிழக்கில் முஸ்லிம் காடையர் கும்பல் சிலவற்றை பங்கெடுக்க வைப்பதில் சிங்கள அரசியல் இராஜ தந்திர வாதிகள் வெற்றிகண்டனர் என்பது உலகறிந்த விடயம். இதை ஆதார பூர்வமாகப் பிறிதோர் சந்தர்ப்பத்தில் நிரூபிப்போம். கூட்டுத் தண்டனை (COLLECTIVE PUNISHMENT) வழங் கலை ஜெனிவா கொவென்சன் (GENEVA CONVENTION) ஊடாகச் சர்வதேசச்சட்டம் தடை செய்கின்றது. ஒட்டுமொத்தமாக ஒரு இனத்தவர்களைச் சுட்டுக் கொல்லுதல், அவர்களுக்குச் சொந்தமான வீடு, நிலம், சொத்துக்கள் போன்றவற்றை அழித் தல் என்பன கூட்டாகக் “கூட்டுத் தண்டனை” என்று அழைக்கப் படுகின்றது. ஆயுததாரியான எதிரியுடன் போரிட வலுவின்றி ஆயுதம் தரியாத எதிரியின் இனத்தவரைத் தண்டிப்பதை இவ்வாறு அழைக்கிறார்கள்.

1992 அகத்து 8ஆம் நாள் யாழ் அராலித்துறையில் யாழ் இராணுவ கட்டளை அதிகாரியும் அவரையொத்த படை அதிகாரிகளும் புலிகளின் கண்ணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்டனர். இதற்குப் பதிலடியாக 1992 ஆகத்து 9ஆம் நாள் மட்டக்களப்பின் மைலந்தனைக் கிராமத்தில் 14 சிறுவர்கள் உட்பட 35 தமிழர்கள் சிங்களப் படையினரால் படுகொலை செய் யப்பட்டனர். சர்வதேச அழுத்தம் காரணமாக காலம் கடந்தபின் 18 இராணுவத்திரை கொலைக்குற்றத்திற்காக நீதிமன்றின் முன் நிறுத்தப்பட்டனர்.

2002 நவம்பர் மாதத்தில் விசாரணைகள் நடைபெற்றன. விசாரணை முடிவில் சிங்களவர்களை மாத்திரம் கொண்டிருந்த யூரிமார் சபை 18 இராணுவத்தினரும் நிரபராதிகள் என்று தீர்ப்பு வழங்கியது. தமிழரான மேல் நீதிமன்ற நீதியரசர் எஸ். சிறிஸ் கந்தராசா தீர்ப்புச் சம்பந்தமாக மீண்டும் யோசிக்கும்படி சபை யைக் கேட்டுக்கொண்டார். ஒரு மணிநேரயோசனையின்பின் அவர்கள் அதே தீர்ப்பை உறுதிபடக் கூறினர். 18 பேரையும் நீதியரசர் விடுதலை செய்தார்.




சிங்கள நீதி நிர்வாகத்தின் மீது தமிழர்கள் நம்பிக்கை இழந்து பல வருடங்களாகின்றன. புகழ்பூத்த கிருசாந்தி குமாரசாமி வழக்கில் என்ன நடந்தது? பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டவர்கள் விடுதலை ஆகாத நிலையில் 22 தமிழ் இளைஞர்களை கொழும்பு புல்லர்ஸ் வீதி அதிரடிப் படை முகாமில் கொலை செய்தபின் பொலகொடை வாவியில் சடலங்களை வீசியெறிந்த எஸ்ரிஎப் படையினர் சிலகாலம்




இடைநிறுத்தப்பட்டபின் தென்தமிழீழத்தில் சேவையாற்று கின்றனர்.

இதுபற்றி அமெரிக்க இராசாங்கச் செயலக வருடாந்த அறிக்கை குறிப்பிடுகின்றது.

1997 மே மாதத்தில் நான்கு பிள்ளைகளின் தாயாரான கோணேஸ்வரி தொடர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பின் அவருடைய உடலில் கிரனேற் பொருத்திக்கொல்லப்பட் டார். இற்றைவரை குற்றவாளிகளுக்கு எதிராக அர்த்தமுள்ள நீதி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. 60,000 உறுப்பினர் களைக் கொண்ட சிறீலங்கா பொலிஸ் படையில், 500 பேர் மாத்திரம் தமிழர்களாக உள்ளனர். ஊழல் மலிந்த இனவாத அமைப்பான இப்படை தனது மத்தியிலுள்ள குற்றவாளிகளைப் பாதுகாப்பதையே முழு முதற்கடமையாக கொண்டுள்ளது. போலி முறைப்பாட்டுப் புத்தகங்களைப் பேணுகிறார்கள் என்று உண்மை மிக அண்மையில் வெளிவந்தது.

1990-2000 இடைப்பட்ட காலப்பகுதியில் 50,000 வரையி லான தென் தமிழீழ உடன் பிறப்புக்கள் சிங்களப்படைகளால் கொல்லப்பட்டுள்ளனர். மட்டு - அம்பாறை மண்ணில் 20,000த்திற்கும் கூடுதலான இளம் விதவைகள் வாழ்வதாக கணக்குகள் தெரிவிக்கின்றன. யாழ்ப்பாணம், கிளிநொச்சி



என்பன வற்றிலும் பார்க்க கூடுதலான எண்ணிக்கையில் மனிதப் புதைகுழிகள் இங்கு காணப்படுகின்றன. காணாமற் போனோர் இங்குதான் வடதமிழீழத்திலும் பார்க்க அதிகம். “வெள்ளைவான்” ஆட்கடத்தல் என்ற பயங்கர நடவடிக்கை முதன்முதலில் மட்டு - அம்பாறையில் தொடங்கப்பட்டது. படையதிகாரியாக மட்டக்களப்பில் பதவி வகித்த ஜானக பெரேரா தனது காலத்தில் வெள்ளைவான் கலாச்சாரத்தை உருவாக் கினார். யாழ் செம்மணி புதைகுழியில் 650 வரையிலான தமிழர்கள் புதைபடுவதற்கும் இவரே பொறுப்பாவார். எங்கு சென்றாலும் தனது முத்திரையைப் பதிப்பது அவருடைய பிரத்தியேக பாணி. மட்டு - அம்பாறை அனர்த்தங்கள் இன அழிப்புப்பரிமாணங்களைக் கொண்டது. கொலைப் பயமுறுத் தல் மூலம் இடம் பெயரச்செய்து பாரம்பரியத் தமிழ்க்கிரா மங்களை அபகரிக்கும் நோக்கம் அடிப்படையாக இருக்கின்றது. ஒரு இனத்தை அழிக்கவேண்டுமானால் அதன் நிலத்தை பறிக்கவேண்டும், படுகொலைக்குப்பின் எஞ்சி யோரை சொந்த மண்ணில் இருந்து விரட்டியடிக்கவேண்டும். புரிந்துணர்வு உடன்படிக்கை எட்டப்பட்ட பின்பும் தென்தமிழீழ மக்கள் நிம்மதி யாக வாழ முடியவில்லை. தமிழர்களைத் தமது கொத்தடிமை களாக எண்ணும் போக்கை எஸ்ரிஎப் போன்ற சிங்களப் படைகள் கைவிடாத வரை இயல்பு நிலை தோன்ற வாய்ப் பில்லை.

1987 ஜனவரி 28ஆம் நாள், அமெரிக்காவின் நிதி உதவி யோடும் கண்காணிப்போடும் இயங்கிய மகிழடித்தீவு இறால் பண்ணையில் பணியாற்றிய 135 தமிழ் மக்கள் எஸ்ரிஎப் படை யினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். சடலங்களை அவர்களே உழவு இயந்திரத்தில் ஏற்றிச்சென்றார்கள். இந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து வேறுபல படுகொலைகளை இராணுவத்தினரும், எஸ்ரிஎப் படையினரும் கூட்டாக நடத்திமுடித்தனர். இவர்கள் சிங்கள அரசின் பின்னணி ஆதரவுடன் நடத்திய படுகொலை களின் பட்டியல் கொக்கட்டிச்சோலைப் படுகொலை, வந்தாறு மூலைப் படுகொலை, சத்துருக்கொண்டான் படுகொலை, புல்லுமலைப் படுகொலை, உடும்பன்குளப்படுகொலை, தோணி தாண்டான்மடுப் படுகொலை என்று நீண்டு செல்கின்றது.

யாழ் மண்ணில் நடந்த படுகொலைகளை இராணுவத்தினரும் விமானப்படையினரும் தேசத்துரோகக் கும்பல்களின் உதவி யுடன் நடத்தினர். மட்டக்களப்பு அம்பாறை வாழ் தமிழர்களின் படுகொலைகளை இராணுவத்தினருக்குப் பக்கபலமாக நின்ற சிங்கள மற்றும் முஸ்லிம் காடையர்களும், தமிழ் தேசத்து ரோகக் கும்பல்களும் இணைந்து செயற்படுத்தினர். தென் தமிழீழ மக்கள் எதிர்கொண்ட அச்சுறுத்தல் பன்மடங்கு பெரி யது. அவர்கள் சந்தித்த இழப்புக்கள் மிகவும் கூடுதலானவை. சிங்களப் புத்திஜீவி பேராசிரியர் காலிங்க குணரட்ணா தீட்டிய திட்டத்தின்படி தமிழ் இன அழிப்பும் சிங்கள குடியேற்றமும் தமிழர் மண்ணில் நடைபெறுகின்றன.

1990 ஆகத்து 9ல் நடந்த சத்துருக்கொண்டான் படுகொலையில் 184 தமிழர்கள் மாண்டனர். 1983, 1990, 1991ல் அம்பாறை மாவட்டத்தின் அட்டப்பள்ளக்கிராமப்படுகொலைகள் நடந்த போது விசேட அதிரடிப்படையினர் முஸ்லிம் காடையர்களை இணைத்து செயற்பட்டனர். அம்பாறையில் பறிபோன தமிழ்க் கிரமங்கள் இன்று சிங்கள, முஸ்லிம் கிராமங்களாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

1990 அகத்து 02ல் பொத்துவில் அகதி முகாமில் வாழ்ந்த 150 ஆண், பெண், சிறுவர்கள் இராணுவத்தினராலும் அவர்களுக்கு உதவும் முஸ்லிம் காடையர் சிலராலும் கொல்லப்பட்டனர். ஒரு மாதத்தின்பின் 1990 செப்ரம்பர் 05ல் மட்டக்களப்பு மாவட்டத் திலுள்ள வந்தாறுமூலை கிழக்கு மாகாணப் பல்கலைக்கழக அகதிமுகாமிலிருந்து 168 தமிழ் அகதிகள் கடத்திச் செல்லப் பட்டனர். இவர்களுடைய சடலங்கள் இன்றுவரை மீட்கப்பட வில்லை. அகதி முகாமிலிருந்து கடத்திச் சென்று படுகொலை செய்வதற்கு செங்கலடி இராணுவ முகாமின் பொறுப்பதிகாரி கப்டன் களுஆராய்ச்சி, வாளைச்சேனை இராணுவமுகாமின் கட்டளை அதிகாரி மேஜர் மஜீத், மட்டக்களப்பு இராணுவ முகாமைச் சேர்ந்த மேஜர் மொகான் சில்வா, அதே இராணுவ முகாமைச் சேர்ந்த கப்டன் மூனாஸ் ஆகியோர் பொறுப்பாக இருந்தனர்.

1990ல் இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமானதைத் தொடர்ந்து மட்டக்களப்பு சிறீலங்கா படைகள் வசம் வீழ்ந்தது. இதன்பின் படுகொலைகள் சுற்றிவளைப்புகள், காணாமற் போதல்கள், பாலியல் வன்முறைகள் என்பன மீண்டும் நடை முறைக்கு வந்தன. இக்காலப்பகுதியில் தமிழ்மக்களால் பரவ லாகப் பேசப்பட்ட பெயர் கப்டன் மூனாஸ் (CAPT. MUNAS) நீர்கொழும்பைச் சேர்ந்த கத்தோலிக்க மதத்தினரான இந்த மனிதரின் உண்மைப்பெயர் பீரிஸ் மாட்டின். இஸ்லாமியத் தீவிரவாதியாகவும் முஸ்லிம்களின் தோழனாகவும் நடித்த இவர் 1990இல் புதிதாக உருவாக்கப்பட்ட இராணுவ புலனாய் வுத் துறையைச் (MILITAY INTELLIGENCE CORPS) சேர்ந்தவர். சுற்றிவளைப்புக்களில் தவறாது பிரசன்னமாக இருப்பது இவருடைய இயல்பு.

இவர்முன் நிறுத்தப்படும் தமிழர்களை மிரட்டும் தொனியில் “நான் ஒரு நல்ல முஸ்லிம், அல்லாவைத் தவிர வேறு எவருக்கும் பயப்பிடமாட்டோன்” என்று கூறுவார். தற்பொழுது மூனாஸ் என்று கூறுமவர் இராணுவப் புலனாய்வுப் பணியகத்தின் (MILITAY INTELLIGENCE DIRECTOR - ATE) உயர்பதவி வகிக்கிறார். 1994ல் இவர் கொழும்பு புல்லாஸ் வீதி எஸ்ரிஎப் அலுவலகத்தில் பணியாற்றினார். தமிழ் இளை ஞர்கள் கொல்லப்பட்டு பொல்கொடை வாவியில் வீசப்படுவதற்கு பொறுப்பாகவிருந்தார்.

தென்தமிழீழ மக்களின் அவலங்கள் வெளியுலகிற்கு வெளி வராமல் இருப்பதற்கு சிங்களவர்களுக்குச் சொந்தமான கொழும்பின் ஆங்கில, சிங்கள, பத்திரிகைகள் தொடர்சியாகச் செய்யும் மூடிமறைப்பும், இருட்டடிப்பும் முக்கிய காரணங்களாக அமைகின்றன. இன வாதத்தைக்கக்கும் ஊடகங்கள் படு கொலைகளை எல்லாமட்டத்திலும் ஊக்குவிக்கின்றன. எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும். நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில் கட்டியெழுப்பும் பொறுப்பு எம்முடையது மாத்திரமே.

-விடுதலைப்புலிகள் - புரட்டாசி, ஐப்பசி 2003

# அரோகராப் போராட்டம்?

08.10.2023

ஒரு நீதிபதிக்கு நீதி கேட்டுத் தமிழ் மக்கள் ஒன்று திரளும் வாய்ப்புகள் அதிகரித்து வருகின்றன. கடந்த வாரத்திலிருந்து தமிழ்ப் பகுதிகளெங்கும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதில் குறிப்பாக கடந்த புதன்கிழமை யாழ்ப் பாணத்தில் முன்னெடுக்கப்பட்ட மனிதச் சங்கிலிப் போராட்டத் தைக் குறிப்பிட வேண்டும். இது குத்துவிளக்குக் கூட்டணியால் ஒழுங்கு செய்யப்பட்டது. எனினும் ஏனைய கட்சிகளும் அதற்கு ஆதரவைக் காட்டின. அந்தப் போராட்டம் சரியான நேரத்தில் முன்னெடுக்கப்பட்டது. ஆனால் அது சொந்த மக்களின் கவனத் தையும், உலக சமூகத்தின் கவனத்தையும் ஈர்க்கத்தக்க விதத் தில் பிரம்மாண்டமானதாக முன்னெடுக்கப்பட்டதா?




மருதனார் மடத்திலிருந்து தொடங்கி யாழ்ப்பாணம் வரையிலும் மனிதச் சங்கிலிப் போராட்டத்தை நடத்தப் போவதாக அறிவிக் கப்பட்டது. போராட்டத்தில் இணையுமாறு துண்டுப் பிரசுரங் களை பொதுமக்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டன. எனினும் அது ஒரு நீண்ட மனிதச் சங்கிலிப் போராட்டமாக அமைய வில்லை. மனிதச் சங்கிலி தொடர்ச்சியானதாக அமைய வில்லை. கொக்குவில் சந்தியில் கட்சித் தலைவர்களும் செயற் பாட்டாளர்களும் சட்டத்துறையைச் சேர்ந்தவர்களும் முழந் தாளிட்டு நீதி தேவதையிடம் முறைப்பாடு செய்தார்கள். அங்கே அரோகரா கோஷமும் எழுப்பப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தன்பங்குக்கு ஒரு மனிதச் சங்கிலிப் போராட்டத்தைச் செய்தது. இரண்டு மனிதச் சங்கிலி களுக்கும் இடையே தொடுப்பு இருக்கவில்லை.

இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டும் அங்கே காணப் பட்டார்கள். ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களைக் காண வில்லை. முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களில் ஒரு பகுதியினரும் உள்ளூராட்சி சபைகளைச் சேர்ந்தவர்களில் ஒரு பகுதியினரும் அங்கே காணப்பட்டார்கள். சட்டத் துறையை சேர்ந்தவர்கள் அதிகரித்த அளவில் பங்குபற்றவில்லை. சிவில் சமூகங்களும் குறைவு. பல்கலைக்கழக மாணவர்களைக் காணவில்லை. கட்சி ஆதரவாளர்கள்கூட முழு அளவுக்குப் பங்குபற்றியதாகத் தெரியவில்லை.

அப்படி ஒரு போராட்டத்தை முதலில் சிந்தித்த கட்சிகள் அதைக் குறித்து நடைமுறைச் சாத்தியமான வழிகளில் திட்டமிட்டிருக்க வில்லையா? அது மிக எளிமையான ஒரு கணிதம். மருதனா மடத்திலிருந்து யாழ்ப்பாணம் வரையிலுமான மொத்தத் தூரத் தைக் கணக்கிட்டு அவ்வளவு தூரத்துக்கும் கைகோர்த்தபடி நிற்பதற்கு எத்தனை பேர் தேவை என்பதை கண்டுபிடித்திருக் கலாம். அதன்பின் அத்தூரத்தைப் பங்கு கொள்ளும் கட்சிகளின் தொகையால் பிரித்து, ஒவ்வொரு கட்சிக்கும் இத்தனை கிலோ மீட்டர் என்று பிரித்துக் கொடுத்திருக்கலாம். அதன்படி ஒவ் வொரு கட்சியும் தனக்குரிய தூரத்துக்கு வேண்டிய ஆட்களை அழைத்துக் கொண்டு வந்திருந்தாலே போதும். மனிதச் சங்கிலி வெற்றிகரமானதாக அமைந்திருக்கும். ஆனால் அப்படி நடக்க வில்லை. துண்டுப் பிரசுரத்தைக் கொடுத்தால் மக்கள்





வருவார்கள் என்று கட்சிகள் நம்பினவா? ஆனால் இதுபோன்ற மக்கள் போராட்டங்களை முன்னெடுப்பதற்கு தேவையான அடிமட்டக் கட்டமைப்புகள், வலையமைப்புகள் கட்சிகளிடம் குறைவு என்பதைத்தான் போராட்டம் மீண்டும் ஒரு தடவை உணர்த்தியது.

தாங்கள் அழைத்தால் மக்கள் வருவார்கள் என்று கட்சிகள் நம்பினவா? எந்த ஒரு போராட்டத்திற்கும் வீட்டு வேலை அவசியம். எல்லாவற்றையும் கணிதமாக கணக்கிடலாம். அதில் எங்கேயும் கற்பனையான எதிர்பார்ப்புகளுக்கு இட மில்லை. கடந்த சில தசாப்தங்களாக தமிழ் மக்கள் மத்தியில் வெற்றி பெற்ற எல்லாப் போராட்டங்களின் பின்னணியிலும் கடுமையான உழைப்பு இருந்திருக்கிறது. ஒன்றிணைவு இருந்திருக்கிறது. மக்கள் தாமாகத் திரள்வதற்கு இது ஒன்றும் கோவில் திருவிழா அல்ல. அல்லது பண்டிகைக்காலச் சந்தை யும் அல்ல. கட்சிகள் தங்களுடைய கீழ்மட்ட வலையமைப்புக்கள் ஊடாக மக்களைத் திரட்டிக் கொண்டுவர வேண்டும். ஆனால் கடந்த புதன்கிழமை அது நடந்ததாகத் தெரியவில்லை.

போதாக்குறைக்கு போராட்டத்தின் முடிவில் கொக்குவில் நீதி தேவதையிடம் முழந்தாளிட்டு மன்றாடப்பட்டது. முழந்தாளிட்டு மன்றாடுவது போராட்டமாகி விடாது. அதைத் தேவாலயங் களில் செய்யலாம். சில ஆண்டுகளுக்கு முன் யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் ஒரு நினைவு கூர்தல் நிகழ்வில் அவ்வாறு முழந்தாளிட்டு நின்றதாக ஞாபகம். அமெரிக்காவில் சில ஆண் டுகளுக்கு முன் ஒரு கறுப்பினத்தவர் போலீசாரால் கொல்லப் பட்டதையடுத்து போராட்டங்கள் வெடித்தன. அதன்போது அமெரிக்க போலீஸ் கொல்லப்பட்ட கறுப்பினத்தவரிடம் மன் னிப்பு கேட்கும் விதத்தில் ஒரு காலில் முழந்தாளிட்டு அமர்ந்து மன்னிப்பு கேட்டது. அது மன்னிப்புக் கேட்பது. போராட்டம் அல்ல. ஆனால் கொக்குவில் நடந்தது ஒரு போராட்டம்.

தமிழ் மக்கள் ஆலயங்களில் மன்றாடியிருக்கிறார்கள். ஆனால் போராடியிருக்கிறார்கள். விதி திரைப்படத்தில் நீதிமன்றக் காட்சி யில் கதாநாயகி சுஜாதா தனது தர்க்கத்தை முன்வைத்த பின் அழுது மன்றாடி மயங்கி விழுந்து நீதி கேட்கின்றார். ஆனால் நீதிக்காகப் போராடும் மக்கள் அப்படியெல்லாம் மன்றாட முடி யாது. பைபிளில் ஒரு வசனம் உண்டு "நீதியின் கிரீடம் முட்களா லானது" என்று. நீதிக்கான போராட்டம் அத்தகையதுதான்.

கண்ணகி தன் கணவனுக்கு நீதி கேட்டு பாண்டிய மன்னனிடம் மன்றாட வில்லை. அவளுடைய கோபம் பாண்டியனை கொன்றது; மதுரையைச் சுட்டெரித்தது. சாவித்திரி தன் கண வனைக் காப்பாற்றுவதற்காக யமனோடு அதாவது மரணத் தோடு போராடினாள். இவை காப்பியகால உதாரணங்கள். போராட்டங்கள் மன்றாட்டங்களாக இருக்க முடியாது. அவை வீரமானவைகளாகவும் அர்ப்பணிப்புக்கு தயாரானவைக ளாகவும் இருக்க வேண்டும். நவீன காலத்தில் தமிழ்மக்கள் மன்றாடி எதையும் பெறவில்லை. போராடித்தான் பெற்றார்கள். பதின்மூன்றாவது திருத்தமே தமிழ் மக்களின் போராட்டத்தின் விளைவுதான். ஆனால் தமிழ்க் கட்சிகள் நோகாமல் போராடப் பார்க்கின்றனவா? அல்லது கடமைக்கு போராடுகின்றனவா? அல்லது 2009க்குப் பின்னரான அறவழிப் போராட்ட வடி வத்தை குறித்துத் தமிழ்க் கட்சிகளிடம் படைப்புத்திறன் மிக்க தரிசனம் எதுவும் கிடையாதா?

போதாக்குறைக்கு போராட்டத்தின் இறுதிக் கட்டத்தில் கோஷம் எழுப்பும் போது ஒவ்வொரு கோஷத்தின் முடிவிலும் "அரோகரா" சொல்லப்பட்டது. அரோகரா என்றால் என்ன? அரன் - சிவன்; ரோகம் - துன்பம், தீவினை, வலி அர-அறுக்க. " சிவனே ரோகம் அறுக்க" என்றும் பொருள்படும். அரோகரா முதலில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரால் பயன்படுத்தப்பட்டது என்று ஒரு தகவல் உண்டு.

திருஞானசம்பந்தர் ஒருமுறை பல்லக்கில் அமர்ந்து பயணம் செய்யும்போது, அவரைச் சுமந்து கொண்டு வந்தவர்கள் 'ஏலேலோ ஏலேலோ' என்று களைப்பைக் குறைப்பதற்காக பாடிக்கொண்டு வந்தனர். அதைச் செவிமடுத்த திருஞான சம்பந்தர், பொருளற்ற ஒன்றைச் சொல்வதைவிட பொருளோடு ஒன்றைச் சொன்னால் நல்லது என்று, 'அர ஹரோ ஹரா' என் பதைக் கற்றுக் கொடுத்தார். அதன்பிறகு 'அர ஹரோஹரா' என்றுச்சொல்வது வழக்கமாயிற்று என்று ஒரு தகவல் உண்டு. அது மருவி அரோகரா ஆயிற்று.

அரோகரா என்ற சொல் மங்களமானது. நேர்க்கணியமானது. திட்டுவதற்கும் சபிப்பதற்கும் பயன்படுத்தப்படும் ஒரு சொல் அல்ல. ஆனால் கடந்த புதன்கிழமை கொக்குவிலில் அரோகரா எப்படிப் பயன்படுத்தப்பட்டது? "நாடாளுமன்றத்துக்கு அரோ கரா... நீதிபதிக்கு அரோகரா... நீதித்துறைக்கு அரோகரா... ஜனாதிபதிக்கு அரோகரா... சிறீலங்காவுக்கு அரோகரா"... என்றால் என்ன பொருள்?

பண்பாட்டு ரீதியிலான சடங்குகளை, மத நம்பிக்கைகளை போராட்டங்களில் இணைப்பது ஓர் உத்தி. அது ஒரு மக்கள் கூட்டத்தை உணர்வுபூர்வமாக இணைப்பதற்கு உதவும். ஈழப் போராட்டத்தின் முதலாவது தெரு நாடகம் "விடுதலைக் காளி" அது கலையாடிக் குறி சொல்லும் மத நம்பிக்கையை அடிப்படையாக வைத்துத் தயாரிக்கப்பட்டது. கடந்த ஆண்டு அரகலயவின்போது சிங்களச் செயற்பாட்டாளர்கள் அவ்வாறான மகத்தான புத்தாக் கத் திறனை வெளிப்படுத்தினார்கள். தமிழ்க் கட்சிகள் அங் கிருந்து கூட எதையும் கற்றுக் கொள்ளவில்லையா? தமிழ்க் கட் சிகளின் கற்பனை வறட்சியைத்தமிழ் கட்சிகளுடைய அரோகராப் போராட்டம் காட்டியதா?

ஒரு போராட்டத்தில் படைப்புத்திறன் எங்கே வெளிப்படுகிறது என்றால் போராடுபவர்கள் அந்தப் போராட்டத்துக்கு ஆகக்கூடிய பட்சம் உண்மையாகவும் அர்ப்பணிப்போடும் இருக்கும் போதுதான். மக்களை நேசித்த எல்லாப் போராட்டங்களிலும் படைப்புத்திறன் அற்புதமாக வெளிப்பட்டிருக்கிறது. உலகம் முழுவதும் அதற்கு உதாரணங்களைக் காட்டலாம். ஆனால் துரதிஷ்டவசமாக தமிழ்க் கட்சிகளால் அவ்வாறான படைப்புத் திறனை வெளிப்படுத்த முடியவில்லை. ஏன்?

2009இல் இறுதிக்கட்ட போரின்போது தமிழ்நாட்டில் நடந்த மனிதச் சங்கிலிப் போராட்டத்தை இங்கே சுட்டிக்காட்டலாம். அது மிக நீண்டது பிரமாண்டமானது. கொட்டும் மழைக்குள் நனைந்து தோய்ந்த ஆடைகளில் நீர் சொட்டச் சொட்ட மனிதர்கள் சங்கிலிகளாகப் பிணைந்து நின்றார்கள். ஆனால் கடந்த புதன்கிழமை நடந்தது அத்தகையது அல்ல. அது ஓர் அறுந்த சங்கிலிப் போராட்டம். அடுத்ததாக ஒரு கடையடைப் புக்கு அழைப்பு விடப்போவதாக ஏழு கட்சிகள் கூடி முடிவெடுத் திருக்கின்றன. ஆயின், தமிழ் அரசியல்வாதிகள் தங்களுக்கு நோகாத போராட்டங்களைத்தான் தெரிந்தெடுக்கிறார்களா?

நன்றி: நிலாந்தன்

16th Year Veeravanakkam

# 16 ஆம் ஆண்டு வீரவணக்கம்




லெப். கேணல் அலெக்ஸ்


மேஜர் செல்வம்


மேஜர் மிகுதன்


மேஜர் கலையரசன்


லெப். ஆட்சிவேல்


லெப். மாவைக்குமரன்

## தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வன்

**02.11.2007 அன்று கிளிநொச்சி, தமிழீழத்தில் சிறீலங்கா வான்படையின் தாக்குதலில் வீரச்சாவடைந்த தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வன் உட்பட ஏழு மாவீரர்களின் 16ஆம் ஆண்டு வீரவணக்க நினைவு நாள்**

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**

**The thirst of the Tamils is the Homeland of Tamileelam**

சங்கத்தமிழ்